TNLA Debates

No. 2

III

1980

V211,31 'N80
N81.3.2;1
123080.

வெளியீடு 12-1-1981] [Issued 12-1-1981

77/81
1492
... AND HISTORICAL ...
2 ... 1981

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1980 ஜூலை 10—தொகுதி III—எண் 2
Thursday 10th July 1980—Volume III—No. 2

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL-NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

[Price 3-15 Prise
விலை 3.15 காசுகள்]

| | பக்கங்கள். |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். .. | 142, 184, 185, 207–23[illegible] |
| திரு. ப. சுந்தரம். .. | 145–149 |
| டாக்டர் கே. சமரசம். .. | 149 |
| திரு. எஸ். இராசாராமன். .. | 152–156 |
| திரு. சி. கேசவ ஆதித்தன். .. | 156–158 |
| திரு. டி. மணி. .. | 158–164 |
| திரு. எம். சின்னராஜ். .. | 164–167 |
| திரு. ஏ. டி. கருப்பையா. .. | 168–171 |
| திரு. ஆர். ரங்கசாமி. .. | 171–175 |
| திரு. இ. முத்துராமலிங்கம். .. | 175–177 |
| திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன். .. | 177–180 |
| திரு. சேலம் மு. ஆறுமுகம். .. | 181–187 |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. .. | 188, 19[illegible] |
| திரு. ஏ. சந்திரசேகரன், .. | 188–190 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம். .. | 190–192 |
| திரு. துரைமுருகன். .. | 192–206 |
| 4. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் 2 .. | 445–246 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வியாழக்கிழமை, 1980 ஜூலை 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. "

எத்தகைய ஆற்றல் ஒருவர் பெற்றிருந்தாலும் செயலாற்றும் திறனற்றவராக அவர் இருப்பாரேயானால் அவரை இந்த உலகம் விரும்பாது.

### 1. அறிவிப்புகள்.

### ஆளுநர் செய்தி—ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

I have received with great satisfaction your resolution of thanks for my address on the 21st June 1980 to the members of the Legislature.

### 2. கவன ஈர்ப்பு.

### (அ) தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் வழங்கப் பெறாமல் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய வேலைகள் நடைபெற்று வரும் இந்நாள்வரை, விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் வழங்காதது

---

குறிப்பு : ஓர் உறையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

குறித்து'' திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அவர் இருக்கையில் இல்லாததால் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சரை அதுபற்றி விவர அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் தங்களுடன் இணைக்கப் பெற்ற விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வேளாண்மை செலவிற்கு குறுகிய காலக்கடன்களும், வேளாண்மை சார்ந்த உப தொழில்கள் நடத்த மத்திய காலக் கடன்களும் வழங்கி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை, 1979–80-ம் ஆண்டில் வழங்கப் பெற்ற குறுகிய காலக் கடன்களின் அளவு, 1980–81-ம் ஆண்டில் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் முடிய வழங்கப் பெற்ற கடன்களின் அளவு, தவணை தவறிய கடன் நிலுவை முதலான விவரங்கள் கீழ்வருமாறு :—

| விவரம். | தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி. | கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வங்கியின் எல்லையில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் எண்ணிக்கை .. .. .. | 244 | 270 |
| 2 மத்திய கூட்டுறவு வங்கிக்கு தவணை தவறிய கடன் பாக்கி வைத்திருக்கும் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 244 | 270 |
| 3 1979–80 நிதியாண்டில் வழங்கிய கடன் தொகை (ரூபாய் கோடியில்) .. | 0.53 | 1.75 |
| 4 1980–81-ம் ஆண்டில் வழங்கப்பட வேண்டிய குறுகிய காலக் கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்) .. .. | 8.20 | 14.00 |
| (அ) 1980-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள்வரை வழங்கப்பட வேண்டிய குறுகிய காலக் கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்) .. | 7.95 | 10.07 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| (ஆ) 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் வரை வழங்கிய குறுகியக் காலக் கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்.) .. .. .. | .. | 0.03 |
| 6 விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களில் உள்ள மொத்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை. .. .. .. | 75,000 | 1,96,000 |
| 7 மொத்த விவசாய உறுப்பினர்களில் சங்கங்களில் கடன் பெறும் தகுதிவாய்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை .. | 400 | 3,000 |
| 8 மத்திய கூட்டுறவு வங்கி அளவில் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாளில் தவணை தவறிய கடன் நிலுவை (ரூபாய் கோடியில்). | | |
| கேட்பு .. .. .. .. .. | 13.31 | 16.83 |
| வசூல் .. .. .. .. .. | 1.27 | 2.86 |
| நிலுவை .. .. .. .. | 12.04 | 13.97 |
| விழுக்காடு .. .. .. .. | 90.5 | 83.00 |
| 9 விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் அளவில் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாளில் தவணை தவறிய கடன் நிலுவை (ரூபாய் கோடியில்) | | |
| கேட்பு .. .. .. .. .. | 15.75 | 20.58 |
| வசூல் .. .. .. .. .. | 1.48 | 4.13 |
| நிலுவை .. .. .. .. | 14.27 | 16.45 |
| விழுக்காடு .. .. .. .. | 90.6 | 79.9 |

இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் எல்லையில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் 30.72 கோடி. ரூபாய் உறுப்பினர்களிடமிருந்து, தவணை தவறிய கடனாக வசூலிக்க

குறித்து'' திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அவர் இருக்கையில் இல்லாததால் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சரை அநுபற்றி விவர அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் தங்களுடன் இணைக்கப் பெற்ற விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வேளாண்மை செலவிற்கு குறுகிய காலக்கடன்களும், வேளாண்மை சார்ந்த உப தொழில்கள் நடத்த மத்திய காலக் கடன்களும் வழங்கி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை, 1979–80-ம் ஆண்டில் வழங்கப் பெற்ற குறுகிய காலக் கடன்களின் அளவு, 1980–81-ம் ஆண்டில் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் முடிய வழங்கப் பெற்ற கடன்களின் அளவு, தவணை தவறிய கடன் நிலுவை முதலான விவரங்கள் கீழ்வருமாறு :—

| விவரம். | தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி. | கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 வங்கியின் எல்லையில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் எண்ணிக்கை .. .. .. | 244 | 270 |
| 2 மத்திய கூட்டுறவு வங்கிக்கு தவணை தவறிய கடன் பாக்கி வைத்திருக்கும் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 244 | 270 |
| 3 1979–80 நிதியாண்டில் வழங்கிய கடன் தொகை (ரூபாய் கோடியில்) .. | 0.53 | 1.75 |
| 4 1980–81-ம் ஆண்டில் வழங்கப்பட வேண்டிய குறுகிய காலக் கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்) .. .. | 8.20 | 14.00 |
| (அ) 1980-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள்வரை வழங்கப்பட வேண்டிய குறுகிய காலக் கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்) .. | 7.95 | 10.07 |
| (ஆ) 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் வரை வழங்கிய குறுகியக் காலக் கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்.) .. .. .. | .. | 0.03 |
| 6 விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களில் உள்ள மொத்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை. .. .. .. | 75,000 | 1,96,000 |
| 7 மொத்த விவசாய உறுப்பினர்களில் சங்கங்களில் கடன் பெறும் தகுதிவாய்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை .. | 400 | 3,000 |
| 8 மத்திய கூட்டுறவு வங்கி அளவில் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாளில் தவணை தவறிய கடன் நிலுவை (ரூபாய் கோடியில்). | | |
| கேட்பு .. .. .. .. .. | 13.31 | 16.83 |
| வசூல் .. .. .. .. .. | 1.27 | 2.86 |
| நிலுவை .. .. .. .. | 12.04 | 13.97 |
| விழுக்காடு .. .. .. .. | 90.5 | 83.00 |
| 9 விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களின் அளவில் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாளில் தவணை தவறிய கடன் நிலுவை (ரூபாய் கோடியில்) | | |
| கேட்பு .. .. .. .. .. | 15.75 | 20.58 |
| வசூல் .. .. .. .. .. | 1.48 | 4.13 |
| நிலுவை .. .. .. .. | 14.27 | 16.45 |
| விழுக்காடு .. .. .. .. | 90.6 | 79.9 |



இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் எல்லையில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் 30.72 கோடி ரூபாய் உறுப்பினர்களிடமிருந்து, தவணை தவறிய கடனாக வசூலிக்க

வேண்டுமென்று மேற்கூறியவைகள் மூலம் அறியலாம். அதிக மான அளவுக்கு தவணை தவறிய கடன்கள் நிலுவை இருப்பதன் காரணமாக மத்திய கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கியினர் அனுமதிக்கும் கடன்களைப் பெற்று வேளாண்மைக் கடன்கள் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கூறிய இரண்டு மத்திய கூட்டுறவு வங்கிகளின் எல்லை யில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 2.71 இலட்சம் விவசாய உறுப்பினர்களில் 3,400 உறுப்பினர்கள் மட்டுமே புதுக் கடன் பெற தகுதியுள்ளவர்களாக உள்ளனர். எஞ்சிய உறுப்பினர்கள் தாங்கள் முன்னர் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் தவணை தவறிய கடன் பாக்கி வைத் திருப்பதால் புதுக் கடன் பெறத் தகுதியில்லாதவர்களாக உள்ள னர்.

1979–80-ம் ஆண்டில், இந்த இரண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், 2.28 கோடி ரூபாய் குறுகிய காலக் கடன்கள் வழங்கியுள்ளன. இதே வங்கிகள் 1977–78-ம் ஆண்டில் 23.18 கோடி ரூபாயும், 1978–79-ம் ஆண்டில் 19.09 கோடி ரூபாயும் குறுகிய காலக் கடன்கள் வழங்கியுள்ளன.

1979–80-ம் மற்றும் 1980–81-ம் 1980-ம் ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் வரையிலும் மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கிய குறுகிய காலக் கடன்கள் வெகுவாக குறைந்ததற்கு காரணம் தவணை தவறிய கடன் நிலுவை மிகவும் அதிகமான அளவுக்கு இருப்பதேயாகும்.

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்த உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு விவசாயிகளுக்குப் பல சலுகை களை அளித்த போதிலும், தவணைத் தவறிய கடன்கள் வசூலில் எந்த விதமான முன்னேற்றம் இல்லை.

மத்திய கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ளது.—

1. ஜூன் திங்கள் இறுதிக்குள் மொத்தம் குறுகிய கால கேட்புத் தொகையில் 40 சதவீதத்தை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வசூலித்து, மாநில வங்கிக்கு இருசால் செய்திருக்க வேண்டும்.

2. மத்திய கூட்டுறவு வங்கிகள் தங்கள் மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைக்கு விவசாய சேவை கூட்டுறவு சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை போதிய அளவு ஆதாயமாக காண்பிக்க வேண்டும்.



தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி 1979–80-ம் ஆண்டு முழுவதும் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன்களைப் பெற முடியாத நிலை இருக்க, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் இந்த ஆண்டில் மிகவும் குறைந்த காலத்திற்குத்தான் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன்களை பெறும் நிலை இருந்தது. தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு தவணை தவறாத கடன் தொகையில் ஏற்பட்ட குறைவினை சரிக் கட்டவும், கெடு தேதி யில் கட்ட முடியாத கடன் தொகையினை திருப்பிச் செலுத்து வதற்காகவும், 1980-ம் ஆண்டு சனவரி மாதத்தில் வழிவகை முன் பணமாக, தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிக்கு 7.44 கோடி ரூபாயும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு 8.39 கோடி ரூபாயும் அரசு வழங்கியுள்ளது. இவ்விரண்டு வங்கி களும் குறுகிய காலக் கடன்களின் கேட்புத் தொகையில் 40 சதவிகிதம் வசூலித்த பின்னரே மேற்கண்ட வழிவகை முன் பணத்தைப் பெற இயலும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள் ளது. அரசு வழங்கிய வழிவகை முன் பணம் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி 40 சதவிகிதத்திற்கான தொகையினை வசூலிக் காததால், இந்த முன் பணத்தை வழங்க முடியவில்லை. நாளது தேதியில் இவ்விரண்டு வங்கிகளிலும் மொத்தத்தில் 6.00 கோடி ரூபாய்க்கு தவணை தவறாத கடன் தொகையில் குறைவு ஏற் பட்டுள்ளது. மேலும், மாற்றப்பட்ட குறுகிய காலக் கடன்களின் கெடு தேதி தவறிய தொகை 5.59 கோடி ரூபாயாகும். 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளுக்குள் மொத்த குறுகிய காலக் கேட்புத் தொகையில் 40 சதவிகிதத்தை மத்திய கூட்டுறவு, வங்கிகள் வசூலித்து மாநில வங்கிக்கு கட்ட வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்த வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கியை இந்த அரசு கேட்டுக் கொள்ள இருக்கிறது. 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளுக்கு முன்னர், தவணை தவறாத கடன் தொகையில் குறைவும் மாற்றப்பட்ட குறுகிய காலக் கடன் களின் கெடு தேதி தவறிய தொகையில் உயர்வும் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தவணை தவறாத கடன் தொகையில் ஏற்படும் குறைவினைச் சரிக்கட்டி, கெடு தேதியில் கடன்களைத் திருப்பிச் செலுத்தி, அதன் மூலம் ரிசர்வ் வங்கியின் கடன்களை பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

1980–81-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5 ஏக்கர் நிலத் திற்குக் குறைவான உடமை உள்ள சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவையில் அசலாக சுமார் 35 கோடி ரூபாயும், இதுவரை செலுத்த வேண்டிய வட்டி நிலுவையாகிய சுமார் 7 கோடி ரூபாய் அடியோடு ரத்து செய்து விடுவது என்று முடிவு செய்துள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் தஞ்சாவூர், கும்பகோணம் மத்திய

வங்கிகள் உட்பட மாநிலத்தில் உள்ள 15 மத்திய கூட்டுறவு வங்கிகள் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் கடன் வரை யறைகளுக்கு, 55.35 கோடி ரூபாய் அளவுக்கு உத்திர வாதம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் மத்திய வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற்று தகுதியுள்ள விவசாயிகளுக்கு புதிய கடன்கள் வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

<u>லோகோ முத்திரையுடன் உயிர் காக்கும் மருந்துகள் அரசு மருத்துவ மனையில் கிடைக்காததால் வெளியில் வாங்கப் பெறுவது.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருவாளர்கள் கு. ரமணி, மற்றும் என். வரதராசன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவரசப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

" லோகோ அடையாளம் உள்ள மருந்துகளைத் தான் அரசு மருத்துவ மனைகளில் வாங்க வேண்டும் என்ற அரசு உத்தரவினால் பல உயிர்காக்கும் மருந்துகளை வெளியில் வாங்கு தில் உள்ள இன்னல் குறித்து. "

<u>டாக்டர் எச். வி. ஹண்டே :</u> தலைவர் அவர்களே, அரசு மருத்துவ நிலையங்களில் மருந்து, மாத்திரைகள் களவாடுதலை தவிர்க்கவும், களவாடுபவர்களை பிடித்து விசாரிக்கவும் நல்ல தரமான மருந்துகளை விநியோகம் செய்யவும் சென்னை மாநிலத் தில் உள்ள மருத்துவ நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படும் மருந்துகள், மாத்திரைகள் ஊசி மருந்து வகையராக்கள், மருந்து புட்டிகள், உறைகள் போன்றவைகள் லோகோ முத்திரையுடன் இருக்கவேண்டும் என்று 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மருந்துகள் தயார் செய்யும் அரசுத்துறை, கூட்டுத்துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த கம்பெனிகளுக்கு 1979 ஆம் ஆண்டுஏப்ரல் திங்கள் 1 ஆம் தேதி முதல் லோகோ முத்திரை யுடன்அரசாங்க மருத்துவ நிலையங்களுக்கு விநியோகம் செய்யு மாறு அறிவிக்கும்படி. மருத்துவத்துறை இயக்குநர்கள் கேட்டுக் கெள்ளப்பட்டார்கள் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவை





யான மருந்து மாத்திரை லோகோ முத்திரையுடன் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் தேதி முதல் விநியோகம் செய் வதற்காக முன்னதாகவே தேவையான அளவுகளை கம்பெனி களுக்கு அறிவிக்குமாறு மருந்துவத்துறைத் தலைவர்கள் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

பின்னர் 1979 ஆம் ஆண்டு மே மாதம் மருத்துவத் துறை யைச் சேர்ந்த மூன்று இயக்குநர்களும் அவர்களுக்கு கீழ் உள்ள தேவைகளை அறிவிக்கும் அலுவலர்களை, மருத்துவ நிலையங் களுக்கான அடுத்த 75 சதவிகித தேவைகளை ஐ.டி.பி.எல்., டி. டி. பி. எல்., எச்.ஏ.எல்., எஸ். எஸ். பி., பி. ஐ.ஏல்., மற்றும் தனியார் துறையச் சேர்ந்த கம்பெனிகளுக்கு அக்கம்பெனிகள், லோகோ முத்திரையுடன் விநியோகம் செய்வதாய் இருந்தால் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

அரசு நிறுவனம் கூட்டு நிறுவனம், சிறுதொழில் நிறுவனங்கள் முதலியவை மருத்துவ நிறுவனங்களுக்கு தேவையான மருந்து கள் கொடுக்கும் நிலையில் உள்ளது. மருந்து நிறுவனங்களின் துறைத் தலைவர்கள் மருந்து பொருட்களின் தேவையான அளவை தெரிவிக்கும்படி ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டிருப்பதால் அனைத்து மருந்து நிறுவனங்களுக்கும் போதிய மருந்து பொருள்கள் பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உயிர் காக்கும் அத்தியாவசியமான மருந்துகளை பொருத்த வரை அரசு 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் குழு ஒன்றை, உடனடியாத் தேவைப்படும் மருந்துகளை அறிவிப்பதற்காக ஏற்படுத்தியது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அத்தியா வசியமான 77 ம[illegible]கள் கொண்ட மருந்துகள் பெயர் அட்ட வணை ஒன்று எல்லா மருத்துவதுறைத்தலைவர்களுக்கும், அவர் களுக்கு கீழ் உள்ள தேவைகளை அறிவிக்கும் அலுவலர்களுக்கு சுற்றனுப்புவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு மே மாதம் மருத்துவத்துறைத் தலைவர்கள் உயிர்காக் கும் மருந்துகளடங்கிய பெயர் அட்டவணையில் உள்ள மருந்து கள் மட்டும் கம்பெனி முத்திரையுடனும் மற்ற மருந்துகள் லோகோ முத்திரையுடனும் இருக்கலாம் என்று அறிவிக்கப்பட் டார்கள்.

லோகோ முத்திரையில் கிடைக்காத உயிர்காக்கும் மருந்து களை நோயாளிகளின் உடனடி தேவைக்காக கம்பெனி பெயரில் வாங்கிக்கொள்ள முடியும் என அரசு அறிவித்திருக்கிறது.

[டாக்டர் எச்.வி. ஹண்டே] [1980 ஜூலை 10

அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான மருந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். பல நிறுவனங்கள் லோகோ முத்திரையில் மருந்து வழங்க முன் வந்திருப்பதால் லோகோ உத்தரவு நோயாளிகளின் தேவைக்கு ஊறு ஏற்படாமல் போதிய கவனத்துடன் அமுல் செய்யப்படும்.

திரு. கு. ரமணி : அமைச்சர் அவர்கள் வைத்துள்ள அறிக்கையைப் பார்த்தேன். லோகோ முத்திரையுள்ள மருந்துகளைத் தவிர வேறு எந்த மருந்துகளும் எந்தக் கம்பெனியிலிருந்தும் வாங்கக்கூடாது என்று உத்தரவிட்டதன் மூலமாக உயிர் காக்கும் மருந்துகள் கூட இல்லாத நிலை இருக்கிறது. உயிர் காக்கும் மருந்துகள் என்று சொல்லும்போது அவை ரொம்ப விலை உயர்ந்த மருந்துகள் என்று அர்த்தம் இல்லை. உதாரணமாக, மூட்டைப்பூச்சி மருந்தைச் சாப்பிட்டுவிட்டு உயிர் போகும் தறுவாயில் ஒரு நோயாளி ஆஸ்பத்திரிக்கு வந்தால் அவருக்குக் கொடுக்கக்கூடிய மருந்து 20 பைசா அல்லது 30 பைசா கூட ஆகாது. அந்த மாதிரி மருந்துகளைக் கூட ஆஸ்பத்திரிகளில் வாங்கி வைக்க அனுமதிக்கப்படாமல் மருந்துச் சீட்டுகளை எழுதிக் கொடுத்து வாங்கிக் கொண்டு வரச் சொல்லும் முறை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்த முறையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மாதிரியாக எந்த விதமான பிரச்சினையும் இப்போது இல்லையென்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அப்படி மிக முக்கியமான உயிர் காக்கும் மருந்துகள் எல்லாம் இப்போது லோகோ முத்திரை இல்லாமலிருந்தாலும் கூட வாங்கலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையில் அந்த மருந்துகளை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மூட்டைப் பூச்சி மருந்தைச் சாப்பிட்டு வருகிற நோயாளி பற்றிச் சொன்னார்கள். அந்த மாதிரி நிலைமைகளில் உடனடியாக ஸ்டமக் வாஷ் செய்து இன்ட்ராவீனஸ் மூலம் குளுகோஸ் கொடுக்கப்படுகிறது. அதற்கெல்லாம் எல்லா வசதியான ஏற்பாடும் இருக்கிறது. லோகோ முத்திரை இல்லையென்றாலும் வாங்கலாம். உயிர்காக்கும் மருந்துகளை எல்லாம் வாங்கி வைப்பதற்கு எல்லா விதமான ஏற்பாடுகளும் இருக்கின்றன. பாதுகாப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூலை 10]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த மருந்துகள் ஏராளமாகத் திருட்டுப் போவதைத் தடுக்கின்ற முறையிலே கண்டுபிடிப்பதற்காக இப்படிப்பட்ட முறைகள் கையாளப்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். சாதாரணமாக உயிர் காக்கக்கூடிய மருந்துகள் அந்த அந்த ஸ்தலங்களிலே வாங்கப்படுவதற்கும் தடைகள் இருக்கின்றன. எதிர்காலத்திலே இப்படிப்பட்ட திருட்டுக்களைத் தடுப்பதற்காகவும் திருட்டுகள் ஏற்பட்டால் அவைகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்கின்ற முறையிலே அரசுத் துறையிலே உயிர் காக்கும் மருந்துகளைக் கொடுக்கிற திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே : தலைவர் அவர்களே, உயிர்காக்கும் மருந்துகளைப் பொறுத்தவரையில் அந்த மருந்துகள் தேவைப்படுகிற நேரத்திலே லோகோ முத்திரை இல்லையென்றாலும்கூட நேரடியாக வாங்கலாம் என்ற உத்திரவைப் போட்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சில கம்பெனிகளைப் பொறுத்தவரையில் லோகோ முத்திரையுடன் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. ஆகவே, எந்த எந்தக் கம்பெனிகளிடமிருந்து லோகோ முத்திரை போட்டு வாங்க முடியுமோ அவைகளை அங்கேயிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். அப்படி வாங்க முடியாத நிலைமையில் அப்படிக் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிற கம்பெனிகளிலிருந்து வாங்குகிற மருந்துகளைப் பொறுத்தவரையில் டிபார்ட்மெண்ட் முத்திரையைப் போட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, திருட்டுப் போகாமல் அவைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த மருந்துகள் திருட்டு சம்பந்தமாக அதன்மீது கடுமையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று இதே மன்றத்திலே முன் நான் பிரச்சினையைக் கிளப்பிப் பேசியபோது, கோவை மருத்துவமனைக் கல்லூரியிலே அவர்கள் வைத்திருக்கின்ற ஸ்டாக்கிலே இருந்த மருந்துகளுக்கு ஆஸ்பத்திரியிலே அவர்களே முத்திரை போட்டு அந்த மருந்துகள் திருட்டுப் போகாமல் பாதுகாத்தார்கள் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் உத்திரவு காரணமாக, இன்றைக்கும் அவர்களுக்குத் தேவையான மருந்துகள் எல்லாம் எந்த நேரத்திலே தீர்ந்துவிடும் என்று கண்டுபிடிக்க முடியாது, அது மட்டுமல்ல, அதிகத் தேவை ஏற்படும் மருந்துகள் தீர்ந்துவிட்டால் கம்பெனிகளிலிருந்து அவைகளை வாங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை. முத்திரையிட்டுத் தான் வாங்கவேண்டுமென்று சொல்லப்படுவதால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆனால் அமைச்சர் அவர்கள் இப

போது உத்திரவு போட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். கம்பெனிகள் முத்திரையிட வேண்டுமென்று சொல்லப்பட்டாலும் கூட பெருவாரியான கம்பெனிகள் அந்த முத்திரையைப் போட்டுக் கொடுக்க முன் வருவதில்லை. இந்த நிலையிலே அரசே அந்த முத்திரையைப் போட்டுக் கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா ? மருந்துகள் தீர்ந்துவிட்டால் அந்த மருந்துகளை ஆஸ்பத்திரிகள் வாங்கிக்கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சைக் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முத்திரை மருந்துகள் தீர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள் சில கேட்டகரிஸ் பொறுத்தவரையிலே எவ்வளவு வேண்டுமானாலும் மருந்துகள் இருக்கின்றன. உதாரணமாக Parasitamai என்ற மருந்திலே தமிழ்நாடு அரசு முத்திரையிட்டு 'த/அ' என்று போட்டுக் கொடுக்கிறார்கள். சில மருந்துகளைப் பொறுத்தவரையில் classics என்ற மருந்து ஒரு ஜெர்மன் கம்பெனியில் தயாரிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட கம்பெனிகளிடமிருந்து முத்திரைப் போட்டு வாங்க முடியாது. உடனுக்குடன், மருந்துகள் இல்லாமல் போகிற நிலையில், மருந்துகளை வாங்கி நோயாளிகளுக்குக் கொடுக்கமுடியாத பிரச்சினை ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இந்த கிளாஸிக்ஸ் போன்ற மருந்துகளைக்கூட நேரடியாக அவர்கள் வாங்கிக்கொள்கிற முறையிலே உத்திரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே நோயாளிகளுக்கு எந்தவிதமான அவதியும் இல்லாமல் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, எந்தப் பிரச்சினையும் இதிலே எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) ஆளுநர் செய்தி—1980–81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1980–81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby gives my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1980–81."





[முற்பகல் 9·10]

## 3. வரவு செலவுத் திட்டம் 1980–81—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 25—சின்கோனா.

(இ) கோரிக்கை எண் 45—காட்டுவளத்துறை.

(ஈ) கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

(உ) கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 1980–81 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். டூரிசம் சம்பந்தமாக உள்ள அறிக்கை இன்று காலையில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் அதைப் படிக்க முடியவில்லை. இன்றைக்கு அந்த மானியம் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் போதாதவர்கள் கிடையாது, எனவே அதைப்பற்றி உடனே பேசலாம்.

### கோரிக்கை எண் 12.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" மானியக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,78,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

திரு சு. பாலன் : தலைவரவர்களே, பெரம்பூர் தொகுதியில் உள்ள பல தனியார் கோவில்களை அறக்கட்டளையின் சட்ட நிர்வாகத்தில் சேர்க்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,78,04,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு ந. சிவஞானம் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் பல கோயில்களில் வருமானம் சரிவர கிடைக்காததால் கோவிலின் அன்றாட பூஜைகள் சரிவர நடப்பதில்லை. தினம் பூஜைகள் நடக்க வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,78,04,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்டதும் இணைக்கப்படாததுமான திருக்கோயில்களில் பணிபுரியக்கூடிய 1,046 உள்துறை ஊழியர்களை அரசு கடைநிலை ஊழியர்களாக மாற்றுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டம் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,78,04,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 25.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,77,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு சு. பாலன் : தலைவரவர்களே, சின்கோனா மாத்திரைகள் கிராமப்புற மக்களுக்கு தாராளமாக கிடைக்க வசதி செய்யாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

Thiru N. S. V. Chithan: Sir, to discuss about the details of the steps taken to grow cinchona at other parts of Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 1,77,80,000 under demand No. 25-cinchona be reduced by Rs. 100.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில், சின்கோனா தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிற அளவு ஊதியம் கொடுக்காமலிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77.80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, சின்கோனா தோட்டத் தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை, போனஸ் பிரச்சினை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,80,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

## கோரிக்கை எண் 45.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் ; தலைவரவர்களே ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்கிற தலைப்பின்கீழ் ரூ. 6,37,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு சு. பாலன் : தலைவரவர்களே, காட்டு வளத் துறையில் காடுகளில் சந்தனக் கட்டைகள் திருடப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கும் முறை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,37,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, மலைப் பகுதிகளில் அதிகமான மரங்கள் வெட்டப்படுவதால் நிலச்சரிவு ஏற்பட்டு அதனால் பெரும் நஷ்டம் ஏற்படுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,37,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு டி. மணி : தலைவரவர்களே, கன்னியாகுமரி தொகுதியிலுள்ள வனபாதுகாப்புத் துறையின்கீழ் செயல்படும் கிராமம், டீ தோட்டத்தில் மாறமலையில் தொழிலாளர்களுக்கு போதுமான ஊதியம் மற்றும் வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்தாதது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,37,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு பொ. உத்திராபதி : தலைவரவர்களே, மலைகளிலும் ஆற்றுக்கரை ஓரங்களிலும் மரங்கள் வளர்ப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டு வனத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,37,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 47.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :-

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,88,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."



திரு சு. பாலன் : தலைவரவர்களே, திரைப்படத்தொழில் நுட்பவியல் ஏழை எளியவர்களின் தாழ்ந்தப்பட்ட ஆர்வமுள்ளவர்களை அலைக்கழிக்கும் நிலையை தவிர்க்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எ்ண் 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,88,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் வானொலி நிலையமும், தொலைகாட்சி நிலையமும் விரைவில் அமைப்பதற்கு மைய அரசினை வலியுறுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மாதத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 47—தகவல், சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,88,20,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா வால்பாறை மலையில் சோலையார் அணைப்பகுதியை ஒரு சுற்றுலா கேந்திரமாக ஆக்க ஏற்பாடுகளைச் செய்யாமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 47—தகவல், சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,88,20,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

## கோரிக்கை எண். 54.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல்
என் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 54—காட்டுவள
மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,48,25,000க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவரவர்களே, காடுகள்
பெரும்பாலும் அழிக்கப்படுவதைத் தடுக்கக் கோரி விவாதிக்க
நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண் 54-காட்டுவள மூலதனச்
செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகிற
ரூ. 8,48,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்
களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட
வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 54-காட்டுவள மூலதனச்
செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகிற
ரூ. 8,48,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை
களும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதிப்பதற்கு
வைக்கப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே,
பாயின்ட் ஆ·ப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர்கள்
எழுப்பிய பிரச்சனைகளுக்கு நீங்கள் பதில் சொன்னீர்கள்.
இந்த மானியக் கோரிக்கை சம்பந்தமான அறிக்கைகள்,
இதற்கு முன்னதாக இதே மாதிரியாக கிளப்பப்பட்டு,
ஒருநாளைக்கு முன்னால் கொடுத்தால்தான் படித்துப்
பார்த்து விவாதிப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்று
உறுப்பினர்கள் தெரிவித்து கருத்துக்களையொட்டி, அது



சம்பந்தமாக பேரவைத் தலைவர்களும் தீர்ப்புகள் வழங்கி
யிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அப்படிக் கொடுக்க
வில்லை. ஆகவே, இனிமேல், ஒருநாளைக்கு முன்னதாக
அந்த அறிக்கைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே,
நேற்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம், ரேஷன் கார்டு
சம்மந்தமாக..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சபைக்கு வந்
ததை நான் பார்த்து விட்டேன். ரேஷன் கார்டு அறிவிப்பி
லிருந்து நான் வரிசையாக எடுத்துக் கொண்டிருக்க முடியாது.
தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா, இல்லையா என்பதைப்
பார்க்க வேண்டும். உட்காருங்கள்.

திரு அ. ரகுமான்கான் : நாளைக்கு எடுத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்டளையிடாதீர்கள்.

திரு அ. ரகுமான்கான் : ஒரு நிமிஷம் நான் சொல்
வதைக் கேளுங்கள். கட்டளையிடவில்லை, கேட்டுக்கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரேஷன் கார்டிலே
ஆரம்பித்தீர்களானால், அது கார்ப்பரேஷன் வரைக்கும்
போகும்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரு நிமிஷம், நான் என்ன
சொல்கிறேன் என்பதைக் கேளுங்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்,
நான் திரு. அழகர்சாமி எழுப்பிய பிரச்னைக்குப் பதில்
சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்
சாமி, சுற்றுலா துறை பற்றிய குறிப்புகள் தனக்கு வர
வில்லை யென்று குறிப்பிட்டார்கள், அச்சகத்திலிருந்து வருவதற்
தற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது என்று
அறிவித்திருக்கிறார்கள். அது தானே தவிர, வேறொன்று
மில்லை. இனிமேல், எல்லா மானியக் கோரிக்கைகளுக்கான
குறிப்புகளையும் முதல் நாளே தர, தக்க ஆதாரங்களை

உறுப்பினர்களுக்கு சேர்த்து விடுகிற வேலையை இலாகா செய்யும் என்று குறிப்பிடுகிறேன். அதற்கான நடவடிக்கையை இலாகா எடுக்கும் என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தாங்கள் இடுகின்ற கட்டளையை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறேன். நாளை, அதை எடுத்துக்கொள்வீர்களா என்று தான் கேட்கிறேன்......

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வந்திருக்கின்றன. மானியக் கோரிக்கைகள் விவாதத்திலே இருக்கிறபொழுது ஒழுங்குப் பிரச்சினை என்று கிளப்புவதற்கு, சாதாரணமாக, நம்முடைய அவையிலே யாருக்குமே உரிமை கொடுப்பதில்லை. இப்படி, நீங்கள் தருவீர்களானால் தவறான முன் மாதிரியாக ஆகாதா என்று அறியவிரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்த மன்றத்தின் முன்னால் 5 தலைப்புகளில் மானியக் கோரிக்கைகள் அனுமதி வேண்டுமென்று வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மானியக் கோரிக்கைகளின் தொடர்பான துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள் * அச்சிடப்பெற்று இந்த அவையிலே உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாக எடுத்துக் கொண்டு, அவைகளைப் பதிவேட்டிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளில் ஒரு சிறிய திருத்தத்தை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில், 8-வது பக்கத்தில் 'கோயில் பணியாளர்கள்' என்ற தலைப்பின் கீழ் வருகிற அந்த விவரத்தில், கடைசி வரியில் 'ஊதிய உயர்வு' என்று இருப்பதை, 'அகவிலைப் படி உயர்வு' என்று திருத்திப் படித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். அந்தத் தவறு ஏற்பட்டதற்காக வருந்துகிறேன். அதை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையும் விளக்கங்களையும்

* 247, 263, 177, 303-ம் பக்கத்தில் இணைப்புகள் I, II, III & IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



பல்வேறு ஆலோசனைகளையும் இந்த மன்றத்திலே எடுத்து வைத்ததற்குப் பிறகு இறுதியாக, நான் என்னுடைய விளக்கத்தைத் தருகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

*திரு. ப. சுந்தரம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 1980–81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் 5 மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துகொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே முதலிலே காட்டுவளத்தைப் பற்றியும், பிறகு சுற்றுலா பற்றியும், என் தொகுதியிலே இருக்கிற குறைகளைப் பற்றியும் பேச இருக்கிறேன். எனது திருப்பத்தூர் தொகுதியிலே ஏலகிரி மலை என்ற இடத்திலே ஒரு காடும், ஜவ்வாது மலை என்ற இடத்திலே ஒரு காடும் இருக்கின்றன. அந்தக் காடுகளில் விளைகின்ற சந்தன மரங்களைக் கொண்டு அங்கே ஒரு நீண்ட நாள் கோரிக்கையான சந்தன ஆயில் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும் என்று, சென்ற சட்டமன்ற கூட்டத்திலும் அதற்குப் பின்னாலே கேள்விகள் கேட்கின்ற நேரத்திலும் நான் திருப்பத்தூர் பகுதியிலே சந்தன ஆயில் தொழிற்சாலை வேண்டும் என்று கோரிக்கை விட்டிருந்தேன். அந்தக் கோரிக்கைகையை ஏற்று இந்த அரசு திருப்பத்தூர் பகுதியிலே ஒரு சிறு சந்தன தொழிற்சாலை ஏற்படுத்துவதாகவும் 22·88 லட்சம் ரூபாயில், வருடத்திற்கு 52 டன் சந்தன ஆயில் தயாராகின்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஜவ்வாது மலையில் விளைகின்ற சந்தனம் நமது வடார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதிலும் முதலிடம் பெற்றுள்ளது. அந்த வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் பகுதியிலே கிடைக்கின்ற அந்த சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்து அங்கே இருக்கிற பாரஸ்ட் ஆபீசில் வருடத்திற்கு இரண்டு முறை ஏலம் விடப்படுகின்றது. ஏறக்குறைய வருடத்திற்கு 400 டன் சந்தனக் கட்டைகள் விளைவதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் திருப்பத்தூரிலே ஆரம்பிக்கப்படுகின்ற சந்தன ஆயில் தொழிற்சாலைக்கு ஏறத்தாழ 104 டன்தான் தேவைப் படுவதாகச் சொல்லப்படுகிறது என்றும் மீதியை வேறு வேலைக்கு உபயோகப்படுத்தப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அங்கே விளைகின்ற சந்தன மரங்களைக் கொண்டு அங்கே ஒரு சிறிய தொழிற்சாலை ஏற்படுத்துவதைவிட, பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தினால் அங்கே இருக்கின்ற வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதுவும் எனது தொகுதியான திருப்பத்தூரில்

எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. அது பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலைஜாதியினர் வாழ்கின்ற பகுதியாக இருப்பதால், அந்தச் சந்தன ஆலை தொழிலைப் பெரியதாக ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு என் தொகுதி மக்கள் சார்பில், அமைச்சரவைக்கும், தமிழக அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பத்தூர் பகுதியிலே சந்தனக் கட்டைகள் நிறைய திருட்டுப் போகின்றன. அந்தத் திருட்டைத் தடுப்பதற்காக என் தொகுதியிலே பல இடங்களில் செக் போஸ்டுகள் போடப் பட்டிருக்கின்றன. செக் போஸ்டுகள் போடப்பட்டு இருந்தாலும் அங்கே சைக்கிள்களில் கூட கொண்டு வந்து விற்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. காரணம் சில பேர் சந்தன மரங்களைத் திருடி விற்பதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்று செய்கிறார்கள். வேலை இல்லாத காரணத்தால் தான் இது போன்ற காரியங்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். இப்படி சந்தன மரங்களை மட்டுமல்லாமல், அங்கே ஜவ்வாது மலையில் விளையும் மூங்கில் மரங்கள், மற்ற மரங்கள் ஆகியவற்றையும் வெட்டி அரசுக்குத் தெரியாமல் நகரத்திற்குக் கொண்டு வந்து விற்கும் சூழ்நிலையும் இருக்கிறது.

இந்தச் சந்தன மரங்கள் திருட்டுப்போவதைத் தடுப்பதற்கும், மூங்கில் மற்றும் பிற மரங்கள் விறகுக்காக வெட்டப்படுவதைத் தடுப்பதற்கும், அங்கே ஒரு பெரிய சந்தனத் தொழிற்சாலையை ஏற்படுத்தினால், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அவர்கள் நிச்சயமாக இது போன்ற காரியங்களில் இறங்கமாட்டார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏலகிரி மலையில் கடுக்காய், புளி, சீக்காய், புங்கங்காய் போன்றவைகள் நிறைய விளைகின்றன. அந்தக் காடுகளில் விளைகின்ற இது போன்ற உணவுப் பொருள்களை பாரஸ்ட் ஆபீசர்கள் தனியாருக்கு காண்ட்ராக்ட் விடாமல் அங்கே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பாரஸ்ட் ஆபீசர் நிர்ணயிக்கும் விலைக்குக் கொடுத்து, அந்தச் சங்கங்கள் மூலம் அதனை விற்பனை செய்தால், அந்தச் சங்கங்களுக்கு கிடைக்கின்ற லாபம் அங்கே வாழ்கிற மக்களுக்கும், காட்டு ஓரங்களில் வாழும் மக்களுக்கும் நல்ல முறையில் பயன்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். மேலும், இந்த வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் லாபத்தை அங்கேயிருக்கும் மக்களுக்கு கடனாக ஆடு வாங்கவும் மற்ற காரியங்களுக்கும் அளிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





அது மட்டுமல்லாமல், அங்கே ஜவ்வாது மலையில் விளைகின்ற சந்தன மரங்கள் தற்போது திருப்பத்தூருக்கு எடுத்து வரப்படுகின்றன. அப்படி கொண்டு வரப்படும் மரங்கள் வைப்பதற்கு இடம் போதவில்லை என்ற காரணத்தினால், கிடங்குகளைப் பெரிதுபடுத்தப்போவதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்தக் கிடங்குகளைப் பெரிதுபடுத்துவதன் மூலம், அங்கே தினக்கூலிகளாக சந்தன மரங்களை வெட்டிக் கொண்டு இருக்கும் தொழிலாளிகளை நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது காடுகளை வளர்க்கும் திட்டம், மரங்களை வைக்கும் திட்டம் ஊராட்சிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அப்படி ஊராட்சிகளில் வைக்கப்படுகின்ற நேரத்தில் புறம்போக்கு நிலங்களில் இது போன்ற மரங்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இது போன்ற மரங்கள் வைக்கின்ற ஏற்பாடுகளை ஏரிப்புறம்போக்குகளில் வைப்பதன் காரணமாக அங்கே கிராமத்தில் இருக்கின்ற மக்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு விடுவது தடைபடுத்தப்படுகிறது. அந்த இடம் ஒன்றில் தான் ஆவர்கள் ஆடுமாடுகளை மேய்ப்பதற்கு விட முடியும்.

[முற்பகல் 9.30.]

அந்த ஏரிகளிலும் நீங்கள் காடுகளை வளர்த்தால் அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஆடு, மாடு மேய்ப்பதற்கு இடம் இல்லாமல் போகும். ஆகவே, அந்த இடத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியிலே கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஆடு மாடு மேய்ப்பதற்கு வசதி செய்தும், இன்னொரு பகுதியிலே ஏலமரம் வளர்ப்பதற்கும் வகை செய்யும் ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு திட்டம். திருப்பத்தூரில் ஒரு சந்தன தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது திருப்பத்தூருக்கு அருகில் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, திருப்பத்தூரில் எந்த இடத்தில் என்று சொல்லவில்லை. இருந்தாலும் திருப்பத்தூர் அருகிலே அந்தச் சந்தனத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான இடத்தை பார்த்தாகிவிட்டதா? அதை எங்கே ஆரம்பிப்பது என்று அரசு செயல் வடிவில் முடிவு செய்துவிட்டதா? மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது அது எந்த இடம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூரில் ஒரு சந்தனத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அதைப் போல கலசப்பாக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் ஜவ்வாது மலையிலே அந்த சந்தன தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும் அதற்குத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, திருப்பத்தூரில் அந்த சந்தனத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்ததற்காக நான் அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுற்றுலா தலமான ஏலகிரி மலை எனது தொகுதியில் இருக்கிறது. அந்த மலையிலே வருடாவருடம் கோடை விழா நடைபெறுகிறது. அந்த கோடை விழா நடக்கும் காலத்திலும், அருகாமையிலுள்ள நகரங்களிலிருந்தும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்தும் ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்களிலும் ஏராளமானவர்கள் அங்கே சுற்றுலா வருகிறார்கள். அப்படி வருகின்ற அந்த மக்களுக்கு தங்குவதற்கு இடம் இல்லை; அவர்களுக்குச் சரியாக உணவு கிடைக்கவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்த ஏலகிரி மலையைப் பார்க்கச் செல்கின்றவர்கள் வசதி படைத்தவர்கள் மட்டுமல்ல; ஏழை எளிய நடுத்தர மக்களும் சுற்றுலாவாக அந்த மலைக்குச் சென்று வருகிறார்கள். ஆகவே அங்கே சுற்றுலா வாரியத்தின் மூலம் குறைந்த வாடகையில் தங்கும் விடுதி ஒன்று கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல சுற்றுலா வாரியத்தின் மூலம் உணவு விடுதி ஒன்றும் அங்கே ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அறநிலையத் துறையைப்பற்றி ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திருப்பத்தூரிலே தர்மராஜா கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அதற்குச் சொந்தமான பாஞ்சாலி மைதானம் என்ற ஒரு இடம் இருக்கிறது. அது திருப்பத்தூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குச் செல்லும் வழியில் இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 100 கடைகளுக்குமேல் இருக்கின்றன. அந்தக் கடைகளிலிருந்து வாடகை வசூல் செய்வது யார் என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.





அந்தப் பாஞ்சாலி மைதானத்திலே இருந்து ஏறக்குறைய
200, 300 ரூபாய் அளவுக்கு வருகின்ற வாடகை யாருக்குச்
செல்கின்றது. அந்த இடம் யாருக்குச் சொந்தம். அந்த வாட
கையை யார் வசூல் செய்கிறார்கள் என்ற கணக்கை நீங்கள்
கண்டுபிடிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)
ஆகவே அந்தப் பாஞ்சாலி மைதானத்திலே இருக்கின்ற அவர்
களைக் காலி செய்து விட்டு அங்கே ஒரு பெரிய கட்டிடம் கட்டி
அந்தக் கட்டிடங்களை வாடகைக்கு விட்டால்........

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்.)

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே,
இன்றைய தினம் இங்கே மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை
அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக்
கோரிக்கைகளான சின்கோனா, காட்டு வனத்துறை, தகவல்,
சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவள மூல
தனச் செலவு ஆகியவற்றின் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக
சில கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்ததற்காக
நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
பொதுவாகவே காடுகள்தான் ஒரு நாட்டின் ஜீவநாடிகளாக
இருந்திருக்கின்றது என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டு
களைச் சொல்ல முடியும். முன்பு அமெரிக்காவிலே பிரசித்திப்
பெற்ற ஹூவர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பல பொருளாதார
தேக்க நிலைகளைப் போக்குவதற்காக எஃப். டி. ரூஸ்வெல்ட்
அவர்களால் தயாரிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டத்தில் கூட
காடுகள் முக்கியத்துவம் பெற்றது என்று சொன்னால் அது மிகை
யாகாது. ஆங்கிலத்திலே சொல்வார்கள், The famous and
reowned reformer F. D. Roosevelt, Preident of the United States
of America and fames architect of American economy has said:—
The fertility of the forestry is the welfare and wealth of the Nation.
Thus his great NEW DEAL POLICY came into existence.

என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலையில் இந்தத் தமிழ
கத்திலே அதைத் தயாரித்திருக்கக்கூடிய இந்த பட்ஜெட்
மிகவும் தேவையான நியாயமான ஒரு பட்ஜெட்டாகும். வறட்சிப்
பகுதியான நமது தமிழகத்தை வளர்ச்சிப் பகுதியாக ஆக்கக்
கூடிய அளவிலே; திட்டமிடுகின்ற வகையிலே இது அமைந்திருக்
கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திற்கு
வந்த 'தாளமி' என்ற ஒருவர் வளைக்குள்ளிருந்து வந்த
எறும்பினை எடுத்து புட்டிக்குள் அடைத்தானாம். காரணம்

[டாக்டர் கே. சமரசம்] [1980 ஜூலை 10

எறும்பின் உடலில் தங்கத்தூள் ஒட்டிக் கொண்டிருந்ததாம். இப்படித் தமிழகத்தைப்பற்றிச் சொல்வார்கள். அப்படிப்பட்ட வளமான தமிழகம் சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளாகியும் இன்றைக்கும் வறட்சியாக இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்று சொன்னால் அது தவறாகாது. அப்படிப்பட்ட வறட்சிப் பகுதியை வளர்ச்சிப் பகுதியாக ஆக்குவதற்கு காடுகள் மிக அவசியம் என்பதை மிகத் தெளிவாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இயற்கையாகவே காடுகள் அவசியம் என்பது மட்டுமல்லாமல் இன்றைய தினம் வன விலங்குகள் வாழ்வதற்கும், மனிதர்களுக்குத் தேவையான பொருட்களைத் தருவதற்கும், இயற்கை அரணாக இருக்கக் கூடிய வகையிலேயும், நல்ல மழையினை நாம் பெறுவதற்காகவும், வன விலங்குகள் சரணாலயங்கள் மிகச் சிறப்பாக அமைப்பதற்கும் காடுகள் அவசியம். இப்படிப்பட்ட பல வசதிகளைச் செய்யக் கூடிய வகையிலே இந்த மானியக் கோரிக்கைகள் அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

உள்ளபடியே இன்றையதினம் இருக்கின்ற சூழ்நிலையில், காடுகள் என்று வருகின்றபோது அதை வளர்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான அம்சங்களும் இதிலே இருக்கின்றது. ஆகவே அந்த வகையிலே நாம் என்ன எதிர்பார்த்தோமோ, இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்களோ அவைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலே, அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே அமைந்திருக்கின்றது இந்த மானியக் கோரிக்கை என்பதை நிச்சயமாகச் சொல்லிக் கொள்கிறேன். அதைப் போலவே மரம் நடுதல் என்ற வகையிலே அதற்குத் தேவையான பல டெப்போக்களை அமைத்தல், இன்னும் பல அம்சங்கள் விரிவான அளவிலே அதாவது அட்மினிஸ்ட்ரேட்டிவ் என்று சொல்வார்களே அந்த அளவிலே நிர்வாகச் சீர்திருத்தத்தைக்கூட இதுவரையிலே இல்லாத அளவுக்கு மிகத் திறமையாக இந்த நேரத்திலே அமைச்சரவர்கள் செய்து காட்டி இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு அருமையான மானியக் கோரிக்கை இந்த நாட்டின் முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே இருக்கின்றது என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து பர்மாவுக்குப் பெருமை தேடித் தருவது தேக்கு மரங்கள். அதைப் போலவே தமிழகத்திற்குப் பெருமைத் தரக்கூடியது சந்தன மரங்கள்தான். காடுகளிலே இருந்து வரக்கூடிய வருவாயிலே 3-ல் ஒரு பங்கு அவற்றின் மூலம்தான் வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற நேரத்தில் இது மிகவும் நமக்குப் பெருமை தரக்கூடியதாகும் என்பதையும் சொல்ல வேண்டியதாக இருக்கின்றது.



1980 ஜூலை 10] [டாக்டர் கே. சமரசம்]

அடுத்து இரயில்வே லைன்களில் மரம் நடுவதற்கு, 15 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் நடுவதற்குரிய திட்டத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதிகளிலே டெப்போக்களை ஏற்படுத்த வகை செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இப்படிப்பட்ட இந்த சூழ்நிலையில் இது ஒரு நல்ல அருமையான பட்ஜெட் ஆக வந்திருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலைகளை—வாய்ப்புள்ள பகுதிகளையெல்லாம் ஒரு வழிப்பாதையாக்கினால்—லாரி விபத்து தடுக்கவும் போக்குவரத்து சிரமைக்கவும் பயனுள்ளதாக இருக்கும். இடையில் தேவையான மரங்களை வளர்க்கலாம். ஆகவே அந்த வகையில் அரசு யோசனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 9-40]

முதலைகள் வளர்ப்பு கிருஷ்ணகிரி அணையில் தொடங்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே வரவேற்பதற்கு உரிய விஷயம். மேலும் கிருஷ்ணகிரி அணையைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும். அதற்கு வெளிநாட்டுப் பயணிகளின் கவனத்தை அதிகமாக ஈர்க்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதை இந்த அரசு ஆலோசனையாக ஏற்று செயல்படுத்த முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டங்கள் மிக மிக நல்ல திட்டங்கள். இந்த மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இருக்கிற பிரச்சினை என்னவென்றால், 30 ஆண்டு காலமாக இல்லாத அளவுக்கு இப்படிப்பட்ட மானியக் கோரிக்கைகள் கொண்டு வருகிற போதும் கூட, குற்றம் சொல்கிற நிலை இங்கே சில பேரிடம் இருக்கிறது.

தென் அமெரிக்க காடுகளில் 'ஸ்கங்' என்ற ஒரு வித பிராணி இருக்கிறது. அது தாக்கவரும் மற்ற மிருகங்களிடமிருந்து, தன்னைக் காத்துக் கொள்ளும் சக்தியற்றது. இப்படி சக்தியற்ற காரணத்தினால் மற்ற மிருகங்கள் தாக்க வரும்போது, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அது தன்னைச் சுற்றிலும் ஒரு துற்நாற்றத்தை உருவாக்கிக் கொள்ளுமாம். எதிர்க்க வரும் வீர மிக்க, தீரமிக்க பிராணிகள், அதைச் சுற்றி வீசும் இந்த துர்நாற்றத்தை சகிக்க முடியாமல் ஓடிவிடுமாம். அது போல தமிழக அரசியல் துறையிலும் 'ஸ்கங்குகள்' இருக்கின்ற நிலைமை இருக்கிறது என்பதைத்தான் நான் உவமையாக சொல்ல முடிகிறது. ஆகவே அரசு அதனையும் முறியடித்து மிகப் பெரிய

திட்டங்களின் முன் எதிரொலியாக இந்த மானியக் கோரிக்கைகள் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து அறநிலைய மானியக் கோரிக்கையைப்பற்றிப் பேசுகிற போது மொகலாயர் காலத்திய தமிழகத்தின் கலைச் செல்வங்கள் ''மயிலாசனம்'' போல் போகாமல் பாதுகாக்கப் பட வேண்டும். ஒரு நாட்டினுடைய நாகரிகம், கலை, கலாசாரம், பண்பு இவைகள் எல்லாம் அறநிலையத் துறையிடம்தான் இருக்கின்றன என்று சொல்ல வேண்டும். நமது நாட்டின் கலைப் பண்புகளை, கலாச்சாரத்தைக் காக்க இது போன்ற நல்ல பல திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இந்த சின்கோனாவை எடுத்துக் கொண்டால், சின்கோனாவைப்பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் பல நேரங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது முறைமையாக வளர்ச்சிப் பெறக் கூடிய வகையில் இந்த மானியக் கோரிக்கை வந்திருப்பது பெருமை தரக்கூடியது, மிக மிகப் பாராட்டுப் பெறக் கூடியது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>திரு. எஸ். இராசாராமன்</u> : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த மன்றத்தில் பேச வாய்ப்பு அளித்த மாபநாசம் சட்டமன்ற வாக்காளர் பெருமக்களுக்கு முதல்கண் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அறநிலைய மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது கலந்துகொண்டு பேச வாய்ப்பு அளித்த அவைத் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, விவாதத்தில் கலந்து கொள்கிறேன்.

இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் வரலாற்றுச் சிறப்பு அதிகமான கலைப் பொக்கிஷங்கள், கோவில்கள் உண்டு. தொடர்ந்து இந்தக் கோவில்களின் சிறப்பு காக்கப்பட வேண்டுமே யானால் இந்த ஆலயங்களின் வருமானம் பாதுகாக்கப்பட உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிலும் வருங் காலத்தில் வரும் சந்ததிகள் அறிந்து கொள்ள கலை, கலாச்சாரங்களின் இருப்பிடமாக அவைகளை மாற்றி அமைப்பதோடு, தகுந்த ஒழுக்க நீதிகளை போதிக்கின்ற இடமாகவும் நமது ஆலயங்கள் திகழ வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

பொதுவாக கோவில்களின் நிலங்களை குத்தகை சாகுபடிக்கு விடுவது தான் மரபு வழியாக வந்திருக்கிறது. அந்த குத்தகை பாக்கிகள் ஒழுங்காக வந்து சேராத காரணத்தினால், தேவையான



பூசைகள் நல்ல முறையில் ஒழுங்காக ஆலயங்களில் நடைபெறுவ தில்லை. அங்கே வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் ஒழுங்காக சம்பளம் கொடுக்க முடியாமல் போய்விடுகிறது. அவர்கள் திண் டாடும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. சில சட்டங்களை கடந்த காலத்தில் இந்த அரசு ஏற்படுத்திய காரணத்தினால் குத்தகை வருவாயில் 25 சதவீதம் குறைந்துள்ளது.

நிலங்களின் குத்தகை வருமானம் 25 சதவீதம் அளவிற்கு குறைந்துவிட்ட காரணத்தால் தணிக்கை, சகாயத் தொகை போன்றவை செலுத்தியது போக எஞ்சிய வருமானத்தைக் கொண்டு கோவிலை எப்படி நடத்த முடியும், எப்படி கோவில்கள் இயங்கமுடியும்? நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் வருமானம் பாதிக்கப்பட்ட ஆலயங்களுக்கு வருமான நஷ்டத்தை சரிக்கட்ட அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். 1387-ம் பசலிவரை பாக்கி ரூ. 19·16 கோடி என்றும் 1388–89-ம் பசலி 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 31-ம் தேதிவரை குத்தகை பாக்கி ரூ. 3·96 கோடி ரூபாய் அளவிற்கு மேலும் உயர்ந்துள்ளது. இப்படி குத்தகை பாக்கி உள்ள காரணத்தினால், குத்தகை சரியாகக் கிடைக்காததால் கோவில்களின் நிர்வாகம் இன்றையதினம் நல்ல முறையில் நடை பெறவில்லை.

அண்மைக்காலத்தில் சில ஆலயங்களில் குறிப்பாக மாரியம்மன், சுப்பிரமணியர் போன்ற ஆலயங்களின் உண்டியல் வருமானம் மிக அதிகமான அளவில் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து பல லட்சக் கணக்கான ரூபாய் பொதுமக்களின் காணிக்கையாக வந்துகொண் டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திருவேற்காடு கருமாரியம்மன், மாங்காடு காமாட்சி அம்மன், பழனி சுப்பிரமணியர் கோவில் போன்ற கோவில்களில் லட்சக் கணக்கில் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் பொது மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக திருவேற் காடு ஆலயத்திலிருந்து குடிநீர் வாரியத்திற்கு கடந்த மூன் றாண்டுகளுக்கு முன்பாகவே இரண்டரை லட்சம் ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டிருந்தும் இன்னும் குடிநீர் அந்தப் பகுதிக்கு வழங்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரி வித்துக்கொள்கிறேன். அந்தக் கோவிலுக்கு அன்றாடம் வரும் பக்தர்களுக்கு அத்தியாவசியமான குடிநீர் எப்போது வழங் கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

பொதுவாக கோவில்களைப் பராமரிக்க அறங்காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பிற்கு

வந்தாலும் சரி, எந்த அரசு வந்தாலும் சரி அந்த அரசில் இருப்பவர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையே அறங்காவலர்களாக அதிகமாக நியமிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனாலும் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் தெய்வ பக்தி உடையவர்களாகவும் ஒழுக்கமுடையவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும், அப்படிப்பட்டவர்களையே அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் தஞ்சை மாவட்டத்தில் மாத்தூர் சிவன் கோவிலில் அறங்காவலராக நியமிக்கப்பட்டவர் அந்தக் கோவிலின் வரவு-செலவு கணக்குப் பொறுப்பை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து எடுத்துக்கொள்வதற்கு முன்பே கோவிலுக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்து தனது சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தி வருகின்றார். மேற்படி நிலத்தின் குத்தகைதாரர் அறங்காவலர் மீது கோர்ட்டு மூலம் வழக்குத் தொடுத்து தடை உத்தரவும் வாங்கியுள்ளார். ஆகவே, அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் தெய்வ பக்தி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்தத் துறைக்கு தனியாக பொறியியல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோவில் திருப்பணி செய்ய போதுமான நிதி வசதி இருக்கின்றதா என்பதைப் பரிசீலிக்காமல் மதிப்பீடுகள் தயாரித்து பரிசீலனைக் கட்டணங்களையும் வசூலிக்க முற்படுகின்றனர். பரிசீலனைக் கட்டணங்களைச் செலுத்த வசதியில்லாத ஆலயங்களின் மதிப்பீட்டைத் தயாரித்துக் கொண்டு போவதில் என்ன பயன்? பரிசீலனைக் கட்டணங்கள் சில கோவில்களில் வசூலிக்க இயலாத காரணத்தினால் இந்த அதிகாரிகளுக்கு இந்தத் துறையின் பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் இந்த அறநிலையத் துறை பாதிக்கப்படுகிறது என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

சமீப காலங்களில் விலை மதிப்புமிக்க புராதன சின்னங்களுமான சிலைகள் களவாடப்பட்டு வருவதும், அதை மீட்பதற்காக அரசு பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்வதும் சகஜ நிலையான ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டிலிருந்து களவாடப்பட்டு, அமெரிக்காவில் விற்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட சிவபுரம் நடராஜர் சிலையை இன்னும் இந்த நாட்டிற்குக் கொண்டுவரப்



படாமல் அதையே காட்சிப் பொருளாக வைத்து பல லட்ச ரூபாய் வசூல் செய்து கொண்டார்கள் என்பதையும் செய்தித் தாள்கள் மூலம் தெரிய வருகின்றது. அந்தச் சிலை எப்பொழுது தமிழ் நாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்றும் அதற்கு எந்த அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஆண்ட புகழ்மிக்க மன்னன் இராஜராஜன் காலத்து சிலை லண்டன் மியூசியத்தில் இருப்பது இந்த அரசு கவனத்திற்கு வந்துள்ளதா? கலை அம்சமும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்த சிலையை தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து தஞ்சை பெரிய கோவிலில் வைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசை கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல காரியத்தை உடன் செய்தால், தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆலயங்களில் களவாடப்பட்ட திருவாபரணங்கள் இன்னும் பல லட்சத்திற்கும் அதிகமான பொருள்கள் கண்டுபிடிக்கப்பெறாமல் உள்ளன என்பதை இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக, மதுராந்தகம், திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய ஆலயங்களில் பல லட்சத்திற்கும் அதிமான பெறுமானமுள்ள திருவாபரணங்கள் களவாடப்பட்டும் இன்னும் கண்டுபிடிக்கப்பெறாமல் உள்ளது என்பதனை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையில் வருவாய்த்துறை அதிகாரிகளை நியமித்திருக்கின்றார்கள். இந்த வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு இதுவரை கொடுக்கப்பட்ட சம்பளம், படிகள் போன்றவைகள் எவ்வளவு என்பதையும் இந்த அதிகாரிகள் புதிதாக கண்டு பிடித்த ஆலயங்களிலிருந்து இந்த இலாகாவுக்கு கூடுதலாக கிடைத்த வருமானம் எவ்வளவு என்ற கணக்கையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிக நேரமாயிற்று. முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். இராசாராமன் : அதோடு இன்றையதினம் தஞ்சையில் சினிமா காட்சிகள் காலையிலே நடைபெறுவதைத் தடை செய்ய வேண்டும். காலையில் சினிமா காட்சிகள் இருக்கின்ற காரணத்தினால், அங்குள்ள தமிழக மக்கள் பொழுதுபோக்குவதற்காக வேலையைக்கூடப் பார்க்காமல் சினிமாவுக்கு செல்லு

கின்ற காரணத்தினால், அவர்களை மீண்டும் சோம்பேரிகளாக ஆக்கிவிடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காடுகளில் மரங்களை வெட்டி விடுகிறார்கள். இத னால் நிலச்சரிவு ஏற்பட்டு பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனால், நல்ல மழை மாதம் மும்மாரி பெய்து கொண்டிருந்த நம் தமிழகத்திலே, இன்றைய தினம் மழை சரியாக பெய்யாத காரணத்தினால், விவசாயிகள் காலா காலத்தில் செய்யக்கூடிய பயிர்கள் நல்ல முறையில் செய்ய முடியாத அளவுக்கு பாதிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. சி. கேசவ ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்தச் சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த திருச்செந்தூர் வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் இன்று தூய நிர்வாகம் நடைபெற்று வருகிறது. மேல்மட்டத்திலிருந்து எந்தவிதமான நிர்பந்தங்களும். கீழ்மட்டத்திலுள்ள நிர்வாக அமைப்பிற்கு கிடையாது. உதாரணமாக, இதற்கு முன்னால் ஆட்சி செய்த தி.மு.க. அரசாங்கம் தாங்கள் கட்சிப் பத்திரிகைக்கு கட்டாய ஆயுள் சந்தாவாக ஒவ்வொரு திருக்கோயில்களிலும் வசூல் செய்திருக்கிறார்கள். விசேட மலர்களுக்கு விளம்பரங்கள் என்றும் மாநாடுகளுக்கு விளம்பரங்களும் வாங்கி இருக் கிறார்கள். ஆனால், இன்றைய தினம் இப்படிப்பட்ட முறை கேடுகள் இந்த அரசு நிர்வாகத்தில் ஏற்படவில்லை. நியமிக்கப் பட்ட அறங்காவலர்கள் ஆளுங்கட்சியிலிருந்தும், எதிர்க் கட்சியி லிருந்தும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அறநிலைய நிர்வாகத்தைப் பொறுத்தவரை ஒரு சில குறிப் பிட்ட அதிகாரிகள் கீழே இருந்து ப்ரோமோஷனில் இன்ஸ்பெக் டர், ஏ.சி., டி. சி. என்று வருவதால் வேகமாக நிர்வாகம் நடைபெறுவதில்லை. மந்தமாகவே இருக்கிறது. எனவே, அற நிலையத் துறையிலுள்ள தகுதியான அதிகாரிகளை அவ்வப்போது வேறு துறைகளுக்கு மாற்றி வேறு துறைகளிலுள்ள அதிகாரிகளை இந்தத் துறைக்கு மாறுதல் செய்ய வேண்டும். ஆணையர் தலை மையகத்தில் நிர்வாக ஆற்றல் மிகுந்த வருவாய்த்துறை அதி காரிகளை நியமனம் செய்ய வேண்டும். டெபுடி கமிஷனர், அசிஸ் டன்ட் கமிஷனர் போன்ற அதிகாரிகள் நிர்வாகத்தில் போதிய விரைவு காட்டுவதில்லை. ஆகவே, பழனி, திருச்செந்தூர், திருத்



தணி போன்ற முதுநிலை ஆலயங்களில் வருவாய்த்துறையில் நிர் வாக அனுபவம் மிகுந்த அதிகாரிகளைப் போட்டு ஒரு ட்ரைய லாகச் செய்ய வேண்டும். தேவையானால் விதிகளை மாறுதல் செய்யலாம்.

தமிழக வரலாற்றில் அறங்காவலர்கள் குழு நியமனத்தில் சிறுபான்மை சமூகத்தினர் பல இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தமிழ்ச் சமுதாயத்தின் பல சிறுபான்மைக் குடியினருக்கு அளிக்கப்பட்ட மாபெரும் கவுரமாகும். இதுபோல் தாழ்த்தப்பட்ட இன பிரதிநிதிகளும் ஒவ்வொரு குழுவிலும் பிரதிநிதித்துவம் பெற் றுள்ளனர். இது ஒரு சமுதாயப் புரட்சி. இதற்காக மாண்பு மிகு அமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன். இதனால் அற நிலையத்துறை புதிய தெம்புடனும், விறுவிறுப்புடனும் செயல் படத் துவங்கியுள்ளது. இதனை மேலும் தீவிரப்படுத்த வேண் டும்.

குமரி மாவட்டத்தில் தேவஸ்தான ஊழியர்கள் 131 பேர்கள் அரசு ஊழியர்களாக நியமனம் செய்யப்பட்டது போல், மற்ற மாவட்டங்களிலுள்ள தேவஸ்தான ஊழியர்களையும் அரசு ஊழியர் களாக நியமனம் செய்ய வேண்டும்.

எப்பொழுதும் இல்லாத அளவிற்கு முடங்கிக் கிடந்த ஆலயத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. இதற்கும் பாராட்டுகிறேன். தஞ்சை பெருவுடையார் கோவில் தொல் பொருள் இலாகாவிடமிருக்கும்பொழுதே குடமுழுக்குவிழா நடத்த அடிப்படைக் காரணமாக இருந்த அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். கும்பகோணம் மகா மகத்திற்கு ஆன ஆரம்ப கட்ட ஏற்பாடுகளை நம் அமைச்சர் உயர் அதிகாரி களைக் கலந்து செய்த ஏற்பாடு அற்புதம். இதனால் பிரசி டென்ட் ரூல் இருந்தபோது நடந்த அந்த விழா சிறப்பாக நடந்து முடிந்தது. அதற்கும் அமைச்சரைப் பாராட்டுகிறேன்.

ஆலயத் திருவுருவச் சிலைகளைப் பேணிக் காக்கவும், திரு உருவச் சிலை திருட்டுகளைக் கண்டு பிடிக்கவும் தீவிர முயற்சி செய்து வருவதற்கும் பாராட்டுகிறேன். செலவு என்னவானா லும் கவலை இல்லை, ஏழை எளிய மக்களின் கிராம கோவில்கள் பழுதாக இருந்ததால் அவை செப்பனிடப்பட வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின் கொள்கை. அதை மிகத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

தமிழர் தெய்வம் முருகனின் ஆறுபடை வீடுகளில் திருச் செந்தூர் இரண்டாவது படை வீடாகும். தினசரி திருச்செந் தூருக்கு ஆயிரக் கணக்கில் பக்தர்களும், யாத்திரீகர்களும் வரு

கிறார்கள். திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய முக்கிய இடங்களிலிருந்து திருச்செந்தூர் செல்லும் நெடுஞ்சாலைப் பாதை குறுகலாகவும், மிகவும் வளைவாகவும் இருக்கின்றன. இதனால் அடிக்கடி சாலை விபத்துக்கள் நடக்கின்றன. எனவே, அந்தச் சாலையை அகலப்படுத்தி நேராகச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். பயணிகள் நெரிசலை சமாளிக்க திருச்செந்தூர் பஸ் நிலையம் விரிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதை விரைவாக செயலாற்ற வேண்டும். திருச்செந்தூரில் குடிதண்ணீர் வசதி இன்னும் அதிகமாக செய்ய வேண்டும். அங்குள்ள மக்கள் கோயிலை நம்பியும், சுற்றுக் கிராம மக்கள் பனை ஏறு தொழில், விவசாயத்தை நம்பியும் இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக திருச்செந்தூரை அறிவித்து, திருச்செந்தூர் அருகே மூடி இருக்கும் இந்திரா கெமிக்கல்ஸ், பி. ஆர். சி., கம்பெனி போன்றவற்றை உடனடியாக திறக்க ஏற்பாடு செய்து மக்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்த வேண்டும்.

திருச்செந்தூரில் அடிக்கடி திருவிழா வருவதினால் போக்குவரத்து வசதிகளை இன்னும் அதிகமாக்க வேண்டும். சென்னையிலிருந்து திருச்செந்தூர் செல்லும் திருவள்ளுவர் பஸ்கள் தினசரி தாமதமாகச் செல்வதினாலும், நெடுந்தூரமாக இருப்பதினாலும் புதிய பஸ்கள் ஓட ஏற்பாடு செய்ய வேண்டும். திருச்செந்தூர் பகுதியிலுள்ள வன இலாகா பகுதியில் தேரி என்று சொல்லப்படும் இடத்தில் விவசாயத்திற்கு தகுதியான இடத்தை சிறு விவசாயிகளுக்கு கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய கொடுத்து வசதியும் செய்து கொடுக்க வேண்டும். திருச்செந்தூர் அருகேயுள்ள மேலப்புதுக்குடி என்னும் இடத்திலுள்ள அழகிய சுனையை மேலும் அழகுபடுத்தி சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

திருச்செந்தூர் கடலோரப் பகுதியில் விசைப் படகுகாரர்களுக்கும், நாட்டுப் படகுக் காரர்களுக்கும்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசைப்படகு பற்றியெல்லாம் அறநிலையத்துறையில் பேசுதல் கூடாது. அடுத்து, திரு. டி. மணி பேசுவார்.

*திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை சம்பந்தப்பட்ட வரை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில விவரங்களைச் சொல்லக் கருதுகிறேன்.





பொதுவாக வனம் பாதுகாக்கப்படவில்லை என்பதுதான் என்
னுடைய குற்றச்சாட்டு. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில்
குலசேகரத்திற்கும் மணியம் குழிக்கும் பக்கத்தில் இருக்கும் ஒரு
காட்டில் அதன் அருகாமையில் தனி நபர் ஒருவர் சுமார் 50
ஏக்கராவில் இருக்கும் மரங்களை வெட்டிச் சென்றது பற்றிப்
புகார் வந்தது. அவர் தடிகளை வெட்டியிருக்கிறார். அதுபற்றி
விசாரிக்கப்பட வேண்டும். ஜூன் மாதத்தில், பால்மோர் என்ற
தனியார் தேயிலைத் தோட்ட முதலாளிகள் அருகாமையிலுள்ள
வனத்திலிருந்து மூன்று லாரி தடிகளை வெட்டிச் சென்றதாகக்
கூறப்படுகிறது. இந்த விலை உயர்ந்த தடிகளை வெட்டி அனுப்
பியவர்கள் மேல் வழக்குப் போடாமல் லாரியில் அந்தத் தடிகளை
ஏற்றி வந்தவர்கள் மேல் வழக்குப் போட்டிருப்பதாகச் சொல்லு
கிறார்கள். அதைப்பற்றி விசாரிக்க வேண்டும்.

(முற்பகல் 10-00)

அதைப்போலவே, பால்மோருக்கு அருகாமையிலே 400 ஏக்கர்
ரெவின்யூ நிலத்தை முதலாளிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கி
றார்கள். அந்த நிலத்தை எடுத்து ஏழை எளிய நிலமில்லாத
விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

அதைப்போலவே வனங்களுக்கு அருகாமையிலே 15, 17 ஆண்டு
களாக சிறு விவசாயிகள் குடிசைகளைக் கட்டி விவசாயம் செய்து
கொண்டு வருகின்றார்கள். அவர்களை எல்லாம் வனத்துறை
யினர் வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். அவர்கள் மேல்
பொய் வழக்குகளைப் போட்டுத் துன்புறுத்துகின்றார்கள். அந்த
நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்
பாக குமரி மாவட்டத்திலே கடுக்காபொற்றையில் அப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறது. அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய பகுதியிலே பள்ளக்குளத்திலே பயனியர்
குடும்பத்திற்கு 90 ஏக்கர்தான் இருந்தது. இன்றைக்கு 900 ஏக்க
ராக ஆக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அதுபற்றி வழக்குப் பதிவு
செய்யப்பட்டு 900 ஏக்கரும் அரசுக்கு வரக்கூடிய நிலைமை
இருக்கிறது. இன்றைக்கு அங்கே இருந்து விலையுயர்ந்த தடி
களையும் ஆயிரக்கணக்கான டன் விறகுகளையும் அரசே மேற்
கொண்டு குமரி மாவட்டத்திலே உள்ள விறகுப் பஞ்சத்தைப்
போக்குகின்ற முறையிலே கூட்டுறவுச் சங்கம் மூலமாக மக்களுக்கு
விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரப்பர் பிளான்டேஷன்ஸ் பற்றி ஒருசிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே அவர்களே சொல்லியிருக்கிறார்கள். 2 ஆயிரம் ஏக்கரில் வருவாய் கிடைத்து இருக்கிறது, அதன் மூலமாக 1978 ஆம் ஆண்டிலே 1 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது, ஆனால், 1979 ஆம் ஆண்டு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஆக அது குறைந்திருக்கிறது. ஒரு ஆண்டுக் காலத்திலே 30 இலட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று யோசிக்க வேண்டும். பொதுவாகவே ரப்பர் காடுகளை பராமரிப்பதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த ஆண்டிலே ஒரு அதிகாரியாக இருந்த இடத்திலே இப்போது இரண்டு அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த ரப்பர் காடுகளிலே இரண்டு அதிகாரிகளுக்கும் எந்த அளவுக்கு சம்பந்தம் இருக்கிறது என்ற பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக அந்த ரப்பர் காடுகளை கோடை காலத்திலே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. திடீரென்று ஒவ்வொரு ஆண்டும் தீக்கிரையாகி இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது. பல நேரங்களிலும் இதுபற்றி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலேயும், அரசினிடத்திலேயும், கூறியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த ரப்பர் காடுகளைப் பாதுகாப்பதன் மூலமாக இலட்சக் கணக்கான ரூபாய் ரப்பர் கிடைக்க வழியுண்டு. குறைந்த செலவிலே நல்ல தரமான இரப்பர் இந்தியாவிலே குமரி மாவட்டத்திலேதான் கிடைக்கிறது. அதைச் சரிவர அரசு பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதையும் அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

அந்தப் பகுதிகளிலே உள்ள தனியார் துறைகளிலே எல்லாம் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறது, ஆனால், கோடிகளைத் தேடித்தரும் அரசு ரப்பர் தோட்டத்தில் மட்டும் போனஸ் வழங்கப்படவில்லை. இலங்கையிலிருந்து வந்த அகதிகள் அங்கே குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள், குறிப்பாக, சிற்றார், மயிலார், குட்டியார், கல்லார், காளிகேசம் போன்ற பகுதிகளிலே தொழிலாளர்களுக்குப்போதுமான வீடுகள், விளக்கு, குடிதண்ணீர் வசதிகள் செய்யப்படவில்லை.

சி. எல். ஆர். என்ற முறையிலே வேலையில் இருக்கின்றவர்களுக்கு எல்லா நேரமும் வேலை கிடைக்கிற நிலைமை இல்லை. அந்த ரப்பர் காட்டிலே யானை சென்றால் கூட காணமுடியாத அளவுக்கு அடர்த்தியான காடுகள் நிறைந்து இருக்கிறது. ஆகவே அந்த சி. எல். ஆர். தொழிலாளர்களை



நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கி இலங்கையிலிருந்து வந்த அந்தத் தொழிலாளர்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு மூன்று பேருக்கு வேலை கிடைக்கக்கூடிய அளவில் வேலை பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீண்ட நெடுங் காலமாக ஒரு கோரிக்கையை வைத்துக் கொண்டே இருக்கிறோம். அந்தப் பகுதியிலே ஒரு கன ரக டயர்களை உற்பத்தி செய்யும் ரப்பர் தொழிற்சாலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறோம். அங்கே டயர் உற்பத்தி செய்கிற தொழிற்சாலையை உருவாக்குவதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் புறக்கணிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் அரசு போக்குவரத்துத் துறைக்கு தேவையான குஷன் செய்கிற தொழிற்சாலையும் ரீ-பட்டன் தொழிற்சாலையும் உருவாக்கப்பட வேண்டும். அவற்றை உருவாக்குவது மட்டும் போதாது. கார்களுக்குத் தேவையான டயர்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே கிராம்புத் தோட்டம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. 1976 இல் அதை உருவாக்கினார்கள். 500 ஏக்கர் கிராம்பு அங்கே பயிர் செய்யப்பட்டது. ஆனால் 1976 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1979-80 ஆரம்பத்திலே பலன் கிடைக்க வேண்டும். சரிவர பராமரிக்காததன் காரணமாகப் போன ஆண்டு சுமார் 7,000-க்கும் அதிகமான கிராம்புச் செடிகள் கருகி விட்டன. அதனால் அரசுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பெண் தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப் படுகிறது, நியாயமான சம்பளமும் இல்லை. ஏலத்தைப் பொறுத்தவரையில் 100 ஏக்கர், 200 ஏக்கர்களில் அரசுத் துறை பயிரிடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்தத் துறையைப் பொறுத்தவரையில் பால் மோரிலும் அதற்கு அருகாமையிலும் அரசுக்குச் சொந்தமான பெரிய புல்மேடுகள் இருக்கின்றன. அங்கே கிராம்பு பயிர் செய்து, தனியார் ஆக்கிரமித்துள்ள இடங்களையும் எடுத்து அங்கே தேயிலை பயிர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கமிட்டி வைத்திருக்கிறார்கள். அதனால் மட்டும் பராமரிக்க முடியும் என்று நான் கருதவில்லை. எனவே, அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற எம். எல். ஏ. களையும் சேர்த்து அந்தக் கமிட்டியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரப்பர் பிளான்டேஷன், கிராம்பு, ஏலம், தேயிலை ஆகியவற்றுக்கு வாரியம் ஏற்படுத்தினால் அது உசிதமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருட்டைப்பற்றிச் சொல்லும்பொழுது சந்தன மரத் திருட்டு நடக்கிறது. மற்றபடி தேக்கு ஈட்டி, தேம்பாவு போன்ற விலைபிடிப்புள்ள மரங்களைத் திருடுகிறார்கள். வெள்ளாம்பிகாணி என்ற இடத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய் விலை மதிக்கக் கூடிய பெரிய தேக்கு மரங்களைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு, பிறகு அதை விறகாக மாற்றுகிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே உள்ள மலைவாழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான சலுகைகள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு வைத்திய வசதி இல்லை. சில பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. கோதையாருக்கு அருகில் ஒரு பள்ளிக்கூடம், ஆறுகாணியில் ஒரு பள்ளிக்கூடம், வாழயத்திவயலில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கின்றது. இந்தப் பள்ளிகளில் தேவையான ஆசிரியர்கள் இல்லை. பிள்ளைகள் உட்காருவதற்கான பெஞ்சுகள் இல்லை. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். எனவே, மலைவாழ் மக்களுக்கு வைத்திய உதவி செய்யப்பட்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதோடு, அவர்களின் படிப்பிற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு திட்டம் சொல்கிறார்கள். ரப்பர் பயிர் செய்து அந்த நிலத்தை மலைவாழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் திட்டத்தை வரவேற்று, அப்படிப்பட்ட முறையைக் கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைப்பிரதேசத்தில் பெரிய முதலாளிகளுக்கும், வன இலாக்காவிற்கும் சொந்தமான ரோடுகள் இருக்கின்றன. குமரி மாவட்டத்திலேயும் இன்னும் பல்வேறு மாவட்டங்களிலேயும் அந்த ரோடுகள் வனப் பாதுகாப்பு இலாக்காவிற்கும் தனியார் முதலாளிகளுக்கும் சொந்தமானதாக இருப்பதால் அந்தப் பகுதி வழியாக விவசாயிகளோ மற்றப் பகுதி மக்களோ செல்ல விடுவதில்லை. அந்த நிலையை மாற்றி அந்தப் பாதைகள்—ரோடுகள் பூராவும் பொதுப்பணித்துறையின் கீழ் வருமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஆறுகாணி, கோதையார், பாலமோர், காளிகேசம், மகேந்திரகிரி, தேவகிரி, மாறாமலை போன்ற பகுதிகளில் சாலைகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அவைகளைச் செப்பனிட்டு அங்கு வாழ்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து அறநிலையம் சம்பந்தமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக எங்கள் பகுதியிலே அறநிலையம் என்று சொல்லும் பொழுது 6-வது 7-வது பக்கத்திலே சொல்லியிருப்பது, புதிய சட்டத்தை இன்று கடினமாகத் திணிக்கும் முறை இருக்கிறது. அதைக் கடினமாக்கக் கூடாது, தண்டனையைக் கடினமாக்கக்கூடாது, அறநிலையத்திற்குக் கீழே உள்ள குத்தகை விவசாயிகளை, ஏழை எளிய விவசாயிகளை வெளியேற்றக்கூடாது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறை இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் அறநிலையம் என்று சொல்லும்பொழுது அது இன்னொரு விதமானது. 1,046 தொழிலாளர்கள் அதில் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய சம்பளம் மாதத்திற்கு ரூ. 15 இலிருந்து ரூ. 100 வரையில்தான் இருக்கிறது. இதை ஓரளவு மாற்ற வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான சம்பளம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படவேண்டும். அறநிலையத்தின்கீழ் 15 ஆண்டுகளுக்கு முன் பெண்கள் கல்லூரி ஒன்று குழித்துறையில் நிறுவப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அபிவிருத்தி இல்லாமல் இருக்கிறது. அந்த ஊர் மக்கள் பணம் வசூலித்து 12 ஏக்கர் வாங்கியிருக்கிறார்கள். பணமும் கொஞ்சம் வசூலித்துள்ளார்கள். அதில் புதிய கல்லூரி கட்டுவதற்குப் பண வசதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதில் புதிய பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும். ஆகவே, அந்த அறநிலையத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்னைகளைக் கூறி, குறிப்பாக சந்தனமரத் திருட்டுகள் பற்றியும்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: தனியாக அதுபற்றி கேள்வி கொடுக்கலாம். இப்பொழுது முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. ரா. உமாநாத்</u>: அப்பொழுது கேட்டால் டிமாண்டிலே பேசச் சொல்கிறீர்கள், இதிலே பேசினால் அப்பொழுது கேட்கச் சொல்கிறீர்கள்.

<u>திரு. டி. மணி</u>: சந்தன மரத்தைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, அதனால் அரசுக்கு வருவாய் பெருகும் என்று கூறி, அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வசதி செய்து அவர்களுடைய வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

அதைப் போன்று எங்களுடைய மலைப் பகுதியிலே இருக்கிற ஒரு முக்கியமான பிரச்னையைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஒரு சர்வே பண்ணினார்கள். தேயிலைத் தோட்டங்களைப் பொறுத்தவரை, 1947-க்கு முன்னால், அந்தப் பிரதேசத்திலே, ஆங்கிலேயர்கள்தான் தேயிலைக் காடுகளை வளர்த்து வந்தார்கள். அந்த சர்வேயை தேவகிரி முதலாளிக்குச் சொந்தமான டி. எஃப். ஓ. நடத்தினார். ஆனால், அந்த முதலாளிகள் குறுக்கே நிற்கிறார்கள். அந்தத் தோட்டங்களை, தேயிலைப் பயிரிடுவதற்கு லாயக்கானதாக ஆக்க முடியுமா என்று இப்பொழுது கேட்கிறார்கள். குறிப்பாக தனியார்கள் அந்தப் பிரச்னையிலே குறுக்கே நிற்கிறார்கள் என தெரிகிறது. ஆகவே, அதையெல்லாம் பரிசீலனை செய்து தேயிலைத் தோட்டத்தையும், கிராம்பு, சிங்கோனா தோட்டத்தையும், ஏலம் தோட்டத்தையும் அரசே ஏற்று நடத்தி, வருவாயைப் பெருக்கும் வகையில் அதிகப்படியான இடங்களில் பயிர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எம். சின்னராஜ்: புரட்சித் தலைவரின் புகழுக்குப் பெருமை சேர்க்கிற வகையிலே, எனக்குச் சிறந்ததொரு வெற்றி வாய்ப்பினை நல்கித் தந்த தொண்டாமுத்தூர் தொகுதி மக்கள் வாயிலாக, இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்லைக் கேட்டு மகிழ்வுறக் கொடுத்து வைக்காத எனது தந்தை வாக்குகள் எண்ணப்பட்ட அதே நாளில் இறைவனடி எய்திய அதே வேளையில், எனக்கு வெற்றிச் செய்தியை அளித்து, எனக்குப் புகழ் சேர்த்த, எனது தொகுதி மக்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறி என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

தொண்டாமுத்தூர், அறுபடை வீட்டிற்கு ஈடாகப் பிரபலமான மருதமலை கோயிலை ஒரு பக்கத்தில் கொண்டது. ஆனைகட்டி, சிறுவாணி, அட்டப்பாடி போன்றவை, வளமிக்க காட்டுவளத்துடன் உல்லாச ஸ்தலமான நீலகிரியில் செல்லும் வழியில் உள்ள ஒரு பகுதியாகும். அத்தகைய சிறப்புவாய்ந்த தொகுதி மக்களின் சார்பாக இம் மானியக் கோரிக்கையில் பேசுவதைநான் பெருமையாகக் கருதுகிறேன்.

கோயில்களைப் பொறுத்தவரை, நமது அரசு புரட்சிகரமான மாறுதலை எதிர்காலத்தில் செய்தாக வேண்டுமென்று நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். பல துறைகளிலே, ஏழைக் கூலிகளுக்காகவும், அரிசன மக்களுக்காகவும் நிதிநிலை அறிக்கை



யிலும், கொள்கை அறிக்கையிலும் பல நன்மைகளைச் செய்து காட்டி வருகிறோம். தேர்தல் நேரங்களில் அரிசனக் குடிகளுக்குச் செல்லும்போது, முதலில் பட்டா கேட்கிறார்கள், இரண்டாவதாக தண்ணீர் கேட்கிறார்கள், அதற்கடுத்து அவர்கள் கேட்பது தங்களுக்கென்று ஒரு கோயில் வேண்டும் என்பது தான்.

சில நேரங்களிலே, தேர்தலுக்காக, வாக்கு கேட்க வருகிற வேட்பாளர்களை, எங்களுக்கு ஒரு கோயில் கட்டிக் கொடுத்தால்தான் நாங்கள் உங்களுக்கு வாக்களிப்போம் என்று ஒரு முறையைக்கூட அவர்கள் ஏற்படுத்தினார்கள். ஆகவே, அரிசனக் குடியிருப்புகள் உள்ள பகுதிகளிலேயும், ஏழைக் கூலிகள் உள்ள பகுதிகளிலேயும் கோயில்கள் கட்ட வேண்டும். வருவாய் மிகுந்துள்ள கோயில்களிலிருந்து அதற்கான செலவுத் தொகையை எடுத்துக் கொள்ளலாம். திருப்பதிக்கும், திருத்தணிக்கும் சென்று பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை உண்டியிலே போட்டு வருகிற நிலச்சுவான்தார்களைப் போலல்லாமல், ஏழைக் கூலிகளாக இந்த மக்கள் இருப்பதால், அவர்கள் வாழும் பகுதியிலேயே கோயிலை ஏற்படுத்த வேண்டும். ஆகவே, பெரும் தொகை வருமானம் வரும் கோயில்களினுடைய உண்டியல் பணத்தில் கொஞ்சம் எடுத்து, இம்மாதிரி கோயில்கள் அமைக்கவும் நடத்தவும் செலவிட்டால், அந்தத் தெய்வங்களை அங்கே இருப்பவர்கள் வணங்க வாய்ப்பிருக்கும். ஆகவே, அரிசனக் குடியிருப்புகளுக்குக் குறைந்தது ரூபாய் 1,000 ஒதுக்கி, பெரும் கோயில்களிலிருந்து நிதியைப் பெற்று, அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று அந்த மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மருதமலைக் கோயிலைப் பொறுத்தவரையிலே அது மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம் என்று மக்களால் கருதப்படுகிறது. தனக்கோ, தன்னைச் சேர்ந்த மக்களுக்கோ, தீங்கு இழைப்பவர்களைத் தண்டிக்காமல் அத் தெய்வம் விடுவதில்லையென்று மக்கள் நம்புகிறார்கள். ஆகவே, அவ்வளவு சக்தி வாய்ந்த தெய்வமாக அது கருதப்படுவதால், அந்தக் கோயிலின் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அந்தக் கோயிலுக்குச் சென்று வர உள்ள வசதிகள் போதாது. அதை இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அக்கோயிலுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அன்றாடம் சென்று வருகிறார்கள். அங்கு தங்குவதற்குச் சரியான விடுதி வசதி இல்லை. அங்கு திருமண மண்டபம் போன்ற வசதிகள் இல்லை. ஆகவே, அங்கு திருமண மண்டபம் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். செலவிற்கு, அந்தக் கோயிலின் நிதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கோவில்களின் வளர்ச்சியை மேற்கொள்ளுகின்ற அதே நேரத்தில் அந்த நிர்வாகம் செம்மைப்பட நடைபெறுவதற்கும் அறநிலைய அமைச்சர் நல்ல சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து நம் ஆட்சிக்கும் நமக்கும் பெருமை ஏற்படுத்துகிற வகையில் உள்ள விளம்பரத் துறை, செய்தித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். செய்தித் துறையிலே அண்மையிலே ஏற்படுத்தப்பட்ட ஒரு மாறுதலை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது என் கடமை என்று கருதுகிறேன். செய்தித் துறையின் இயக்குநராக, ஆளுநர் ஆட்சியிலே ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரையில் நடைமுறையில் இல்லாத வகையில், ரிடையரான ஒருவர் அவர் ரிடையராகி 6 மாதத்திற்குப்பின் செய்தித்துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார் என்ற செய்தியை நான் கேள்விப்பட நேர்ந்தது. எனவே, இந்த நியமனம் முறைகேடாக செய்யப்பட்டிருக்குமானால் அதைக் களைவதற்கு நமது அமைச்சர் தக்க முறையில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், செய்தித் துறையில் மிகப் பிரதானமாக வானொலியை நம்பிக் கொண்டு இருக்கிறோம். தமிழக அரசு நிறைவேற்றுகின்ற திட்டங்களை, மக்களிடத்திலே சிறப்பாகச் சொல்லுகிற வகையில் வானொலிகள் தகுந்த அளவுக்கு நமக்குப் பயன்படுவதில்லை என்ற குறை பரவலாக இருக்கின்றன. நான் இதை இங்கே சொல்லுவது அவர்களைக் குறைகூறுவதற்காக அல்ல. தமிழக அரசு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டும்போதும், தமிழக அரசுக்கும் தமிழகத்திற்கும் சிறப்பான இடத்தை அளித்து தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அந்தந்தத் தொகுதியைப் பற்றி மாதம் ஒரு முறை 5 நிமிடம் அல்லது 10 நிமிடம் பேச வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த மாதம் முழுவதும் தொகுதிக்காக என்ன என்ன வேலைகளைச் செய்தார்கள் என்று மக்கள் அறிய வாய்ப்பு ஏற்படும். அதே நேரத்தில் இந்த வானொலியில் பேசுவதற்காகவே அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்காக ஏதேனும் ஒரு வேலையைச் செய்ய வாய்ப்பிருக்கும். எனவே, நமது அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து மத்திய அரசாங்கத்திடம் பேசி, அந்த அதிகாரத்தைப் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அந்த என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஆனைகட்டி, சிறுவாணி பகுதிகள் ஒரு காலத்திலே வளமான காட்டுப் பகுதிகளாக இருந்தன. ஆனால், அந்தக் காட்டுப் பகுதிகளை அங்கு வாழும் மலைவாசிகளை வைத்து அழித்துவிட்டார்கள். அந்தக் கொடுமையான நிலையை மலை அடிவாரத்திலே பிறந்து வாழ்ந்த நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அந்த மலைவளத்தைக் கான்ட்ராக்ட் என்ற பெயரிலே, அந்தக் காட்டுவளத்தை அங்கே திருடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசின் காலத்தில் மட்டுமல்ல, எல்லா அரசு காலங்களிலேயும் அதிகாரிகள் இந்தத் திருட்டுக்குத் துணைபோகிறார்கள். அந்த மலை ஜாதி மக்களை வைத்து இவர்கள் வேலை செய்வதினால், விவசாயக் கூலிக்கு ஆட்கள் கிடைக்காமல் போகின்றது. காடுகளில் மரம் வெட்ட கூலியாக 10, 15 ரூபாய் கொடுப்பதால், விவசாயக் கூலிக்கு ஆட்கள் கிடைக்காத நிலை இருக்கிறது.

இந்தக் காட்டுவளத்தைப் பெருக்கும்படியான திட்டம் போட்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அங்கே ஆதிவாசிப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளியில் அவர்கள் படிப்பதே இல்லை. ஆண்டுக்கு 1 இலட்சம் ரூபாயாக கடந்த 20 ஆண்டுகளாக அரசு அந்தப் பள்ளிக்குச் செலவிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தப் பள்ளியில் இதுவரையில் 5 பேர் ஆண்கள்தான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார்கள். ஆண்டுக்கு 1 இலட்சம் ரூபாய்கள் செலவு செய்து, 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 5 பேர்கள்தான் அங்கே எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் கூட அல்ல, பெயிலும் ஆகியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்களை படிக்கவிடாமல் காட்டு வளத்தை அழிக்கிற பணியில் ஈடுபடுத்துகிறார்கள். அவர்களைத் தவறான முறையில் பயன்படுத்துவதைவிட அவர்களை அழைத்து ஆளுக்கு 100 மரம் 1,000 மரம் கொடுத்து அதை வளர்த்துக் கொடுக்க வேண்டும் என்று கூறி அதற்கு இவ்வளவு ரூபாய் மானியம் என்று சொன்னால், அவர்கள் காட்டுவளத்தை மேம்பாடடையச் செய்வார்கள்.

அதே நேரத்தில் அறநிலையம் பற்றிப் பேசும்போது ஒன்றை மறந்துவிட்டேன். மருதமலையில் ஒரு பள்ளி இருக்கிறது. உயர்நிலைப்பள்ளியாக அது இருக்கிறது. அந்தப் பள்ளி காற்றடித்தால் பறந்துபோகின்ற அளவுக்கு ஓலையால் கட்டப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே சொல்லியபடி இந்தக் கோவில் செல்வம் மிகுந்த கோவிலாகும். என்ன காரணத்தாலோ அந்தப் பள்ளிக்கு நிரந்தரமாகக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. அதைக் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, எனக்கு இங்கே பேச வாய்ப்பினைத் தந்த தலைவருக்கு நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. ஏ. பி. கருப்பையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களே, அமைச்சர் பெருமக்களே, நான் வால்பாறையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள சாதாரண தொழிலாளி என்ற முறையில் இந்த மன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த என்னுடைய தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அந்த 'சிங்கோனா' சம்பந்தப்பட்ட வரையில் நான் சில விஷயங்களைச் சொல்வதற்கு இந்த மன்றத்தின் முன் வந்து இருக்கிறேன் என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிங்கோனா சம்பந்தப்பட்ட வரையில் நான் இருக்கின்ற இடத்திற்குப் பக்கத்தில்தான் அந்த நிறுவனம் இருக்கிறது என்பதை தெரிவித்து, அந்தச் சிங்கோனா நிறுவனம் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே தொடங்கப்பட்டு இருந்தபோதிலும் கூட அங்கே இருக்கும் அந்த நிறுவனம் வளர்ச்சி அடையாமல் குன்றி, தேய்ந்து, சாகடிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிறுவனத்தின் மூலமாகத்தான் இன்று இந்தியாவிலேயே பயன்படுத்தப்பட்டு வரும் கர்ப்பத் தடை மருந்து கண்டு பிடிக்கப்பட்டது. வாசனைத் திரவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கேயுள்ள அந்தச் சிறிய தொழிற்சாலையில் பக்குவமாக பல திரவியங்கள், மூலிகைகள் தயாரித்து, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, நம் நாட்டிற்கு அதிக அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிறது. அப்படியிருந்தும் அந்த நிறுவனம் இன்றைக்கு வளர்ச்சி அடையாமல் இருக்கிறது என்பதற்கு என்னால் புள்ளி விவரம் சொல்ல முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நான் ஒரு சாதாரணத் தோட்டத் தொழிலாளி என்றாலும் கூட அந்த நிறுவனம் சம்பந்தப்பட்ட வரையில் எனக்கு நன்றாகத் தெரியும். நான் சார்ந்து இருக்கின்ற தொழிற் சங்கத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு பேர் அந்த நிறுவனத்தில்தான் பணி செய்கிறார்கள். தனியார் கம்பெனியில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் குறைந்த பட்ச சம்பளம் கூட அந்த நிறுவனத்தில் அருமையான வாசனை திரவியங்களைத் தயாரித்துக் கொடுக்கும் தொழிலாளிக்குக் கொடுப்பது இல்லை. நீண்ட நெடுங்காலமாகக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் குடியிருக்க குடியிருப்பு கிடையாது.



இந்தக் குறிப்பேட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரப்படி அந்த நிறுவனத்தில் 2,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதாகும். நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அங்கே கிட்டத்தட்ட 1,000 தொழிலாளர்கள் கூட நிரந்தரமான அடிப்படையில் வேலை செய்யவில்லை. சாதாரண டெய்லி தொழிலாளியாகத்தான் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ஒரு நாளைக்கு 6.77 பைசா என்கிற அளவில் மிகவும் குறைவாக உள்ளது. பஞ்சப்படியும் சேர்த்தே இந்த 6.77 பைசா கொடுக்கப்படுகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றுள்ள விலைவாசியில் அந்தச் சம்பளத்தை வைத்துக்கொண்டு அந்தத் தொழிலாளி எப்படி வாழ முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தங்களுடைய உழைப்பைக் கொடுக்கும் தொழிலாளிக்கு வாழ்வதற்கு உண்டான அளவில் கூட சம்பளம் கொடுக்கவில்லை என்றால் அவன் நிலை எப்படி இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கம் தனியார் கம்பெனியில் கொடுக்கப்படும் சம்பளம், சலுகைகள், போனஸ் இவற்றையாவது அந்தத் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே ஒரு ஆஸ்பிடல் இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக அந்த ஆஸ்பிடல் இருந்த போதிலும், அதில் இன்றைக்கு ஆடு, மாடுகள் படுத்துக் கொண்டு இருக்கின்றன. ஆஸ்பிடலில் மருந்து கிடையாது. பெண் டாக்டர் கிடையாது. அங்கே ஒரு ஆம்புலன்ஸ் இருக்கிறது. அதை அந்த நிறுவனத்தில் உள்ளவர்கள் பயன்படுத்துகிறார்களே தவிர நோயுள்ள நோயாளிகளுக்கு அது பயன்படவில்லை என்பதை இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரை அங்கே இருக்கின்ற அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்தி, அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு மருத்துவர்களை நியமித்து, குறிப்பாக பெண் டாக்டரை நியமித்து, நல்ல மருந்துகள் கிடைப்பதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு மருந்து கிடையாது; நல்ல சாப்பாடு கிடையாது; எந்தவிதமான வசதியும் கிடையாது; அவர்கள் தங்குவதற்கு குடியிருப்பு வசதியும் கிடையாது. இவைகளை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களே, அமைச்சர் பெருமக்களே, நான் வால்பாறையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள சாதாரண தொழிலாளி என்ற முறையில் இந்த மன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எனது தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து அந்த 'சின்கோனா' சம்பந்தப்பட்ட வரையில் நான் சில விஷயங்களைச் சொல்வதற்கு இந்த மன்றத்தின் முன் வந்து இருக்கிறேன் என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சின்கோனா சம்பந்தப்பட்ட வரையில் நான் இருக்கின்ற இடத்திற்குப் பக்கத்தில்தான் அந்த நிறுவனம் இருக்கிறது என்பதை தெரிவித்து, அந்தச் சின்கோனா நிறுவனம் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே தொடங்கப்பட்டு இருந்தபோதிலும் கூட அங்கே இருக்கும் அந்த நிறுவனம் வளர்ச்சி அடையாமல் தேய்ந்து, சாகடிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிறுவனத்தின் மூலமாகத்தான் இன்று இந்தியாவிலேயே பயன்படுத்தப்பட்டு வரும் காய்ச்சல் தடை மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. வாசனைத் திரவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கேயுள்ள அந்தச் சிறிய தொழிற்சாலையில் பக்குவமாக பல திரவியங்கள், மூலிகைகள் தயாரித்து, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, நம் நாட்டிற்கு அதிக அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிறது. அப்படியிருந்தும் அந்த நிறுவனம் இன்றைக்கு வளர்ச்சி அடையாமல் இருக்கிறது என்பதற்கு என்னால் புள்ளி விவரம் சொல்ல முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நான் ஒரு சாதாரணத் தோட்டத் தொழிலாளி என்றாலும் கூட அந்த நிறுவனம் சம்பந்தப்பட்ட வரையில் எனக்கு நன்றாகத் தெரியும். நான் சார்ந்து இருக்கின்ற தொழிற் சங்கத்தில் இருக்கின்ற தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு பேர் அந்த நிறுவனத்தில்தான் பணி செய்கிறார்கள். தனியார் கம்பெனியில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் குறைந்த பட்ச சம்பளம் கூட அந்த நிறுவனத்தில் அருமையான வாசனை திரவியங்களைத் தயாரித்துக் கொடுக்கும் தொழிலாளிக்குக் கொடுப்பது இல்லை. நீண்ட நெடுங்காலமாகக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் குடியிருக்க குடியிருப்பு கிடையாது.



இந்தக் குறிப்பேட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விபரப்படி அந்த நிறுவனத்தில் 2,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதாகும். நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அங்கே கிட்டத்தட்ட 1,000 தொழிலாளர்கள் கூட நிரந்தரமான அடிப்படையில் வேலை செய்யவில்லை. சாதாரண டெய்லி தொழிலாளியாகத்தான் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ஒரு நாளைக்கு 6.77 பைசா என்கிற அளவில் மிகவும் குறைவாக உள்ளது. பஞ்சப்படியும் சேர்த்தே இந்த 6.77 பைசா கொடுக்கப்படுகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றுள்ள விலைவாசியில் அந்தச் சம்பளத்தை வைத்துக்கொண்டு அந்தத் தொழிலாளி எப்படி வாழ முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். தங்களுடைய உழைப்பைக் கொடுக்கும் தொழிலாளிக்கு வாழ்வதற்கு உண்டான அளவில் கூட சம்பளம் கொடுக்கவில்லை என்றால் அவன் நிலை எப்படி இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கம் தனியார் கம்பெனியில் கொடுக்கப்படும் சம்பளம், சலுகைகள், போனஸ் இவற்றையாவது அந்தத் தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே ஒரு ஆஸ்பிடல் இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக அந்த ஆஸ்பிடல் இருந்த போதிலும், அதில் இன்றைக்கு ஆடு, மாடுகள் படுத்துக் கொண்டு இருக்கின்றன. ஆஸ்பிடலில் மருந்து கிடையாது. அங்கே ஒரு லேடி டாக்டர் கிடையாது. ஆம்புலன்ஸ் இருக்கிறது. அதை அந்த நிறுவனத்தில் உள்ள அதிகாரிகள் பயன்படுத்துகிறார்களே தவிர நோயுள்ள நோயாளிகளுக்கு அது பயன்படவில்லை என்பதை இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரை அங்கே இருக்கின்ற அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தி, அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு மருத்துவர்களை நியமித்து, குறிப்பாக லேடி டாக்டரை நியமித்து, நல்ல மருந்துகள் கிடைப்பதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு மருந்து கிடையாது; நல்ல சாப்பாடு கிடையாது; எந்தவிதமான வசதியும் கிடையாது; அவர்கள் தங்குவதற்கு குடியிருப்பு வசதியும் கிடையாது. இவைகளை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; சிலோனிலே இருந்து தள்ளப்பட்ட அகதிகள் அங்கே வந்து கூலி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை பெர்மனென்ட் செய்யவில்லை. அவர்கள் தினந்தோறும் வேலை செய்து, கூலி வாங்குகின்ற தினக் கூலிகளாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சிலோன் அகதிகளாக வந்து யார், யார் அங்கே வேலை செய்கிறார்களோ அவர்களைக் குறைந்த பட்சம் நிரந்தரத் தொழிலாளர்களாகவாவது நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலோன் அகதிகளை பாதுகாப்பது நம்முடைய அரசாங்கத்தின் கடமை. அந்த ஏரியாவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது; புல் பூண்டு முளைத்து எதற்கும் பிரயோஜனம் இல்லாமல் கிடக்கிறது; அதைப் பண்படுத்தி பயிர் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை. அந்த இடத்தை சிலோன் அகதிகளுக்குக் கொடுத்தால் அவர்கள் புல் பூண்டுகளை அழித்து, பயிர் செய்வதற்கு வசதியாக இருக்கும்; அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளித்த மாதிரியும் இருக்கும். அது மட்டுமல்லாமல் அங்கே கர்ப்பத் தடை மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களை உற்பத்திச் செய்யவும் ஏற்பாடு செய்யலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, 1979-ம் ஆண்டு அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் எங்களுக்கு போனஸ் வேண்டும்; அதிக சம்பளம் வேண்டும்; தனியார் கம்பெனிகளில் கொடுக்கக்கூடிய சலுகைகளை எல்லாம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுப் போராடினார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சரைச் சந்தித்து மகஜர் எல்லாம் கொடுத்தார்கள். அமைச்சரைப் பார்த்துப் பேசும்போது கவனிக்கலாம்; போனஸ் கொடுக்கலாம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள்; ஆனால் அந்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை, அவர்கள் கேட்கின்ற குறைந்தபட்ச சலுகைகளையாவது செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வனத்துறை சம்பந்தமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வன இலாகா சம்பந்தப்பட்டவரையில், அவர்கள் காடுகளை சரியாகக் கவனிக்கவில்லை. ஆனைமலையில் நிறைய காடு இருக்கிறது. ஏராளமான மரங்கள் இருக்கின்றன. அருமையான மரங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய 'ஃபாரஸ்டர்'களை கையில் வைத்துக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற கோஷ்டி உள்ளே புகுந்து, பெரிய, பெரிய மரங்களை வெட்டிச் சாய்த்து, விறகாக



வும் கரியாகவும் எடுத்துச் செல்கிறார்கள்; கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கும் பயன்படுத்துகிறார்கள். அவர்களே சில நேரங்களில் வனத்திற்கு தீ வைத்து நாசமாக்குகிறார்கள். நம்முடைய சர்க்கார் சம்பந்தப்பட்டவரை உடனடியாக அதிலே உரிய கவனம் செலுத்த வேண்டும். இல்லை என்றால் விரைவாக இருக்கின்ற காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும் என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கே போய் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் பெரிய, பெரிய தொழிற்சாலைகள் வைத்திருக்கிறார்கள். தொழிற்சாலைகள் வைத்தே சாராயம் காய்ச்சுகிறார்கள்; அவர்கள்தான் மரங்களை சேதப்படுத்துகிறார்கள் என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து சுற்றுலா சம்பந்தப்பட்டவரையில், ஆளியாறுக்கு மேல் ஒரு நீர் வீழ்ச்சி இருக்கிறது. அங்கே ஒரு கோவிலும் இருக்கிறது. சாதாரணமாக கிராமங்களிலிருந்து பெரும்பகுதி மக்கள் வண்டிகளிலும், கார்களிலும் அங்கே வந்து, நீர் வீழ்ச்சியில் நீராடி, கோவிலில் தரிசனம் செய்து வருகிறார்கள். அந்த இடத்திற்குப் பெயர் மந்தியூர் என்பது. அது குரங்குகள் நீராடுகின்ற ஸ்தலமாக இருப்பதால் அந்தப் பெயர் வந்திருக்கிறது. அதை ஒரு நல்ல சுற்றுலா ஸ்தலமாக விரிவுபடுத்தி, பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஜனங்கள் அங்கே வந்து நீர் வீழ்ச்சியைக் கண்டு களித்து, அங்கே நீராடி, கோவிலில் தரிசனம் செய்து விட்டு வருவதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-30)

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்கு பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய கன்னிப்பேச்சை காணிக்கையாக்கி, என்னை இங்கே அனுப்பி வைத்த எனது தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நான் இந்த மானியக்கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வனத்துறையைப் பொறுத்தமட்டிலும் நம்முடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் கணிசமான முன்னேற்றங்கள் இருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியிலே அதிக அளவிற்கு மலைப் பகுதிகள் இருப்பதால் என்னுடைய தொகுதியையே உதாரணமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த தாளவாடி மலைப் பகுதியில் விளைகின்ற பொருட்களான கடுக்காய், பூச்சக்காய், கல்பாசம் போன்றவைகள் தனியார்களால் சுரண்டப்பட்டு அரசுக்கோ அங்கு வாழ்கின்ற மக்களுக்கோ எந்தவிதமான பயன்படாத சூழ்நிலை இருந்து வந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலை சென்ற ஆட்சிக் காலத்திலே இருந்து கொண்டிருந்தது. ஆனால் நம்முடைய ஆட்சியின் காலத்திலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் கூட்டுறவு சொசைட்டி என்ற ஒரு சொசைட்டியை ஏற்படுத்தி அந்த கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக அங்கே வாழ்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி நாள் ஒன்றுக்கு 10 ரூபாய், 12 ரூபாய் என்ற அளவில் அவர்களுக்குக் கூலி கொடுக்கின்ற அளவுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த மலைப்பகுதியிலே விளைகின்ற பொருட்களை அந்த மக்கள் வாழ்வுக்கும், அரசின் வருமானத்திற்கும் பயன்படுத்தப்படுகின்ற அந்த சிறப்பினை சாதனை நம்முடைய அரசிலே செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சத்தியமங்கலம் பகுதியைப் பொறுத்தமட்டிலும் தாளவாடி, குத்தியாலத்தூர், கடம்பூர் போன்ற மலைப் பகுதிகளில் சந்தன மரங்கள் மிக அதிக அளவிலே விளைகின்றன. அதுவும் உயர்ந்த சாதிச் சந்தன மரங்கள் அந்தப் பகுதியிலே தான் விளைகின்றன. ஆங்கிலேயர் காலத்திலே சத்தியமங்கலம் பகுதியிலே ஒரு சந்தன மர டெப்போ கிடங்கு ஒன்றை அமைத்து அங்கே ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 8 கோடி ரூபாய்க்கு அதிகமான சந்தன மரங்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அந்தப் பகுதியிலே சந்தன மரங்கள் திருடு போகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. கேரள மாநிலத்தின் எல்லையையும் கர்நாடக மாநிலத்தின் எல்லையையும் இணைக்கின்ற பகுதியாக அது இருக்கின்ற காரணத்தால் கேரளாவிலே இருந்து வருகின்றவர்கள் அங்கே இருந்து சந்தன மரங்களை அதிக அளவிலே திருடிக்கொண்டு போகிற சூழ்நிலை இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு வன இலாக்காவைச் சேர்ந்தவர்கள் என்ன முயற்சி எடுத்தாலும் அவர்கள் பயங்கரமான ஆயுதங்களை வைத்துக்கொண்டு வருகின்ற காரணத்தால் வன இலாக்காவைச் சேர்ந்தவர்கள் தாக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு





இருக்கின்றது. தாக்கப்பட்டு இறந்து வருகின்ற சூழ்நிலையும் இருக்கின்றது. அப்படி இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் விளைகின்ற சந்தன மரங்களைக் காப்பதற்காக நம்முடைய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. அதாவது அங்கே பறக்கும் படை போன்ற ஒரு படையை அமைத்து பாதுகாப்பதற்கு அரசு அறிவித்தது. அந்த முறையை அங்கே சென்று முறைப்படி ஏற்படுத்தி அவ்வாறு பறக்கும் படை அமைப்பதன் மூலம் சந்தன மரங்களை நாம் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, மலைப் பகுதியிலே காடுகளைக் காப்பதற்காக பல திட்டங்களை இங்கே தீட்டியிருந்தாலும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். காடுகளைப் பாதுகாப்பதற்கு முன்பு ஒரு முறை இருந்துகொண்டிருந்தது. அதாவது ஒவ்வொரு பகுதியாக அடைத்து வைத்துவிட்டு மற்ற பகுதிக்குள் செல்லலாம் என்ற நிலை இருந்துவந்தது. அவ்வாறு அடைத்து வைப்பதன்மூலம் அடைத்து வைக்கின்ற ஒரு பகுதி காப்பாற்றப்படுகின்ற சூழ்நிலை இருந்தது. ஏனென்றால் காண்ட்ராக்டர்கள் எடுத்த பகுதியில் மட்டுமல்லாது மற்ற பகுதிகளுக்கும் சென்று அங்கே இருக்கின்ற மூங்கில் போன்றவைகளை எடுத்துச் செல்கிறார்கள். ஆகவே ஒரு பகுதியை அடைத்து வைத்துக்கொண்டு மற்ற பகுதியிலே அவரை விடுகின்ற வகையில் முன்பு இருந்து வந்தது. ஆகவே அந்த வகையில் நம்முடைய அரசு ஒவ்வொரு பகுதியாக அடைத்து வைக்கின்ற ஒரு முறையை உருவாக்க வேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சந்தன மரங்களைக் காப்பதற்கான வகையில் இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை மிகச் சிறப்பான நடவடிக்கை. 1924 ஆம் ஆண்டுக்கு முன்னால் மலைப்பகுதிகளில் காட்டு நிலங்கள் பட்டா நிலங்களாக இருந்தன. அதனால் 1924-க்கு முன்னால் வளர்ந்த சந்தன மரங்கள் பட்டாதாரர்களுக்கு சொந்தம் என்றும், 1924-க்கு பின்னால் வளர்ந்த சந்தன மரங்கள் அரசுக்கு சொந்தம் என்றும் ஒரு பட்டம் இருந்தது. ஆனால் 1924-ம் ஆண்டுக்கு முன்னால் வளர்ந்த மரங்கள் எவை 1924-க்கு பின்னால் வளர்ந்த மரங்கள் எவை என்று காண வனத்துறையிலும் ரெவின்யூ துறையிலும் ரெகார்டு இல்லை. அப்படிப்பட்ட நேரத்தில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். அதை நான் வரவேற்கிறேன். எந்தக் காடுகளாக இருந்தாலும் சரி, வனத்துறை காடுகளாக இருந்தாலும் சரி, பட்டாக் காடுகளாக இருந்தாலும் சரி விளையும் சந்தன மரங்கள் அனைத்தும்

அரசுக்கே சொந்தம் என்று உத்தரவு போட்டிருக்கிறார். மிக நல்ல உத்தரவு. சந்தன மரங்களை காடுகளிலிருந்து திருடிக் கொண்டு போகிறவர்களுக்கும் இது சரியான தண்டனைச் சட்டமாக, உத்தரவாக இருக்கிறது.

அடுத்து, எங்கள் பக்கத்தில், அதாவது சத்தியமங்கலம் பகுதியில் சந்தன மரங்கள் அதிகமாக விளைகின்றன. அந்த மரங்களுக்கான டிப்போ ஒன்று அதாவது கிடங்கு கூட இந்தப் பகுதியில் இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம் பகுதியில் ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தாளவாடிப் பகுதியில் மிக நெருக்கமான காடுகள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், அதிக வருமானம் வரக்கூடிய ஒரு டிப்போ இருக்கிற காரணத்தினாலும், அந்த வனங்கள் அடர்த்தியாகவும் அழகாகவும் இருக்கிற காரணத்தினாலும், அந்தப் பகுதியை ஒரு சுற்றுலா மையமாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கான வசதிகள் செய்யவும் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சத்தியமங்கலம் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே ஒரு சுற்றுலா விடுதி கூட இல்லை. அங்கே ஒரு சுற்றுலா விடுதியை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்து அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், அது மிக சரியான நிலையில் நல்ல பல திட்டங்களோடு நடந்துகொண்டு வருகிறது என்று சொல்லலாம். முன்பிருந்த ஆட்சிக்காலத்திலே ஆலயங்களுக்குச் சொந்தமான ஏராளமான நிலங்களை குத்தகைதாரர்கள் அவர்களுக்கே சொந்தமாக உபயோகப் படுத்திக் கொண்டு, கோவில்களுக்குத் தர வேண்டிய குத்தகை பணத்தையும் தராமல் அவற்றின் வருமானம் பாதிக்கின்ற அளவுக்கு நிலைமைகள் இருந்தன. இந்த குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற நிலைமை சட்டத்திலே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த குத்தகைதாரர்கள் ஒழுங்காக குத்தகை பணத்தை கோவில்களுக்கு கொடுப்பதற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் திருத்தம் செய்து சட்டத்தைத் திருத்து வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)



என்னுடைய தொகுதியில் பண்ணாரி கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவில். வருடத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 6 லட்சம், 7 லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய கோவில். அந்தக் கோவில் வருமானத்தைக் கொண்டு அங்கே ஒரு தொழிற் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் பிரச்சினைகளை இங்கே அவை முன் வைத்த நிலையில் இந்து அறநிலையத் துறை, சுற்றுலாத் துறை, வனத்துறை ஆகியவைகளின் மானியத்தை வரவேற்று, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. இ. முத்தையாலிங்கம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வனத் துறை, சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை ஆகியவை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறைகளின் கோவில்களுக்குச் சொந்தமாக ஏராளமான ஆயிரக்கணக்கான நிலங்கள் இருக்கின்றன. தனிப்பட்ட ஒரு சிலர் குத்தகை என்ற பெயரால் வைத்துக் கொண்டு அந்த நிலங்களை நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இன்றும் ஏராளமான கோவில்களில் இருந்து வருகிறது. அவைகளை மாற்றி உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற வகையில் அவைகளில் விவசாயம் செய்து வருகிற ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலங்களைத் திருப்பிக் கொடுத்து பட்டா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

பரம்பரையாக அறங்காவலர்களாக வரக்கூடியவர்களை அறங்காவலர்களாக நியமித்து அவர்கள் கோவில் வருமானத்தை சுரண்டிக் கொண்டிருக்கும் நிலைமையை மாற்றி அந்தக் கோவில்களை அறநிலையத் துறையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அனைத்துக் கோவில்களிலும் திருமண மண்டபங்களை

ஏற்படுத்தி ஏழை எளியவர்கள் [illegible] பயன்படுத்திக் கொள்ளக்கூடிய [illegible] கட்டணம் வசூல் செய்து, முதற்கட்டமாக இலவசமாகக் கொடுத்து [illegible] பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு [illegible] ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] பொழுதுபோக்குக்காக [illegible] மிகப் பெரியதொரு [illegible] இருக்கிறது. [illegible] நேரத்தில் [illegible] பணியாளர்களை [illegible] பூஜை செய்வதற்கு [illegible] ஆகவே இந்தக் [illegible] இருக்கிறது. இங்குள்ள [illegible] கொள்கிறேன். [illegible] கேட்டுக் [illegible] கட்டிக் கொடுக்கவேண்டும். [illegible] பணியாளர்களுக்கு [illegible] கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாவைப் பொறுத்தவரையில் திருநெல்வேலி மாவட்டத்தில் [illegible] சுற்றுலா [illegible] ஒரு [illegible] இந்த மாவட்டத்தில் [illegible] இருக்கிறது. [illegible] போகிறார்கள். [illegible] வருகிறார்கள். [illegible] தான் இருக்கிறது. [illegible] மாவட்டத்தில் [illegible] இருக்கிறது. [illegible] அறிவிக்கவேண்டும் என்று [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி [illegible] நிலையத்தில் சுற்றுலா [illegible] இருக்கிறார்கள். [illegible] நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். இருப்பினும், திருநெல்வேலியில் ஒரு சுற்றுலா [illegible] என்று கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் புகழ்பெற்ற திருச்செந்தூரும், குற்றாலமும், கட்டபொம்மன் கோட்டையும், உலகப்புகழ் பெற்ற திருநெல்வேலி நெல்லையப்பர் திருப்பங்களும்



இருக்கின்றன. ஆகவே அங்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாக ஒரு சுற்றுலா விடுதியையும், சுற்றுலா [illegible] ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[illegible] பெருந்தலைவர் [illegible] கொள்கிறேன். [illegible] ஒரு நினைவு [illegible] கேட்டுக் கொள்கிறேன்.

[illegible] சாத்தான்குளம் [illegible] இங் [illegible] பயன்படும் [illegible] இருக்கின்றன. [illegible] ஒரு [illegible] வருகிறார்கள். [illegible] வரு [illegible] வகையில் ஒரு [illegible] நிலையை ஏற்படுத்த வேண்டும்.

[illegible] திருச்செந்தூர் [illegible] இருக்கிறது. [illegible] இந்த [illegible] கேட்டுக்கொள்கிறேன். [illegible]

திரு. கே. எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் [illegible] புகுதியை [illegible] பணி செய்து [illegible] இருக்கிற [illegible] மக்களின் [illegible] அவர்கள் [illegible] இந்த [illegible] செய்தி [illegible] நான் வரவேற்கிறேன். [illegible]

குறிப்பாக, ஏலக்காய் பயிரைப் பற்றி சில கருத்துக்களை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இந்த ஏலக்காய் விவசாயம் செய்வது எனது தொழிலாகும். இந்த ஏலக்காய் விவசாயத்தில் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளைப்

பற்றியும், அதிலே கிடைக்கக்கூடிய வருமானத்தைப் பற்றியும் நான் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏலக்காய் பார்ப்பதற்கும், சுவைப்பதற்கும், நுகர்வதற்கும், இனிமையாய் இருக்கும். ஆனால், அந்த ஏலக்காய் விவசாயம் செய்ய, அதைப் பக்குவப்படுத்தி ஏலக்காயாகக் கொண்டு வரக் கூடிய காலங்களை இங்கே ஏற்படக்கூடிய சிரமங்கள் கணக்கில் அடங்காதவை என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, இந்த ஏலக்காய் விவசாயம் ஒரு சூதாட்டத்தைப் போன்றது. ஒரு முறை அந்த ஏலக்காய் விலை [illegible] நிலைக்குச் சென்று, ஒரு நேரத்திலே அதன் விலை [illegible] அதலபாதாளத்திற்கு சென்றுவிடும். ஆனால் இந்த இரண்டு நேரத்திலும் ஏற்படக்கூடிய விவசாயச் செலவு ஒரேமாதிரியாக இருக்கும். நமது தமிழக அரசைப் பொறுத்தமட்டிலும் ஏலக்காய் தோட்டங்களை [illegible] அதே நடத்தக்கூடிய [illegible] நியமித்திருக்கிறார்கள். நான் கூறிக்கொள்வதெல்லாம், இந்த ஏலக்காயைப் பொறுத்தவரையில் இது இந்த நாட்டிலே மக்களுக்கும் அதிகமாகப் பயன்படுவதில்லை. வெளிநாட்டிலே இந்த ஏலக்காய் அதிகமாகப் பயன்படுகிறது. அதிலும் குறிப்பாக, அரபு நாடுகளிலே அதிகமாக செலவாகிறது. ஆகவே, இந்தத் தொழிலில் ஏற்படக்கூடிய பாதிப்புகள். ஒரு செடியை வளர்த்து பயிராக்குவதற்கு 5 வருடங்கள் பிடிக்கும். இந்த 5 வருட காலத்திலே, ஒரு விவசாயி ஒரு ஏலக்காய் செடியை உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட 50 முதல் 100 ரூபாய் வரை செலவிட வேண்டியிருக்கிறது. இந்த நேரத்திலே, இந்த 5 வருடத்திலே அந்த ஏலக்காய் செடியானது மழையில்லாத காரணத்தாலும், அதிக வெயிலில் அழுகின்ற காரணத்தாலும், நோயால் பாதிக்கப்படும் இந்த ஏலக்காய் செடியிலே 25 சதவீதம் பாழ் ஏற்படுகின்றது. ஆகவே, தமிழக அரசு இதைப் பரிசீலனை செய்து, இந்த ஏலக்காய் விவசாயத் தோட்டத் [illegible] குறைத்துத் தரவேண்டும். அதாவது, கேரளாவிலே உள்ளதுபோன்று 20 வருடத் தொகைக்கு விட்டுப்பட்டு, அதற்குப் பிறகு மறுபடியும் [illegible] செய்து தருகிறார்கள். அவர்களுக்கே மாற்றித் தருகிறார்கள். அதைப் போல் தமிழகத்திலேயும் செய்யவேண்டும் என்று ஏலக்காய் விவசாயிகள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், போடிக்கு மேற்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் சாதாரணமான வன இலாகாவிற்குச் சொந்தமான காடுகள் இருக்கின்றன. இந்தக் காடுகளில் 60, 80 ஆண்டுகளாக இலைப் பந்தல், காபி போன்றவைகளை பயிர் செய்து வருகிறார்கள். ஆனால், இதற்கு முன்னால் இதில் பல நிலச்சுவான்தார்கள், இந்த நிலங்களை பட்டா போட்டு [illegible]வாங்கியிருக்கிறார்கள்.



எப்படியோ பட்டா வாங்கி வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ் [illegible] ஆட்சிக் காலத்திலும், [illegible] ஆட்சிக் காலத்திலும் சில முறை [illegible] விவசாயிகளுக்கு [illegible] ஆகவே, [illegible] இதிலே [illegible] இரண்டு [illegible] விவசாயிகள் [illegible] 25 ரூபாய் இருக்கிறது. [illegible] செய்து, [illegible] இந்த [illegible] அந்த நிலங் [illegible] ஒரு [illegible] இரண்டு [illegible] பட்டா போட்டு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், [illegible] பகுதியில் [illegible] ஆகிய பொட்டிபுரம், [illegible] 3,000 ஏக்கர் [illegible] கிராமங்களில் [illegible] இருக்கிறது. அதைத் [illegible] திட்டத் [illegible] செய்தால், [illegible] இருக்கும் [illegible] இருக்கும் இதனால், [illegible] விரும்புகிறேன். என்று குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், [illegible] இலாகா அலுவலகத்தை [illegible] இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, [illegible] என்றால், [illegible] வைக்கவேண்டும். [illegible] 70 கிலோ மீட்டருக்கு அப்பால் [illegible] இலாகா அலுவலகத்தில் [illegible] இருந்துதான் [illegible] வருகிறது.

([illegible] 10-50)

ஆகவே, அந்தப் பகுதியில் வன இலாகா அலுவலகம் இல்லா[illegible] கொடைக்கானலில் வன [illegible] குறையாக இருக்கும் காரணத்தால் [illegible] இலாகா அலுவலகம் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்] [1980 ஜூலை 10

மேலும், [illegible] கொள்ள வேண்டும்.

[illegible] நிகழ்ச்சி [illegible] நிகழ்ச்சி [illegible] இல்லை. [illegible] இல்லை. [illegible] வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[illegible] வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

கம்பம் தொகுதியில் சுருளியாறு என்ற நீர்வீழ்ச்சி இருக்கிறது. பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அந்த நீர்வீழ்ச்சியில் [illegible] தினம் குளித்து கொண்டிருக்கிறார்கள். [illegible] காரணத்தால் [illegible] நேரடி அங்கு ஒரு [illegible] வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பேட்டை பகுதியிலும் தேனியைச் சுற்றியும் [illegible] மாம் போன்ற மரங்கள் [illegible] பயன் தரக்கூடிய, பலன் தரக்கூடிய மரங்களை [illegible] வளர்த்தால் அரசுக்கு நல்ல வருமானம் வர வாய்ப்பு இருக்கும்.

எனக்கு பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்து சமய அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்களுக்கும் [illegible] கலந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து அமைகிறேன்.



1980 ஜூலை 10]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே பிரேரேபிக்கப்பட்டுள்ள செய்தி, கலைத் துறை, செய்தி சுற்றுலா இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளின் மேல் ஒரு சில வார்த்தைகள் கூற வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் உலகிலேயே சிறப்புக் கலை அழகுடன் தமிழனின் பெருமையை வாழ்வாங்கு நிற்கச் செய்திருப்பது தமிழகத்தின் உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் ஆகும். அந்த கோபுரங்களுக்குள்ளே இருக்கக்கூடிய சிற்பக் கலைகள் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலிருப்பவர்களை மட்டுமல்லாமல் உலகத்தின் பல பாகங்களில் இருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளைக் கூட ஈர்க்கக்கூடிய தன்மையில் அமைந்திருக்கிறது.

அப்படி இருக்கக்கூடிய அந்தக் கோயில்களில் நடைபெற்று வந்த நிர்வாகம் கடந்த காலத்தில் எந்த நிலைமையில் இருந்தது என்பதை நாம் அறிவோம். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்றுதான் கூறினார்கள். ஆனால், கடந்த காலத்தில் கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக மட்டுமல்லாமல் கொள்ளையர்களின் இருப்பிடமாகவும் இருந்து வந்தது என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம்.

நாம் வெள்ளையர்களை 1947 ஆம் ஆண்டு வெளியேற்றி இருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டுதான் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கோயில்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கொள்ளையர்களை வெளியேற்றி இருக்கிறார்கள். நம்முடைய முன்னோர்கள், பின்னவர்கள் இல்லாதவர்கள் தங்களுடைய நிலங்கள், சொத்துக்களைக் கோயில்களுக்கு, கோயில் திருப்பணிகளுக்கு எழுதி வைத்தார்கள். அந்தப் பணிகளைச் சீராக, செம்மையாக நடத்த முடியாத வண்ணம் கோயில்களின் நியமனம் பெற்றவர்கள் அத்தகைய சொத்துக்களை பினாமி பெயரால் வளைத்து, இழுத்துப்போட்டுக் கொண்டார்கள். இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாய் தமிழகத்தின் கோயில்களிலிருந்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதை அரசு நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால் அங்கே பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு ஊதியம்கூட கொடுக்கமுடியவில்லை. அவர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கூட கொடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது. இன்றைக்குக் கோயில்களிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகள்

எல்லாம் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்படவேண்டுமென்று கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே குறைந்த வருமானத்தில் உள்ள அந்த கோயில்களின் பணியாளர்களுக்கு ஒழுங்காக சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எதனால் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர், செய்தி அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, தமிழகத்திலே உள்ள பல கோயில்களிலே நிர்வாகம் சீராகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம். புரட்சித் தலைவர் ஆட்சியிலே மதச் சார்பற்ற நாட்டிலே பல மதங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தபோதிலும் மதவாதிகளின் பேர் எந்தவிதமான மோதலும் இல்லாமல் ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்களும் சுதந்திரமாக வழிபாடுகளைச் செய்வதற்கான பாதுகாப்பு இருந்து வருகிறது. அதற்கான பாதுகாப்பு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக நாங்கள் தமிழ்நாடு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை மீண்டும் ஒரு முறை பாராட்டி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோயில்களிலே இருக்கின்ற சிலைகளையும் நகைகளையும் களவாடுவதற்கான ஏற்பாடுகள் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன. கோயில்களிலே உள்ள நகைகளை அர்ச்சகர் முறையாக ஆண்டுக்கொரு முறை பரிசோதனை செய்து அங்கே இருக்கின்ற நகைகள் எல்லாம் உண்மையான நகைகள்தானா அல்லது நல்ல நகைகளை எடுத்துக்கொண்டு போலியான நகைகள் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை கவனிக்க வேண்டும். காரணம் உண்மை நகைகள் திருடப்பட்டு அதற்கு மாறாக போலி நகைகள் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது, அதையும் அரசு கவனிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, கோயில் நிலங்களிலே பல பேர்கள் பினாமி பெயரால் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த குத்தகையிலே, குறைந்த குத்தகையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு குத்தகையை உயர்த்த சட்டத்திலே வழியில்லை என்றால் ஆங்கூட சட்டத்தைத் திருத்தவேண்டும். ஏழை எளிய மக்கள் வீடு இல்லாமல் நிலம் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறபோது 20 கிரவுண்டு 40 கிரவுண்டு என்று சென்னை நகரத்திலே பல அரசியல்வாதிகள் பினாமி பெயரிலே வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான நிர்தாட்சண்யமும் இல்லாமல் அவர்களை வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.





இன்றைக்கு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு முக்கியமான வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன். புரட்சித் தலைவர் ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு ஆளுநர் ஆட்சியில் பல அலங்கோலமான செயல்கள் நடந்தவை என்பதை நான் ஆளுநர் உரையின்மீது பேசுகின்றபோது சுட்டிக்காட்டுவேன். அப்போது சில உறுப்பினர்கள் ஆளுநரை சுட்டிக்காட்டலாமா என்று கேட்டார்கள். நான் ஆளுநரை விமர்சனம் செய்யவில்லை. ஆளுநர் ஆட்சியிலே நடைபெற்ற செயல்களின் தன்மையைப்பற்றித்தான் விளைவித்தேன்.

செய்தித் துறையிலே ஏற்கனவே இருந்த ஒருவர் நீக்கி எறியப்பட்டு, செய்தித் துறை இயக்குநராக மற்றொருவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். அகில இந்திய ரேடியோவில் 58 ஆண்டுகளை பணியாற்றிவிட்டு அதற்கு மேலும் 6 மாதம் நீட்டி பணியாற்றிவிட்டு, 60 ஆண்டுகள் ஆகி மணிவிழா கொண்டாட வேண்டிய ஒருவரை அதே செய்தித் துறையிலே இயக்குநராக ஆளுநர் ஆட்சியில் முறைகேடாக நியமித்திருக்கிறார்கள். இப்படிப் பல நியமனங்கள் அப்போது முறைகேடாக செய்யப்பட்டிருக்கின்றன என்பதை ஆதாரத்தோடு நான் எடுத்துகாட்ட விரும்புகிறேன். செய்தித் துறையின் இயக்குநராக ஓய்வுபெற்ற ஒருவரை, 60 வயதான ஒருவரை, துறையிலேயே தகுதியும் திறமையும் உள்ளவர்கள் இருந்தும், வெளியிலிருந்து ஒருவரை அங்கே தூக்கிப் போடுவது என்றால் எந்த வகையிலே நியாயம் ஆகும்? அதை அமைச்சர் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு எஸ். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறைபாடுகளைப் பற்றிச் சொல்கிறார். அவர் குறிப்பிட்ட ஒருவர், அவருடைய பெயரைச் சொல்வாரா என்று கேட்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த சபையிலே இல்லாத ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேச விரும்பவில்லை. அப்படிப் பேசினால் மறுப்பதற்கான வாய்ப்பு அவருக்கு இல்லை. ஆகவே, நான் சம்பவங்களைப்பற்றி மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சம்பவம் உண்மையா இல்லையா என்பதை அமைச்சரவர்கள் பரிசோதனை செய்யட்டும். அல்லது விசாரணை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேவையானால் அவருக்குத் தனியாக வேண்டுமானால் இந்த உரை முடிந்த பிறகு பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன், தைரியமாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்வது நியாயமாக இருந்தாலும், * *

திரு சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, * * * நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்தித் துறை இயக்குநரை நியமித்தது குறித்து அரசாங்கத்தின் தரப்பிலே கருத்தைத் தெரிவிக்க விரும்பு கிறேன் எந்த அரசாணை உரிமைகள் அரசாங்கத்திற்கு இருக் கிறதோ அந்த உரிமைகளைக் கொண்டுதான் அன்றைக்குப் பொறுப்பிலே இருந்தவர்கள் நியமித்திருக்கிறார்கள். அது முறை யான, சட்டபூர்வமான நியமனம். அதிலே தவறு இல்லை. ஆனால் அப்படிப்பட்ட நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது தேவையானால் ஒரு மாத கால நோட்டீஸ் கொடுத்து அவர்களை அந்தப் பொறுப்பிலேயிருந்து விலக்கி வைப்பதற்கும் அரசாங்கத்திற்கு அனுமதி இருக்கிறது. உரிமை இருக்கிறது. இல்லையென்றால், அவர்களே கூட ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்துவிட்டு அந்தப் பொறுப்பிலேயிருந்து விலகிக் கொள் வதற்கு அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, ஒரு அரசாங்கத்திலே இருக்கின்ற ஒரு அதிகாரியைப்பற்றி, அவர் யாரை விமர்சனத்திலே கடுமையாகவோ அல்லது அவர் ஒரு பிரிவைச் சார்ந்தவர், இவரைச் சார்ந்தவர் என்று பிரச்னைகளைக் கிளப்புவதோ, அது நம்முடைய தமிழ் பண்பாட்டிற்கோ, சமு தாயத்திற்கோ, நடைமுறைக்கோ, நம் பெருமைக்கோ உகந்தது அல்ல என்பதை இரண்டு கருத்துக்களைத் தெரிவிப்பவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அதிகாரி தன்னுடைய பணியிலே ஏதாவது தவறு செய்திருந்தால் அந்தத் தவறை, அவருடைய பெயரைச் சொல் லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டுவார் களேயானால் அரசாங்கத் தரப்பிலேயிருந்து பதில் அளிப்போம் என்ப தையும். மேலும் இந்த விவாதங்கள் தொடர்ந்து விவாதப் பொருளாக அக்கறையுடன் இருக்க வேண்டுமென்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. தே. எம். இராசு: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்: அமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே இதைப் பற்றி விவாதம் வேண்டாம். இதை வளர்த்துக்கொண்டு போக வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பாயின்ட் ஆப் கிளாரி கேஷன் தேவை இல்லை.

திரு நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே . . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவ ரவர்களே, இந்த நியமன விவகாரம் தொடர்பாக இங்கே நடந்த விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களைக் குறிப்பிலே யிருந்து நீக்குவது நல்லது என்று நீங்கள் கருதுவீர்களேயானால் அதை நீக்குவதற்கு நானும் சம்மதிக்கிறேன். குறிப்பேட்டை வரவழைத்து அந்தப் பகுதியைப் பார்த்து, பரிசீலித்து, நீக்குவது நல்லது என்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங் கடம்): குறிப்பேட்டைத் தருவித்துப் பார்த்து அதற்குப் பிறகு அறிவிக்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: இன்றைக்குக் கோயிலிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்குக் குறைந்த ஊதியம்தான் கொடுக்கப்படுகிறது. அந்தக் குறைந்தச் சம் சம்பளம்தான் பணத்தைக் கொண்டு வீட்டு வாடகைக் கூட கொடுக்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கோயில்களிலே உள்ள ஊழி நிலங்களில், வீட்டு வசதி வாரியம் மூலமாக, வீடுகளைக் கட்டி கோயில்களிலே பணியாற்றும் சிப்பந்திகளுக்குக் குறைந்த விலையில் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், பள்ளிமலையில் பழமையான, தொன் மையான, சரித்திரப் பிரசித்திபெற்ற கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் நகரத்தில், கோட்டை மாரியம்மன் கோயி லில் ரூ. 10 இலட்சம் செலவில் ராஜ கோபுரம் அமைக்க மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற் காக, சேலம் நகர மாவட்ட மக்கள் சார்பாக, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, சுற்றுலா, செய்தித் துறையின் மூலமாக, அர சுப் பொருட்காட்சிகள் அங்கங்கு சிறப்பாக நடைபெற்று வரு கின்றன. கடந்த காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட

திரு எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்வது நியாயமாக இருந்தாலும், * *

திரு சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, * * * நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்தித் துறை இயக்குநரை நியமித்தது குறித்து அரசாங்கத்தின் சார்பிலே கருத்தைத் தெரிவிக்க விரும்பு கிறேன். எந்த அரசாணை உரிமைகள் அரசாங்கத்திடம் இருக் கிறதோ அந்த உரிமைகளைக் கொண்டுதான் அன்றைக்குப் பொறுப்பிலே இருந்தவர்கள் நியமித்திருக்கிறார்கள். அது முறை யான, சட்டபூர்வமான நியமனம். அதிலே தவறு இல்லை. ஆனால் அப்படிப்பட்ட நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது தேவையானால் ஒரு மாத கால நோட்டீஸ் கொடுத்து அவர்களை அந்தப் பொறுப்பிலேயிருந்து விலக்கி வைப்பதற்கும் அரசாங்கத்திற்கு அனுமதி இருக்கிறது. இல்லையென்றால், அவர்களே கூட ஒரு மாதம் நோட்டீஸ் கொடுத்துவிட்டு அந்தப் பொறுப்பிலேயிருந்து விலகிக் கொள் வதற்கு அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, ஒரு அரசாங்கத்திலே இருக்கின்ற ஒரு அதிகாரியைப் பற்றித் தனி யான விமர்சனத்திலே ஈடுபடுவதோ அல்லது அவர் ஒரு பிரிவைச் சார்ந்தவர், இவர்களைச் சார்ந்தவர் என்று பிரச்னைகளைக் கிளப்புவதோ, அது நம்முடைய தமிழ் மரபிற்கோ, பண்பாட்டிற்கோ, நடைமுறைக்கோ, நம் பொதுவாழ்க்கைக்கோ உகந்தது அல்ல என்பதை இரண்டு கருத்துக்களைத் தெரிவிப்பவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அதிகாரி தன்னுடைய பணியிலே ஏதாவது தவறு செய்திருந்தால் அந்தத் தவறை, அவருடைய பெயரைச் சொல் லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினால் அதற்கு நான் அரசாங்கத்தின் சார்பிலேயிருந்து பதில் அளிப்பேன் என்ப தையும், மேலும் இந்த விவாதங்களில் தொடர்ந்து விவாதம் பொருள் வழங்காமல் இருக்க வேண்டுமென்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. ஜே. எம். இராசு: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே இதுபற்றி விவாதம் வேண்டாம். இதை வளர்த்துக்கொண்டு போக வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் தேவை இல்லை.

திரு நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே . . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவ ரவர்களே, இந்த நியமன விவகாரம் தொடர்பாக இங்கே நடந்த விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களைக் குறிப்பிலே யிருந்து நீக்குவது நல்லது என்று நீங்கள் கருதுவீர்களேயானால் அதை நீக்குவதற்கு நானும் சம்மதிக்கிறேன். குறிப்பேட்டை வரவழைத்து அந்தப் பகுதியைப் பார்த்து, பரிசீலித்து, நீக்குவது நல்லது என்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங் கடம்): குறிப்பேட்டைத் தருவித்துப் பார்த்து அதற்குப் பிறகு அறிவிக்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: இன்றைக்குக் கோயிலிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்குக் குறைந்த ஊதியம்தான். சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. அந்தக் குறைந்தச் சம் பளத்தைக் கொண்டு வீட்டு வாடகைக் கூட கொடுக்கமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கோயில்களிலே உள்ள உபரி நிலங்களில், வீட்டு வசதி வாரியம் மூலமாக, வீடுகளைக் கட்டி கோயில்களிலே பணியாற்றும் சிப்பந்திகளுக்குக் குறைந்த விலையில் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், பள்ளிமலையில் பழமையான, தொன் மையான, சரித்திரப் பிரசித்திபெற்ற கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் நகரத்தில், கோட்டை மாரியம்மன் கோயி லில் ரூ. 10 இலட்சம் செலவில் ராஜ கோபுரம் அமைக்க மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற் காக, சேலம் நகர மாவட்ட மக்கள் சார்பாக, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, சுற்றுலா, செய்தித் துறையின் மூலமாக, அர சுப் பொருட்காட்சிகள் அங்கங்கு சிறப்பாக நடைபெற்று வரு கின்றன. கடந்த காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட

திரு எல். இளையபெருமாள்: மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்வது நியாயமாக இருந்தாலும், * *

திரு சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, * * * நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்தித் துறை இயக்குநரை நியமித்தது குறித்து அரசாங்கத்தின் சார்பிலே கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். எந்த அடிப்படை உரிமைகள் அரசாங்கத்திற்கு இருக்கிறதோ அந்த உரிமைகளைக் கொண்டுதான் அன்றைக்குப் பொறுப்பிலே இருந்தவர்கள் நியமித்திருக்கிறார்கள். அது முறையான, சட்டபூர்வமான நியமனம். அதிலே தவறு இல்லை. ஆனால் அப்படிப்பட்ட நியமனத்தை எந்தக் காலத்திலும் அல்லது தேவையானால் ஒரு மாத கால நோட்டீஸ் கொடுத்து அவர்களை அந்தப் பொறுப்பிலேயிருந்து விலக்கி வைப்பதற்கும் அரசாங்கத்திற்கு அனுமதி இருக்கிறது. இல்லையென்றால், அவர்களே கூட ஒரு மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டு அந்தப் பொறுப்பிலேயிருந்து விலகிக் கொள்வதற்கு அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்திலே இருக்கின்ற ஒரு அதிகாரியைப் பற்றி, ஒருதலைப்பட்சமான விமர்சனத்திலே ஈடுபடுவதோ அல்லது அவர் ஒரு கட்சியைச் சார்ந்தவர், இனத்தைச் சார்ந்தவர் என்று பிரச்னைகளைக் கிளப்புவதோ, அது நம்முடைய தமிழ் மாநிலத்திற்கோ, தாயகத்திற்கோ, நடைமுறைக்கோ, நம் பொதுமைக்கோ உகந்தது அல்ல என்பதை இரண்டு கருத்துக்களைத் தெரிவிப்பவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அதிகாரி தன்னுடைய பணியிலே ஏதாவது தவறு செய்திருந்தால் அந்தத் தவறை, அவருடைய பெயரைச் சொல்லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினால் அதற்கு நான் அரசுத் தரப்பிலேயிருந்து பதில் அளிப்பேன் என்பதையும், மேலும் இந்த விவாதங்கள் தொடர்ந்து விவாதப் பொருளாக ஆக்காமல் இருக்க வேண்டுமென்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. தே. எம். இராசு: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே இதை வளர்த்துக்கொண்டு போக வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றி விவாதம் வேண்டாம். அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் தேவை இல்லை.

திரு நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே. இந்த நியமன விவகாரம் தொடர்பாக இங்கே நடந்த விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களைக் குறிப்பேட்டிலிருந்து நீக்குவது நல்லது என்று நீங்கள் கருதினால் அதை நீக்குவதற்கு நானும் சம்மதிக்கிறேன். குறிப்பேட்டை அந்தப் பகுதியைப் பார்த்து, பரிசீலித்து, நீக்குவது வரவேற்கத்தது, நல்லது என்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): குறிப்பேட்டைத் தருவித்துப் பார்த்து அதற்குப் பிறகு அறிவிக்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: இன்றைக்குக் கோயிலிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்குக் குறைந்த ஊதியம்தான் கொடுக்கப்படுகிறது. அந்தக் குறைந்தச் சம்பளம்தான் வீட்டு வாடகைக் கூட கொடுக்க முடியாமல் பணத்தைக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கோயில்களிலே உள்ள உபரி நிலங்களில், வீட்டு வசதி வாரியம் மூலமாக, வீடுகளைக் கட்டி கோயில்களிலே பணியாற்றும் சிப்பந்திகளுக்குக் குறைந்த விலையில் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், பள்ளிமலையில் பழமையான, தொன்மையான, சரித்திரப் பிரசித்திபெற்ற கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் நகரத்தில், கோட்டை மாரியம்மன் கோயிலில் ரூ. 10 இலட்சம் செலவில் ராஜ கோபுரம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதற்காக, சேலம் நகர மாவட்ட மக்கள் சார்பாக, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, சுற்றுலா, செய்தித் துறையின் மூலமாக, அரசுப் பொருட்காட்சிகள் அங்கங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கடந்த காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இந்த நாட்டிலே அமைவதற்கு முன்னால், பொருட்காட்சிகள் தனியாருக்கு ஏலம் விடப்பட்டன. அந்தப் பொருட்காட்சிகளில் களியாட்டங்கள் என்ற பெயரில் சூதாட்டங்களையும், கலை விழாக்கள் என்ற பெயரில் ஆபாச நடனங்களையும் நடத்தி பல இலட்சக்கணக்கான ரூபாய்களை கொள்ளை அடித்து வந்தார்கள். அப்பொழுது பொருட்காட்சியைப் பார்க்கச் சென்ற ஏழை மக்கள் வஞ்சிக்கப்பட்டு, சூதாட்டத்தின் மூலமாக அவர்களுடைய பணங்கள் பறிக்கப்பட்டன. ஆகவே, தமிழக அரசு பொருட்காட்சி விங் என்று ஒன்றை ஏற்படுத்தி, தமிழகத்தின் முக்கிய நகரங்களான, கோவை, மதுரை, சேலம், சென்னை போன்ற பகுதிகளில் ஆண்டுதோறும் அரசுப் பொருட்காட்சி நடத்தி வருகிறது. இதன் மூலம் பல இலட்சம் நிகர லாபம் வருவதோடு, ஏழை எளிய மக்கள் கண்டு களிக்கவும் சூதாட்டங்களிலிருந்து, ஆபாச நடனங்களிலிருந்து விடுபடவும் வாய்ப்பிருக்கிறது. அன்றைக்கு ஏழை, எளிய மக்கள் பல லட்சக் கணக்கான ரூபாய்களைப் பறிகொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு நிம்மதியாக வாழ்கிறார்கள். ஆகவே, அரசுப் பொருட் காட்சியை மாவட்டந்தோறும் நடத்துவதன் மூலமாக, அரசுக்குக் கணிசமான லாபம் கிடைப்பதுடன், சூதாட்டத் தன்மைகள் எல்லாம் மக்களிடையேயிருந்து ஒதுக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை. இந்த அரசு பொருட்காட்சியைக் கண்டு களிப்பதன்மூலம் அங்குள்ள பல கோடிக்கணக்கான குடும்பங்கள் நிம்மதியாக வாழ்கின்றன. வாழும் உள்ளங்கள் பல நூறு என்றால், இந்த அரசை வாழ்த்தும் உள்ளங்கள் பல இலட்சம் என்று பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும். எனவே, அரசு ஆண்டுதோறும், திருவிழா, பண்டிகை போன்ற காலங்களில் ஆங்காங்கு பொருட்காட்சிகளை நடத்தி, அரசுத் திட்டங்களை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் அரசின் திட்டங்களை மக்கள் கண்டு களிக்கவும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டு இலாகாவைப் பொறுத்தவரை, இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தில், சந்தன பயிர் அதிகமாக பயிரிடப்படுகிறது. ஆகவே, தெங்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளில் பரிசோதனை செய்து, சந்தனத் தோட்டங்களை அதிகமாகப் பயிரிட்டு, பெருக்கவேண்டும். வனத் துறை சாதாரணத் துறைதானே என்று நினைக்கக்கூடாது. வனத் துறை அரசுக்கு ஏராளமாக பொருளீட்டிக் கொடுக்கக்கூடிய பணத்துறை.

கடந்த காலத்திலே, கடத்தல் மூலமாகப் பல இலட்ச ரூபாய்களைக் கொள்ளை அடித்து வந்தார்கள். அப்படி சட்ட விரோதமாக, சந்தனம் போன்ற மரங்கள் கடத்தப்பட்டதோடு



மட்டுமல்லாமல், காடுகள் அழிக்கப்பட்டன. சந்தனங்களும் மூங்கில்களும் திருடப்பட்டன. ஆனால், அம்மாதிரி திருடுகள் மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சேலம் மாவட்டத்தில் ஏற்காடு அடிவாரத்தில், மேலிருந்து மரங்களைக் கீழே கடத்திச் செல்வதைத் தடுக்க, ஒரு சோதனைச் சாவடி இருக்கிறது. ஆனால், கீழே கொண்டு வரப்படுகிற மரங்கள், அந்தச் சோதனைச் சாவடியை மீறிக் கூடக் கடத்திச் செல்லப்படுகிற சூழ் நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, ஊட்டியில் இருப்பதைப் போல் மலையின் மேலே ஒரு சோதனைச் சாவடியையும், மலைக்குக் கீழே, அடிவாரத்தில் ஒரு சோதனைச் சாவடியையும் நிறுவுவதன் மூலம், அந்தக் கடத்தலைத் தடுத்து நிறுத்த வாய்ப்பிருக்கிறது.

விறகு விலை அதிகமாக ஏறியிருப்பதால், சென்னையில் 50 நியாய விலைக் கடைகளைத் திறந்து அங்கு விறகு விற்கப்படும் என்று நேற்று மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கூறினார்கள். அதே போல், ஏழைகள் வீடுகள் கட்ட முடியாமல் அவதிப்படுகிறார்கள். காரணம், வீடு கட்டுகின்ற சாமான்கள், தேவைப்படுகின்ற சாமான்கள் விலை ஏறியிருக்கிறது. ஆகவே காட்டு இலாகா அதிகாரிகள் ஏழை, எளிய மக்களுக்குக் குறைந்த விலையிலே, வீடு கட்டுமான சாமான்களை அளிப்பதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டும்.

சுற்றுலாத் துறை மூலம் கொல்லி மலையிலே ஒரு சுற்றுலா ஸ்தலம் ஏற்படுத்த வேண்டும். தமிழகத்திலுடைய பல மாவட்டங்களின் நெடுஞ்சாலைகளில், இரவு நேரங்களில் லாரிகளிலே செல்லக் கூடியவர்களுக்காக, ஓட்டுநர்களுக்காக, ஆங்காங்கு சுற்றுலாத் துறையின் மூலம், காண்டீன்கள் கட்டித் தரவேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

திரு. எல். இளையபெருமாள் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு பணிகளைச் செய்வதற்காக, வயதானவர்களாக இருந்தாலும், அவர்களுடைய தகுதி, திறமையைப் பார்த்து......

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பெ.சு. திருவேங்கடம்) : அமைச்சரே சொல்லிவிட்டார், அந்த நியமனத்தை சட்டப்படி செய்திருக்கிறார்கள் என்று. அதற்குப் பிறகு கிளாரிபிகேஷன் தேவையில்லை.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, ரிட்டையரான வேறு ஒருவர் தமிழ்நாடு சர்விஸ் கமிஷன் சேர்மனாக அரசு நியமித்திருப்பது சேலம் உறுப்பினருக்குத் தெரியுமா? இதையும் அவரது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது அந்த விவாதம் சம்பந்தப்பட்ட அனைத்தும் பத்திரிகையிலே வெளிவரக்கூடாது என்றும், அவைக்குறிப்பிலே ஏறக்கூடாது என்றும் கேட்டார்கள். எனவே அதை ஒட்டித் தான் இப்போது வந்திருக்கின்ற விவாதம் பத்திரிக்கையிலேயும் அவைக்குறிப்பிலேயும் இருக்கலாமா, அவைகளை நீக்குவதுதான் பொருந்தும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பெ.சு. திருவேங்கடம்): அதுவும் பரிசீலிக்கப்படும்.

*திரு. ஏ. சந்திரசேகரன்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்திலே பேசுகின்ற நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திய அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சோழவந்தான் தொகுதி மக்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சை ஆரம்பிக்கிறேன்.

வனவளம், சின்கோனா, அறநிலையம் போன்ற மானியக் கோரிக்கைகளைப் பற்றி நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே நான் பங்குகொண்டு உரை நிகழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வனவளத்தைப் பற்றி கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். பொதுவாக நாட்டிலே வனவளம் நல்ல முறையிலே இருந்தால்தான் நாட்டிலே நல்ல சிறப்புக்களைப் பெற முடியும் என்ற அடிப்படையிலே ஒரு நாட்டில் பரப்பளவிலே 1/3 மடங்கு வனம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம் நாட்டில் 17 சதவீதம் தான் இருக்கிறது. நாட்டில் வனவளத்தைப் பெருக்குவது இன்றியமையாதது. ஆகவே நம் அரசு அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். எனவே

கொடைக்கானல், ஊட்டி போன்ற பகுதிகளில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுவதற்குக் காரணம், அங்கே உள்ள மரங்கள் அதிக அளவில் வெட்டப்பட்டதுதான்.

வன வளத்தால் தான் நமக்குத் தேவைப்படுகிற பிராணவாயு அதிகம் கிடைக்கிறது.

It is an essential thing. So, I request the Government ot concentrate on it.



அடுத்தப்படியாக, வன வளத்தைப்பொறுத்தவரையில் நான் மூன்று யோசனைகளை இந்த அவை முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன். வனத்துறையில் பாரஸ்ட் ரேஞ்சர்கள், போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். உண்மையிலே அவர்கள் செய்கிற பணி மிகவும் ரிஸ்க் உள்ளதாகும். சாதாரணமாக நம் நாட்டில் உள்ள பையர் சவீஸ், போலீஸ் சர்விஸ் போல் இல்லை. அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் இப்போது நல்ல முறையில் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அதிகமான அளவிற்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல், யூனிபாம் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. அதையும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாரஸ்ட் டிபார்ட்மென்டில் வேலை செய்கிறவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் இல்லை. அதையும் செய்து தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறைப் பொறுத்தவரையில், பயணிகள், தங்க சிறந்த முறையில் நல்ல ஓட்டல்கள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பாரின் டூரிஸ்ட்கள் வருகிறபோது அவர்களை சில அன்-அபிசியல் டூரிஸ்ட் கையிட்டுகள் என்று சொல்லப்படுகிறவர்கள் ஏமாற்றி, அதிகப் பணம் பெறுகிறார்கள். ஆகவே, அவர்களை கண்காணிக்க ஒரு தனி ஸ்குவாடு அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விமான நிலையத்தில் இருந்து வருகின்ற பயணிகளுக்கு மினி பஸ் வசதி தற்போது செய்து தரப்பட்டு இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கு டூரிஸ்ட் டாக்சி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற பஸ் வசதி போதாது. ஆகவே, அவர்கள் விமான நிலையத்தில் இருந்து சிட்டிக்கு வருவதற்கு டூரிஸ்ட் டாக்சி வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் டூரிஸ்ட் சென்டர்கள் இருக்கின்றன. அங்கே எல்லாம் சில திறமை அற்ற ஆபீசர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் டூரிஸ்ட்டுகளை நல்ல முறையில் கைடு செய்வதற்கு பதிலாக மாறுபட்ட முறையில் கைடு செய்து விடுகிறார்கள். ஆகவே சிறந்த தகுதி வாய்ந்தவர்களை, திறமை படைத்தவர்களை அங்கே நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சுற்றுலா
வளர்ச்சி நல்ல முறையில் கவனிக்கப்படவில்லை என்கிற குறை
இருக்கிறது. அங்கே, தேக்கடி, கொடைக்கானல், போன்ற இடங்
களில் நல்ல டூரிஸ்ட் சென்டர் வைத்து டூரிஸ்ட் டெவலப்மென்ட்
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்
துக்கொள்கிறேன்.

டாக்டர் கே.பி. இராமலிங்கம் : பேரவைத் மாற்றுத் தலை
வர் அவர்களே, இன்றைய தினம் அறநிலையத் துறை,
வனத் துறை, செய்தி-சுற்றுலாத் துறை, திரைப்படத் துறை
மானியக்கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலை
வருக்கு நன்றி கூறி என் உரையைத் துவங்குகிறேன்.

தமிழகத்தில் அமைந்துள்ள புதிய பொலிவுமிக்க அரசு
முதலாவதாக திரைப்படத் துறை மானியக் கோரிக்கையை
எடுத்துக்கொள்வது மிக மிக வரவேற்கத்தக்கதும், மிகவும்
அத்தியாவசியமானதும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். காரணம், சமீபத்தில் போடப்பட்ட வரி விதிப்பின்
காரணமாக கச்சாப் பிலிமின் விலை சுருள் ஒன்றுக்கு 250 ரூ.
உயர்ந்துள்ளது. இதனால் 25 பதிப்புகள் வெளியிடப்படுகின்ற
திரைப்படத்தின் உற்பத்தி கிட்டத்தட்ட 1 லட்சம் ரூபாய்
அதிகம் ஆகிறது. இதனால் தமிழகத்தில் திரைப்படத் தொழில்
பாதிப்பு ஏற்படும் என்ற நிலைமை இன்றைக்கு உருவாகியுள்ளது.
இதனால் அரசின் வருவாய் குறையும். படங்கள் வெளிவருவதும்
எண்ணிக்கையில் குறையும். இதனால் பெரும்பான்மையான
தொழிலாளர்கள் வேலை இன்றித் தவிர்க்கும் நிலைமை ஏற்
படும். மேலும், தமிழ் மொழியில் வெளி வரும் படத் தொழில்
மிகவும் பாதிக்கப்படும். இதனால் தமிழ் நாட்டின் வருமானம்
குறைந்து, தமிழ் நாட்டின் கலாசாரம் வளர்ச்சி பாதிக்கப்படும்
என்று நான் எண்ணுகிறேன். இதற்கு அந்தத் துறையில் நல்ல
தேர்ச்சி பெற்று இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மைய
அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி நல்ல தீர்வு காணவேண்டும்
என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

அதைப்போல அறநிலையத் துறையைப் பொறுத்தவரை
யில் கடவுள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் மனச்
சாட்சிக்குப் பயந்தவன் என்ற முறையிலே சொல்கிறேன். கோயி
லில் குடியிருக்கும் ஆண்டவனை காப்பாற்றும் பொறுப்பு நம்
முடைய காவலர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால்
சிலையைத் திருடி சில்லரையைச் சம்பாதிக்கின்ற நோக்கத்தோல்





சிலைகளைத் திருடிச் செல்கிறார்கள். அப்படிக்
ஆண்டவன் காப்பாற்றுகின்ற
கடத்துகின்ற நேரத்தில் அந்த ஆண்டவனை வந்துவிடுகிறது. ஆலயங்
பொறுப்பு காவல் துறையின் கையில் ஆலயங்களில் இருக்கிற
களைப் புதுப்பிப்பதைவிட இப்படிப்பட்ட பொறுப்பு
ஆண்டவனைக் காப்பாற்றுகின்ற தலையாயப் அதற்கு
நம்முடைய புரட்சித் தலைவர் அரசுக்கு இருக்கிறது ; வேண்டு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்ற
கோளை இந்த அவைமுன் வைக்கிறேன்.

காட்டிலாகா பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் ஹைதராபாத்
ஜூவில் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். காட்டிலே இயற்
கையான சூழ்நிலையில் சிங்கங்கள் நடமாடுவதைப் பார்ப்பதற்
காக 'லயன்ஸ்ஸபாரி' வைத்திருக்கிறார்கள். லயன்ஸ்ஸபாரி
என்று சொல்லுகின்ற அந்த மூடிய பஸ்ஸிலே குழந்தைகளும்,
பொதுமக்களும் சென்று இயற்கையான சூழ்நிலைகளில் சிங்கங்
களை நேரடியாகப் பார்க்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய காடுகளிலும் சிங்கங்
களைக் கண்டுகளிக்க 'லயன்ஸ்ஸபாரி' அமைத்துத் தரவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நாமக்கல் கோட்டையை நல்லமுறையில்
புதுப்பித்து ஒரு சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதியமான் கோட்டையிலிருந்து தர்மபுரி கோட்டை
வரையில் ஏற்கெனவே ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. அதைப்
புதுப்பித்து சுற்றுலாவாக அங்கே சென்றுவர தகுந்த வசதி
களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வல்வில் ஓரி வாழ்ந்த கொல்லி மலையை
ஒரு சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதைப்போல அர்த்த நாரீஸ்வரர் கோயில் ஒன்று இருக்கிறது.
அங்கே நிறைய கல்வெட்டுகள் இருக்கின்றன. அதையும் ஒரு
சுற்றுலா மையமாக ஆக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சில கோயில்களுக்கு இருக்கிற நிலங்கள் அதிகமாக
இருந்தாலும் அந்த நிலத்தை வைத்து, அங்கே பணியாற்றுகின்ற
வர்களுக்கு சம்பளம் கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால்
அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் அளித்து அந்த நிலங்களிலிருந்து
அதிகமாக வருமானம் கோயில்களுக்கு கிடைப்பதற்கு வேண்டிய
ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1980 ஜூலை 10

இந்த அறநிலையத் துறையைப் பொறுத்தமட்டில், ஏற்
கெனவே இருந்தவர்கள் இதை ஒரு துறையாகக் கருதாமல்
இந்தத் துறையைப் பயன்படுத்தி தன்னை வளர்த்துக்கொண்
டார்கள். ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவர் அரசைப்
பொறுத்தமட்டில் மதுரை மீனாட்சியம்மன் மூக்குத்தியானாலும்
மருதமலை உண்டியல் ஆனாலும் அவைகள் எல்லாம் தங்களுடைய
சொத்தாக கருதாமல் ஆண்டவன் சொத்தாகக் கருதி, போற்றி
பாதுகாக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்து முடித்துக்கொள்
கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. துரை முருகன் : மாண்புமிகு தலைவரவர்களே,
மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சரவர்கள் இந்த
மாமன்றத்தில் வைத்திருக்கிற இந்து சமய அறக்கட்டளைகள்,
காட்டுவளம், சுற்றுலா, சின்கோனா ஆகிய மானியக் கோரிக்கை
கள்மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்து இருக்கிற
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

தலைவரவர்களே, முதற்கண் இந்த மானியக்கோரிக்கை
களுக்கு உள்ளே புகுந்து பேசுவதற்கு முன்னால் **ஒரு முக்கிய**
மான கருத்தை வெளியிட விரும்புகிறேன். காரணம், மானியக்
கோரிக்கைகள் மீது விவாதம் இன்றிலிருந்து தொடங்குகிறது.
எனவே, இன்றைக்கு விவாதத்திற்கு வந்திருக்கிற மானியக்
கோரிக்கைகள் குறிப்புகள் வந்தமாதிரி இனிவருகின்ற மானிய
கோரிக்கைகளுக்கும் வந்துவிடக் கூடாது, தாமதம் ஏற்படக்
கூடாது என்பதற்காக குறிப்பிடுகிறேன். மானியக் கோரிக்
கைகள் மீதிருக்கிற அறிக்கைகள் எல்லாம் இரண்டு நாட்களுக்கு
முன்னதாக அங்கத்தினர்களுக்கு கிடைத்தாக வேண்டும்;
இதற்கு முன்னால் அப்படி வழங்கப்படும். அப்போதுதான் அங்
கத்தினர்கள் அதைப் படித்து, லைபிரரிக்குப் போய் விவரங்கள்
சேகரித்து, அல்லது எக்ஸ்பர்ட்களை கலந்தாலோசித்து நல்ல
முறையிலே தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு
வாய்ப்பு இருக்கும். 'விடிந்தால் திருமணம், பிடி தாம்பூலம்'
என்று சொல்வார்களே அதுமாதிரி விடிந்தால் மானியக்கோ
ரிக்கை விவாதம். இரவு 10–30 மணிக்கு அதுபற்றி குறிப்பு
களைக் கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். அதிலே பார்த்
தால் சுற்றுலா பற்றிய குறிப்பு இல்லை.

இன்றைக்கு சுற்றுலாத் துறை ஒருவேளை வராதோ
என்னவோ என்று அஜண்டாவை எடுத்துப் பார்த்தால் அதிலே
சுற்றுலாத்துறை சேர்ந்திருக்கின்றது. ஆனால் இங்கே வந்து
உட்கார்ந்ததற்குப் பிறகு இந்த மேஜையின் மீது சுற்றுலாத்துறை
யைப் பற்றிய அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே



1980 ஜூலை 10] [திரு. துரைமுருகன்]

சுற்றுலாத்துறையை இதற்கு மேலே படித்து அதற்கு மேலே
விவரங்களைச் சேர்க்கவேண்டிய நிலைமை உருவாகி இருக்
கின்றது. இரவு 10 மணிக்கு மூன்றுமானியங்கள் கிடைத்தன.
காலையில் 9 மணிக்கு மேல்தான் சுற்றுலாத்துறை பற்றிய
அறிக்கை கிடைத்திருக்கின்றது. எனவே இவற்றை வைத்துக்
கொண்டு அங்கத்தினர்களாலே எப்படிப் பேச முடியும் என்
பதை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பெல்
லாம் இந்த அறிக்கைகள் எல்லாம் இரண்டு மூன்று நாட்
களுக்கு முன்பே வந்துவிடும். இன்னும் சொல்லப்போனால்
4 நாட்களுக்கு முன்னதாகக் கூட வந்துவிடுவதுண்டு. ஆகவே
குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னதாகக் கிடைத்தால்தான்
அங்கத்தினர்களால் படிக்க முடியும். எனவே இன்று நடை
பெற்றது—இதுவே கடைசி முறையாக இருக்கும்படி அரசும், செய
லாளர்களும், தலைவர் அவர்களும் பார்த்துக்கொள்ள வேண்டும்
என்று நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து முதலில் இந்து சமய அறக்கட்டளைகளைப் பற்றி
நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக்கடமைப்பட்டிருக்
கிறேன். இந்த இந்து அறநிலையம் என்பது திராவிடமுன்னேற்றக்
கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் அது இந்த மாமன்றத்
திற்கு வருகிறபோது எல்லாம் மிஸலேனியஸ் சப்ஜெக்ட்டுக்கு
உள்ளே நுழைந்துதான் வரும். அதைப் பல பட்டரையிலே
சேர்த்துவிடுவார்கள். சில நேரங்களிலே விவாதமே இல்லாமலே
ஓட்டெடுப்பு நடந்து முடிந்துவிடும். அப்படிப்பட்ட ஒரு
நிலைமையிலே தான் இந்த அறநிலையத்துறை இருந்தது.
ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பீடத்தில்
ஏறியதற்குப் பிறகுதான் குறிப்பாக கலைஞர் அவர்கள்
முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு
தான் அதற்காக தனியான ஒரு இலாக்கா என்று போட்டு அதை
ஒரு தனி மதிப்புள்ள இலாகாவாக மதிக்கத்தக்க விதத்திலே
மாற்றியமைத்தார்கள். எனவே திராவிட முன்னேற்றக்கழ
கத்தினுடைய காலம்தான் குறிப்பாக கலைஞர் அவர்களுடைய
காலம்தான் இந்து அறநிலையத்தினுடைய மறுமலர்ச்சி
காலம் என்று சொல்லலாம். ஏனென்று கேட்டால் முன்பு
எல்லாம் கோயில் நிலங்களை யார் வைத்திருக்கிறார்கள் என்று
சொல்ல முடியாது. அந்த கோயில் நிலங்களை பலர் ஆண்
டாண்டுகாலமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்
பலபேர் அனுபவித்த காரணத்தால் ஆண்டவனே நெய்
வேத்தியத்திற்கு அல்லல்பட்ட நிலைமை உருவாகிக்கொண்டிருந்
தன. எனவே அவற்றை மாற்றி தனியாக ஒரு அலுவலரைப்
போட்டு கோயில் நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று
அவற்றைக் கண்டுபிடித்து அவைகளை எல்லாம் கோயிலுக்கு
வருமானம் உடையவைகளாக மாற்ற வேண்டும் என்ற காரியத்தை

திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் செய்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அப்படி ஒரு தனி அலுவலரைப் போட்டு நிலங்களைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்ததிலே சற்றேறப்ப 1 இலட்சம் ஏக்கருக்குமேலே அப்படிப்பட்ட நிலங்களை நாங்கள் அரசுக்கு சேர்த்திருக்கிறோம். அதேபோன்று பல நிலையங்கள், சமய நிறுவனங்கள், கோவில் நிர்வாகங்கள் ஆகிய இவைகள் எல்லாம் தணிக்கை செய்யப்படாமல் ஏதோ வந்தது கணக்கு போனது கணக்கு என்றும் ஆண்டவன் திருவுளத் திருவுண்டி என்றும் இருந்தது. அவற்றை எல்லாம் மாற்றி 1972 ஆம் ஆண்டு அவற்றை தணிக்கை செய்வதற்காக ஒரு பிரிவை இந்த நிர்வாகத்திலே கொண்டுவந்தும் அதைச் செம்மைப் படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு அறக்கட்டளைகள், மடங்கள், மடங்களைச் சேர்ந்த கோயில்கள், சமய நிறுவனங்கள் ஆகியவைகள் எல்லாம் தனித்தனியாக பிரிந்திருந்தன. அவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து இந்த இந்து அறநிலையக் கட்டளைக் குள்ளே கொண்டு வந்து நிறுத்தி அந்தக் கோயில்களுக் கெல்லாம் உரிய முறையிலே நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். இதை யாரும் மறுக்க முடியாது. அதேபோன்று அறங் காவலர்களாக சில பழம்பெரும் பெருச்சாளிகள் இருந்தனர். கேட்டால் நாங்கள் பரம்பரையாக வருகின்றவர்கள். ஆகவே எங்களை யாரும் அசைக்க முடியாது என்று சொல்லி கொண் டிருந்தார்கள். கோயிலுக்கும் அவர்களுடைய வீட்டுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாமல் இருந்தது. கோயில் சொத் துக்களுக்கும் அவர்களுடைய சொத்துக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட நிலைமை களை எல்லாம் மாற்றி பரம்பரை அறங்காவலர்களை நீக்கி விட்டு பரம்பரையில் அல்லாதவர்களை அறங்காவலர்களாக நியமித்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

அதுமட்டுமல்லாமல் அரிசனங்களை அறங்காவலர்களாக மாற்ற வேண்டும் என்ற சமுதாய சீர்திருத்தத்தின் அடிப் படையில் அரிசனங்களை அறங்காவலர்களாக மாற்றிப் போட் டதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

இன்னும் சொல்லப்போனால் அரிசனங்கள் அர்ச்சகர்களாகவே வர வேண்டும்என்ற சட்டத்தைக் கொண்டுவந்து அதை நிறைவேற்றினோம். அது இன்றைக்கு உச்சநீதி மன்றத்திலே தூங்கிக்கொண்டிருப்பதும் நாடறிந்த விஷயமாகும். எனவே ஆண்டவன் பிள்ளைகள் அரிசனங்கள், அவர்கள் அர்ச்சகர் களாக ஆகலாம் ஆகமம் தெரிந்திருந்தால் என்பதை எடுத்து





இயம்பியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். மேலும் திராவிட முன்னேற்றக் கழக அரசின் காலத்திலேதான் குடமுழுக்குகள் பல கோயில்களுக்கு நடைபெற்றன. ஓடாத திருவாரூர் தேர் ஓடியிருக்கின்றது. பல்வேறு கோயில்களின் நிர்வாகத்திலே இருந்த கல்லூரிகள், பள்ளிகள், மற்றும் அநாதை இல்லங்கள் ஆகிய இப்படிப்பட்ட பல்வேறு சமுதாய நலன்களை உட்கொண்டவைகள் அனைத்தின் நடவடிக்கை களையும் மாற்றி இருப்பது திராவிட முன்னேற்றக்கழக அரசு தான்.

எனவே தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத் திலேதான் கோயில்களில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. மறு மலர்ச்சி மட்டுமல்ல. ஒரு புத்துணர்வும் ஏற்பட்டது என்பதை அச்சாரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

ஆனால், இந்த நாட்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று $2\frac{1}{2}$ ஆண்டு காலமாகிறது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் நியமித்த அறங் காவலர்களை எல்லாம் அன்றையதினம் ஜனாதிபதி ஆட்சிக் காலத் திலே நீக்கிவிட்டார்கள். அதற்குப் பிறகு 1 ஆண்டு காலம் முழு வதும் ஜனாதிபதி ஆட்சி இருந்தது. அதற்குப் பிறகுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி $2\frac{1}{2}$ ஆண்டு காலம் தமிழகத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. சற்றேறப்ப $3\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் அறங்காவலர்களே நியமிக்கப்படவில்லை.

கேட்டால் சொன்னார்கள். 'அடுத்த மாதம் நியமிக்கப் படும், அதற்கு ஒரு குழு போட்டிருக்கிறோம். அந்தக் குழுவின் சிபாரிசை எடுப்போம், இப்படிப் போடுவோம், அப்படிப் போடு வோம்' என்று. இப்படி ஏதோ தள்ளிக் கொண்டே வந்திருக் கிறார்களே தவிர அறங்காவலர்களைப் போடவேயில்லை. இதன் விளைவு என்னவென்றால், எக்சிகியூட்டிவ் ஆபீசர்களின் கையிலே கோவில் நிர்வாகம் வந்தது. 7, 8 கோவில்கள் சேர்த்து, 10, 15 கோவில்கள் சேர்த்து ஒரு நிர்வாக அதிகாரியைப் போட்டிருக் கிறார்கள். அப்படிப் போட்டிருக்கிற காரணத்தினால் அந்த நிர்வாக அதிகாரி ஒரு வலம் வருவதற்குள்ளாகவே 3, 4 மாதங்கள் ஆகின்றன. எனவே, கோவிலினுடைய வேலைகள் அப்படியே ஸ்தம்பித்துப்போயிருக்கின்றன. நிர்வாகங்கள் அங்கே நொண்டிக் கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலைமை உருவாகியிருக்கிறது இந்த 2½ ஆண்டு காலத்தில். இந்த 2½ ஆண்டு காலத்தில் கோவில் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த, சீராக்க, கோவிலினுடைய ஆகமங்கள் கெடாமல் கட்டிக் காக்க அறங்காவலர்களை நியமிப்பதிலே கூட இந்த அரசு தவறிவிட்டது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருந்தால் என்னுடைய கடமையிலிருந்து வழுவியவனாவேன் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையிலே நான் ஒன்றைப்பார்த்தேன். ''இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை அர்ச்சகர்களை நியமிப்பதை நீக்குதலும், சாதி சமய பிரிவு அல்லது பாகுபாடின்றி அறங்காவலர்களை நியமித்தலும்'' என்ற தலைப்பின் கீழ் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். என்னவென்றால், ''இந்துக் கோவில்களில் அர்ச்சகர்களை நியமிப்பதின் தொடர்பாக, உச்ச நீதிமன்ற குறிப்புகளை கருத்தில் கொண்டு மேற்சொன்ன நோக்கத்தைச் செயல்படுத்துவதற்குரிய வழி முறைகளை காணும் வகையில், வேதங்கள், ஆகமங்கள், திருமறைகள் முதலியவற்றில் நன்கு புலமையுள்ள ஒரு வல்லுனர் குழு ஒன்றை அரசு நியமித்திருக்கிறது.''

இந்து கோவில்களில் அர்ச்சகர்களை நியமிப்பதில் உச்ச நீதிமன்ற குறிப்புகள் என்ன என்பதை விளக்கமாக அமைச்சர் அவர்கள் இதிலே தெரிவித்திருக்கலாம். ஆனால், ஏனோ தெரிவிக்கவில்லை, விட்டு விட்டார். மேற்சொன்ன நோக்கத்தை செயல்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் காணும் வகையில், வேதங்கள், ஆகமங்கள், திருமறைகள் ஆகியவற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை ஏற்கெனவே அமைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தக் குழு என்ன சொல்கிறது, என்ன செய்யப்போகிறது என்பது எங்களுக்குப் புரியவில்லை. இன்னொன்றையும் நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சாதி சமய நெறிமுறைகள் இல்லாமல் அர்ச்சகர்களை நியமிப்பதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொள்வார்கள். ஏற்கெனவே அப்படி அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதற்காக கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அதன் செயல்வடிவங்களை அன்றையதினம், மத்திய அமைச்சராக இருந்த பாபுஜி ஜெகஜீவன்ராம் அவர்களிடத்திலே கொடுத்து, இதை மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டும் என்று பல முறை கேட்டுக் கொண்டார்கள். அப்படி பலமுறை கேட்டும் அவை நடைபெறவில்லை.



ஆனால், நான் இந்த அமைச்சர் அவர்களிடத்திலே நேரிடையாகக் கேட்பது இதிலே குழு அமைத்து விட்டால் மட்டும் இந்த நோக்கம் நிறைவேறி விடுகிறதா? அல்லது அரசியல் சட்டமே திருத்தப்பட வேண்டும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறதா? அரசியல் சட்டம் தான் திருத்தப்பட வேண்டும் என்று சொன்னால், மத்திய சர்க்காரை வலியுறுத்திக் கேட்பதற்கு இந்த அரசு எடுத்திருக்கிற செயல் முறைகள் என்ன என்பதை இந்த அரசு தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து இதிலே சொல்லியிருப்பது, ''பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். அத்தகைய நியமனத்திற்குத் தகுதி வாய்ந்த நபர்களின் பெயர்ப் பட்டியலை தயார் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, அதாவது உதவி ஆணையாளர், துணை ஆணையாளருக்கு உதவி செய்ய 46ஏ பிரிவின் கீழ் வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.''

ஏற்கெனவே நாம் டிரஸ்டுகள் போட்டால் அங்கே இருக்கிற அசிஸ்டெண்ட் கமிஷனர்கள் அவர்களையெல்லாம் கேட்டே செய்வது இல்லை. இந்த வட்டாரக் குழுக்கள் போட்டதற்குப் பிறகு என்ன நிலைமை இருக்கிறது? இத்தனை குழுக்கள் போட்டு என்ன பயன்? எத்தனை குழுக்கள் போட்டாலும் அறங்காவலர்கள் தான் வந்து சேரவில்லை. எனவே, குழு போடுவதையே தலையாய கடமையாக அரசு கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் இவற்றைச் சுட்டிக் காட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்னொன்று, இந்த அறங்காவல் துறையில் 'திருக்கோயில்' என்று ஒரு புத்தகம் வெளியிடுகிறார்கள். அந்தப் புத்தகத்தைப் பொறுத்தவரையில் சரியான விளம்பரம் இல்லை. அதிலே முருகவேள் என்பவர்தான் முழுக்க முழுக்க எழுதிக் கொண்டிருக்கிறார். அதை திருத்தி, பல்வேறு சமயத் தலைவர்கள் எழுதுகிற வகையில் அவற்றை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த அறங்காவல் துறையிலே இந்தச் சர்க்கார் இந்த 2½ ஆண்டுக் காலத்தில் மிகப் பெரிய சாதனை என்று சொல்கிற வகையில் என்ன சாதித்திருக்கிறது. அதைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கலைஞர் அவர்களுடைய காலத்திலே 'கருணை இல்லங்கள்' என்று சொல்லி திருக்கோவில்

நிதி வருமானத்திலிருந்தும், அரசாங்கத்தின் மானியத்திலிருந்தும் நிதியைப் பெற்று, ஆதரவற்ற, அனாதைகளான பிள்ளைகளைச் சேர்த்து படிப்புச் சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு சோறு போட்டு, அவர்களை வளர்த்து வந்தோம்.

இப்போது அதிலும் ஒரு பெரும் மாறுதல். கருணை இல்லங்கள் என்பது அன்பு இல்லங்கள் என்று மாற்றப்பட்டிருக் கிறது. பெயர் மாற்றி இருக்கிறார்கள். என்ன காரணம்? பெயர் எடுப்பதில் நீங்கள் பெயர் எடுத்தவர்கள்தான். எங்கள் பெயர்கள் இருக்கக்கூடாது. ஆனால் கருணை என்பதை அன்பு என்று மாற்றியிருக்கிறீர்கள். கருணை என்றால் கருணாநிதி என்பதில் கருணை என்று வருகிறது. அப்படி கருணை என்று வருகிறது என்பதற்காக கருணைக்கு எதிர்ப்பாகிவிட்டீர்களா? அன்பு என்பது வேறு. கருணை என்பது வேறு. அன்பு என்பது ஒத்த வயதுடையவர்களுக்கிடையே வளர்வது. அவன்பால் அவள் அன்பு சுரந்தால் என்று ஒத்த வயது உடையவர்கள்பால் ஏற்படுவது அன்பு. கருணை என்பது ஆதரவற்ற அனாதைகள் பால் சுரப்பது. எனவே, இரக்கத்தின்பால் சுரப்பது கருணை. ஆனால் ஒரே நிலை யில் ஒத்தவர்கள்பால் சுரப்பது அன்பு. கருணை என்பது ஆண்டவன் கருணை வடிவமாக இருக்கிறான், அவர்கள்பால் கருணை கொள் கிறான் என்று கிருபானந்த வாரியார் அவர்களேகூட விழாவில் சொன்னார்கள். கருணைக்கும் அன்புக்கும் இருக்கிற வித்தி யாசத்தைக்கூடப் பாராமல், சொல்லப்போனால் கிருத்துவ மதத் தைச் சார்ந்தவர்கள் அன்பு இல்லங்கள் நடத்துகிறார்கள். இந்து மதம் நடத்துவது அதிலிருந்து மாறுபட்டு சொல்லப்பட வேண்டும் என்பதற்காக அன்பு இல்லங்கள் என்பதைக் கருணை இல்லங்கள் என்று போட்டோம். அதில் கூட கருணாநிதியில் கருணை என்று வந்திருக்கிறதே என்று அலர்ஜியினால் அதைக்கூட மாற்றியிருக்கிறார்கள். எனவே இந்தத் துறையில் செய்திருக் கிற மகத்தான சாதனை அது ஒன்றுதான் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> அன்பே ஆண்டவன், அன்பே சிவம் என்று ஆதியில் இருந்தே தமிழகத்தில் நிலவுகிறது. அந்த அடிப் படையே தவிர இப்படி நினைத்துக் கொள்வது என்றால் அது உங்கள் இஷ்டம்.

<u>திரு. துரைமுருகன் :</u> கிருத்துவர்கள் அன்பு இல்லங்கள் என்று நடத்துகிறார்கள். நமது மதத்தில் மாறுபட்டுத் தெரிய வேண்டும் என்பதற்காக கருணை இல்லங்கள் என்று மாற்றிவைத்தோம். அது கூட மனம் பொறுக்கவில்லை. இத்தகைய காழ்ப்புணர்ச்சி இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்ட



விரும்புகிறேன். இன்னொன்றுகூட சொன்னார்கள். ஏதோ இவர்களுடைய ஆட்சியில் மருதமலை உண்டியல் எல்லாம் பாது காக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். எங்களுக்குக்கூட தெரியும். எங்களுடைய ஆட்சியில் திருத்தணி வேல்கள் பறி போனது கிடையாது. அதற்கு போடப்பட்ட விசாரணை இன் னும் நடந்துகொண்டு இருப்பது கிடையாது. மருதமலை உண்டியலை உடைத்தார்கள் என்று சொல்லிய பிறகு அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்த நடவடிக்கை சரி என்று அது ஊர்ஜிதம் செய்யப்பட்டது ஜனாதிபதி ஆட்சி காலத்தில். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தபிறகு கிருஷ்ண சாமி என்பவரை கமிஷன் போட்டு யார் நீக்கம் செய்யப்பட் டாரோ அந்த அதிகாரி ஒரு மகஜர் கொடுத்து அந்த அமைச்சர் மீது விசாரணை நடத்தக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது. இப் போது கதையே திரும்பிப் போயிருக்கிறது. இது என்ன புதுக் குழப்பம்? பீம்சிங் என்ற நிலைதான் உருவாகியிருக்கிறது. உங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தபின் திருத்தணி வேலை ஏன் கண்டு பிடிக்க முடியவில்லை? எங்கே போயிற்று? யார் எங்கே நுழைந்துகொண்டிருக்கிறார்கள்? யார் பக்க பலம்? இதுவரை வெளியிடப்பட்டதுண்டா, இரண்டரை ஆண்டுக் காலமாக. நாங்களும் திருப்பிச் சொல்ல முடியும் என்பதற்காகத்தான் இதைப்பற்றியெல்லாம் சொல்கிறேன். இன்று அறநிலையத் துறை ஸ்தம்பித்துப் போய்விட்டது. ஆகவே அதை விரைவு படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் டிருக்கிறேன்.

அடுத்து முக்கியமான ஒன்று, சுற்றுலா. இந்தச் சுற்றுலா வைப் பொறுத்தவரையில் நான் படிக்கவில்லை. இருந்தாலும் ஜெனரலாக இங்கே சொல்ல வேண்டும் என்று சொல்கிறேன். அரசாங்கத்திற்கு வருமானம் வருவது, செலவு இல்லாமல் வரு மானம் ஈட்டக்கூடிய துறை சுற்றுலாத்துறை.

<u>மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> உங்களுக்கு ஒரு வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேச ஆரம்பிக்கிறபோதே இந்தப் புத்தகங்கள் எல்லாம் எனக்கு இப்போதுதான் வந்தன, நான் படிக்கவில்லை என்று சொன்னார்கள். உங்கள் மூலம் நான் கேட்டுக் கொள் கிறேன். வேறு நண்பர் ஒருவரைப் பேச வைத்துவிட்டு அவர்கள் அவற்றைப் படிப்பதற்குக் கொஞ்சம் நேரம் கொடுத்து மாலை யில் பேசச் சொல்லலாம். நல்ல பேச்சாளர். இப்போது மிகவும் கஷ்டப்படுகிறார். ஆகவேதான் இந்த வேண்டுகோள்.

<u>திரு. துரைமுருகன் :</u> அரசு தான் செய்ய வேண்டிய கடமை
யிலிருந்து தவறியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன். நான் அதைப் படிக்க முடியவில்லை. உங்கள் புத்தகத்
தில் இருப்பதைப் படித்துவிட்டுப் பேசுவதை விட நானாகப்
பேசினால்கூட நன்றாகயிருக்கும். ஏனென்றால், இதில் ஒன்றும்
இல்லை என்று எனக்குத் தெரியும். சுற்றுலாத் துறையை எடுத்
துக் கொண்டால், கலை உணர்வு நிறைந்தது தான் சுற்றுலாத்
துறை. வெளிநாடுகளிலிருந்து வருபவர்களைக் கவருவது சுற்று
லாத் துறை. சுற்றுலாத்துறை கலை உணர்வுகள் பொருந்தி
யிருக்க வேண்டும். ஆனால், அந்தத் துறைக்கு யாரைத் தலை
வராகப் போட்டிருக்கிறீர்கள் ? முதற்கண் நான் குற்றம் சொல்
கிறேன். ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ஒரு போலீஸ் அதிகாரி
யைப் போட்டார்கள். அதுவே தவறு என்பது என் சொந்த
அபிப்பிராயம். காரணம் போலீஸ் அதிகாரி என்றால், ஒரு
போலீஸ் அதிகாரியை தலைவராக போட்டிருப்பது பிரியாணிக்கு
சைவ சாப்பாட்டுக்காரனை காவல் வைத்ததைப்போல் நீங்கள்
அங்கே வைத்திருக்கிறீர்கள். போலீஸ் அதிகாரி என்றால் கூடு
மானவரை அவர் இதயம் இரும்பாகிக் கொள்கிறது. மனிதனை
ஈர்க்கிற கலை உணர்வு, இலக்கிய வளம், வசீகரிக்கிற சக்தி
கொண்ட ஒருவரை அத்துறைத் தலைவராகப் போட வேண்டும்.
அவர்கள்தான் போட்டார்கள். உங்கள் ஆட்சியில் என்ன ?
கலை உணர்வு உள்ள கலைஞர், நாடகத்துறையில் உள்ளவர்
இன்று முதல் அமைச்சராக இருக்கிறார். இந்தத் துறை அமைச்
சராக இருப்பவரும் கலை உலகில் ஈடுபட்டவர்தான், அப்படி
யிருக்க நீங்களும் என்ன செய்திருக்கிறீர்கள் ? லெஃப்ட்,
ரைட் போடுகிற ஒரு போலீஸ் அதிகாரியைக் கொண்டு போய்
இத்துறைக்கு தலைவராகப் போட்டிருக்கிறீர்கள்.

[முற்பகல் 11–40]

அவர்கள் என்ன செய்கிறார்கள் ? இன்றைக்கு என்ன
நிலைமை வளர்ந்துக் கொண்டு வருகிறது ? இந்த நிலைமைதான்.
முன்னாலே சுற்றுலா வாரியத் தலைவராக இருந்த ஒருவர் என்ன
செய்கிறார் ? இரண்டு காரை எடு என்று சொல்கிறார். அந்த
இரண்டு கார்களிலே புறப்பட்டு பெங்களூரிலுள்ள வெஸ்டர்ன்
ஓட்டலிலே போய்த் தங்குகிறார். அங்கிருந்து மைசூருக்குப் போய்,
பிருந்தாவனத்தை இரண்டு சுற்று சுற்றுகிறார். யாரோடு ? தன்
குடும்பத்தாரோடு, தன் பெண்டாட்டி, பிள்ளைகள், சித்தப்பா,
பெரியப்பா ஆகியோருடன். இப்படி பெங்களூருக்கும், மைசூ
ருக்கும் சுற்றுலா சென்று விட்டு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டால்
இன்றுள்ள பெட்ரோல் விலையில் என்ன ஆகும் ? எனவேதான்
சொல்கிறேன். வெளியிலேஇருந்து வரக்கூடியவர்களைகவரக்கூடிய



வகையிலே கலை உள்ளம் உள்ளவர்களை, அதற்குத் தலைவராக
ஆக்குங்கள். உங்கள் கட்சிக்காரரையே போடுங்கள். வேண்டா
மென்று நான் சொல்லவில்லை. அப்படி உங்கள் கட்சிக்கார
ரையே போட்டாலும், கலை உள்ளம் உள்ள ஒருவரைப் போட
வேண்டும். ஏனென்றால் சுற்றுலாத் துறை என்பது, செலவழிக்
காமல் வருமானம் ஈட்டக் கூடிய ஒரு துறையாகும்.

பேங்காங் எங்கே இருக்கிறது ? ஒரு நாளைக்கு 10,000
சுற்றுலாப் பயணிகள் விமானத்திலே அங்கே வந்து இறங்கு
கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்களாகவே செலவு
செய்து கொண்டு வருகிறார்கள். பக்கத்திலே உள்ள சிங்கப்பூர்
சுற்றுலாவை நம்பிக் கொண்டிருக்கிறது. அதேபோல், தைவானை
எடுத்துக் கொள்ளுங்கள். சுற்றுலாப் பயணிகள் அங்கே போகி
றார்கள். ஸ்விட்சர்லாந்தை எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனை
சுற்றுலாப் பயணிகள் அங்கே போகின்றார்கள். அந்த அளவுக்கு
மாற்ற வேண்டும். கரெண்ட் பத்திரிகையைப் பாருங்கள் ;
பிளிட்ஸ் பத்திரிகையைப் பாருங்கள் ; லிங்க் பத்திரிகையைப்
பாருங்கள். ஒரு மாநிலத்திலே சுற்றுலாத் துறையிலேஎன்னென்ன
இருக்கின்றது என்ற விளம்பரங்கள் பக்கம் பக்கமாக போடப்
பட்டிருக்கும். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்
அப்படிப்பட்ட விளம்பரங்கள் உண்டா ? அவ்வளவு எதற்கு?
இங்குள்ள அங்கத்தினர்களுக்காவது அப்படி கொடுத்திருக்
கிறார்களா ? தமிழ்நாட்டிலே எங்கெங்கே எல்லாம் சுற்றுலா
இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியாவது
எங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றதா ? யாராவது கேட்டால்,
ஒரு பத்திரிகைக்காரர் கேட்டால் கூட சொல்ல முடியாத நிலை
யிலேதான் இருக்கிறோம். எனவே, இப்படிப்பட்ட விளம்பரங்
கள் எல்லாம் செய்யப்பட வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு சுற்றுலாத் துறையை வளப்படுத்து
வதற்காக நாம் பல இடங்களைச் சொல்கிறோம். ஆனால்,
சுற்றுலாவிற்காக வரக்கூடியவர்கள் பழங்காலத்து இடங்களைத்
தான் பார்க்க வருகிறார்கள். அவர்களை நீங்கள் எங்கே கூட்டிக்
கொண்டு போகிறீர்கள் ? சில்வர் சாண்டிற்கும், உங்களால்
கடற்கரையிலே கட்டப்பட்டுள்ள குடிசைகளுக்கும் அழைத்துச்
சென்று, அங்கே தமிழ்நாட்டுத் திருமணம் எப்படி நடக்கிறது
போன்ற கலை நிகழ்ச்சிகளைக் காட்டுகிறீர்கள். இதை அவர்கள்
விரும்ப மாட்டார்கள். அவர்கள் பழம் பெருமை வாய்ந்த
இடங்களைப் பார்ப்பதற்குத்தான் விருப்பப்படுவார்கள். டி.வி.
யிலே கூடக் காட்டினார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்
கற்காலத்திலே எத்தகைய ஆயுதங்களைக் கையாண்டார்கள்.
எப்படி அவைகளைப் பயன்படுத்தினார்கள். கற்காலத்து
மனிதர்கள் தமிழ்நாட்டிலேயும் வாழ்ந்தார்கள்என்பதையெல்லாம்

டி.வி. யிலே எடுத்துக் காட்டினார்கள். அப்பேர்ப்பட்ட இடங் களுக்கு அழைத்துக் கொண்டு போய்க் காட்ட வேண்டும். அதற் கான இடங்களை விளம்பரப்படுத்தினால் சுற்றுலாத் துறை நல்ல முறையிலே வளர வாய்ப்பிருக்கிறது. அதை விட்டுவிட்டு, வருஷத்தில் ஒரு முறை பொங்கல் வரும்போது, எக்சிபிஷன் காட்டுவளம், அப்போது சுற்றுலாத் துறையினர் உறுப்பினர் களுக்கு இன்விடேஷன் அனுப்புவதுமாக இருந்தால், சுற்றுலாத் துறை வளரக்கூடியதாக இருக்காது. நம்முடைய இந்தியா விலே, காஷ்மீரை எடுத்துக் கொண்டால், சுற்றுலாவிலே நல்ல வருமானம் வருகின்றது. அந்த வகையிலே இந்தத் துறையை செம்மைப்படுத்தவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காடு. இந்தக் காட்டைப் பற்றி சென்ற முறையும் பேசியிருக்கிறேன். இன்றைக்கும் பேசுகிறேன். அன்றைக்குப் பேசும்போது எனக்கும், அமைச்சருக்கும் பெரிய வாதங்கள் நடந்திருக்கின்றன. இதைப் பற்றி நான் சென்ற ஆண்டு சொன்ன போது, 'இந்து' பத்திரிகை தலையங்கம் தீட்டியது. அப் போதே சொன்னேன். இந்த காட்டிலாகாவிற்கு ஒரு ஐ.எப்.எஸ். அதிகாரியைப் போடுங்கள் என்று. "He is not only the Head of the Department, but also the Technical Adviser to the Government"

அப்போதே சொல்லியிருக்கிறேன். ஆனால், இன்றைக்கும் அந்த இலாகாவிற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். அதன் விளைவு என்ன? டெக்னிகல் படிப்பு படித்தவரை, அந்த இலாகாவிற்கு தலைவராகப் போட் டால் நல்லது. ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தலைவராகப் போட்டிருப்பதால், ஒருவருக்கு ஒருவர் சண்டை போடக்கூடிய நிலைமைதான். வேறொன்றும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

'நம் மாநிலத்தில் வனத் துறையின் கீழுள்ள காட்டின் பரப்பு சென்ற ஆண்டில் 22,15,200 எக்டேராகும். தற்போதுள்ள பரப்பு 21,73,700 எக்டேராகும். 41,500 எக்டேர் குறைந்து காணப்படுவதற்குரிய முக்கிய காரணம் யாதெனில் வனக் கோட் டங்கள், வனச் சரகங்கள் ஆகியவற்றின் பகுதிகளைச் சேர்ந்த புள்ளி விவரங்களை வட்ட வாரியான, சரகங்கள் வாரியான புள்ளி விவரங்களோடு இணக்கம் செய்ததேயாகும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எப்படிக் குறைந்து போகும் என்பது எனக்குப் புரியவில்லை. எனவே அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கமாக சொல்லியிருந்தால், நான் ஏற்றுக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன்.



இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஒரு நாட்டிலே மூன்றில் ஒரு பங்கு காடாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் 17 சதவிகிதம் தான் காடாக இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே, இருக்கின்ற காடுகள் அழிக்கப்பட்டு நிலங்கள் குறைந்து கொண்டு வருகின் றன. 41,500 எக்டேர் நிலம் குறைந்திருக்கிறது என்று வேறு சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் காட்டை அழிக்கின்ற வேலை தான் நடந்து கொண்டிருக்கிறது. எனவே, நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்ன சொல்லுகிறார்கள்? காடுகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இருக்கிற காடு களை அழிக்காமல் இருந்தாலே அது நாம் செய்கிற மிகப் பெரிய காரியமாகும். காட்டை வளர்க்கிறோம் என்று சொல்லும்போது இருக்கிற அதிகாரிகளுக்கு வேலை கொடுக்க வேண்டும். ஒதுக் கப்பட்ட பணத்தைச் செலவழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கிராமப்புற ஏரிகளைச் சுற்றி பள்ளத்தை வெட்டி முள்செடியை நட்டு வைக்கிறார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதிகள் காட்டு இலாகாவுக்குச் சொந்தமாகிவிடுகின்றன.

கிராமங்களில் மேய்ச்சல் நிலம் வேண்டும். கிராம மக்கள் ஆடுமாடுகளை ஏரிக்கரையில்தான் மேய்ப்பார்கள். ஏரிக்கரை யிலுள்ள நிலங்கள், ஏரியின் முகத்துவாரத்திலுள்ள பகுதிகள் மேய்ச்சல் நிலங்களாக இருந்து வருகின்றன. அந்தப் பகுதியில் காட்டு இலாகா மரங்களை வளர்க்கிறோம் என்று எடுத்துக் கொண்டுவிட்ட பிறகு மேய்ச்சல் நிலத்தை வளர்ப்போம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி முன்னுக்குப்பின் முரணாக இவர்களுடைய செயல்கள் இருக்கின்றன. காட்டை வளர்ப்பதில் கொஞ்சம் யோசனை வேண்டும்.

வடாற்காடு மாவட்டத்தில் தைல மரங்களை நட்டிருக்கிறார் கள். செய்யாறு, குறிஞ்சிபுரம் பகுதிகளில் பத்து பதினைந்து மாதங்களாக நட்ட அந்த மரங்கள் ஒரே அளவில் முளையிலேயே நிற்கின்றன. எந்த இடத்தில் எந்த மரம் நட்டால் அந்த மரம் வளரும் என்ற எண்ணத்தோடு செய்யவேண்டும்.

காட்டு வளத்தைப் பொறுத்த வரவு-செலவுக் கணக்கைப் பார்க்கும்போது 1978–79 ஆம் ஆண்டில் 1,141 இலட்ச ரூபாயும், 1979–80 ஆம் ஆண்டில் 1,041 இலட்சம் ரூபாயும் வருவாயாகக் கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வருவாயில் முந்திய ஆண்டைவிட 100 இலட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது. அவ்வாறு குறைந்ததற்கான காரணகாரியங்களைச் சுட்டிக்காட் டியிருக்கிறார்கள். சந்தன மரங்களை ஏற்றுமதி செய்ய மத்திய

அரசால் தடை விதிக்கப்பட்டிருக்கிறது ; அதனால் ஏல விற்பனை மூலம் குறைந்த வருமானமே கிடைத்திருக்கிறது. சந்தனமரங் களை ஏற்றுமதி செய்ய மத்திய சர்க்கார் தடை விதித்திருக்கிறது என்றால் ஏன் தடை விதித்திருக்கிறது ; அதற்கு என்ன காரணம் என்று கேட்டார்களா ? நான் அறிந்த வரையில் அதற்கான காரணம்—மத்திய சர்க்காரில் இந்தத் துறை பொறுப்பிலுள்ள அதிகாரிகள் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளாக இருக்கும் காரணத்தால், அவர்கள் கர்நாடக மாநிலச் சந்தன மரங்கள் விலைபோக வேண்டுமென்ற காரணத்தால் இப்படிப் பட்ட ஒரு தடை விதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அந்தத் தடையை நீக்க என்ன செய்திருக் கிறார்கள் ? வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய முடியாத கார ணத்தால் பம்பாய் போன்ற பகுதிகளிலிருந்து சந்தன மரங்களை ஏலம் எடுக்க வரமாட்டேன் என்கிறார்கள். அதனால், ஏல விலை குறைந்திருக்கிறது. அடைபட்டிருக்கும் அடைப்பை நீக்க வேண்டாமா ? நீக்கினால்தானே தண்ணீர் வேகமாகப்பாயும். அப்படிப் போடப்பட்ட தடையை எடுக்க சர்க்கார் முயற்சி எடுத்ததா ?

இன்னொரு காரணம்—சந்தன மரங்கள் பாதி திருடு போய் விடுகின்றன. பத்திரிகையை எடுத்துப் பார்த்தால் சந்தன மரங் கள் திருட்டு என்ற செய்தி வராத நாளே கிடையாது. அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ? எத்தனை வழக் குகளைத் தொடுத்தீர்கள் ? எத்தனை பேர் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள் ? அந்தப் புள்ளி விவரங்களைக்கொடுத்து இருக்க வேண்டாமா ? தற்போது துறையின் தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறார். அதற்கு மாறாக அந்தத் துறைக்கு உரியவர் பொறுப்பில் இருந்திருந்தால் இவற்றை யெல்லாம் கண்டுபிடித்திருக்க முடியும்.

சந்தனத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆண்டொன் றுக்கு 5.2 டன் சந்தனத் தைலம் எடுக்கும் திறன் கொண்ட சந்தனத் தைலத் தயாரிப்பு ஆலை ஒன்றை ரூபாய் 22·85 இலட் சம் செலவில் வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூருக்கு அருகே அமைக்க முடிவு செய்யப்பட்டு துவக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது துவக்க நடவடிக்கைகளிலேயே இருந்து விடக்கூடாது துவக்கப் பட வேண்டும். நீங்கள் எத்தனை வாக்குறுதிகள் கொடுப்பீர் கள், எத்தனை வாக்குறுதிகள் நிற்கும், நிறைவேறும்என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டியல் போட்டுக் காண்





பித்தார்கள். அந்தப் பட்டியலில் இதுவும் சேரக் கூடாது. வட ஆற்காடு திருப்பத்தூரில் இந்த ஆலையிலேயே அந்தத்தொழிற் சாலையை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூங்கில், ஜவ்வாது, ஏலகிரி மலைகளில் பெரிய அளவுக்கு அதிகமான அளவுக்கு வளருகிறது. அதைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். ஆனால், அந்த மூங்கில் தற்போது சேஷசாயி கம்பெனிக்குத்தான் போய்க்கொண்டிருக் கிறது. சேஷசாயிக்கு மூங்கில் போவதை நிறுத்தி நாமே இதைப் பயன்படுத்தி ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண் டும். இன்றைக்கு நல்ல கிராக்கி பேப்பர் இன்டஸ்ட்ரிக்கு இருக் கிறது. வேலூரில் சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆம்பூரில் சர்க் கரை ஆலை இருக்கிறது. அதன் மூலம் கரும்புத் திப்பிகள் கிடைக்கின்றன. ஆகவே, இதையும் மூங்கிலையும் பயன்படுத்தி வண்ணக் காகிதங்களையும் மற்றக் காகிதங்களையும் உற்பத்தி செய்யக்கூடிய காகிதத் தொழிற்சாலையை நிச்சயமாக வட ஆற் காடு மாவட்டத்தில் உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்டிலாகாக்குச் சொந்தமான நிலம் என்று வைத்திருக்கிறார் கள். அவை கரம்பாக இருக்கின்றன. மேல்விசாரத்திலும், ஆம்பூரி லும் அப்படி காட்டு நிலம் என்று வைத்திருக்கிறார்கள். ஊரை யொட்டியிருக்கும் நிலம் காட்டு நிலமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றை நாட்டு இடமாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று வெகு நாட்களாக பல பேர் கோரிக்கை வைத்துக்கொண்டிருக் கிறார்கள். அந்த இடங்கள் நல்ல முறையில் வீடுகள் கட்டக் கூடிய இடமாக இருக்கின்றன. கடந்த பத்தாண்டுகளாக எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் அந்த நிலத்தை வைத்திருக் கிறார்கள். அந்த நிலத்தை வீட்டு நிலமாக மாற்ற நடவடிக்கைக் கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–50]

சந்தன மரங்களைப் பாதுகாக்கிற அதிகாரிகளுக்காவது நீங்கள் துப்பாக்கிகளைக் கொடுக்க வேண்டும். துப்பாக்கி இல்லாமலே வன மிருகங்களிடையே வாழ்ந்துவிடலாம். மிருகங்களிலேயும் கேவலமான இந்தத் திருடர்களிடையே வாழ்வது மிகக் கடின மான காரியம். ஏன் என்றால் எங்கள் மாவட்டத்திலே இது அதிகமாக நடைபெறுகிறது. சில நேரங்களிலே அந்தக் கார் பறக்கிற வேகத்தைப் பார்க்கிறபோது அதைவிட அதிகமாக ஆக்சி லேட்டரை அழுத்த முடியாது. திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு

2 மணி நேரத்திலே வந்துவிடுகிறான், உயிரைப்பணயம் வைத்து ஓட்டுகிறான். அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கிற அதிகாரிகளுக்காவது துப்பாக்கியை தற்காப்புக்காவது தரவேண்டாமா என்றுகேட்டுக் கொண்டு இந்த வனவளத்திலே வருவாய் குறைந்திருக்கிறது, இந்த வன வளத்திலே வளம்குறைந்திருக்கிறது, இந்த வன வளத்திலே ஏக்கர்கள் குறைந்து இருக்கின்றன, தொழில் இலாகாவிலேயே இது முக்கியமான வருவாய்தரக்கூடிய ஒரு இலாகாவாக மாற்ற வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எடுத்துக்கூறி சினிமாத் துறையைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டே நான் சொல்லியிருக்கிறேன். பல ஊர்களிலே அண்ணா அரங்கங்கள் துவக்கப்படுகின்றன. இன்றைக்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய ஊரிலே வேலூரில் ஒரு அண்ணா கலை அரங்கம் இருக்கிறது. அதிலே, சிறு பிள்ளைகளுக்குத்தான் படம் போடுகிறார்கள். ஆனால், அங்கே ஒரே செக்ஸ் படம் காட்டப்படுகிறது. டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் அவர்களுக்கு படி அளந்து விடுகிறார்கள். என்ன என்ன படங்கள் போட்டார்கள் என்று கேட்டால் விவரங்கள் தருகிறேன். போன முறையிலேயே நான் சொன்னேன். அமைச்சருக்குத் தெரியும். விஸ்வநாதன் என்ற ஒரே ஒரு ஆளுக்குத்தான் படம் போடுகிற உரிமையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அந்த ஆள் யார் என்ற விவரத்தையெல்லாம் சொன்னேன். அவற்றின்மீது எல்லாம் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள், ஒன்றும் இல்லை. நாங்கள் சொல்வதைச் சொல்லிக்கொண்டே இருப்போம், நீங்கள் செய்வதைச் செய்துகொண்டே இருப்பீர்கள், அடுத்த ஆண்டு வரும், அடுத்த ஆண்டும் சொல்வோம், இப்படியே நிலைமை போய்க்கொண்டே இருந்தால் நாடு உருப்படாது என்று சொல்லி இத்தோடு என்னுடைய கருத்துக்களை முடிக்கிறேன். வணக்கம். நன்றி.

திரு இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு துரை முருகன் அவர்கள் பேசும்பொழுது நான் குறுக்கிடக் கூடாது என்று இருந்தேன். ஏனென்றால் அவருடைய பேச்சாற்றல், நடிப்புத் திறமை எல்லாம் எனக்குப் பிடிக்கும், நான் அவருடைய ரசிகன். திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக் காலத்திலே கருணை இல்லங்கள் செயல்பட்டதுபற்றி அவர்கள் சொன்னார்கள், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தி. மு. க. ஆட்சிக்காலத்திலே முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு விஜயம் செய்தார்கள், இரவிலே பொதுக்கூட்டம், அரசாங்க புரோகிராம் எதுவும் அப்போது அவருக்குக் கிடையாது. அங்கே உடனே சில சிறுவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் வைத்து அப்போது



கருணை இல்லத்தைத் திறந்துவைத்தார்கள். ஆனால் 1 மாதத்திற்குள்ளாக அது குளோஸாகிவிட்டது. அப்படித்தான் அவர்கள் காலத்தில் கருணை இல்லம் செயல்பட்டது என்பதை நான் திரு. துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டுமென்றால் அந்த இன்விட்டேஷன் கார்டு கூடத் தருகிறேன், என்னிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, எனக்கும் திரு. தாமரைக்கனி அவர்களுடைய பேச்சும் நடிப்பும் பிடிக்கும், காமெடியனாக அவர் நடிக்கக்கூடியவர், அவருடைய பேச்சும் நடிப்பும் எனக்குப் பிடிக்கும். நான் கேட்டது இதுதான். கருணை இல்லம் என்று இருந்ததை அன்பு இல்லங்கள் என்று மாற்றி இருக்கிறீர்களே, அதிலே என்ன பெரிய மாறுதல் இருக்கிறது. அதிலே என்ன பெரிய அடிப்படை மாறுதல் இருக்கிறது என்றுதான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் மோடிவ் ஆகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இந்த மன்றத்தின் முன்னாலே 5 மானியக் கோரிக்கைகளை வைத்து அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கைக்கு இணங்க அதையொட்டி அவையிலே வைக்கப்பெற்ற கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்து ஆய்ந்து பயன்பட வேண்டி நிற்கின்ற துறைகள் எவ்வாறு சீர்திருத்தப்பட வேண்டும் என்கின்ற நிலைகளையும் நடைபெற்று வருகின்ற சிறப்புக்களைப் பாராட்டியும், குறைகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டி அவைகள் திருத்தப்படவேண்டுமென்றும் இங்கே பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்ததற்காக நான் இந்தத் துறைகளின் பொறுப்பையேற்றுக் கொண்டிருக்கிறவன் என்ற முறையிலே மொத்தமாக 14 உறுப்பினர்களும் இங்கே கருத்துக்களை எடுத்து வைத்ததைத் தொகுத்துப் பார்த்து நான் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே பெரிய அளவிற்குக் குறைகள் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதையும், பாராட்டுக்கள் அதிகமாக வந்திருக்கின்றன எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்தும், ஆளுகின்ற கட்சித் தரப்பிலேயிருந்தும் என்பதையும், நல்ல ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் எடுத்துச் சொல்வதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் செய்தி சுற்றுலாத் துறை தொடர்பான கருத்துக்கள் இங்கே வழங்கப்பெற்றன. செய்தித் துறையைப் பொறுத்த வரையில் அதிகமாகப் பிரச்சனைகள் எழுப்பப்படவில்லை. மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் மாத்திரம் தன்னுடைய மிக வேகமான பேச்சின் இறுதிக் கட்டத்திலே, முடிவிலே, அந்தச் செய்தித் துறையைத் தொடாமல் போய்விட்டால் தன்னுடைய பேச்சு முடிவுறாது, அந்தப் பேச்சு முடிவு பெறாது என்று எண்ணியோ என்னவோ கடைசியாக ஒன்றை, குற்றச் சாட்டாகச் சுமத்தினார்கள்.

வேலூரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற கலையரங்கம், சிறுவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அந்தக் கலையரங்கத்தில் செக்ஸ் காட்சிகள் நிறைந்த படங்கள் திரையிடப்படுகின்றன என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சிறுவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அந்தக் கலையரங்கத்திலே நம்முடைய மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் எப்பொழுது படம் பார்க்கப்போனார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரு விளக்கத்தைத் தர நான் விரும்புகிறேன். சிறுவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட திரையரங்குகளில், சிறுவர்களுக்கான திரைப்படங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தாலே பெரியவர் களும் பார்த்து மகிழ்கின்ற படங்கள்—அதிலும் குறிப்பாக மாண்புமிகு திரு. துரை முருகன் போன்றவர்கள் பார்த்து ரசிக்கும் படங்களைப் போடலாம்; அங்கே பொது நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், மற்ற நிகழ்ச்சிகள் நடைபெறாதபோது இப்ப டிப்பட்ட படங்களையும் போடலாம் என்ற விதி உருவாக்கப் பட்டதை ஒட்டி, அனுமதிக்கப்பட்ட படங்கள், தணிக்கையாளர் களால், பொதுமக்களுக்குக் காட்டப்படலாம் என்று அனுமதிக் கப்படுகின்ற படங்கள் காட்டப்படுகின்றன.

அடுத்து ஒரு பெயரைச் சொல்லி, இந்தச் சபையினுடைய மாண்பை மீறுகிறோம் என்பதைக்கூட மாண்புமிகு உறுப்பின ரவர்கள் கருத்திலே கொள்ளாமல், யாரோ ஒருவருக்கு அது விடப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார் கள். நான் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் விரும் பினாலும் அந்த அரங்கத்திலே படத்தைத் திரையிடலாம், அதற்கு என்று சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன; உங்களிடத்திலே படங்கள் இருந்தாலும், அந்த விதிமுறை களுக்கு ஒப்புதல் அளித்து. உட்பட்டு திரையிடலாம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி றேன்.



செய்தித் துறையைப் பொறுத்தவரை, அல்லது செய்தித் துறையின் கீழே இருக்கின்ற அத்தகைய அரங்கங்களில் எத் தகைய நிர்வாக முறைகேடுகளும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது, அனுமதிக்கவில்லை என்பதையும் திட்டவட்டமாக இந்த மன்றத்திற்கு உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறையைப்பற்றி இங்கே பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்து வைக்கிறபொழுது தங்கள் தங்கள் பகுதிகளிலே சுற்றுலாத் தலங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே எடுத்து வைத்து இருக்கின்றார்கள். சுற்றுலாத்துறை என்பது இதுவரையில், தமிழக அரசில் நம்முடைய மாண்புமிகு திரு. துரை முருகன் அவர்கள் சொன்னார்கள், இந்து அறநிலையத் துறையைப்பற்றி, பல்வகைப் பொருள்களிலே அடக்கப்பட்ட துறையாக இருந்தது என்று.

[நண்பகல் 12-00]

அதைப் போலத்தான் சுற்றுலாத் துறையும் இன்றைக்குக் கூட இருந்து வருகிறது. அதற்கென்று ஒரு தனித் துறை இருந்தாலும், தனிச் செயலாளரின் கீழே இல்லை. இது பொதுத் துறைக் குள்ளே அடக்கப்பட்ட, ஒரு துறையாக இருக்கிறது. ஆனால், இந்தத் துறை வளர்ந்து வருகிற ஒரு துறை என்பதையும் முறையாக வளர்க்கப்பட்டு வருகிற ஒரு துறை என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டில் இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டுப் பயணிகளுடைய தொகை 7,64,871. அதிலே, தென்னகத்திற்கு வந்த பயணிகளின் தொகை 4,82,000 என்பதைப் பணிவன் போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் தெரிவித்த, ஆரம்பத்திலே எழுப்பிய அந்தக்குறை—குற்றச்சாட்டாக அவர்கள் கூறினாலும், அதைக்குறையாக நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு இன்று காலையிலேதான் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே, நம்முடைய துரைமுருகன் அவர்கள் படிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஒருவேளை, அரசு அச்சகத்திலேயிருந்து விரைவிலே கிடைத்து, நேற்று அல்லது முன்தினம் தரப்பட்டிருக்குமேயானால் மாண்புகு துரைமுருகன் அவர்கள் அதைப்படித்து, ஆய்ந்து, வல்லுநர்களிடத்திலே கலந்து பேசி, அவர்கள் பெற்றிருக்கும் அனுபவங்களை

யெல்லாம் ஒன்றாகத் திரட்டி, ஒரளவிற்காவது என்னைப்
பாராட்டி இருப்பார். அந்த வாய்ப்பை இந்தத் துறையிலே
இருக்கிறவர்கள். இரண்டு நாட்களுக்கு முன்னாலே,
கொள்கை விளக்க குறிப்பைத் தராமல், எனக்கு துரைமுருகன்
அவர்களிடத்திலேயிருந்து கிடைக்க வேண்டிய பாராட்டைத்
தடுத்துவிட்டார்கள். என்றாலும், அந்தக் குறை இனிமேல்
நிகழாது. காரணம், முதல் நாளே இந்த மானியக் கோரிக்கைகள்
எடுக்கப்பட்ட காரணத்தினால், 4, 5 நாட்களுக்கு முன்னாலே
தான் நிதிநிலை அறிக்கைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு,
இந்த மானியங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற
தேதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இதைத்
தமிழிலே உருவாக்கி, ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து,
ஆங்கிலத்திலே உருவாக்கியதைத் தமிழிலே மொழிபெயர்த்து,
அதைச் சரிபார்த்து அச்சகத்திற்கு அனுப்பி, அச்சடித்து,
கொண்டு வருவதில், எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தும் இந்த
ஒரு கொள்கை விளக்கக் குறிப்பு இன்று காலையிலேதான்
தரப்பட்டது. என்னுடைய துறையைப் பொறுத்தவரை இனி
மேல் நான் நடைபெறாமல் பார்த்துக்கொள்வேன். ஏனென்
றால், நான்தான் பெரிதும் இழப்புக்கு ஆளாகியிருக்கிறேன்.
நான் முன்னாலே சொன்னதைப் போல், முன்னாலே கொடுத்
திருந்தால் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் மிருந்த
அளவு பாராட்டியிருப்பார்கள். இன்றைக்காவது அவர் என்னைப்
பாராட்டும் வாய்ப்பு இருந்திருக்கும். அதை இழந்ததற்காக
நான் உண்மையிலேயே வருந்துகிறேன். ஆகவே, சுற்றுலாத்
துறையைப் பொறுத்த மட்டில் நிச்சயமாக வளர்க்கப்பட்டு
வருகிற, வளர்ந்து வருகிற துறை என்பதை. இந்தக் கொள்கை
குறிப்பைப் படித்திருந்தால் அவர்கள் தெரிந்து கொண்டிருக்
பார்கள்.

குறிப்பாக, நான் வள்ளுவர் கோட்டத்தைச் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். காரணம், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவ
ருக்கும், துரை முருகன் அவர்களுக்கும் அதிலே மிருந்த அக்கறை
உண்டு என்று எனக்குத் தெரியும். அந்த வள்ளுவர் கோட்
டத்தை, சென்னை மாநகரத்திற்குள்ளே வந்து நுழைகிற சுற்றுலா
பயணிகள் பார்க்க, அந்த கவர்ச்சிகரமாக ஆக்குகிற அளவுக்கும்
அந்தச் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள
வேண்டுமென்ற அந்த உணர்வோடும், சென்னை மாநகராட்சி
யிடத்திலே, கடந்த ஆண்டே தொடர்பு கொண்டு, அந்த வள்ளு
வர் கோட்டத்தைச் சுற்றி, எந்தக் கட்டிடங்களும் எழுப்பக்
கூடாது, காலியாக இருக்கிற அந்த இடங்களிலே, எந்தக் கட்டிடங்
களோ அல்லது வீடுகளோ, எழுப்ப அனுமதிக்கக்
கூடாது என்கின்ற தெளிவான நிபந்தனையை மாநகராட்சிக்குத்
தெரிவித்து, சுமார் 40 அல்லது 45 இலட்சம் ரூபாய் செலவிலே



அந்த வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி, அற்புதமான, அழகான பூங்காக்களை அமைப்பதோடு, சுற்றுலா பயணிகள் வந்து ஓய்வு பெறுகின்ற அளவிற்கு நல்ல இடங்களையும், அந்த வள்ளுவர் கோட்டத்திற்குப் பின்னாலே ஒதுக்கப்பட்டிருக்கிற ஒரு இடத்திலே, புதிய அமைப்பிலே, சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க அளவிற்குக் கடைகள், மற்றும் மண்டபங்கள் போன்றவைகள் அமைக்கப்பட வேண்டுமென்றெல்லாம் திட்டமிடப் பட்டிருக்கிற விவரத்தையும், மாமல்லபுரத்திற்கு ரூ. 25 இலட்சத்திற்கு மேல் செலவிடுகின்ற ஒரு திட்டத்தை இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிற விவரத்தையும் கன்னியாகுமரியை உலகச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு, திட்டங்கள் தயாரிப்பதற்காக ஒரு நிபுணரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிற விவரத்தையும், அதைப் போல் பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட மையங்கள், சுற்றுலா மையங்கள் ஆக்கப்பட வேண்டுமென்பது குறித்து, போக்குவரத்துத் துறையிடத்திலே கலந்து பேசி, அவர்களுக்கிருக்கிற நிதி வசதியில் பயணிகள் மேம்பாடு திட்டம் என்ற அடிப்படையில் District Excursion centres என்று அழைக்கப்படுகிற மாவட்ட சுற்றுலா மையங்கள் அமைக்கப்பட திட்டங்கள் தீட்ட இருக்கிறது அரசு என்கிற விவரங்களை யெல்லாம் நான் இந்த மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல முதலிலே பேசிய திருப்பத்தூர் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் இங்கே வடார்க்காடு மாவட்டத்தில் ஏலகிரி மலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு லட்சம் ரூபாயில் தங்கும் விடுதியைக் கட்டி முடித்திருக்கிறோம். இந்த ஆண்டு மேலும் பல வசதிகளைச் செய்வதற்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். இன்னும் வடார்க்காடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளை மாவட்ட சுற்றுலா மையங்களாக மாற்ற அரசாங்கத்தில் பல திட்டங்கள் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வடார்க்காடு மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தாலே, மற்ற மாவட்டங்கள் விடப் பட்டுவிட்டன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிக்கொள்ளத் தேவையில்லை. எல்லா மாவட்டங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, மாவட்டத்திற்கு ஒரு பகுதியாகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஒரு மாவட்டம் என்ற காரணத்தினால், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மனோரா, புகழ் பெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த கடற்கரைப் பகுதியாகும். திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டத்து மக்கள் ஒரு கடற்கரைப் பகுதியிலே வந்து உல்லாச வாசஸ்தலம் என்று அழைக்கப்படுகிற, அப்படிப்பட்ட ஒரு இடத்தில் கூடுவதற்கு ஏற்ற வகையில் அங்கே நல்ல முறையில் ஒரு சுற்றுலா

மையம் அமைக்கும் திட்டமும் சுற்றுலாத் துறையில் இருக்கிறது.
இப்படி ஒன்றிரண்டு திட்டங்களை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.
இதைப்போன்று எல்லா மாவட்டங்களிலும் சுற்றுலா மையம்
அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து வனத்துறை. வனத் துறையைப் பற்றிப்
பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. வனம்
காக்கப்பட வேண்டும் என்பதிலே, வனங்கள் வளர்க்கப்பட
வேண்டும் என்பதிலே, வனங்கள் அழிக்கப்படக்கூடாது என்ப
திலே, அழிக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்பதிலே, சந்தன
மரங்கள் போன்ற விலை உயர்ந்த மரங்கள் கடத்தப்படுவது
தடுக்கப்பட வேண்டும் என்பதிலே இந்த மன்றத்திலே இருக்கிற
உறுப்பினர்களுக்குக் கருத்துவேறுபாடு இல்லை. ஆனால்,
இங்கே பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துக்களை மாண்புமிகு
உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய
கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூ
னிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள், வனத்துறையில் பல்வேறு
தவறுகள் நடைபெறுவதாக சில தகவல்களை இந்த மன்றத்திலே
தெரிவித்து இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத்
தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்
டத்திலேதான் இந்த வனத்துறையைப் பற்றிய பிரச்சினை எல்லை
கடந்து நிற்கின்றது. பல்வேறு குற்றச்சாட்டுகள் அங்கே இருந்து
தான் தரப்படுகின்றன. ஆனால் அது குறித்து உடனடியாக
விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் அதற்கான சாட்சியங்கள் தர
மறுக்கிறார்கள். தடையங்களைத் தர மறுக்கிறார்கள் என்
பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு மிகத்
தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது என்பதையும்,
வனத்துறையில் தவறுகள் நடக்கும்போது அதைக் கண்காணிப்பது
மாத்திரம் அல்ல, அப்படி யாராவது அந்தத் தவறுகளிலே
ஈடுபடுவார்களேயானால், அவர்கள் அலுவலர்களாக இருந்தாலும்
சரி, அதிகாரிகளானாலும் சரி, பொது மக்களிலே இருந்து வரு
கின்றவர்களானாலும் சரி, அல்லது காண்ட்ராக்ட் என்கிற
பெயராலே குத்தகை எடுத்து மரங்களை வெட்டுகிறவர்களானா
லும் சரி, அல்லது தோட்டங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம்,
காப்பி போடவேண்டும் என்ற பெயராலே வெட்டுகிறவர்களானா
லும் சரி, அல்லது காற்றிலே விழுந்து விட்டது இரண்டாயிரம்
மரங்கள், அதற்கு அனுமதி தேவை என்று கேட்கிற தோட்ட
முதலாளிகளானாலும் சரி, அல்லது அதற்கு உறுதுணையாக
இருக்கிற வியாபாரிகள் ஆனாலும் சரி, வெட்டுகிறவர்களானாலும்



சரி, அத்தகைய சமுதாயத்திலே சம்பந்தப்பட்டிருக்கிற அத்தனை
பேரையும் இந்த அரசு நிச்சயமாக கண்காணிக்கும். தவறுகள்
நிகழ்ந்தால் அதைக் கண்டித்துத் தக்க முறையிலே அதற்கான
தண்டனையை வாங்கித் தரும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-10]

இங்கே வனத்துறையைப் பற்றிச் சொன்னபோது, மாண்புமிகு
துரைமுருகன் அவர்கள் காட்டு ஏரியா — அந்த வனப் பகுதி
எப்படி குறைந்தது என்று கேட்டார்கள். அது தான் ஐ.ஏ.எஸ்.
அதிகாரி போட்டதன் விளைவு என்பதை நான் முதலில் சொல்லி,
விவரத்தைத் தொடர்ந்து சொல்கிறேன். ஏதோ ஒரு ஐ.ஏ.எஸ்.
அதிகாரியை நாங்கள் அங்கே போட்டு விட்டது ஒரு மகத்தான
கிரிமினல் குற்றம் போல சென்ற நிதிநிலை அறிக்கையின் மீதான
மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு துரை
முருகன் அவர்கள் தெரிவித்தார்கள். நான் அப்போதே விளக்க
மாக பதில் அளித்தேன். அப்போதே அவர்கள் சமாதானம்
அடைந்து இருப்பார்கள் என்று கருதினேன். ஆனால் ஓராண்டு
காலத்திற்குப் பிறகும் நடைபெற்று முடிந்து இருக்கும் நல்ல
காரியங்கள் அவருக்குத் தெரிவிக்கப்படவில்லையோ என்னவோ
— அவர் மீண்டும் முன்பு எடுத்த முடிவிலிருந்து தன்னை மாற்றிக்
கொள்ளத் தயாராக இல்லை என்று அவர்கள் இன்றைக்கும்
தெரிவித்தார்கள்.

இந்த காட்டு நிலப் பகுதி எவ்வளவு என்பதைக் கூட இதுவரை
யில் வன இலாகாவில் சரியாக, பலகாலமாக கணக்கு எடுக்கப்படா
மல் இருந்ததை பகுதிபகுதியாகப் பிரித்து, ரிசர்வ்பாரஸ்ட்ஸ் என்றும்
ஒதுக்கப்படாத காடுகள் என்றும், காட்டுப் புறம்போக்கு என்றும்
பல்வேறு தலைப்புகளில் வருகின்ற காட்டுப் பகுதிகளைக் கணக்
கிட்டு பிறகு கிடைத்த புள்ளி விவரங்கள்தான் இந்த மன்றத்
தில் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டீர்கள், போட்டீர்கள்
என்று ஏதோ மிகப் பெரிய குற்றத்தை செய்து விட்டதைப்
போல இந்த முறையும் சொன்னதால் சொல்கிறேன், ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகளாக இருந்தாலும், ஐ.எப்.எஸ். அதிகாரிகளாக இருந்
தாலும், அவர்கள் இந்திய அரசாங்கத்தின் கீழே வருகின்ற அதி
காரிகள். அந்த அதிகாரிகள் பல்வேறு துறைகளில் தங்களின்
ஆற்றலை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நீங்கள் சொன்னீர்களே, இந்த வனத்துறை என்பது ஒரு
கமர்சியல் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட்; அதாவது

வருமானத்தை ஈட்டித் தருகிறகின்ற ஒரு துறை என்று—இது
வரை அந்தத் துறை அப்படி கருதப்படவில்லை என்பதும், வெறும்
மரங்களை வெட்டுவதற்கும், மரங்களை வளர்ப்பதற்கும்தான்
வனத்துறை—காட்டுத்துறை இருக்கிறது என்றும், அந்தத் தத்
துவத்தின் அடிப்படையில்தான் அந்தத்துறை செயல்பட்டு வந்தது
என்பதையும், அதனால்தான் நம்முடைய வாழ்க்கையில் நாம்
அன்றாடம் உபயோகிக்கும் பல பொருள்கள்—தலையில் வைத்துத்
தேய்க்கும் சீக்காய் முதல் உணவாக உபயோகிக்கும் புளி வரை
யிலும், இலவம்பஞ்சு, கடுக்காய், கருவேப்பிலை இன்னும் நூற்
றுக்கணக்கான பொருள்களை வனம் நமக்கு இயற்கை செல்வ
மாகத் தந்து இருந்தாலும், நம்முடைய கண்ணுக்கு சந்தனத்தைக்
காட்டி, ரோஸ் உட்டைக் காட்டி, தேக்கு மரத்தைக் காட்டி.
இவைகளெல்லாம் நம் கண்ணில் தென்படாமல் செய்து இருக்கி
றார்கள் என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கக் கட
மைப்பட்டு இருக்கிறேன்.

ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டதற்குக் காரணமே,
மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்தில் எடுத்த ஒரு நடவடிக்
கையைத் தொடர்ந்து, ஒரு நிர்வாக சீர்திருத்தத்திற்காக செய்
யப்பட்ட ஒரு நடவடிக்கை இது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். இரண்டு தலைமை வனப்பாதுகாவலர் பதவி—நம்
முடைய மாநிலத்தில்—முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியில் உருவாக்கப்பட்டது. அதிலே ஒரு சீப் கன்சர்வேடர்
ஆப் பாரஸ்ட்ஸ், ஐ.எப்.எஸ். ஆபீசர். அவர் வளர்ச்சித்
துறையை கவனித்துக்கொள்கிறார். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை
சி.சி.எப். (ஜெனரல்) என்று போட்டதற்குக் காரணம், அந்தத்
துறையின் நிர்வாக சீர்கேடுகளை அல்லது அவர்கள் கவனிக்காமல்
விட்டு விட்ட வியாபாரத்துறை, வருமானத்துறை, வருவாய்த்
துறை—இன்னும் சொல்லப்போனால், இந்த சட்டமன்றத்தில்
ஒரு தகவல் தருவதற்காக ஒரு குறிப்பு வேண்டும், ஒரு விவரம்
வேண்டும் என்று சீப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் என்ற பெய
ரில் இயங்குகிற அந்தத் துறைக்கு அனுப்பினால் 5-6 மாதம் ஆகி,
பிறகு அங்கே கேட்டால் அப்படி ஒரு கடிதம் இங்கே தலைமை
செயலகத்தில் இருந்து வந்து இருக்கிறதா என்பதையே தேடிப்
பார்க்கிற நிலைமைக்குத்தான் அந்தத்துறை இருந்தது என்பதை
நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்த
மாக சில பிரச்னைகள் டில்லி வரை எழுப்பப்பட்டது என்பதையும்
மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவல் தந்து, அவர்கள் இந்த
மன்றத்தில் தெரிவித்ததற்கு நான் பெரிதும் கடமைப்பட்டு இருக்
கிறேன். டெல்லி பேரரசுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரியை ஏன்
போட்டோம் என்பதையும் அவரைப் போட்டதற்குப் பிறகு
கடந்த ஓராண்டு காலத்தில் எடுத்த நடவடிக்கைகள் பற்றியும்
நாங்கள் அறிக்கை அனுப்பிய பிறகு எங்களுடைய ஆட்சிக் காலக்



திலே மட்டுமல்ல ; இடையிலே வந்த ஆளுநர் ஆட்சிக் காலத்தி
லேயும் அனுப்பிய பிறகு டெல்லி பேரரசு அதை ஒத்துக்கொண்டு,
இது மாநில அரசின் முடிவுக்கு விட்டுவிடுகின்ற விவகாரம் என்று
சொல்லி முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. என்றாலும் நான் தெரி
வித்துக் கொள்கிறேன். ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருப்
பது என்பது ஒரு இடைக்கால ஏற்பாடுதான். சில நிர்வாகச்
சீர்திருத்தங்களுக்காக அவரைப் போட்டிருக்கிறதே தவிர, நிரந்
தரமாக அவரை நியமித்து, வனத்துறை அதிகாரிகள் பதவி உயர்வு
பெறுவதைத் தடுப்பதோ, அவர்களுடைய திறமையை குறைத்து
மதிப்பிடும் எண்ணமோ எங்களுக்கு இல்லை. எப்படியோ ஏற்
பட்ட நிர்வாகச் சீர்கேட்டைப் போக்குவதற்காக செய்யப்பட்ட
ஒரு இடைக்கால ஏற்பாடுதானே தவிர, இது ஒரு நிரந்தர
ஏற்பாடு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சந்தன மரத்தை எல்லாம் எங்கோ திருடிக்கொண்டு
போகிறார்கள் ; ஏதோ பெயருக்குத்தான் வைத்திருக்கிறீர்கள்,
வருமானம் குறைந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் துரை
முருகன் அவர்கள் சொன்னார்கள். இங்கே மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்களும் இருக்கிற காரணத்தால் சொல்
கிறேன். நேற்று நிதிநிலை அறிக்கைமீது கருத்துக்களைத் தெரி
வித்தபோது டெல்லி நாடாளுமன்றத்தில் இருக்கிற திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எப்படி இந்த மாநிலத்தினு
டைய தேவைகளுக்காக வாதாடினார்கள் என்ற பட்டியலை
இங்கே தந்தார்கள். நான் அவர்களிடம் பணிவோடு மாநில
அரசின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பட்டியலோடு,
இந்தத் தகவலையும் தருகிறேன் அங்கே வாதாடுவதற்கும்
அமைச்சர்களை சந்தித்து அனுமதி பெறுவதற்கும். அவர்கள்
சந்தன ஏற்றுமதியை தடைசெய்து விட்டார்கள். கடந்த ஆண்
டில், அதற்கு முந்திய ஆண்டில் ஒரு பகுதியை தடை செய்தது
மத்திய அரசு. நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் அவர்கள்
இந்த அரசைப்பற்றி இவ்வளவு சந்தேகம் கொள்ளக்கூடாது.
அதிலும் என்னைப்பற்றி இவ்வளவு சந்தேகம் இருக்கத் தேவை
யில்லை. நாங்கள் சும்மா இருக்க மாட்டோம். முதலமைச்ச
ரும் சும்மா இருக்க மாட்டார் ; எங்களையும் சும்மா இருக்க விட
மாட்டார். அவர்கள் தடை செய்தவுடனேயே அதைப்பற்றி
மத்திய அரசுக்கு ஆட்சேபனை தெரிவித்தோம். மத்திய அரசு
ஒரு மாநில அரசின் ஆட்சேபனையை எந்த அளவுக்கு மதிக்கும்
என்பது, ஏற்றுக்கொள்ளும் என்பது 7 ஆண்டு காலம் முத
லமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்
களுக்குத் நன்கு தெரியும்.

நம்முடைய சந்தன ஏற்றுமதிக்கு ''பார்ஷியல் பான்'' என்று
தெரிவித்த உடனே, இந்த ஓரளவுக்குத் தடை என்பது எங்க
ளுடைய விற்பனையைத் தடுக்கிறது, தமிழக அரசுக்கு வருகின்ற

வன வருவாயில் மிகப்பெரும்அளவுக்கு வருவது இந்தசந்தன ஏற்று
மதியின் மூலம்தான் ; 6 கோடி ரூபாய் அல்லது 7 கோடி ரூபாய்
எங்களுக்கு சந்தன மரத்திலிருந்து கிடைக்கிறது ; அதை
நீங்கள் தடுப்பதன் மூலம் எங்களுடைய வருவாய் பெருமளவில்
குறைகிறது என்று மத்திய அரசுக்கு தெரிவித்தோம். அப்படி
தெரிவித்ததன் விளைவு என்னவென்றால்—ஏதோ சொல்வார்
களே, '' ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் ''
என்று ,அதைப்போல—பார்ஷியல் Ban கூடாது என்று சொன்
னதால் '' டோட்டல் பான் '' என்று தெரிவித்துவிட்டார்கள்.

சந்தன மரத்தை ஏற்றுமதி செயக்கூடாது என்று சொன்ன
தால் சென்ற டிசம்பர் மாதத்தில் நடந்த ஏலத்தில் 60,000
ரூபாய் வரையில் போக வேண்டிய சில பிரிவுகள் 22,000 ரூபாய்க்கு
ஆவரேஜாக விற்க நேர்ந்தது. அதன் மூலம் இரண்டரை அல்
லது மூன்று கோடி ரூபாய் மாநில அரசுக்கு வருவாய் இழப்பு
ஏற்பட்டது. அன்றைக்கும் அதைச் சொன்னோம் ; இன்றைக்
கும் சொல்கிறோம் ; இப்போது கடந்த வாரத்தில் கூட சொல்லி
யிருக்கிறோம். காரணம் வருகின்ற 14 ஆம் தேதிக்கு மேல்
மீண்டும் ஏலம் வைத்திருக்கிறோம். அவர்கள் சொல்கிறார்கள்,
நீங்கள் வெளிநாட்டு ஏற்றுமதி தடையை நீக்கவில்லையென்
றால் நாங்கள் ஏலம் கேட்க வரமாட்டோம் என்று.

மாண்புமிகு துரை முருகன் அவர்கள் வேறு ஒரு கருத்தையும்
சொன்னார்கள். அது உண்மையா, இல்லையா என்று விசாரிக்க
வேண்டுமென்று சொன்னார்கள். நான் அரசின் சார்பிலே பேசு
கிறேன். அதனால் அதற்குள்ளே போக முடியாது. மாண்புமிகு
துரைமுருகன் அவர்கள் சொன்னது உண்மை என்றால் அது
விரைவிலே வெளியே வரும்.

[பிற்பகல் 12.20]

ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை என்றால் நம்முடைய
முதலமைச்சரவர்கள் டெலக்ஸ் செய்தியின் மூலம் நாங்கள்
ஏலத்தை வைத்திருக்கிறோம், இன்றைக்கு மாநிலத்திற்கு நிதி
நெருக்கடி இருக்கின்றது, தேவைகள் இருக்கின்றன, மக்களுக்கான
திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.
ஆகவே, எங்களுடைய பெரும்பகுதியான வருவாயைத் தருகின்ற
சந்தன மர ஏலத்தை மொத்தமாகத் தடுத்து நிறுத்தி விட்டீர்களே
ஏற்றுமதியைத் தடுத்து நிறுத்திவிட்டீர்களே, தயவுசெய்து அதை
உடனே நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்
கள் கடிதமும் எழுதியிருக்கிறார்கள், இந்தியப் பிரதமர் திருமதி
இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு.



மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்
அதைத்தான் நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்
களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், உடனடியாக உங்களுடைய
நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலே சொல்லி அவர்கள் மூல
மாக நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்பி அங்கே
தொடர்பு கொள்ளச் செய்து விரைவிலே இந்தத் தடையை
நீக்கினால்தான் இந்த மாதம் நடைபெறுகின்ற ஏலத்திலேயாவது
இந்த மாநிலத்திற்கு வருவாய் வரும் அளவுக்கு அந்த வருவாயை
நான் அதிகரித்துக் காட்டினால் மாண்புமிகு திரு. துரைமுருகன்
அவர்களுடைய பாராட்டை நான் பெற முடியும் என்பதற்காக
வாவது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தக்
காரியத்தை எனக்காகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இந்த நாட்டுக்காகச் செய்கின்ற பணியோடு எனக்காக
வும் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, எந்த
நடவடிக்கைகளும் எடுக்காமல் இல்லை. இந்த திருட்டுக்களை
எங்கே தடுத்தீர்கள் என்று திரு. துரைமுருகன் அவர்கள் தெரி
வித்தார்கள். நாள் தவறினாலும், செய்திப் பத்திரிகைகளிலே
தேதி போட மறந்தாலும் இந்தச் சந்தன மரத் திருட்டைப்
பற்றி எப்படியெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்
கின்றன என்பதைப் பற்றி அவர்கள் தெரிவித்தார்கள்.
ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களைப் போட்டதாலே இது நடந்
தது என்று கூட நான் கூறவில்லை. அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிற்கு வந்த பிறகு
காடுகள் எப்படிக் காப்பாற்றப்படுகின்றன என்பதற்காக
கணக்குகளைத் தருகிறேன். 1974–75 ஆம் ஆண்டில்
கண்டுபிடிக்கப்பட்ட, பிடிக்கப்பட்ட குற்றங்கள் 307. அதன்
மதிப்பீடு ரூ. 14,92,571·50. 1975–76-ல் 321 குற்றங்கள்.
தொகை 9,15,406 ரூபாய். 1976–77-லே கண்டுபிடிக்கப்பட்ட
குற்றங்கள் 6,48,264. 1977–78-லே அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு
278 குற்றங்கள். அதன் மதிப்புத் தொகை 10,14,421 ரூபாய்.
1978–79-லே ஒன்றுமே செய்யாத அரசு என்று கூறப்பட்ட
அரசு கண்டுபிடித்த குற்றங்கள் 333. அதன் மதிப்புத் தொகை
20,82,437 ரூபாய். 1979–80-லே நாட்டு மக்களுடைய
ஆதரவை இழந்த காரணத்தால் ராஜினாமா செய்ய
வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்ட அந்த ஆண்டில்
462 குற்றங்கள், மதிப்புத் தொகை 34,07,887 ரூபாய்
இந்த வளர்ச்சியை வைத்து, திருட்டைக் கண்டுபிடித்திருக்
கிறீர்கள் என்று நீங்கள் எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது
திருடுகிறவர்கள் வளர்ந்திருக்கிறார்கள் என்று நீங்கள் எடுத்துக்
கொண்டாலும் சரி நான் ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள்
இதைக் குற்றமாக நான் சொல்வதாகக் கொள்ளவேண்டாம்.
இந்தத் திருட்டு அந்தக் காலத்திலேயே நடந்துகொண்டுதான்
இருந்தது. இதைக் கண்டுபிடிக்காமல் விட்டார்களா ? அல்லது

தெரிந்து விட்டார்களா என்ற ஆராய்ச்சியிலே நான் இறங்க
விரும்பவில்லை. ஆனால் திருடுகிறவர்கள் இருக்கிறார்கள்.
இருக்கிறார்கள் என்று இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைத்
துக் கட்சி உறுப்பினர்களும் எடுத்து வைத்திருக்கிறார்கள்.
திருடுகிறவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று யாரும்
சொல்லவில்லை. திருடுகிறவர்கள் சமுதாயக் குற்றவாளிகள்,
கொடுமைக்காரர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள், அதை
நாம் அனைவருமே ஒப்புக்கொண்டிருக்கிறோம். அந்தத்
திருட்டை தடுக்கத்தான் ஃபாரஸ்ட் ப்ரொட்டெக்ஷன் ஸ்கு
வார்ட் என்ற ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
இன்னொன்றும் சொல்கிறேன். இதுவரை சென்னையிலேயே
இந்தத் திருட்டைக் கண்டுபிடிக்கின்ற முயற்சியில் யாரும்
ஈடுபட்டதில்லை. இவர்கள் எல்லாம் திருட்டு சந்தன கட்டை
கள் தர்மபுரியிலே இருந்து போகிறது, திருப்பத்தூரிலே இருந்து
போகிறது, சத்தியமங்கலத்திலே இருந்து போகிறது என்று
எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இதனுடைய தலைமை
நிறுவனமாக இருப்பது சென்னைதான் என்று ஆய்ந்து கண்டு
பிடிக்கப்பட்டதற்குப் பிறகு கவனத்தைச் செலுத்திய பிறகு
தான் இந்தப் பகுதிகளுக்கு சந்தன மரங்கள் கடத்திக்கொண்டு
வரப்பட்டு அவைகள் எல்லாம் கைத்தறித் துணி பார்சலாக
மாற்றப்பட்டு, அந்த சந்தன மரத்தினுடைய வாடை வெளியே
தெரியாமல் இருப்பதற்கு அந்தச் சந்தன மரத்தை உள்ளே
வைத்து அதைச் சுற்றி வைக்கோலைப் போட்டு சுற்றி இங்கே
இரயில்வே ஸ்டேஷனிலே புக் செய்து, லாரிகளிலேயும் புக்
செய்யப்படுகின்ற நிலை இருந்தது தெரிய வந்தது. அதெல்லாம்
கண்டுபிடிக்கப்பட்டது. அதைத்தான் ஒரு வாரத்திற்கு
முன்னாலே $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ளவற்றைக்
கண்டு பிடித்த செய்தியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்த
அளவிற்கு இப்படிப்பட்ட குற்றங்களை கண்டுபிடித்து தண்
டிப்பதற்கு இந்த அரசு தீவிரமாக முனைந்திருக்கிறது என்று
சொல்லிக்கொள்கிற நேரத்தில், கடந்த சட்டமன்ற தொடரில்,
சென்ற ஆண்டு இப்படிப்பட்ட குற்றவாளிகளுக்குக் கடுமையான
தண்டனை தரவேண்டுமென்று ஒரு சட்ட திருத்தம் கொண்டு
வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. நமது மதிப்பிற்குரிய
நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் கூட . . . . .

Thiru K. S. G. HAJA SHAREEF : Sir, on a point of information. I want to know whether the Central Government has put a ban for export of sandal wood as logs or whether they wanted these goods should be converted into various goods and exported so that we can earn more foreign exchange.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இப்பொழுது தடை செய்யப்பட்டிருப்பது லாக்ஸ்
logs). சந்தனக் கட்டைகளை அனுப்பக் கூடாது என்று



சொல்கிறார்கள். சந்தனக் கட்டைகளை மற்ற சிறிய தொழிற்
சாலைகளுக்கு அனுப்புகிறோம். கிராமத் தொழிற்சாலைகள்
பல கதர் வாரியத்திலே இன்றைக்கு இருக்கின்றன. அவைகளுக்கு
வேண்டிய 100 டன்கள் 150 டன்களை, தருகிறோம் என்று
உறுதி கொடுத்துவிட்டோம். ஆனால் சந்தனக் கட்டைகளை
கிடங்குகளிலே சேர்த்து வைக்க முடியாது. ஒரு ஆண்டுக்கு
ஆயிரம் டன்கள் சந்தனக் கட்டைகள் வருவதாக கணக்கிருக்
கிறது. அவைகளை வைப்பதற்கு இடம் கிடையாது. தொழிற்
சாலைகள் அமைத்து அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ளத்
திட்டமிடப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தொழிற்சாலை
கள் உருவாகிற வரையில் இந்த சந்தனக் கட்டைகளை சேர்த்து
வைக்க இயலாது. தொழிற்சாலைகள் ஆரம்பித்து விட்டால்,
இப்போது கிடைக்கும் அளவிற்கு, வருமானம் பின்னாலும் கிடைக்
குமா என்றெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. கட்டைகளை
சேர்த்து வைத்தால் திருடு போவதற்கு ஏதுவாகிறது. ஏன்
வருமானத்தையும் இழந்து கொண்டு, திருடு போகும் அளவில்
சேர்த்து வைக்க வேண்டும் என்று அரசு நினைக்கிறது.

சொன்னால்
இதில் இன்னொரு விஷயம் என்னவென்று போராட்டம்
இதில் நிதித்துறைக்கும் எங்களுக்கும் இடையே ஒரு தொழிற்
நடந்துகொண்டிருந்தது. இதில் அவர்கள் "நீங்கள் போட்டால்
சாலைக்கு 100 டன்னாக கொடுக்க வேண்டும். ஏலம் வைப்பதன்
இன்றைக்கு கிடைக்கிற தொகையைத் தொழிற்சாலை அதற்கு
மூலம் பெற முடியுமா?'' என்றெல்லாம் கேட்கிறார்கள். முக்கிய
நாங்கள், "இதில் எவ்வளவு லாபம் வருகிறது என்பது கொடுக்கிறோம்
மல்ல. எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு துணைத்
என்பதுதான் முக்கியம். இதைத் தொடர்ந்து அனுமதி
தொழில்கள் பெருகும்'' என்று சொல்லித்தான் ஆர்ஜிதம்
பெறப்பெற்று, திருப்பத்தூரின் அருகாமையில் நில தெரிவித்துக்கொள்கிறேன்.
செய்யப்பட்டு விட்டது என்பதையும் மேற்கொள்ளப்பட வேண்டும்
இதற்கான முயற்சிகள் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டி
என்றும் உத்தரவு பிறப்பித்து தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்
டிருக்கிறோம் என்று மரங்களைக் கூட காடுகளில் தானாக
இதற்காக, எடுக்கப்படுகிற டெட் டிரீஸ் என்று சொல்லப்படுகிற வய
விழுந்த மரங்களை, மரங்களைத்தான் எடுக்கிறோம். பச்சை
தான முதிர்ந்த மரங்களை
மரங்களை தொடுவது கூட இல்லை.

அப்படிப்பட்ட சந்தன மரங்களை வெளிநாட்டுக்கு அனுப்
பாமல் இங்கேயே வைத்துக்கொள்ளவும் இடம் இல்லை. வைத்
திருந்தால் திருடுவதற்கும் இடம் ஏற்பட்டு விடுகிறது என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1980 ஜூலை 16

சென்ற தொடரில் இதற்கென்று கடுமையான சட்டத் திருத் தத்தை கொண்டு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் கூட சொன்னார்கள் 'துப்பாக்கிகளையாவது கொடுங்கள்' என்று சொன்னார்கள். துப்பாக்கிகளைக் கொடுப் பதற்கான நடவடிக்கையை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான பயிற்சியையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு ஆலோசனை செய்து வருகிறது. பயிற்சியில்லாமல் துப்பாக்கி மாத்திரம் கொடுத்தால் துப்பாக்கியை பிடுங்கிக் கொண்டு, அடித்து விட்டு ஓடி விடுவார்கள். அதனால் துப்பாக்கி சுடும் பயிற்சியும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப் பட்ட தீவிரமான நடவடிக்கைகளில் அரசு இறங்கியிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நான் இங்கே ஒன்றை சொல்லியாக வேண்டும். இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதிகளுக்கு சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். நான் இதை விரிவாகச் சொல்ல முடியாது. சொன்னால் நீதி மன்ற அதிகார வரம்பிற்குள் தலை யிடுவதாக ஆகிவிடும். ஆனால் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

நாம் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னால் வனத் துறை அதிகாரிகளுக்கே இப்படி திருடுபவர்களின் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் பிடிபட்டவர்களை அடைத் தும் வைக்கலாம் (காம்பவுண்டிங்), 50,000 ரூபாய் வரை அபராத மும் விதிக்கலாம் என்றிருந்தது. ஆனால் அப்படி அபராத போட்டால் கட்டிவிட்டு தப்பித்துக்கொண்டு விடுகிறார்கள் என்ற காரணத்தினாலும், அதிகாரிகள் சரியாக நடைமுறைப் படுத்தவில்லை, ஆகவே திருடு அதிகமாகப் போகிறது என்கிற காரணத்தினாலும் தான் இந்தச் சட்டத் திருத்தத்தையே கொண்டு வந்தோம்.

இந்தச் சட்டந் திருத்தம் என்ன சொல்கிறது என்றால், ஒரு ஆண்டுக்கு சிறைத் தண்டனை குறையாமலும், ரூபாய் மூவாயிரம் அபராதமும் ஆக இரண்டும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

உயிரைப் பணயம் வைத்து இப்படிப்பட்ட திருடுகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. நீங்கள் கூட சென்ற வாரம் பேப்பரில் படித்திருப்பீர்கள். போளூருக்குப் பக்கத்தில் ஒரு வனத் துறைக் காவலர் திருடு செய்தவர்களை விரட்டிக்கொண்டு காரிலே தொங்கிக் கொண்டு போய், அந்த நிகழ்ச்சியில் அடி



1980 ஜூலை 16] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பட்டார் என்று படித்திருப்பீர்கள். இப்படி உயிரைப் பணயம் வைத்து கண்டு பிடிக்கப்படுகிற திருட்டுகள் நீதி மன்றத்தில் போய் நிறுத்தினால் "முதல் தடவையாக குற்றம் செய்தவன்; அதனால் விடுதலை செய்கிறேன்" என்று தீர்ப்பு வருகிறது. நான் ஏதோ அவர்களுடைய உரிமையில் தலையிடுவதாக நினைக்க வேண்டாம். அதற்காகச் சொல்லவில்லை. குற்றவாளி, குற்றவாளி அல்ல என்று தீர்ப்பு கூற அவர்களுக்கு முழு அதிகார மும் இருக்கிறது.

ஆனால் சட்டம் என்ன சொல்கிறது என்றால், குறைந்த பட்சம் 1 வருடம் சிறைத் தண்டனை, 3,000 ரூபாய் அபராதம் என்று இரண்டும் சேர்த்து போடப்பட்டிருக்கிறது. இது அல்லது அது என்றல்ல. இரண்டும் சேர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் நீதிமன்றத்தில் இருக்கிற கருணை உள்ளம் கொண்ட நீதிபதிகள் அவர்களை முதல் தடவை செய்த குற்றம் என்று விட்டு விடுகிறார்கள். உயிரைப் பணயம் வைத்து பிடித்துக் கொண்டு போய் நிறுத்தினால் இப்படி அவர் கள் தப்பிவிடுகிற பல்வேறு பட்டியல்களை நான் வைத்திருக் கிறேன். இதற்கு மேலும் இதன் உள்ளே நுழைந்து நான் சொன்னால், நீதிமன்றத்தின் அலுவல்களுக்குள்ளே நுழைந்த குற்றத்திற்கு ஆளாக நேரிடும்.

[பிற்பகல் 12-30]

டாக்டர். மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்களைக் குற்றவாளி அல்ல என்று சொல்லி விடுதலை செய்தார்களா அல்லது குற்ற வாளிதான், இருந்தாலும் மன்னிக்கிறேன் என்று சொல்லி விடு தலை செய்திருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எனது பேச்சிலேயே இருக்கிறது அது. குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்கிற முழு உரிமை நீதிபதிக்கு உண்டு. அதில் நாம் தலையிட முடியாது. குற்றவாளிதான், ஆனால் முதல் குற்றம் செய்கிறான் என்று விடுதலை செய்தார்கள் என்று என் பேச்சிலேயே நான் தெரிவித் தேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

டாக்டர். மு. கருணாநிதி: இதில் ஆளும் கட்சியினர் கைதட்டு வதற்கு ஒன்றுமில்லை. நீதிமன்றம் என்று சொன்ன காரணத் தினால் நான் விளக்கம் கேட்டுப் பெற்றேன். இதில் நான் ஒன்றும் தவறான விவாதம் செய்துவிட வில்லை. அமைச்சர்

அவர்களும் எனக்கொன்றும் அழைகூவல் விட்டுப் பேசிவிட வில்லை. நீதிமன்றத்தில் குற்றவாளி, முதல் தடவை என்பதற்காக, மன்னிக்கப்பட்டிருக்கிறார் என்ற விவரத்தை இன்னும் துல்லியமாக நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தைப் பெற்றேனே அல்லாமல் வேறு அல்ல.

திரு. எஸ். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். இம்மாதிரியான குற்றத்திற்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்று அரசாங்கச் சார்பில் இருக்கக்கூடிய பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் அல்லது கவர்ன்மெண்ட் வக்கீல்கள் வாதாடினார்களா? அவர்கள் அவர்களது கடமையை சரிவர மேற்கொண்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசுத் தரப்பில் கடுமையாக வாதாடியதற்குப் பிறகுதான்.... (குறுக்கீடு) தயவு செய்து குறுக்கிட வேண்டாம். நான் விளக்கத்தைத் தான் தந்து கொண்டிருக்கிறேன்....

திரு. துரை முருகன் : ஆளுங் கட்சி உறுப்பினர்கள் பட பட என்று தட்டுகிறார்கள். இது முறைதானா? இந்த முறையை நாங்களும் கையாளலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நாம் எல்லோரும் ஒரே பள்ளியில் பயின்றவர்கள்தான். துரை முருகன் பயின்ற பள்ளியில்தான் அவர்களும் பயின்றிருக்கிறார்கள். ஆகவே இதை ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நான் 'ஜோவியலாக' எடுத்துக் கொள்கிறேன். ஆனால் எதற்காக கைதட்டுகிறோம் என்று தெரியாமல் கைதட்டுகிறார்கள்.

(கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதோடு அமைதியாக இருந்திருக்கலாம்.

திரு. துரை முருகன் : ஸ்பீக்கர் என்ற முறையில் நீங்கள் சொல்ல வேண்டும்.

We want a ruling from the chair.

(கூச்சல்—குழப்பம்).





டாக்டர் மு. கருணாநிதி: செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நாட்டுக்கும் நமக்கும் தெரிந்துக் கொள்ளக் கூடிய ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். சந்தன மரத்தைத் திருடியவர்கள் .... (குறுக்கீடு)

செய்தித்துறை அமைச்சர் அவர்கள்
தலைவர் அவர்களே, நாட்டுக்கும் தெரிவிக்கப்பட வேண்டிய
இந்த மன்றத்திற்கும், எடுத்துச் சொன்னார்கள். ஒரு நீதி
ஒரு நல்ல கருத்தை இங்கே என்று குறிப்பிடவில்லை. ஒரு
மன்றத்தில், எந்த நீதிமன்றம் சந்தன மரத் திருடர்கள், எப்படி
நீதிமன்றத்தில் பிடிபட்ட காரணத்தால் விடுவிக்கப்பட்டார்கள்
முதல் குற்றம் என்ற சொன்னார்கள். அது நல்ல
என்ற செய்தியை எடுத்துச் வேண்டுமென்ற நல்ல நோக்
முறையிலே பரப்பப்பட
கத்தோடு தான் மீண்டும் நான் அவரை விளக்கம் கேட்டேன்.
அவரும் விளக்கம் தந்தார். இப்படி விளக்கம் கேட்பதும்,
விளக்கம் தருவதும் மரபு. இவைகளுக்கிடையே எதிர்க் கட்சித்
தலைவர் உடனடியாக மடக்கப்பட்டு விட்டார் என்று கருதிக்
கொண்டு, ஆளுங் கட்சியிலுள்ள அருமை நண்பர்கள் கைதட்டு
வதும், அதைத் தொடர்ந்து இந்த அவையில் அமளி நடைபெறு
கின்ற சூழ்நிலைக்கு ஆளாக்குவதும் முறையானதல்ல. இந்த
அளவோடு எதிர்க் கட்சியிலே உள்ள உறுப்பினர்கள் அமைதியாக
இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆளுங் கட்சி
யிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறுகின்ற அரு
கதையும், தகுதியும், அந்த அளவுக்கு உறுப்பினர்களாகிய உங்
களிடத்தில் கேட்டுக் கொள்ளும் உரிமையும் இல்லையென்ற
காரணத்தினால், நான் அவ்வாறு கேட்டுக் கொள்ள சக்தி
யற்றவன். எனவே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள், தி. மு. க.
உறுப்பினர்கள் எனது பேச்சைக் கேட்டு, அமைதியாக இருக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர்
மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைதியாக இருக்கும்படி கேட்டுக்
அவர்கள் தமது கட்சியினரை உறுப்பினர்கள் அமைதியாக
கொண்டார்கள். பேரவையிலுள்ள கேட்டுக் கொள்கிறேன்.
இருக்க வேண்டுமென்று நானும்

ஒரு 10 நிமிட நேரம் அமளி இருந்தது.
நேற்று சபையில் பத்திரிகையில் வந்துள்ளது. அப்படி வரும்
இந்தச் செய்தி எனக்கு இருந்தது. ஏதோ ஒரு பிரச்சினையில்
என்ற எண்ணம் விடுகிறது. அது இல்லாமல் இருக்க
தினசரி இப்படி வந்து
வேண்டும் என்பது என் அவா.

இன்றைய கூட்டம் அமளி இல்லாமல் இதுவரைக்கும் இருந்
தது. காலையிலிருந்து 16 பேர்கள் பேசினார்கள். ஒரு பிரச்சி
னையும் இல்லை. அமைச்சர் பதில் சொல்லுகின்ற நேரத்தில்,
எதிர்க் கட்சித் தலைவர் விளக்கம் கேட்டார். அமைச்சர்
விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதற்கிடையில் இரண்டு
பக்கங்களிலே இருந்தும் மேசையைத் தட்டுவதும் ஒருவருக்
கொருவர் சபை நடக்கின்ற போது பேச ஆரம்பித்து விடுவதும்
நல்லதல்ல, என்னைப் பார்த்து எல்லோரும் பேச வேண்டும் ;

எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இரண்டு பக்கங்களிலே
உள்ளவர்களுக்கும் பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதில்,
இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று மாறுபாடு இல்லை. எல்லோ
ருக்கும் பொதுவானதுதான். அதோடு இந்தப் பிரச்சினையை
விட்டு விடுங்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்
அவர்கள் தம் பதிலுரையைத் தொடங்கலாம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்.
நீதிமன்றம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த நீதிமன்றம்
என்பதை சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த நீதிமன்றம் என்ற
விளக்கம் எல்லாம் வேண்டாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் தன் கட்சி உறுப்பினர்களுக்கு பரிவோடு ஒரு வேண்டு
கோளை ஆணையாக வைத்து, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு
வேண்டுகோள் வைக்கின்ற உரிமையில்லை என்ற தொனியில்
சொன்னார்கள். இந்த அவை அமைதியாக நடைபெற வேண்டு
மென்பதாலும், மரபைக் காக்க வேண்டுமென்பதாலும், சொல்லு
கிறேன். அதிலே எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது ;
கடமை இருக்கிறது ; உரிமை இருக்கிறது. தாங்களே இரண்டு
தரப்பினருக்கும் சொல்லியிருக்கின்றீர்கள். ஆளும் கட்சி உறுப்
பினர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நான்
இந்த மானியக் கோரிக்கையை இந்த அவையிலே வைத்து,
அதற்கு மொத்த உறுப்பினர்களுடைய அனுமதியைப் பெறு
வதற்குப் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, அவர்கள் எழுப்பு
கின்ற விளக்கத்திற்கு பதில் சொல்ல வேண்டிய கடமை எனக்கு
இருக்கிறது ; அரசுக்கு இருக்கிறது. அதை நான் சொல்லிக்
கொண்டிருக்கிறேன். எழுப்பிய சந்தேகங்களுக்கு பதில் சொல்ல
முடியுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.



[பிற்பகல் 12–40]

அதற்கான தகவல்களை எல்லாம் இங்கே சேகரித்து வைத்துக்
கொண்டும் இருக்கிறேன். ஆகவே, ஆளும் கட்சித் தரப்பில்
இருக்கும் உறுப்பினர்கள் தயவு செய்து உணர்ச்சி வயப்பட
வேண்டாம் என்று கேட்டு, அமைதியாகச் சபை நடந்தது, நடக்
கிறது, நடக்கும் என்ற உறுதியை இந்தச் சபைக்கும் சபைத்
தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் சௌரிராஜன் அவர்கள் அப்பீலைப்
பற்றிக் கேட்டார்கள். வழக்கு மன்றத் தீர்ப்புக்கு மேல் அப்
பீலுக்குப் போகிறோம். அப்பீலுக்கு அப்பீல், அதற்கு மேல்
அப்பீல் என்று போனால் எப்படி இருக்குமென்று எல்லோருக்
கும் தெரியும். கைப்பற்றும் வாகனங்களைக் கூட விடக்கூடாது
என்று கூட சட்டத்தில் போட்டிருக்கிறோம். அதையே கொடுத்து
விடுகிறார்கள். அதற்கு மேலே அதற்குள் நான் நுழைய விரும்ப
வில்லை.

சீர்திருத்தப்பட்ட கடந்த ஓராண்டுக்
இந்த வனத் துறை
காலம், ஒன்றரை ஆண்டுக்காலம் மிகுந்த நடவடிக்கைகள் எடுக்
கப்பட்டு—வனத் துறையில் இருக்கும் எல்லா அதிகாரிகளும்,
ஐ.எப்.எஸ். அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லோரை
யும் சேர்த்துச் சொல்கிறேன்—எல்லோரும் தீவிர கவனத்தோடு
இதிலே பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள்.

கண்மாய் ஓரங்களில் முள் செடி நடுவதைப் பற்றிச் சொல்லு
கிறார்கள். நம்முடைய நாட்டில் விறகுப் பஞ்சம் அதிகரித்து
வருகிறது. விறகுக்காக மலைகளில் மரங்களை வெட்டுகிறோம்.
அதனால் காடுகளில் வளர்க்கப்பட்ட 100 ஆண்டுகள், 75 ஆண்டு
கள், 50 ஆண்டுகள் வளர்க்கப்பட்ட மரங்களை வெட்டுவதால்
புதிய மரங்கள் வைக்கப்பட்டு வளர மீண்டும் 50 ஆண்டுக் காலம்
ஆகும். ஆகவே, சமூகக் காடுகள் என்ற தலைப்பின் கீழ் காடு
கள் வளர்க்கும் திட்டத்தை இந்தியா பூராவும் அமல் நடத்து
கிறார்கள். தமிழகம் அதிலே மிகச் சிறந்த இடத்தைப் பெற்
றிருக்கிறது. ஸ்வீடன் நாட்டிலிருந்து வந்தவர்கள் இதைப்
பார்த்து, பரிசீலித்து, பாராட்டிவிட்டு அவர்கள் நாட்டின்
நிறுவனத்தின் மூலம் இந்தியாவுக்குத் தரும் பெரும் உதவித்
தொகையைத் தமிழகத்திற்குத் தரலாம் என்ற சிபாரிசையும்
சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் கிராமப் பகுதிகளில்,
கிராம மக்களை ஈடுபடுத்தும் சமுதாயக் காடுகளை வளர்க்கும்
திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பணி
வன்புடன் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரப்பர் தோட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நீங்கள் முன்னாலேயே கடந்த வாரத்தில் இரண்டு புகார்களை எழுதி அனுப்பியிருக்கிறீர்கள். அந்தப் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த கிராம்புத் தோட்டம் கவனிப்பாரற்று எவ்வாறு விடப்பட்டது, அது கருகிப் போனதற்கு காரணம் யார் என்ற விசாரணை, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு நடைபெற்றிருக்குமானால் சம்பந்தப்பட்ட அதிகாரி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டை விட ரப்பர் தோட்ட வருமானம் என் குறைந்தது என்று கேட்டார்கள். அதற்கான காரணத்தைக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறோம். மூன்று மாதங்கள் வேலை நிறுத்தம் நடைபெற்ற காரணத்தால் உற்பத்திக் குறைந்தது. வருமானம் குறைந்து விட்டது. அதற்கான காரணத்திற்குள்ளே நுழைய விரும்பவில்லை. ஆகவே, உற்பத்தி குறைந்ததால் வருமானம் குறைந்தது. வசதிகளைச் செய்து தர அரசாங்கம் இப்போது தீவிரமான முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது.

இதுவரை ரப்பர் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்குக் கட்டியுள்ள குடியிருப்புகள் 642 ; தற்போது கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் 512 ; 1980-81-ம் ஆண்டு பிரேரணைப்படி 84 வீடுகள் கட்டப்படவும் வீடுகளுக்கு வேண்டிய மற்ற வசதிகளையும் செய்துக் கொண்டிருக்கிறோம்.

வனத் துறையோடு சேர்ந்து சின்கோனா வருகிற காரணத்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று அரசாங்கம் மிகத் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. அதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அந்தத் துறை வாரியே இல்லையென்று குறிப்பிட்டார்கள். தயவு செய்து அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை அவர்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயும் நம்முடைய மத்திய அரசினுடைய ஒரு தலையீடு வந்ததன் காரணமாகக் கடந்த ஆண்டில் நமக்கு வருமானம் குறைந்தது. இந்தியாவிலேயே மேற்கு வங்கமும், தமிழ் மாநிலமும்தான் சின்கோனாவை வளர்த்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டிலுள்ள அந்தத் துறை 110 ஆண்டுகள் பழமையான துறை. சின்கோனாவை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வேண்டும். கடந்த ஆண்டும் முந்திய ஆண்டும் மத்திய அரசு





சின்கோனா ஏற்றுமதியைக் குறைத்து விட்டது. அதனால் வருமானம் குறைந்தது. அதற்காக மீண்டும் மத்திய அரசோடு வாதாடி, கவனத்திற்குக் கொண்டு வந்ததன் காரணமாக சென்ற ஆண்டு தொடர்ந்து கட்டுப்பாடுகள். இந்த ஆண்டு இன்னும் கொஞ்சம் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். இந்த வருமானத்தை வளர்க்கும் முயற்சியிலே அந்த சின்கோனா துறை மூலம் பல்வேறு மூலிகைகளை உற்பத்தி செய்கிற முயற்சி நடைபெற்று வருகிறது. அது இந்திய நோயைத் தீர்க்க அத்தியாவசியமானதாக இருக்கிறது. நோய்களிலிருந்து உயிரைப் பாதுகாக்க அதிலிருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கான மூலிகைகளை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

இந்த அரசாங்கம் பதவியேற்றதற்குப் பிறகு சின்கோனா துறையிலே இரண்டு முறை அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இருக்கிற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கூலியோடு சமமான ஊதியம் தர வேண்டுமென கோரியிருந்தார்கள். ஆனால் நம்முடைய துறையைப் பொறுத்தவரையிலும் லாபத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, அரசாங்கம் நடத்துகிற துறையாக இருக்கிற காரணத்தால் லாபத்தையே நோக்கமாகக் கொண்டு செயல்பட முடியவில்லை என்பதும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும். என்றாலும் அவர்களுடைய நிலைமையை ஆராய்ந்து தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிலாளர் நல அதிகாரிகள், இந்த சின்கோனா துறை அதிகாரிகள் ஆகிய மூவரும் உட்கார்ந்து பேசி நாம் கடந்த ஆண்டிலே தொழிலாளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி இப்போது, 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் வயது வந்தவர்களுக்கு நாளொன்றுக்கு 50 காசும், இளைஞர்களுக்கு நாள் ஒன்றுக்கு 35 காசும், சிறார்களுக்கு நாள் ஒன்றுக்கு 30 காசும் ஊதிய உயர்வு அளிப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இரண்டாயிரம் தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாகியிருக்கிறார்கள். மற்றத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் என்கின்ற குறையைச் சொன்னார்கள். இந்தத் துறையினுடைய பணி என்பதே எவ்வப்போது தேவைப்படுகிறதோ அவ்வப்போது ஆட்களை அழைத்து செடி நடுவது, செடி பயிரிடுவது, களைஎடுப்பது ஆகிய பணிகளைச் செய்துகொண்டு இருக்கிற துறையாகும். இருந்தாலும் அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து மேலும் 400 தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக்குவது என்கின்ற அந்த முடிவையும் எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த

[illegible] [1980 ஜூலை 10

[illegible] ஏற்படுகிற செலவு [illegible] என்பதை நான் [illegible]

[illegible] கொஞ்சம் [illegible] தக்கது. [illegible] நாட்க [illegible] க்கப்படுகிற [illegible] வேலை [illegible] யாக இருக்க [illegible] தனி [illegible] அர [illegible] சரியல்ல [illegible] ஒப்புக்கொண்டால் [illegible] கொண்டுவர [illegible] இன்றைக்கு [illegible] தொழிலாளர்களுக்கும் [illegible] இந்தத் [illegible] சொல்லாமல் [illegible] கண்டன்ட் [illegible] அதிகப் [illegible] பட்ச போனஸ் [illegible] வேண்டுமென்று கேட் [illegible]

[illegible] தலைவர் அவர் [illegible] அந்தத் தேயி [illegible] யிலேயே [illegible] எங்களுடைய முயற் [illegible] என்பதையும் [illegible] அந்தத் துறை [illegible] கிறேன். அது [illegible] எப்படிக் கொஞ்சம் [illegible] அந்த [illegible] அதைப் [illegible] அடைவதற்கு [illegible]

[illegible] அமைப்புகளிலே [illegible] அந்தப் பிரச்சினை [illegible] அதையும் துறை [illegible] பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு



1980 ஜூலை 10] [திரு. ஆர். எம். வீரப்பன்]

வசதி இல்லாத தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதோடு, இன்னொரு அடிப்படையான சிக்கல் அந்தப் பகுதிகளில் வீடு கட்டுவதற்கு யாரும் முன் வர யாரும் வரமாட்டேன் என்கிறார்கள் அது ஒரு பெரிய சிக்கலாக இருக்கிறது. அதைப்போலவே மருத்துவத் துறையிலேயும், டாக்டர்களை ரப்பர் தோட்டத்திற்கும், சின்கோனா துறைக்கும் போட்டால் போகமாட்டேன் என்று சொல்கிறார்கள். ரப்பர் தோட்டம், சின்கோனா துறையிடம் நான் சொல்லியிருக்கிறேன், அரசாங்கத்திடம் விதிவிலக்குப் பெற்று எங்கள் ரப்பர் தோட்டத்திற்கு ஒரு டாக்டர் வேண்டும், எங்கள் சின்கோனா துறைக்கு ஒரு டாக்டர் வேண்டும் என்று விளம்பரப்படுத்தினால், எத்தனையோ பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்கள் வருவார்கள்.

[பிற்பகல் 12-50]

நான்காயிரம் தொழிலாளர்கள் மலையிலே வேலை செய்கிறார்கள். அந்த இடத்திலே போய்ப் போட்டால் ஒரு டாக்டர் வர மறுக்கிறார். இருக்க மாட்டேன் என்கிறார். இதுதான் சிக்கல். அரசாங்கத்திலே நான் விதிவிலக்கு பெற வேண்டுமென்று வனத்துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்படி ரப்பர் பிளான்டேஷன், அல்லது சின்கோனா, இதுபோன்ற மலைவாசஸ்தலங்களில் அந்தத் துறைக்கென்று வேண்டுகோள் விட்டு — வேலையற்ற எத்தனையோ டாக்டர்கள் இருக்கிறார்கள் — அவர்கள் அங்கே வருவார்கள், அவர்களை வேலைக்கு நியமித்து அந்த வைத்திய வசதிகளைச் செய்கின்ற முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக, அறநிலையத் துறையைப்பற்றி சொன்னார்கள். அதில் மாண்புமிகு திரு. துரை முருகன் அவர்கள் இந்த அறநிலையத் துறை அவர்கள் ஆட்சியிலே எப்படியெல்லாம் சீர்திருத்தப்பட்டது என்பதையெல்லாம் தொடர்ந்து சொல்லி, இப்பொழுது ஒரு இரண்டரை ஆண்டுக் காலத்தில் இதில் ஒன்றுமே நடைபெறவில்லை; அப்படியே தேங்கிக் கிடக்கிறது, நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டது என்றும் சொன்னார்கள். அவர்கள் அடிக்கடி கோயிலுக்குப் போகாதவர்கள்; அதனாலே கோயில்களில் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே என்ன நடந்தது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றுதான் நான் எடுத்துக்கொள்கிறேனே தவிர, அவர் தெரிந்து குற்றம் சாட்ட வேண்டுமென்ற உணர்வில் குற்றம் சாட்டவில்லை. காரணம், அவரெல்லாம் கோயிலுக்குப் போகாதவர்; நாங்களெல்லாம் ஒரே பரம்பரையிலே வந்தவர்கள்தான். அதனாலே

கோயிலுக்குள்ளே இந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே என்ன நடைபெறுகிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. தயவு செய்து போயாவது தெரிந்து கொள்ளலாம். அங்கே கடவுளைக் கும்பிடப் போகவில்லையானாலும் அங்கே இருக்கின்ற சிற்பங்களைப் பார்வையிடுகின்ற முறையிலேயாவது போகலாம்; அப்படியில்லையானால் தெரிந்தவர்கள் போய் வருகின்றவர்களிடத்திலேயாவது அவர்கள் கேட்கலாம். இரண்டரை ஆண்டுக் காலத்திலே இந்த அறநிலையத்துறை எந்த அளவிற்குச் சீர் படுத்தப்பட்டு வருகிறது என்பதை இன்றைக்குத் தமிழ் மாநிலம் முழுவதும் உள்ள பக்தர்கள், ஆஸ்தீகநண்பர்கள், பெரியவர்கள் பாராட்டுகிறார்கள் என்பதையெல்லாம் நான் சொன்னால் அது தற்பெருமையாகலாம்; இந்த அரசுக்கு நாங்களே சூட்டிக்கொள்கின்ற புகழாரமாகலாம். ஆனால் மாண்புமிகு திரு. துரை முருகன் போன்றவர்கள் நன்றாக விசாரித்து விட்டுச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு என்ன? அதாவது, எல்லா வகுப்பினர்களையும் அந்தக் கருவறைக்குள்ளே சென்று குருக்களாக அல்லது பூசாரிகளாக வைப்பதற்கு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதில் உச்ச நீதிமன்றத்திலே என்ன தடைசெய்தார்கள் என்று கேட்டிருக்கிறாகள். அது முன்னாலேயே பல முறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், நீங்கள் ஜாதி வித்தியாசமில்லாமல் வைக்கலாம்; ஆனால் சில ஆகம விதிகளெல்லாம் இருக்கின்றன, முறைகள் இருக்கின்றன, அந்த முறைகளைக் கற்றுத் தேர்ந்தவர்களை, தெரிந்தவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்கின்ற ஒரு அடிப்படையிலே தந்திருக்கிறார்கள் என்பதுதான் மேலோட்டமாக நான் தெரிந்து கொண்டிருக்கின்ற கருத்து. அதனாலேதான் அது சம்பந்தப்பட்ட ஆஸ்தீகப் பெரியவர்களை, அதுபற்றிய விவரங்களைத் தெரிந்தவர்களை ஒரு குழுவாக அமைத்து, தயவு செய்து இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு நீங்கள் ஒரு வழியைக் கற்றுத் தாருங்கள், எங்களுக்குத் தேடித் தாருங்கள், அந்த ஆகம விதிகள் மாறாமல், முரண்படாமல் எப்படி ஒரு சட்டத்தை இயற்றுவது? அந்த ஆகம விதிகள் என்ன, அது எப்படிக் கட்டுப்படுத்தும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். இதுதான் அதற்கான விளக்கம்.

இந்தக் கருணை இல்லங்கள், அன்பு இல்லங்கள், அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. அன்பு இல்லங்கள் மீதும் அவர்களுக்கு அவ்வளவு பெரிய கோபம் வர வேண்டாம். கருணை இல்லங்களிலிருந்து மாற்றியிருக்கிறார்கள். என்றெல்லாம் சொல்ல வேண்டாம். அதைச் சொல்லுகிற பொழுது அன்புக்கு நாம் ஏன் இடம் அளிக்கவில்லையா என்று நான் கேட்கத் தேவையில்லை.



ஆனால், அறங்காவலர்களை ஏன் நியமிக்கவில்லை என்று கேட்டார்கள். 25,000 கோயில்களுக்கு அறங்காவலர்கள் இருந்தார்கள். அதை ஒரு ஆணையின் மூலம் கலைத்தாகிவிட்டது. ஒரு குண்டைப் போட்டால் அழித்து விடலாம்; ஆனால் உருவாக்குவது அவ்வளவு சுலபத்திலே முடியாது. ஒரு ஆணையின் மூலம் 25,000 கோயில்களின் அறங்காவலர்களை நீக்கினார்கள். அதற்கு மீண்டும் போடுவது என்பது சுலபம் அல்ல. அதில் குறையெல்லாம் வரக்கூடாது என்று பார்த்துப் போடுவதற்காகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். இடையிலே வந்த மூன்று மாத ஆட்சியிலே அதையும் நிறுத்தி வைத்தார்கள். ஆதலால் தவக்கப்பட்டு விட்டது. அதனாலே இப்பொழுது ஓராண்டு நீட்டியிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால், ஆஸ்திகர்களை, நம்பிக்கை உள்ளவர்களைப் போடுங்கள் என்று பாபநாசத்தைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றிரண்டு விவரங்களைத் தருகிறேன். கோயம்புத்துருக்கு அருகிலே இருக்கின்ற மருதமலைக் கோயிலினுடைய அறங்காவலர் குழுத் தலைவர், பழுத்த காங்கிரஸ்வாதியான திருப்பூர் பழனிச்சாமி கவுண்டர்; இராமேஸ்வரம் கோயிலினுடைய அறங்காவலர் குழுத் தலைவர் ஒரு அம்மையார், இராமநாதபுரம் மன்னருடைய துணைவியார் அவர்கள்; பழனி கோயிலினுடைய அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் ராதா தியாகராஜன் அவர்கள்; மதுரையினுடைய அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் என்று ஒரு கட்சி சார்பற்றவர்; அதைப்போலவே ஸ்ரீரங்கத்திலே கட்சி சார்பற்றவர். இப்படி பெரிய கோயில்களுக்கு, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாங்கள் கட்சி வித்தியாசம் பார்க்காமல் காங்கிரஸ்காரர்கள் என்று தெரிந்தும்கூட பல இடங்களிலே போட்டிருக்கிறோம். ஆகவே, இந்த அரசாங்கத்திற்கு, இதிலே எந்தக் கட்சிக் காரரைப் போடுவது என்பது அல்ல, யாரைப் போடுவது என்பதுதான். அதிலே, நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்னதைப் போல்..........

திரு. உ. சுப்பிரமணியன்: காங்கிரஸ்காரர்கள் என்று தெரிந்து கூட போட்டிருக்கிறோம் என்றால், நாங்கள் என்ன தள்ளுபடியா? அல்லது ஒதுக்கப்பட்டவர்களா? அல்லது சட்டபூர்வமாக நீக்கப்பட்டவர்களா என்பதை விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: நான் சொன்னது, ஆளுகிற கட்சிக்காரர்களையே போடுகிறீர்கள் என்று சொன்னீர்களே, அப்படியானால் ஆளுகிற கட்சிக்காரர்கள் ஒதுக்கப்பட்டவர்களா என்று நான் கேட்கவில்லை. காங்கிரஸ்காரர்

கள் என்றால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் என்று பொருளே
தவிர, வேறல்ல. அதனாலே சொன்னேன். வேறு பொருள்
அல்ல, தயவுசெய்து அப்படி எடுத்துக்கொள்ள வேண்டா
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இன்றைக்கு இருக்கிற அறநிலைய பிரச்னைகள்,
இந்தக் கோயில் நிலங்களைப் பற்றிய பிரச்னைகள் எல்லாம்
பெரிய தலைவலியாக இருக்கின்றன. ஏறக்குறைய ரூ. 25
கோடிவரை பாக்கி வந்துவிட்டது. 75-25 என்ற சட்டமும்
குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டமும், இந்தக் குத்தகைக்
கொடுக்கப்பட வேண்டாமென்று கட்டுப்படுத்துகிற சட்டங்கள்
எல்லாம் வந்ததற்குப் பிறகு, இன்னும் பாதிக்கப்பட்டிருக்கிறது.
இதையெல்லாம் எப்படிக் காப்பாற்றுவது? அறநிலையத்
துறையைக் காப்பாற்றுவதோடு, 80,000, 90,000 குடும்பங்
களுக்குச் சம்பளம் கொடுப்பது என்கிற பிரச்சினையெல்லாம்
பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அதை அரசாங்கம்
தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு நிலச்சீர்திருத்தத்தை அடிப்படையாக வைத்து, இந்த
அறக்கட்டளைகளையும் காப்பாற்றி, நிலச்சீர்திருத்தத்தையும்
இணைக்க முடியுமா என்றெல்லாம் அரசு பரிசீலனை செய்து
கொண்டிருக்கிறது. ஒரு நல்ல முடிவை விரைவிலே எடுத்து
இந்த மன்றத்திற்கு அறிவிப்போம் என்பதையும் சொல்லி,
அறக் கட்டளைகள், அறத் துறைகள் இவைகள் எல்லாம் மிகத்
தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. இந்த ஆலயச் சொத்துக்
களை சூறையாடுகிறார்கள், திருடுகிறார்கள் என்றெல்லாம்
சொன்னார்கள். அவைகளையெல்லாம் தடுப்பதற்கு வேண்டிய
முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன; நிர்வாகத்திலே சீர்
திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கே மாண்புமிகு
உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய எல்லாக் குறிப்புகளையும்,
அந்தக் குறைகள், ஆலோசனைகள் எல்லாவற்றையும் இந்த
அரசு ஏற்று, பரிசீலிக்கும். இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரி
கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். அவர்களும்
உங்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டிருக்கிறார்கள்.
அவர்களெல்லாம் அதைக் குறித்துக்கொண்டு மேல் நடவடிக்கை
எடுக்க தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்று நான்
சொல்கிறபொழுது, இங்கே திருவேற்காட்டிலே குடிநீர்
திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்
கொள்ளப்பட்டு விட்டன என்பதையும், கோயம்புத்தூருக்கு
அருகாமையிலே உள்ள மருதமலையில் சுமார் ரூ. 3 இலட்சம்
செலவிடப்பட்டு, உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்ட முடிவு
செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே எடுத்துக்கூறி,



நேரம் அதிகம் ஆகிவிட்ட காரணத்தினாலே, இங்கே நான்
ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியாக பதில் அளிக்க
வில்லையென்று கருதவேண்டாம். அத்தனையும் குறித்துக்
கொண்டிருக்கிறேன்; தக்க நடவடிக்கைகளை எடுத்துக்
கொள்வேன் என்பதைக் கூறி, இந்த வெட்டுத் தீர்மானங்
களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியங்களை
நிறைவேற்றித் தருமாறு வேண்டி அமர்கிறேன், வணக்கம்.

**திரு எல். இளையபெருமாள்** : சபாநாயகர் அவர்களே,
வன இலாகாவின் கொள்கை அறிக்கையின் ஆங்கிலப் புத்தகத்
தின் 3 ஆவது பக்கத்தில், 'வாட்டில் பிளான்டேஷன்' என்னும்
ஒருவகை மரத்தை, எரிபொருளாக உபயோகப்படுத்தியதைப்
பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாட்டில் பிளான்டேஷன்
என்ற மரமானது, தோல் பதனிடுவதற்கு மிக முக்கியமான
பொருள். அதை எரிபொருளாக உபயோகிப்பது சரியா? ஏன்
வேறு மரத்தை உபயோகிக்காமல், இவ்வளவு நல்லதொரு
மரத்தை, பட்டைக் கொடுக்கின்ற மரத்தை, எரி பொருளாக
உபயோகிக்கிறார்கள். இப்படி துறை உபயோகிப்பது சரியா?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, 'இந்த வாட்டில்' மரம் மிலாறு மரம் என்று
தமிழிலே சொல்கிறார்கள். அதனுடைய பட்டைதான்
தோலைப் பதனிடுவதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது.
அந்தப் பட்டையை எடுத்ததற்குப் பிறகு, அந்த மரத்தை
நாம் சில ரேயான் தொழிற்சாலைகளுக்கு காகிதத் தொழிற்
சாலைகளுக்குக் கொடுக்கிறோம். அவர்கள் எடுக்கவில்லை
யென்று வருகிறபொழுதும், விறகு தேவை வருகிறபொழுதும்
அதைப் பயன்படுத்துகிறோம்.

**திரு அ. ரகுமான்கான்** : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கோயில்களிலே இருக்கக்கூடிய நிர்வாக அலுவலகங்
களில், தமிழ் படித்த புலவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு
தரப்படும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்து
அதைப் போலவே, அந்தக் கருத்தை நம்முடைய அறநிலையத்
துறை அமைச்சர் அவர்களும் அங்கீகரித்து, பல பேர்களிட
மிருந்து மனுக்கள் எல்லாம் பெறப்பட்டன. அது நீண்டகால
வாக்குறுதியாக இருக்கிறது. அதை விரைவில் அமல் நடத்து
வீர்களா? அல்லது அது செத்துப்போன வாக்குறுதியாகவே
இருக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே
மிழ்படித்த புலவர்களை பகுதி நேர பணியாளர்களாக ஆலயங்
ளிலே சேர்க்கின்ற திட்டம் அமல் படுத்தப்படுகிறது. இது
காள்கைக் குறிப்பிலேயும் இருக்கிறது. நிதிநிலையை ஒட்டி
து மேலும் விரைவாக தீவிரமாக விரிவு படுத்தப்படும்.
திகாரிகளாக எடுப்பது குறித்து சில விதிகள் இருக்கின்றன.
மிழ்ப் புலவர்களை நேரடியாக இ. ஒ. க்களாக எடுக்க
டியாது.

(திரு. ரகுமான்கான் எழுந்து நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான்
ங்கள் தனியாகக் கேள்வி போடவேண்டும். திரு சுந்தரம்
ங்கள் பேசுங்கள்.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலே
ந்தன ஆயில் ஆலை ஏற்படுத்துவதற்காக, அமைச்சர் அவர்கள்
கூறும்போது நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னார்
கள். அந்த நிலம் தனியாருடைய நிலமா, அல்லது அரசாங்கத்
தின் நிலமா? அந்த நிலம் எங்கே உள்ளது என்பதை மாண்பு
மிகு அமைச்சர் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது
என்கிற தகவல் என்னிடத்திலே இருக்கிறது. அது யாருடைய
நிலம் என்பதைப் பற்றி விவரம் தேவையானால், சேகரித்து
அந்த உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே,
அறநிலையத் துறையினுடைய கோவில்களில் இருக்கக்கூடிய
மடங்களுக்கு நிலங்கள் 5 லட்சம் ஏக்கர் இருக்கின்றன. அவை
களிலே இருக்கக்கூடிய பாக்கிகளைப் பற்றிச் சொன்னார்கள்.
இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் மற்ற நிலப்பிரபுக்
களிடம் பணி புரியக் கூடிய விவசாயிகளைப் போன்றவர்கள்தான்.

ஆகவே நாம் சமீபத்திலே நிறைவேற்றிய அத்தனை சட்டங்
களையும் அவர்களுக்கும் பொருந்தும்படியாகத்தான் ஏற்பாடு
செய்திருக்கிறோம். குத்தகையைக் குறைப்பது என்கிறபோது
மற்றவர்கள் குறைப்பதைப் போலத்தான் நாம் அங்கேயும் குறைத்
திருக்கிகிறோம். ஆகவே இந்த நிலங்களுக்கு அரசாங்கத்திலே
இருந்து அந்தக் கோவிலுக்கு மானியம் கொடுப்பதைப் போல, சில
மாநிலங்களில்—கேரளா போன்ற மாலநிலங்களில் நிலங்களை



விவசாயிகளுக்கே ஒப்படை செய்துவிட்டு அதிலே இருந்து கிடைக்
கக் கூடிய வருமானத்திலே இருந்து 'டாஸ்பிக் அலவன்ஸ்' என்று,
வருடா வருடம் கொடுத்து வருகிறார்கள். ஆகவே அந்த
ஏற்பாட்டைச் செய்தால்தான் அந்த நிலங்களுக்கு, உழுகின்ற
உழவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக் கூடாது என்ற
அந்த அடிப்படையில்தான் அந்த மாற்றங்கள் செய்யப்பட வேண்
டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு
அரசாங்கத்தின் சார்பில் ஏற்றுக்கொள்வாரா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
இந்தக் கோவில் நிலங்கள் என்பது, அதிலே கை வைக்கிறபோது
அது மிகப்பெரிய சிக்கலான பிரச்சினையாக, தீர்க்க முடியாத
பிரச்சினையாக, பல பேர் முயன்று பார்த்து கைவிட்ட பிரச்சினை
யாக இருக்கிறது. அது பல ஆண்டுகளாக அனுபவம் பெற்றவர்
கள் எல்லாம் நுழைந்து, வெளியே வர முடியாமல், திக்குமுக்காடி
அதிலிருந்து வெளியே வந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த 3
நாட்களாக அதைப் பற்றித்தான் தீவிரமாக பரிசீலித்து, பழைய
கோப்புகளை எல்லாம் பார்த்து முன்னாள் முதல்வர் பெரியவர்
பக்தவச்சலம் அவர்கள், இங்குள்ள மாண்புமிகு எதிர்கட்சித்
தலைவர் அவர்கள் இருந்த காலத்திலே எல்லாம்
என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, என்னென்ன
யோசனைகள் வழங்கப்பட்டன என்பதை எல்லாம் விரிவாகப்
பரிசீலித்து இருக்கிறோம். எப்படியாவது எந்த முடிவுகள்
எடுத்தாலும்— ஆனால் ஒன்றை மனதிலே வைத்துக் கொள்ள
வேண்டும்— இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அறக்கட்டளை
என்ற பெயராலே, அறநிலையங்கள் பெயராலே இத்தனை லட்சம்
ஏக்கர் நிலங்கள் இல்லை. ஆகவேதான் கேரளாவிலும் அல்லது
வேறு எந்த மாநிலத்திலும், இந்தப் பிரச்சினையை சுலபத்திலே
தீர்த்து இருக்கிறார்கள். இங்கே தமிழ் மாநிலத்திலே ஏறத்தாழ
6 லட்சம், 7 லட்சம் ஏக்கர் நஞ்சை, புஞ்சையாக இருக்கின்றன
என்றால் அதிலே 5 25 லட்சம் ஏக்கர் அறக்கட்டளைக்கு அற
நிலையங்களுக்கு சொந்தமாக இருக்கின்றன. ஆகவே இதிலே
எடுக்கின்ற எந்த முடிவும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பாது
காக்கப்பட்டு வருகின்ற அந்த உணர்வுகளை 'செண்டிமெண்ட்'
நம்பி ஒப்படைத்திருக்கிறார்களே அந்த நம்பிக்கைக்கு ஊறு
நேரா வண்ணம் முடிவுகளை எடுக்கவேண்டும். அதே நேரத்தில்
உழைக்கின்ற விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் உழைக்கின்ற
வர்கள் ஆகிய அனைவருக்கும் நல்ல பயன் கிடைக்கவேண்டும்.
அதே நேரத்தில் அரசாங்கத்திற்கும் ஒன்றும் இழப்பு ஏற்படக்
கூடாது. நிதி ஆதாரங்களை எல்லாம் கருத்திலே கொண்டு
விரைவிலே அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று
அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கொடைக்
கானல் மலையில் ஜெரேனியம் என்ற விலை உயர்ந்த எஸ்ஸென்ஸ்
எடுக்கக்கூடிய பயிர் 54 ஹெக்டேர் மட்டும்தான் உற்பத்தி
ஆகின்றது. இது 10 ஆண்டுக்கு முன்னதாகவே பரிசோதனை
செய்யப்பட்டு வெற்றிகரமாக இருக்கிறது என்று அறிந்தும் கூட
இன்னும் அதிகமான பரப்பளவில் ஏன் பயிர் செய்யப்படவில்லை
என்பதற்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
இதிலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். கடந்த 2 ஆண்டு
காலத்திலேதான் இவைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது ஆரம்பக் கட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சேலம் ஆறுமுகம்
அவர்கள் [illegible] செய்தித் துறையிலே ஏற்கனவே......
என்பதில் இருந்து, திரு. எல். இளையபெருமாள் குறுக்கிட்டு,
பின்னர் திரு. சேலம் ஆறுமுகம் அவர்கள் பேசியதில் "தெளி
வாகத் தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்"
என்பது வரை அவைக் குறிப்பில் இருந்து நீக்கி விட......

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த முழு
கருத்துக் கோவையும் எடுத்து விடாமல், அதிலே இன்னின்ன
சொற்கள் நீக்கப்பெறுகின்றன என்று சொன்னால் நல்லது.
இங்கே திரு. சேலம் ஆறுமுகம் அவர்களால் எழுப்பப்பட்ட
பிரச்னை, சொல்லப்பட்ட கருத்து சரியா, தவறா என்பதில்
நான் நுழைய விரும்பவில்லை. ஒரேயடியாக அந்த விவாதத்
தையே எடுத்து விடுவது என்று சொன்னால், இப்படிப்பட்ட
பிரச்னை அவையில் எழுப்ப முடியாமல் போய்விடும். ஆகவே,
அந்த விவாதத்தில் குறிப்பிட்ட சில வார்த்தைகளை மட்டும்
நீக்குவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விவாதத்தில் ஒரு
இடத்தில் தான் தனிப்பட்ட ஒருவரது பெயர் வருகிறது. மற்ற
இடங்களில் அவரைப் பற்றிய குணாதிசயங்கள் வருகின்றன.
ஆகவே, அதுவும் அவரைச் சாரும் என்பதால் முழுமையும் எடுத்து
விடலாம் என நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையின்
தொடர்பாக இந்தப் பிரச்னை வந்துள்ள காரணத்தால் என்
னுடைய கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது போல் அஞ்ச வேண்டிய
தில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமை எந்தக்



காலத்திலும் எந்த நேரத்திலும் இருக்கும். ஆகவே, இந்த
விவாதத்தில் சில வார்த்தைகளை மட்டும் நீக்குவது தான் அதற்கு
உதவியாக இருக்கும் என்று கருதத் தேவையில்லை. இப்போது
முழுவதும் நீக்கப்பெறலாம் என்பதற்குக் காரணமே, ஒரு இடத்
தில் இருந்து அது ஆரம்பித்து, அதன் தொடர்பாக பல்வேறு
பிரச்னைகள் வந்து விட்டன. அதற்கு நானும் பதில் அளித்து
இருக்கிறேன். முறையாகத்தான் நியமிக்கப்பட்டார், எந்த
உரிமையும் மீறப்படவில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே,
அப்பிரச்சனை தொடர்பாக உள்ள முழுவதையும் நீக்கினால்தான்
சரியாக இருக்கும்.

ஒரு நியமனம் பற்றி குறைகூறவோ
டாக்டர் மு. கருணாநிதி: இருக்கிற உறுப்பினர்களுக்கு நிச்சய
பாராட்டவோ அவையில் [illegible] உரிமையைப் பயன்
மாக உரிமை [illegible] கருத்துக்கள் சரியாக இல்லை
படுத்துகிறபோது வாசகங்கள், நீக்கிவிடுவது நல்லது. அப்படி
யென்றால் அவற்றை மட்டும் அமைச்சர் விளக்கம் அளித்
அல்லாமல் உறுப்பினர்கள் பேசியது, இருந்து நீக்கிவிடுவது
தது அத்தனையும் அறவே அவைக் குறிப்பில் குறிப்பிட்ட சொற்
என்பது முறை இல்லாதது. எனவே, சில
களை மட்டும் நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் கவனத்
மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரும்புகிறேன். "செய்தித்
திற்கு ஒன்று நான் கொண்டு வர ஒருவர் தூக்கி எறியப்பட்டு மற்
துறையில் ஏற்கனவே இருந்த இருக்கிறார். அகில இந்திய
றொருவர் நியமிக்கப்பட்டு பணியாற்றி விட்டு.........'
ரேடியோவில் 58 வயது வரை பகுதியில் கூறிவிட்டு, பின்னர்
என்பதாக விவாதத்தின் முன் அவரைப் பற்றிய பின்னணி
பெயர் குறிப்பிட்டிருக்கிறார். கடைசியில் தான் பெயரைக் குறிப்
முன்னால் வந்து விட்டது.
பிடுகிறார்.

அங்கே சொல்லப்பட்டு இருக்கிற
டாக்டர் மு. கருணாநிதி : வரை அகில இந்திய ரேடியோவில்
கருத்துக்கள்—58 ஆண்டுகள் என்பன எல்லாம் எனக்கு ஏற்புடை
பணியாற்றியவர்........ வகையில் ஒரு உறுப்பினர் பேசு
யன அல்ல. ஆனால் அந்த அதைத்தான் நான் சொல்ல
வதற்கு உரிமை இருக்கிறது.
விரும்புகிறேன்.

முன் பகுதியில் அவரைப்
மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னர்தான் பெயர்
பற்றி எல்லாம் சொல்லிவிட்டார்.
வருகிறது.

[1980 ஜூலை 10

டாக்டர் மு. கருணாநிதி: அவர் பெயரை மட்டும் எடுத்துவிட வேண்டும் என்று சொல்லி நான் வாதாடுவது ஆளும் கட்சி உறுப்பினருக்காகத்தான். திரு. சேலம் ஆறுமுகம் அவர்கள் தான் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து சொல்லப்பட்ட பெயர்களை நீக்கி விடலாம். உங்களுடைய உதவிக்காகச் சொல்கிறேன். " * * * * " நீக்கி விடுங்கள். " * * * " பெயரை நீக்கி விடுங்கள். ஆனால் சொல்லப்பட்ட கருத்தை நீக்கிவிட்டால், மறுபடியும் தொடர்ந்து இது மரபாக ஆகி, இதுவே முன் மாதிரியாக ஆகி, மற்ற உறுப்பினர்கள் அப்படிப் பட்ட கருத்தைப் பேச முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். திரு. சேலம் ஆறுமுகம் சொன்ன கருத்தை நான் ஆதரிக்கிறேனா என்றால், அது வேறு விவகாரம்.

திரு. எல். இளையபெருமாள்: கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதி மொழியை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், இந்த அவையிலே பலருடைய பெயர்கள் சில வேளைகளில் குறிப் பிடப்பட்டு இருக்கிறது. ஆனால், தனிப்பட்ட குறிப்பாக ஒரு இனத்தைப்பற்றி சொல்லிய வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்குவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது. மத்திய அரசாங்கமாக இருந்தாலும்சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி, தகுதி படைத்த ஒருவர், அவர் ரிடையர் ஆகி யிருந்தாலும், மறுபடியும் அவரை வேலையில் அமர்த்தலாம். அது தவறு இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். நமக்கும் தெரியும். அதை அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டு இருக் கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மிக சுற்றிவளைத்துச் சொல்லி, விவாதம் எழுப்புவதனால் அவரை எடுப்பதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

[பிற்பகல் 1–10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது திரு. இளையபெருமாள் அவர்கள் குறுக்கிட்டு, " உறுப்பினர் சொல்வது நியாயமாக இருந்தாலும் " என்று சொன்னதற்கு பிறகு உள்ள பகுதி முதல் திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் " நான் தெரிவித்துக்கொள்கிறேன் " என்று குறிப்பிட்டதற்கு முன் உள்ள பகுதிவரையில் அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.



1980 ஜூலை 10]

## கோரிக்கை எண். 12.

திருவாளர்கள் சு. பாலன், ந. சிவஞானம், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள் ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—" மானியக் கோரிக்கை எண். 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,78,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## கோரிக்கை எண். 25.

திருவாளர்கள் சு. பாலன், கு. ரமணி, எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள் ளப்பெற்றதாக கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி " மானியக்கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,77,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## கோரிக்கை எண். 45.

திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், டி. மணி, பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 45—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 6,37,07,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## கோரிக்கை எண். 47.

திரு. கு. ரமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,88,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.



## கோரிக்கை எண் 54.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண். 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 8,48,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

## (1) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுப்படி பேரவையின் அலுவல்கள் பற்றிய விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 11-7-1980 முதல் 15-7-1980 வரை. | | ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி அலுவல்கள் நடைபெறும். |
| 16-7-1980 (புதன் கிழமை). | 20 | வேளாண்மை. |
| | 48 | வேளாண்மை குறித்த மூலதனச்செலவு. |
| 17-7-1980 (வியாழக் கிழமை). | 26 | கைத்தறியும் நெசவுத் தொழிலும். |
| | 27 | கதர். |

அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளல்.

| | | |
|---|---|---|
| 18–7–1980 (வெள்ளிக் கிழமை). | 18 | மருத்துவம். |
| | 19 | பொதுச் சுகாதாரம். |
| 19–7–1980 (சனிக் கிழமை). | 24 | தொழில்கள். |
| | 49 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| | 6 | பத்திரப் பதிவு. |
| | 10 | பால் வழங்கு திட்டங்கள். |
| 20–7–1980 (ஞாயிற்றுக் கிழமை) | | விடுமுறை. |
| 21–7–1980 (திங்கட் கிழமை). | 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. |
| | 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி. |
| | 39 | சாலைகளும் பாலங்களும். |
| | 52 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 22–7–1980 (செவ்வாய்க் கிழமை). | 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். |
| | 11 | மாவட்ட நிர்வாகம். |
| | 15 | காவல்துறை. |
| | 16 | தீயணைப்புப் பணிகள். |
| | 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள். |
| | 38 | பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும். |



| | | |
|---|---|---|
| 22–7 1980 (செவ்வாய்க் கிழமை)—தொடர்ச்சி | 51 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள்—குறித்த மூலதனச் செலவு. |
| 23–7–1980 (புதன் கிழமை). | 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம். |
| | 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து. |
| | 53 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 24–7–1980 (வியாழக் கிழமை). | 36 | பாசனம். |
| | 50 | பாசனம் குறித்த மூலதனச் செலவு. |
| 25–7–1980 (வெள்ளிக் கிழமை). | 31 | பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன். |
| | 44 | எழுதுபொருள், அச்சுத் துறை. |
| 26–7–1980 (சனிக் கிழமை). | 22 | கால்நடை வளர்ப்பு. |
| | 30 | சமூக நலன். |
| 27–7–1980 (ஞாயிற்றுக் கிழமை). | | விடுமுறை. |
| 28–7–1980 (திங்கட் கிழமை). | 21 | மீனளம். |
| | 35 | நுகர்ப் பொருள் வழங்கல். |
| | | காலை 11 மணி வரை. |
| 29–7–1980 (செவ்வாய்க் கிழமை). | 32 | பின் தங்கிய வகுப்பினர் நலன். |
| | | காலை 11 மணி முதல் மாலை 1 மணி வரை. |
| | 7 | மாநிலச் சட்டமன்றம். |
| | 8 | தேர்தல்கள். |

மற்ற மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தவரை விவாதமின்றி 29–7–1980 அன்று 1 மணிக்கு வாக்கெடுக்கப்படும்.

29–7–1980 அன்று வாக்கெடுப்பிற்குப் பின் நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

30–7–1980 (புதன் கிழமை). நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தல், நிறைவேற்றுதல்.

17–7–1980 அன்று தேவைப்படின் பேரவை மாலையிலும் கூடும்

வெட்டுத் தீர்மானத்திற்கான அறிவிப்புகள்

16, 17, 18, 19–7–1980 ஆகிய நாட்களில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் மானியக் கோரிக்கைகள் பற்றிய வெட்டுத் தீர்மானங்களுக்கான அறிவிப்புகள் 12–7–1980 அன்று மாலை 3 மணிக்குள் கொடுக்கப்பட வேண்டும். மற்றைய மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மான அறிவிப்புகள் 15–7–1980 அன்று மாலை 3 மணிக்குள் கொடுக்கப்படவேண்டும்.

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவரவர்களே, இப்படி முக்கியமான மானியக் கோரிக்கைகள் எல்லாம் சேர்ந்து ஒரு நாளில் வைக்கப்பட்டிருக்கின்றதே, இது சரிதானா? காவல் துறையைக் கொண்டுபோய்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவிலே பேராசிரியர் அவர்களும் இருந்தார்கள். கட்சித் தலைவர்களும் இருந்தார்கள். ஆகவே, எல்லோரும் சேர்ந்துதான் இந்த முடிவு எடுத்திருக்கிறார்கள். மேலும், இப்போதுதான் அமைச்சரவை ஏற்பட்டிருக்கின்றது. ஒரு மாதம் கூட ஆகவில்லை. ஆகவே, அவ்வளவு பெரிய பிரச்சினைகள் ஒன்றும் இல்லை. பிரச்சினைகள் எல்லாம் 4, 5 மாதங்களுக்குப் பிறகுதான் வரும் என்று எல்லோரும் சேர்ந்துதான் இப்படி முடிவெடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் 17-ஆம் தேதி மட்டும் தேவைப்பட்டால் பேரவை மாலையிலும் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11-ஆம் நாள், வெள்ளிக் கிழமை காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.



பின்னர் பேரவை பிற்பகல் 1–20 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (4) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

42. நீலகிரி மாவட்டம் குன்னூரில் பாலகிளவா குன்றுகளில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தைச் சேர்ந்த சகோதரிகளுக்குச் சொந்தமான TNN 421 ஆம் எண் வண்டியைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் தேதியிடப்பெற்ற 513 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*15. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1, 4, 5, 41, 46 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழும் ஆங்கிலமும்).

*16. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 12 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழும், ஆங்கிலமும்).

*17. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 2, 47 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழும், ஆங்கிலமும்).

**18. கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழும், ஆங்கிலமும்).

19. கோரிக்கை எண் 45—தமிழ்நாடு அரசு வனத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (1980–81) (தமிழ், ஆங்கிலம்).

பேரவைமுன் வைக்கப்பெற்றது.

---

*9–7–1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

**8–7–1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

20. 1980–81 ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசு வனத்துறைக்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

21. கோரிக்கை எண். 25—சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (1980–81) (தமிழ், ஆங்கிலம்).

22. 1980–81 ஆம் ஆண்டில் சின்கோனா துறைக்கான சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

23. 1980–81 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத் துறையின் **வணிக சம்பந்த**மான வரவு-செலவுத் திட்டம் (ஆங்கிலம்).

# இணைப்பு I

(144-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 12

## 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

### முகவுரை

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959), 1960 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது, இச்சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத் துறைக்கு ஆணையாளர் ஒருவரும் அவருக்குக் கீழ் 7 துணை ஆணையாளர்களும் 16 உதவி ஆணையாளர்களும் உள்ளனர். அவர்கள் இத்துறையின் நிர்வாகத்திற்குச் சட்டப்படி அமைந்த அதிகாரிகளாவர். இந்த அலுவலர்களுடன் அறநிலையத் துறையின்கீழ் தலைமைத் தணிக்கை அலுவலர் ஒருவரும், அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள், பணியாளர்களுடன் ஒரு தணிக்கைப் பிரிவும் இருந்து வருகின்றது. இத்தணிக்கைப் பிரிவு சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகின்றது. மேலும், மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும், தேவையான மேற்பார்வை அலுவலர்களும், பணியாளர்களும் மாவட்டங்கள் தோறும் இருந்து, சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளையும், அவற்றின் மேற்பார்வைப் பணிகளையும், மற்ற கட்டிட வேலைகளையும் கவனித்து வருகின்றனர். நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் நீதி விசாரணைகளைச் செய்து முடிப்பதற்காகத் துணை ஆணையாளர் (நீதித்துறை) ஒருவர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார். மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் தனி அலுவலர் ஒருவரும், தனி வட்டாட்சியர் ஐந்து பேரும் அடங்கிய வருவாய்த் தனிப் பிரிவு ஒன்று கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், பதிவேடுகளைத் தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் சரி பார்ப்பு அலுவலர்கள் எண்மரும், அவர்களுக்குத் தேவையான துணைப் பணியாளர்களும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களையும் மற்ற விலையுயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியைக் கவனித்து வருகின்றனர். இது தவிர, பணியாளர்கள் மீது சுமத்தப்படுகிற கடுமையான புகார்களையும், குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்வதற்கு ஆணையாளருக்கு உதவியாக உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் தனி அலுவலர் பதவி ஒன்று புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறையில்
தணிக்கைப் பிரிவு 1972ஆம் ஆண்டு செப்படம்பர் மாதம் 1ஆம்
தேதியிலிருந்து செயல் படத் தொடங்கியது. நாகப்பட்டினம்
கோட்டம் நீங்கலாக துணை ஆணையாளர் உள்ள ஒவ்வொரு
வட்டாரத்திற்கும் வட்டாரத் தணிக்கை அலுவலகம் ஒன்று
ஏற்படுத்துவது குறித்த அரசின் கொள்கை செயல்படுத்தப்பட்
டுள்ளது. நாகப்பட்டினத்தில் வட்டாரத் தணிக்கை அலுவலகம்
ஒன்று, விரைவில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

3. இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறைப்
பொறுப்பின் கீழ் சுமார் 5.25 இலட்சம் ஏக்கர் நிலங்களைக்
கொண்ட 25,178 சமய நிறுவனங்கள் உள்ளன. இதில் 1979-80
ஆம் ஆண்டில் இத்துறைப் பொறுப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்ட
573 சமய நிறுவனங்களும் அடங்கும். இந்நிறுவனங்களில் வகை
வாரியாக 23,491 கோயில்கள், 153 மடங்கள், மடங்களைச்
சேர்ந்த 66 கோயில்கள், 1,255 குறிப்பிட்ட அறக்கட்டளைகள்,
16 சமண சமய நிறுவனங்கள், 197 அறக்கட்டளைகள் ஆகியவை
அடங்கும்.

இந் நிறுவனங்களின் மதிப்பிடத்தக்க ஆண்டு வருமானம்
சுமார் ரூ. 14 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

**இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவதை நீக்குதலும் சாதி, சமய உட்பிரிவு அல்லது பாகுபாடின்றி அர்ச்சகர்களை நியமித்தலும்.**

அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும் என்னும்
நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நெறிமுறைக்
கோட்பாட்டுக்கிணங்க ஒரு சமூக சீர்திருத்த நடவடிக்கையாக,
இந்து சமயத்தைச் சேர்ந்தோரில் தகுதி வாய்ந்தோரை சமய உட்
பிரிவு அல்லது இனம் ஆகியவற்றைக் கருதிப் பாராமல் இந்து சமய
நிறுவனங்களில் அர்ச்சகர்களாக, பூசாரிகளாக அல்லது ஏனைய
உள்துறைப் பணியாளர்களாக நியமிக்க அரசு விழைகிறது. இந்து
கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது தொடர்பாக உச்ச
நீதி மன்றக் குறிப்புரைகளைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன
நோக்கத்தை செயல்படுத்துவதற்குரிய வழிவகைகளைக் காணும்
வகையில் வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியன
வற்றில் நன்கு புலமையுள்ள வல்லுநர் குழு ஒன்றை அரசு
நியமித்துள்ளது. இக்குழு தனது பணிகளை இப்போது தொடங்கி
யுள்ளது.



**இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமித்தல்.**

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) கீழ் இந்து சமய
நிறுவனங்களில் நியமனம் செய்யப்பட்ட பரம்பரையில்லா அறங்
காவலர்களின் பதவிக்காலம், தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு
இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தமும் தனி விதித் துறை
களும்) சட்டத்தின் (இந்தியக் குடியரசுத் தலைவர் சட்டம் 24/
1976) 11 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவில் சொல்லி
யுள்ள விதித்துறைகளின்படி, 1976 ஆம் ஆண்டு ஜூன் திங்கள்
1 ஆம் நாளிலிருந்து அற்றுப் போயிற்று. இந்த சமய நிறுவனங்
களில் மேற்சொன்ன குடியரசுத் தலைவரது சட்டத்தைச் சேர்ந்த
விதித்துறைகளின் கீழ் நியமனம் செய்யப்பட்ட பரம்பரை அறங்
காவலர்கள் அல்லது அறங்காவலர் அல்லது நிர்வாக அதிகாரிகள்
அல்லது தக்கார் நிர்வகித்து வருகின்றனர். அவர்களது இடங்
களில் புதிய அறங்காவலர் குழுக்கள் அமைக்க நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1978 செப்டம்பரில் தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து
சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்டத்தின்படி (தமிழ்நாடு
சட்டம் 42/1978) இந்து சமய அறக்கட்டளை நிறுவனங்கள்,
அவற்றின் ஆண்டு வருவாயின் அடிப்படையில் பின்வரும் நான்கு
வகைகளாக மீண்டும் பிரிக்கப்பட்டுள்ளன :—

1. ஆண்டு வருவாய் ரூ. 10,000-க்குக் குறைவாகக் கொண்
டுள்ள சமய நிறுவனங்கள் ;

2. ஆண்டு வருவாய் ரூ. 10,000-க்குக் குறையாமலும்,
ஆனால், ரூ. 50,000-க்குக் குறைவாகவும் கொண்டுள்ள சமய
நிறுவனங்கள் ;

3. ஆண்டு வருவாய் ரூ. 50,000-க்குக் குறையாமலும்
ஆனால் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைவாகவும் கொண்டுள்ள
சமய நிறுவனங்கள் ;

4. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறையா
மல் உள்ள சமய நிறுவனங்கள்.

1-வது வகையின் கீழ் வரும் சமய நிறுவனங்களைப் பொறுத்த
மட்டில் உதவி ஆணையாளர், 2-வது வகையின் கீழ் வரும் சமய
நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் துணை ஆணையாளர்,
3-வது வகையின் கீழ் வரும் சமய நிறுவனங்ளைப் பொறுத்த

மட்டில் ஆணையாளர், 4-வது வகையின் கீழ் வரும் சமய
நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் அரசு ஆகியோர், பரம்பரை
முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்கத் தக்க அதிகாரிகள்
ஆவர்.

பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிக்கவும்
அத்தகைய நியமனங்களுக்குத் தகுதி வாய்ந்த பொருத்தமான
நபர்களின் பெயர்ப் பட்டியல்களைத் தயாரித்து சம்பந்தப்பட்ட
தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்கு, அதாவது உதவி ஆணையாளர்
கள், துணை ஆணையாளர்கள், ஆணையாளர் ஆகியோருக்கு
அனுப்புவதற்காக இச்சட்டத்தின் 46A பிரிவின் கீழ் வட்டாரக்
குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பரிந்துரைக்கப்பட்
டுள்ள பெயர்ப் பட்டியல்களிலிருந்து ஒவ்வொரு கோயிலுக்கும்
மூன்று அறங்காவலர்களை, உதவி ஆணையாளர்கள், துணை
ஆணையாளர்கள், ஆணையாளர் ஆகியோர் நியமிக்கப்படு
கின்றனர்.

வட்டாரக் குழுக்கள் பரிந்துரைத்துள்ள பெயர்ப்பட்டியல்களி
லிருந்து பொருத்தமான அந்தந்த வகை சமய நிறுவனங்களுக்குப்
பொறுப்புடைய அதிகாரிகளால் நியமனம் செய்யப்படும் மூன்று
அறங்காவலர்களோடு, பொதுவாக மக்களின் நலம், சமய
நிறுவனத்தின் வருமானம், சொத்துக்கள் மற்றும் வழிபடுபவர்
களின் எண்ணிக்கை, யாத்திரை தலமாக அச்சமய நிறுவனத்திற்
குள்ள முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவசிய
மெனக் கருதினால், அத்தகைய சமய நிறுவனங்களுக்கு மேலும்
அறங்காவலர்கள் இருவரை நியமிக்க அரசு அதிகாரம் பெற்
றுள்ளது.

எந்தச் சமய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், அறங்
காவலர்களை நியமிப்பதற்குத் தகுதி பெற்ற அதிகாரிகளாக
துணை ஆணையாளர்கள்-உதவி ஆணையாளர்கள் உள்ளனரோ
அந்தச் சமய நிறுவனங்கள் தொடர்பாக, இந்து சமய அறநிலைய
நிர்வாகத்துறை ஆணையாளருக்கு அரசு இவ்வதிகாரங்களை
அளித்துள்ளது. எந்த நிறுவனங்களைப் பொறுத்த வரையில்
அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஆணையாளர் தகுதிபெற்ற
அதிகாரியோ, அந்த நிறுவனங்கள் தொடர்பாக அரசு இவ்வதி
காரங்களைச் செலுத்துகிறது.

ரூபாய் 1 இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருவாய்
உடைய நிறுவனங்களுக்கு பரம்பரையல்லாத ஏனைய அறங்
காவலர்களை நியமிக்க அரசு தேவையான நடவடிக்கைகளை
மேற்கொண்டு வருகிறது. அறங்காவலர்களை நியமிப்பதற்குரிய
தகுதி பெற்ற அதிகாரமன்றமாகவுள்ள அரசு 120 சமய நிறு





வனங்களுள் இது வரையில் 42 சமய நிறுவனங்களுக்கு அறங்
காவலர்களை நியமித்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஆணை
யாளர், 124 நிறுவனங்களுள், 33 நிறுவனங்களுக்கும், துணை
ஆணையாளர், 1,177 நிறுவனங்களுள் 391 நிறுவனங்களுக்கும்,
உதவி ஆணையாளர் 23,203 நிறுவனங்களுள் 5,177 நிறுவனங்
களுக்கும் அறங்காவலர்களை நியமித்துள்ளனர். துணை ஆணை
யாளர்கள் ஏற்கெனவே மூன்று அறங்காவலர்களை நியமித்துள்ள
391 நிறுவனங்களுள் 94 நிறுவனங்களைப் பொறுத்த மட்டில்,
ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இரண்டு அறங்காவலர்களை ஆணை
யாளர் நியமித்துள்ளார். அத்தகைய நியமனம் 42 நிறுவனங்
களைப் பொறுத்த மட்டில் தேவையற்றது எனக் கருதப்பட்டது.
இதே போன்று, உதவி ஆணையாளர்கள் ஏற்கெனவே மூன்று
அறங்காவலர்களை நியமித்துள்ள 5,177 நிறுவனங்களில் 86 நிறு
வனங்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும்
இரண்டு அறங்காவலர்களை ஆணையாளர் நியமித்துள்ளார். அத்
தகைய நியமனம், 2,925 நிறுவனங்களைப் பொறுத்த மட்டில்
தேவையற்றது என கருதப்பட்டது.

இதற்கிடையே, பரம்பரையல்லாத அறங்காவலர்களின்
பதவிக்காலியிடத்தை நிரப்புவதற்குரிய கால வரையறை 1980
ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாளுடன் முடிவடைந்து
விட்டதால், தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய அற
நிலைய (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருந்த அவசரச்
சட்டத்தின் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 5/1980) மூலமாக
இக்கால வரையறை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
நடப்புச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த அவசரச்சட்
டத்திற்குப் பதிலாகச் சட்டம் இயற்றப்படும். சமய நிறுவனங்
களுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் சட்டப்
படிக்கான கால வரையறைக்குள் அதாவது 1981 ஆம் ஆண்டு
மே திங்கள் 31 ஆம் நாளுக்குள் செய்து முடிக்கப்படும் என
எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில ஆலோசனைக் குழு.

மாநில ஆலோசனைக் குழுவை அமைப்பது குறித்த செயற்
குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

யாதொரு பொதுசமய வழிபாட்டு இடங்களில் விலங்குகள்
பறவைகள் ஆகியவற்றைப் பலியிடுவதையும் அவற்றின்
ஊனை (flesh) விற்பனை செய்தல் அல்லது
விற்பனைக்காக பார்வைக்கு வைக்கப்படுதலையும்
தடை செய்தல்.

தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு விலங்குகள், பறவைகள் ஆகிய
வற்றைப் பலியிடுவதைத் தடை செய்யும் சட்டம் (தமிழ் நாடு

சட்டம் 32/1950) இந்துக் கோயில்களில் அல்லது அதன் சுற்றுப் புறங்களில் மட்டும் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றைப் பலி யிடுவதைத் தடுப்பதற்கு வகை செய்கிறது.

கோயில்களுக்கு வெளியேயுள்ள பொது இடங்களிலும், பொது தெருக்களிலும் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றைப் பலியிடு வதைத் தடுக்க வேண்டும் என்றும், இச் சட்டத்தின்கீழ் வழங்கப் படும் தண்டனையைக் கடுமையாக்க வேண்டும் என்றும் கோரி, வரப்பெற்ற பல முறையீடுகளைக் கவனமாகப் பரிசீலித்து பின்னர் யாதொரு பொது சமய வழிபாட்டு இடங்களிலும், அதன் சுற்றுப் புறங்களிலும், வழக்கம் அல்லது மரபின் அடிப்படையில், பொது மக்கள் உரிமையோடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதும், யாதொரு நபருக்குச் சொந்தமாகவுள்ளதுமான ஒரு தெரு அல்லது சந்து அல்லது ஏனைய பொது வழி உட்பட பொதுத் தெரு ஒன்றில் நடைபெறும் சமய வழிபாடு தொடர்பான சமயக் கூட்டத்தில் அல்லது ஊர்வலத்தில் விலங்குகள், பறவைகள் ஆகிய வற்றைப் பலியிடுவதையும் தடை செய்து சட்டத்தைத் திருத்து வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், இவ்விடங்களில் விலங்குகளின் அல்லது பறவைகளின் ஊனை விற்பதை அல்லது விற்பதற்காக பார்வைக்கு வைத் திருப்பதைத் தடை செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட் டுள்ளது. இச் சட்டத்தின் விதித்துறைகளை மீறுபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகளை அதிகரிக்கவும், இக்குற்றங்களை இச்சட்டத்தின்கீழ் பிடியாணை வேண்டாக் குற்றங்களாக ஆக்க வும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டம் இயற்றுவதற்குரிய அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய மாநில அரசுகளுக்குரிய பொதுவான அதிகாரங்களின்கீழ் வருவதால், இச்சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் உரிய சட்டப்படி சேர்த்துக்கொள் ளப்பட்டதும் சேர்த்துக் கொள்ளப்படாததுமான தேவஸ் வங்களும், புதுக்கோட்டையிலுள்ள கோவில்களும்.

1974-ஆம் ஆண்டு 50-ஆம் சட்டத்தின்படி, கன்னியாகுமரி தேவஸ்வக் குழு 1975 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கலைக்கப்பட்டது. முன்னாள் திருவிதாங்கூர் மன் னர்களின் நிர்வாகத்திலிருந்த நிறுவனங்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 22 ஆம் சட்டத்தின் செயல்வரம்பிற்குள் கொண்டுவரப் பட்டன. அவை திருநெல்வேலி துணை ஆணையாளர் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணை யாளர் பதவித்தரத்திலுள்ள நிர்வாக அதிகாரி ஒருவரால்





நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களைப் பராமரிப்ப தற்காக ஆண்டொன்றுக்கு 13,70,000 ரூபாய் தொடர் மானி யத்தை அரசு அளித்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள உரிய சட்டப்படி சேர்க்கப்பட்ட, சேர்க்கப்படாத தேவஸ்வங்களுக்காக, 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் முதல் அறங்காவலர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

கன்னியாகுமரி தேவஸ்வங்களின் பணியாளர் அமைப்பிலுள்ள 131 பணியாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அரசுப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டு, தற் போதைக்கு அதே சம்பள வீதத்தில் அவரவர்களுக்குரிய பதவித் தரத்தில் தனி அமைப்பின்கீழ் வைக்கப்பட்டுள்ளனர். இப்பணி யாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கென தாற்காலிக தனி விதிகள் (Adhoc rules) இயற்றுவது குறித்து தற்போ பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

முன்னாளில் புதுக்கோட்டை அரசரின் நிர்வாகத்திலிருந்த 136 கோயில்களைப் பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் ஐந்து இலட் சம் ரூபாயை அரசு வழங்கி வருகிறது.

### கோயில் பணியாளர்கள்

தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் 28,000 அர்ச்சகர்கள், குருக்கள் ஆகியோர் தவிர, ஏறத்தாழ 52,000 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

துணை ஆணையாளர்/உதவி ஆணையாளர் நிர்வாக அதி காரியாக இருக்கும் கோயில்களில் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி முதல் கோயில் பணியாளர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 10 முதல் ரூபாய் 40 வரை ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏனைய கோயில்களைப் பொறுத்த வரையில் கீழ் பதவித்தரப் பணியாளர்களுக்கு 5 ரூபாய் உயர்வும், மேல் பதவித்தரப் பணியாளர்களுக்கு 10 ரூபாய் உயர்வும் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி முதல் அனுமதிக்கப் பட்டது. இது நீங்கலாக, கோயில்களிலுள்ள அனைத்து வகைப் பணியாளர்களுக்கும் 10 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் தேதி முதல் அகவிலைப்படி உயர்வு அனுமதிக்கப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 10

மேலும், கோயில் பணியாளர்களுக்கு வீட்டுவாடகைப் படியும் நகர ஈட்டுப் படியும் கீழே கொடுக்கப்பட்டுள்ள வீதத்தில் 1980-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ஆம் தேதி முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வாடகைப் படி

| | ரூபாய் |
|---|---|
| 1. உயர் பதவித்தரப் பணியாளர்கள் .. .. | 15 |
| 2. கீழ் பதவித்தரப் பணியாளர்கள் .. .. | 10 |

நகர ஈட்டுப்படி

| | |
|---|---|
| 1. உயர் பதவித்தரப் பணியாளர்கள் .. .. | 10 |
| 2. கீழ் பதவித்தரப் பணியாளர்கள் .. .. | 5 |

கீழ்க்காணும் சலுகைகளைக் கோயில் பணியாளர்களுக்கு நீட்டிப்பது குறித்து ஆணையாளரால் பரிசீலிக்கப்படுகிறது.—

(1) சம்பளத்துடன் கூடிய விடுப்பைப் பெறுதல், சேர்த்து வைத்தல், விடுப்பை எடுத்துக் கொள்ளுதல் பற்றி விவரங்கள் வருமாறு :—

| தற்போதைய சலுகை. (1) | உத்தேச சலுகை (2) |
|---|---|
| 1. பணிக்காலத்திற்கு 22 நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு. | பணிக்காலத்திற்கு 11 நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு. |
| 2. 75 நாட்களுக்கு விடுப்பைச் சேர்த்து வைத்துக் கொள்ளலாம். | 120 நாட்கள் வரையில் விடுப்பைச் சேர்த்து வைத்துக் கொள்ளலாம். |
| 3. மொத்தப் பணிக்காலத்தில் 90 நாட்கள் மருத்துவ விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். | மொத்தப் பணிக் காலத்தில் 120 நாட்கள் மருத்துவ விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். |



1980 ஜூலை 10]

(2) திருமண முன்பணம் பின்வருமாறு அளிக்கப்படலாம்:—

1. ரூ. 250-ம் அதற்கு மேலும் அடிப்படைச் சம்பளம் பெறும் கோயில் நிரந்தரப் பணியாளர்களுக்கு—

| | ரூபாய். |
|---|---|
| ஆடவர் திருமணமாயின் .. .. | 1,000 |
| மகளிர் திருமணமாயின் .. .. | 1,500 |

2. ரூ. 250-க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் கோயில் நிரந்தரப் பணியாளர்களுக்கு—ரூ. 1,000

(3) வீடு கட்டுவதற்கு அளிக்கப்படும் முன் பணம் :—

| | ரூபாய் |
|---|---|
| 1. ரூ. 250-ம் அதற்கு மேலும் அடிப்படைச் சம்பளம் பெறும் கோயில் நிரந்தரப் பணியாளர்களுக்கு .. | 10,000 |
| 2. 250-க்குக் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் கோயில் நிரந்தரப் பணியாளர்களுக்கு .. .. .. | 5,000 |

இந்த முன் பணங்கள் கோயில் நிதிகளிலிருந்து வழங்கப்படும்.

பின்வருவன குறித்து ஆணையாளர் ஆணைகள் பிறப்பித்துள்ளார் :—

(1) கோயில் பணியாளர்களின் சம்பள நிலுவை கோரிக்கைகளை விரைவில் தீர்த்து வைத்தல்.

(2) இறந்துவிட்ட கோயில் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கோயில் பணியில் நியமிக்க முன்னுரிமை அளித்தல்.

(3) கோயில் பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்குதல்.

(4) நிதியை நிர்வகித்து வருவதற்காக பணியாளர்கள் செலுத்தும் தொகை மீதான வட்டியில் பாதியை வசூலிக்கும் முந்தைய முறைக்குப் பதிலாக, கோயில் பணியாளர்கள் பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி முதலீட்டுத் தொகை மீதான வட்டித் தொகை முழுவதையும் தொகை செலுத்துவோரின் கணக்கில் வரவு வைத்தல்.

[1980 ஜூலை 10

## கோயில் பணியாளர்களுக்குக் குடும்ப நலத் திட்டம்

இம்மாநிலத்தில் இந்து சமய அறக்கட்டளைத் துறை பொறுப்
பின் கீழ் வருகிற இந்து சமய அறநிலைய அதிகாரிகள், பணி
யாளர்கள் அனைவரும் பயனடையும் பொருட்டு, அரசு குடும்ப
நல நிதித் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்து சமய
அறக்கட்டளை நிறுவனங்களில் 25 வயதடைந்த ஆனால் 55
வயதுக்கு மேற்படாத பணியாளர்கள், அதிகாரிகள் அனைவரும்
இத்திட்டத்தில் சேரத்தகுதியுடையவர்களாவர். இத்திட்டத்தின்
கீழ், இந்து சமய அறக்கட்டளை நிலைய அதிகாரிகளும்,
பணியாளர்களும் தங்களது சம்பள வீதத்தின் படி ரூ. 2.50
முதல் ரூ. 7.50 வரையில் அமைக்கப்பட்ட, குடும்ப நல நிதிக்குச்
செலுத்த வேண்டும். தொகை செலுத்துகிற பணியாளர் அதி
காரி இறந்துவிடும் நேர்வில் ரூ. 2,000 முதல் ரூ. 5,000 வரையில்
ஒட்டுமொத்தமாகப் பெறுவர். பணியாளர்/அதிகாரி ஓய்வு
பெறுகையில் அல்லது அலுவலகத்தை விட்டு விலகிச் செல்கை
யில் அல்லது பணியிலிருந்து நீக்கப்படுகையில், பணியாளர்
அதிகாரி, அவர் எவ்வளவு தொகை செலுத்தியுள்ளாரோ அத்
தொகையை நிதியின் நிர்வாகியாகிய இந்து சமய அறக்கட்டளை
ஆணையாளர், நிர்ணயிக்கக்கூடிய தொகையுடன் சேர்ந்து
பெறுவார்.

## துறையின் வளர்ச்சியும், அது தொடர்ந்து மேற்கொள்ளும் பணிகளும் அன்பு இல்லம்.—

கோயில்களின் ஆதரவின் கீழ் 2,770 பேர்களைக் கொண்ட
(2,000 சிறுவர்கள் 770 சிறுமிகள்) 36 ''அன்பு இல்லங்கள்'' நடத்
தப்பட்டு வருகின்றன. அவ்வில்லத்தில் உறையும் ஒவ்வொரு
வருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 செலவு ஆகிறது. இந்த
இல்லங்களை நடத்துவதற்காகும் தொடர் இனச் செலவில்
3/4 பாகத்தைச் சம்பந்தப்பட்ட கோயில்கள் ஏற்கின்றன, 1/4
பாகத்தை அரசு ஏற்கிறது. ஆகும் செலவு பற்றிய விவரங்கள்
வருமாறு :—

| | ரூ. | 25 சதவீத அரசு மானியம். ரூ. | 75 சதவீத கோயில் பங்கு. ரூ. |
|---|---|---|---|
| 1977–78 | 9,60,996.91 | 2,40,239.23 | 7,20,747.68 |
| 1978–79 | 9,26,060.00 | 2,31,500.00 | 6,94,560.00 |
| 1979–80 (எதிர்பார்க்கப் படும் செலவு). | 10,00,000.00 | 2,50,000.00 | 7,50,000.00 |
| மொத்தம். | 28,87,056.91 | 7,21,739.23 | 21,65,307.68 |



1980 ஜூலை 10]

## திருஉருவச் சிலைகள் ஏனைய விலை மதிப்புள்ள பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

கோயில்களின் திருப்பணிக்கும் கோயில்களில் தொன்மைக்
கால வெண்கலத் திருவுருவச் சிலைகளையும் ஏனைய விலை
மதிப்புவாய்ந்த பொருட்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை
மேற்கொள்ளவும் 1979–80-ல் அரசு ரூ. 17 இலட்சம் மானியம்
வழங்கியது. இதற்காக 1980–81-ல் அரசு சரிசமமான
தொகையை ஒதுக்கக் கருதியுள்ளது. பாதுகாப்புப் பெட்டக
வசதிகளுக்கும், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் வகை
செய்ய இயலாத இடங்களில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு
களுடைய அருகில் உள்ள கோயில்களில் திருவுருவச் சிலைகள்
முதலியவை வைத்துக் கொள்ளப்படுகின்றன. 1972 ஆம்
ஆண்டு தொன்மைக்கால அரும் பொருட்கள் கலைப் பொருட்
சட்டத்தின் (மத்தியச் சட்டம் 52/1972) கீழ் திருவுருவச் சிலை
களையும் ஏனைய விலை மதிப்பு வாய்ந்த பழங்காலக் கலைப்
பொருட்களையும் பதிவு செய்வதற்குத் தீவிர நடவடிக்கை
தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. இது வரையில், இச்
சட்டத்தின் கீழ் 19,738 புராதன விலை மதிப்புள்ள திரு உருவச்
சிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கோயில்களிலுள்ள
சிலைகள் அனைத்தும் குறித்த விவரங்கள், அவற்றின் உயரம்
எடை ஆகியவற்றுடன் புகைப்படங்கள் எடுக்குமாறு, புகைப்
படங்களும் மேற்சொன்ன விவரங்களும் அடங்கிய புத்தகத்தைப்
பாதுகாப்பாக வைத்து வருமாறும் அறிவுரைகள் வழங்கப்பட்
டுள்ளன.

## திருக்கோயில்

''திருக்கோயில்'' தொடர்ந்து வெளியிடப்படுகிற மாதாந்தர
பத்திரிகையாகும். இப்பத்திரிகைக்குச் சிறந்த தமிழறிஞர்கள்
கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகின்றனர்.

## கோயில் திருப்பணி

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980ஆம்
ஆண்டு மே திங்கள் 31-ம் நாள் வரையில் ரூ. 12·17 கோடி
பெறுமான 680 திருப்பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்
பட்டுள்ளது. ஆய்வுப் பணிகளும் மதிப்பீடுகள் தயாரிப்பும் நடந்து
வருகின்றன.

இத்துறை திருப்பணி தொடர்பாக ரூ. 8.06 கோடி செலவில்
892 பணிகளையும் ஏனைய புனரமைப்புப் பணிகளையும் மேற்
கொண்டுள்ளது. இவற்றில் ரூ. 1.06 கோடி செலவிலான 90
திருப்பணி வேலைகளும் ரூ. 69.00 இலட்சம் செலவில் 56 ஏனைய

பணிகளும் 1980ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் நாள் வரையில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ 3.10 கோடி செலவில் 404 திருப்பணி களும் ரூ. 3.21 கோடி செலவில் 342 ஏனைய பணிகளும் நடை பெற்று வருகின்றன.

அரிசனக் குடியிருப்புகளில் உள்ள 110 சிறு கோயில்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதற்காக இதுவரையில் ரூ. 1,17,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. அரிசன குடியிருப்புகளிலுள்ள கோயில் களின் பழுது பார்ப்புப் பணிக்கும் புதுப்பிக்கும் திருப்பணிக்கும் மட்டும் 1980—81-ல் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டில் கிராமங்களில் பல சிறிய கோயில்களுக்குக் குடமுழுக்கு நடைபெற்றதுடன், 41 கோயில்களுக்குக் முழுக்கு நடத்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் வரையில் 11 கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றது. உலகப் புகழ் பெற்ற தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயில் குடமுழுக்கு 176 ஆண்டுகளுக்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3-ம் நாள் அன்று கொண்டாடப்பட்டது. 12 ஆண்டுகட்கொரு முறை வரும் மகா மகம் திருவிழா கும்ப கோணத்தில் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் அன்று கொண்டாடப்பட்டது. இத்திருவிழா விமரிசையாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்ற எல்லா ஏற்பாடுகளும் அரசின் பல்வேறு துறைகளால் செய்யப்பட்டன.

இதற்கு அரசு ரூ. 39 இலட்சம் அனுமதித்து குடந்தை நகரில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

மரபு வழி பழக்க வழக்கங்களைக் கருத்திற் கொண்டு, உபரி நிதியை நற் காரியங்களுக்கு வழங்குவதன் மூலம் அரசு ஆதரவை யும் நிதியுதவியையும் தாராளமாக அளித்து வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள ஒரு சில கோயில்களின் உபரி நிதியிலிருந்து இலங்கையிலுள்ள திருகேதீஸ்வரம் என்ற ஊரிலுள்ள அருள்மிகு திருகேதீஸ்வரர் கோயிலுக்கு ரூ. 1.50 இலட்சம் அரசு அனுமதித் துள்ளது. இத்தொகை, மேற்சொன்ன இந்து கோயிலுக்குத் தேவைப்படும் வேலைப்பாடுகளுடன் கூடிய கல்தூண்களை மாமல்லபுரத்தில் செதுக்குவதற்குப் பயன்படுத்தப்படும். அலகாபாத்தில் பிரயாகை என்ற இடத்திலுள்ள ஸ்ரீ ஆதிசங்கர விமான மண்டபக் குழுவுக்கு சமய நிறுவனங்களின் உபரி நிதியி லிருந்து ரூ. 2 இலட்சம் ஒதுக்க இவ்வரசு ஒப்புக்கொண்டுள்ளது. மண்டபச் சிற்ப வேலைப்பாட்டிற்கு இத்தொகை தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும்.





ஃபிஜித் தீவுகளில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ஆணையாளர் பொது நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இத்தொகை, மாமல்லபுரத்தில் வெட்டுக்கல் சிற்பங்கள் செய்யப்பட்டு அங்கிருந்து எடுத்துச் செல் லப்பட்டு ஃபிஜித் தீவில் ஒருங்கிணைத்து நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்படும். இது சிற்பிகளுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி கோயிலில் கிருஷ்ணதேவ இராயர் காலந்தொட்டு முற்றுப்பெறாது நிற்கும் தெற்கு இராய கோபுரத்தை ரூ. 52 இலட்சம் செலவில் நிதி திரட்டி முடித்துத் தர முக்கூர் ஸ்ரீ அகோபில மடம் தவத்திரு ஜீயர் சுவாமிகள் முன் வந்து திருப்பணி நடைபெற்று வருகிறது.

தொன்மை வாய்ந்த சைவத் திருத்தலமாகிய சிதம்பரம் அருள் மிகு சபாநாயகர் கோயில் திருப்பணிக்கென ரூ. 30.66 இலட்சம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

1978—79ஆம் ஆண்டில், கீழ இராஜ கோபுரத் திருப்பணி ரூ. 2.60 இலட்சம் செலவில் முடிவடைந்தது.

1979—80-ல் செலவு மதிப்பீடு ரூ. 6.14 இலட்சம். இதில் அரசு மானியம் ரூ. 4 இலட்சம் ஆகும். வடக்கு இராஜகோபுர திருப் பணியும் இதர சில வேலைகளும் முடிவடைந்துள்ளன.

தெற்கு இராஜகோபுரத் திருப்பணி ரூ. 2.90 இலட்சம் மதிப் பீட்டுச் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரை ரூ. 1.67 இலட்சம் செலவிடப்பட்டு பணி நடந்து வருகிறது.

மேற்கு இராஜ கோபுர திருப்பணிக்கென, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி ஆலய உபரி நிதியிலிருந்து ரூ. 2.65 இலட்சம் நிதி மாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கொண்டு தேவைப்படும் நிதியை நன்கொடையாக பொது மக்களிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளை திருப்பணிக்குழு எடுத்து வருகிறது.

1978—79ஆம் ஆண்டில் நடந்த சுற்றுலா வர்த்தகப் பொருட் காட்சியில் இத்துறை தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயிலின் மாதிரி ஒன்றை அமைத்திருந்தது. துறைகள் சார் பில் வைக்கப்பட்டிருந்த காட்சி அரங்குகளில் அதுவே சிறந்த தெனக் கருதப்பட்டது.

[1980 ஜூலை 10

## பழனியில் இரண்டாம் இழுவை ரயில் அமைத்தல்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் ரூ. 12 இலட்சம் செலவில் இரண்டாம் இழுவை ரயில் அமைக்கும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது.

## கோயில்களில் தமிழ்ப் புலவர்களை நியமித்தல்

மக்களின் மனத்தில் தமிழ்ப் பண்பாட்டு உயர்வை வளர்க்கவும் தமிழகப் பாரம்பரியத்தை சிறப்புற விளங்கச் செய்யவும் வேண்டி தமிழில் புலவர் பட்டம் பெற்று வேலையின்றி இருப்பவர்கள் கோயில்களில் நியமிக்கப்படுவர் என முதலமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்து, அதன் முதற் கட்டமாக ஆண்டொன்றுக்கு ரூ. 1 இலட்சத்திற்கும் அதிகமாக வருவாயுள்ள கோயில்களில் இதுவரை தமிழ்ப்புலவர்கள் 70 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தமிழ்ப் பண்பாட்டைப் பலரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்தும் கோயில்களில் நூலகங்கள் அமைத்தும் கோயில்களின் தலவரலாறுகளை எழுதியும் நற்பணியாற்றி வருகின்றனர்.

## தமிழிசை வளர்ச்சி

தமிழிசை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், நாதஸ்வரத்திலும், தவிலிலும் மேற் பயிற்சி ஒவ்வொரு துறையிலும் 5 மாணவர்களுக்கு அளிக்க உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. புகழ் வாய்ந்த வித்துவான்களைக் கொண்டு நடத்தப்படும் மேற் பயிற்சிக்காக, நாதஸ்வரப் பள்ளிகளில் பயிற்சி முடித்துள்ள நாதஸ்வர மாணவர்கள் ஐவரும், தவில் மாணவர்கள் ஐவரும் இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு, பயிற்சி பெற்று வருகின்றனர்.

சைவ சமயக் கோயில்களில் திருமுறையும், வைணவக் கோயில்களில் திவ்வியப் பிரபந்தமும், உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் பகுதி நேர வகுப்புகளை நடத்துவதன் மூலம் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை இத்துறை கொண்டு வந்துள்ளது. இப்பயிற்சி பெறும் மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு பயிற்சி உதவித் தொகையாக ரூ. 20 வழங்கப்படுகிறது.



1980 ஜூலை 10]

இத்திட்டத்தின்கீழ் 15 கோயில்களில் 220 மாணவர்கள் திருமுறைகளிலும் திவ்யப் பிரபந்தங்களிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## கோயில் வருமானம்

வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டங்கள், பல்வேறு குத்தகைச் சட்டங்கள், பொதுப் பொறுப்புக் கழகங்கள் சட்டம் ஆகியவை, கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து அவற்றுக்குக் கிடைக்கும் வருமானத்தை மிகக் கடுமையாகப் பாதித்துள்ளன. கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகை நிலுவைகள், 1387-ம் விளைச்சல் ஆண்டு வரையில் 19.16 கோடி ரூபாய் அளவுக்கும், 1388, 1389 விளைச்சல் ஆண்டுக்கு 31–5–1980 ஆம் நாள் வரை 3.96 கோடி ரூபாய் அளவுக்கும் உயர்ந்துள்ளன.

கோயில்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த இடர்ப்பாடுகளை எவ்வாறு களைய முடியும், எந்தெந்த விதத்தில் தேவையான நிவாரணங்களை அளிக்க முடியும் என்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

## உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும்

இம்மாநிலத்தில் 7 கல்லூரிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள் 11 இதர பள்ளிகள், 7 தேவாரப் பாடசாலைகள் ஆகியவற்றை சமய நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. இத்துடன், தவில், நாதஸ்வரக் கலைகளுக்கான பள்ளிகளும் பழனி, சுவாமி மலை, சிக்கல் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அரிகதை காலட்சேபப் பள்ளி ஒன்றை தஞ்சாவூரில் தொடங்குவதற்கான செயற்குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அப்பள்ளி, விரைவில் செயல் படத் தொடங்கும். 1980 கல்வி ஆண்டு முதல், கோவிலூரிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 12–4–1978 முதல் 11–4–1979 வரை சென்ன மல்லீசுவரர், சென்ன கேசவப் பெருமாள் கோயிலில், அர்ச்சகர்கள் குறுகிய காலப் பயிற்சி பெற்று வந்தனர். அப்போது சிவ ஆகமத்தில் 9 பேர்களுக்கும் வைகானசம் ஆகமத்தில் 10 பேர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

128-150—18

## சமுதாய நலப் பணிகள்

சமய நிறுவனங்களின் உபரி நிதியைக் கொண்டு மேற் கொள்ளப்பட்டுள்ள சமுதாய நலப்பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. செவிடர், ஊமையர் பள்ளிகள் இரண்டும் அன்பு இல்லங்கள் மூன்றும், நூலகங்கள் 202-ம், சித்த வைத்திய மருந்தகங்கள் 25-ம், ஆங்கில முறை மருத்துவமனை ஒன்றும், 36 அன்பு இல்லங்கள் உட்பட பல அநாதை இல்லங்களும் நடத்தப் பட்டு வருகின்றன. இதைத் தவிர வேறு எட்டு அன்பு இல்லங்கள் உள்ளன. இவற்றை சமய நிறுவனங்கள், தங்கள் சொந்த நிதியைக் கொண்டே நடத்தி வருகின்றன.

## நிர்வாகச் சீரமைப்புப் பணிகள்

துறையின் நிர்வாகத்தையும், சமய நிறுவனங்களின் நிர்வாகத் தையும் சீரமைத்து, மேம்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வருவாயில், இழப்பு ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கவும், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்குரிய நியாய வாடகைகளைத் திருத்தி, மறு நிர்ணயம் செய்வதன் மூலம் வருவாயினை அதிகரிக்கவும், தக்க நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைக் கண்டறிந்து, அவற்றைப் பயன் படுத்தி வருவோர் யார் யார் என்பதைப் பதிவேட்டில் எழுதி வைத்து அச்சொத்துக்களின் மூலம் வரவேண்டிய வருவாயினை வசூலிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயில் களை நிர்வகிக்க ஏற்கனவே 414 நிர்வாக அதிகாரிப் பதவிகள் உள்ளன. கோயில்களை மறுவகைப்பாடு செய்யும் வரையில், கூடுதலாக 30 நிர்வாக அதிகாரி பதவிகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மடங்களின் நிர்வாகப் பொறுப்பின்கீழ் உள்ள கோயில்களில் நியமனம் செய்வதற்கு, 32 நிர்வாக அதிகாரிப் பதவிகளுக்கு அனுமதி புதுப்பிக்கப் பட்டுள்ளது. எனினும் இவ்வாணையை எதிர்த்து, மடாதிபதிகள் சிலர் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துத் தடை ஆணை பெற்றுள்ளனர். எனவே, 'ரிட்' மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கப்படும் வரையில், அந்த மடங்களின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள கோயில்களில் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க இயலாது.

நமது பண்டைய நாகரிகத்தையும், கலையினையும் பண் பாட்டினையும் கட்டிக்காக்கும் கருவூலப் பெட்டகங்களாக விளங்கும் கோயில்களைப் பேணிப் பாதுகாக்க அரசு தொடர்ந்து அயராது பாடுபடும்.



## இணைப்பு II.

[144ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## கொள்கை விளக்கக் குறிப்பு.

**திட்ட மதிப்பீடு 1980-81** **சின்கோனாத்துறை.**

### 1. முன்னுரை :

சின்கோனாத்துறை தமிழ்நாடு அரசால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அமைப்பாகும். இத்துறை மலேரியா நோயினை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட்டு மற்றும் இருதய நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் குனிடின் சல்பேட் ஆகிய பொருட்களை பெருமளவில் தயாரித்து வருகிறது. மேலும் மருந்து மற்றும் தாவர வகைத் தைலங்களையும் தயாரித்து வருகிறது. இத்துறை 119 ஆண்டுகள் ஆன ஒரு பழமையான துறையாகும். இத்துறையின் மூலம் சுமார் 2,000 தொழிலாளர்கள் நிரந்தர வேலை வாய்ப்பும், 2,000 தொழிலாளர்கள் தற்காலிக வேலை வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

இந்திய அரசு கொய்னா பொருட்களின் ஏற்றுமதியை 1978 ஜூலைத் திங்களில் தடை செய்ததால், வெளிநாட்டிற்கு கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதி ஒரே சீராக அமையவில்லை. இச்சிக்கல் குறித்து தமிழக அரசு மத்திய அரசுடன் பேச்சு நடத்திய பின்னர், தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது. 1978–79 ம் ஆண்டில் 3.25 டன் மற்றும் 1979–80 ஆம் ஆண்டில் 4.50 டன் கொய்னாப் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மலேரியா மீண்டும் தோன்றிப் பரவி வருவதால் கொய்னாப் பொருட்களுக்குள்ள உள்நாட்டுத் தேவை அதிகமாகலாம் என்பதோடு, வெளிநாட்டு ஏற்றுமதியும் காலப் போக்கில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே வளரும் இத் தேவைகளை நிறைவேற்றிட ஏற்கனவே சாகுபடி செய்து அறுவடை செய்யப்பட்ட நிலங்களிலும் புதிய நிலங்களிலும் சின்கோனா பயிரிடப்பட்டு வருகிறது. 31–3–1980 வரை நீலகிரியில் 369.61 ஹெக்டேர் நிலத்திலும், ஆனைமலையில் 1437.65 ஹெக்டேர் நிலத்திலும் ஆக மொத்தம் 1,807.26 ஹெக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது.

2. நடுகைத் திட்டம்:

(அ) 1978–79, 1979–80, 1980–81 ஆகிய மூன்றாண்டு காலத்திற்கு, கீழ்க்கண்ட பின்தொடரா நடுகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது:—

| | 1978–79. | 1979–80. | 1980–81 (மதிப்பிடப்பட்டது.) |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்.) | | |
| 1 வழக்கமான நடுகைத் திட்டம். | 113.00 | 126.50 | 144.48 |
| 2 புதிய முறை நடுகைத் திட்டம் (Vegetative propagation). | 35.84 | 39.91 | 24.49 |
| | 148·84 | 166·41 | 168·97 |

(ஆ) நாட்டில் மருந்து வகைத் தைலங்கள், வாசனைத் தைலங்கள் (Medicinal and Aromatic Oil) இவற்றிற்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை ஈடுகட்டும் நோக்குடன் இத்தகைய பயிர்களின் சாகுபடியைப் பல்வேறு வகைகளில் விரிவு படுத்தும் பணியினை இத்துறை மேற்கொண்டுள்ளது. 31–3–1980-ம் நாள் முடிய இத்தகைய பயிர்கள் வேளாண்மை செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு பின்வருமாறு:—

| | ஹெக்டேர். |
|---|---|
| 1 நீலகிரிப் பிரிவு .. .. .. .. | 670.78 |
| 2 ஆனைமலைப்பிரிவு .. .. .. | 336.66 |
| 3 மேல் பழனி மலைப்பிரிவு .. .. | 4.25 |
| | 1,011.69 |



1978–79, 1979–80, 1980–81 ஆகிய மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மருந்து, வாசனைத் தைலப் பயிர் நடுகைக்கு கீழ்க்கண்டவாறுள்ள நடுதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது:—

| பயிர்களின் பெயர். | 1978–79. | 1979–80. | 1980–81. (மதிப்பிடப்பட்டுள்ளது.) |
|---|---|---|---|
| | | | (ஹெக்டேர்களில்.) |
| ஜெரேனியம் (Geranium).. | 29 | 25 | 21.60 |
| சிட்ரோனெல்லா (Citronella) | 8 | 8 | 8.00 |
| டயஸ்கோரியா (Dioscorea) | 16 | 20 | 20.00 |
| யூகலிப்டஸ் சிட்ரியோடோரா (Eucalyptus citriodora). | 7 | 13 | 12.00 |
| யூகலிப்டஸ் குலோபுலஸ் (Eucalyptus globulus). | 4 | 2 | 4.00 |
| சோலானம் லாசினியாட்டம் (Solanum laciniatum). | 2 | .. | .. |
| வின்காரோசியா (Vincarosea) | 4 | .. | .. |
| சோலானம் காசியானம் (Solanum khasianum). | 2 | 2 | 0.50 |
| பச்சோலி (Patchooli). | 2 | 3 | .. |
| ஓசிமம் கேம்பரா (Osimun camphora). | 2 | 2 | 2.00 |
| பைரெத்ரம் (Pyrethrum). | .. | 1 | 0.50 |
| ரோஸ்மேரி (Rosemary). | .. | 1 | 0.50 |
| மொத்தம்.. | 76 | 78 | 69.10 |

மேலும் மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் பழனிமலை மேல்தள குன்றுகளில் 1.25 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஜெரெனியம் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1980–81–ம் ஆண்டில் பழனிமலை மேல்தளக் குன்றுகளில் 36 ஹெக்டேர் பரப்பில் ஜெரேனியம் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 10

3. கொய்னாப் பொருட்களின் உற்பத்தி:—

கோவை மாவட்டம் ஆனைமலையில் உள்ள அரசின் சின்கோனாத் தோட்டத்திலுள்ள கொய்னாத் தொழிற்சாலை இத்துறையின் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் சின்கோனாப் பட்டையிலிருந்து பல்வேறு வகை கொய்னாப் பொருட்களைத் தொடர்ந்து தயாரித்து வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் விவரம் பின்வருமாறு:—

| கொய்னாப் பொருட்கள். | 1977–78. | 1978–79. (கிலோகிராமில்.) | 1979–80. |
|---|---|---|---|
| குனைன் சல்பேட் (Quinine Sulphate). | 8100 | 7601 | 7010 |
| குனைன் ஹைட்ரோகுளோரைட் (Quinine Hydrochloride). | 815 | *526 | *2929 |
| குனைடின் சல்பேட் (Quinidin Sulphate). | 251 | 250 | 160 |
| சின்கோனா பெப்ரிபியுஜ் (Cinchona Febrifuge). | 8100 | 7651 | 7300 |

(*) இந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட குனைன் சல்பேட் டிலிருந்து தயாரித்தது.

1980–81 ஆம் ஆண்டிற்கான கொய்னாப் பொருட்கள் உற்பத்தித் திட்ட இலக்கு பின்வருமாறு:—

| | |
|---|---|
| குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு (Quinine Sulphate and Quinine Hydrochloride). | 7400 கி. கி. |
| சின்கோனா பெப்ரிபியூஜ் (Cinchona Febrifuge) | 7000 கி. கி. |
| குனைடின் சல்பேட் (Quinidire Sulphate) | 200 கி. கி. |

4. தைல வகைகளின் உற்பத்தி:—

நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இத் துறையில் தோட்டங்களிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத



1980 ஜூலை 10]

யூகலிப்டஸ் (Eucalyptus), ஜெரேனியம் (Geranium), ஜாவா சிட்ரோனெல்லா (Jawa Citronella), மற்றும் யூகலிப்டஸ் சிட்ரியோ டோரா (Eucalyptus Citriodora) ஆகிய தைலங்களைச் சோதனை செய்து, சுத்தப்படுத்தி, தரம் பிரிக்கும் பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறது.

மூன்றாண்டுகளில் (1978–79, 1979–80, 1980–81) மருந்து மற்றும் மணங்கமழும் தைலங்களின் உற்பத்தி செய்யப்பட்ட அளவுகள் பின்வருமாறு:—

| வரிசை எண். | பொருட்களின் பெயர். | 1978–79 (கிலோகிராமில்) | 1979–80 | 1980–81 மதிப்பிடப்பட்டது. |
|---|---|---|---|---|
| 1 | யூகலிப்டஸ் ஐ. பி. (Eucalyptus I.P.) | 1281.000 | 1350.340 | 2200 |
| 2 | யூகலிப்டஸ் பி. பி. (Eucalyptus B.P.) | 495.000 | 765.710 | 800 |
| 3 | ஜெரேனியம் (Geranium) .. | 788.575 | 929.885 | 1000 |
| 4 | யூகலிப்டஸ் சிட்ரியோ டோரா (Eucalyptus Citriodora) | 2144.230 | 2984.015 | 3300 |
| 5 | ஜாவா சிட்ரோனெல்லா (Jawa Citronella) | 2426.790 | 2746.390 | 2800 |
| 6 | பச்சோலி (Pachouli) .. | 13.870 | 11.070 | 15 |
| 7 | கற்பூரத்தைலம் (Camphor oil) .. | 17.500 | 25.625 | 30 |
| 8 | கற்பூர வில்லைகள் (எண்கள்)(Camphor Tablets in numbers) | 5,74,815 | 1,49,450 | 1,00,000 |
| 9 | சின்பிரஸ் (லிட்டர்களில்) (Cinfresh (in litres) | 10,900 | 13,460 | 15,000 |

## 5. விற்பனையும் வருவாயும்.

1978–79 ஆம் ஆண்டில், இத்துறை 5.24 இலட்சம் வருமானம் தந்துள்ளது. இந்த வருமானமானது மூலதனத்தின் மீதுள்ள வட்டிக்கு ரூ. 27.85 இலட்சத்தைக் கொடுத்து பின்னர் உள்ள நிகர வருமானமாகும். 1979–80-ல் மூலதனத்திற்கான வட்டித் தொகைக்காக ரூ. 27.05 இலட்சம் கொடுத்த பின்னர் இத்துறைக்கு ரூ. 15 இலட்சம் வருமானமாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1980–81 ஆம் வருடத்தில் ரூ. 18 இலட்சம் வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாடுகளில் கொய்னா தயாரிப்புப் பொருட்களின் விலை குறைந்ததால் வருமானமும் குறைந்து விட்டது. கொய்னா தயாரிப்புப் பொருட்கள், மருந்து தைல வகைகள் மற்ற முக்கிய தைலங்களின் விற்பனை மற்றும் வருவாய் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

### (அ) கொய்னாப் பொருட்கள்.

வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களின் தேவை அதிகரித்து வந்தாலும், இந்திய அரசு கொய்னாத் தயாரிப்புப் பொருட்களின் ஏற்றுமதிக்கு 1978 ஜூலைத் திங்களில் தடை விதித்ததன் காரணமாக சமீப காலங்களில் ஏற்றுமதியாகும் கொய்னாப் பொருட்களின் விலை சிறிது குறைந்துள்ளது. அதன் விளைவாக குறிப்பிட்ட அளவு கொய்னாப் பொருட்களே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது (1978–79 ஆம் ஆண்டில் 3.25 டன்னும், 1979–80 ஆம் ஆண்டில் 4.50 டன்னும்). மேற்கூறிய காரணங்களால் எதிர்பார்த்த வருமானத்தில் குறைவு ஏற்பட்டது. கொய்னாப் பொருட்களின் விற்பனையின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1977–78 | 1978–79 | 1979–80 |
|---|---|---|---|
| உள்நாட்டு விற்பனை | 37.19 | 34.45 | 23.39 |
| வெளிநாட்டிற்கான ஏற்றுமதி | 37.33 | 23.67 | 42.55 |
| | 74.52 | 58.12 | 65.94 |



1980–81 ஆம் ஆண்டில் ரூ. 60 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருட்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனை மூலம் கிட்டும் வருவாய்க் குறைவிற்கு தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டங்களுக்கு உள்நாட்டு நிலவரப்படி உள்ள விலையில் விற்க நேரிட்டதும் ஏற்றுமதி விலைகள் குறைந்ததும் காரணமாகும். உள்நாட்டு விற்பனைக்காக, கொய்னாத் தயாரிப்புப் பொருட்களின் விலையை ஏறுமுகமாக மாற்றியமைக்க நமது அரசு மத்திய அரசுடன் பேச்சு நடத்தி வருகிறது.

### (ஆ) மருந்து மற்றும் மணம்கமழும் தைலங்கள் (Medicinal and Aromatic Oil).

இத்தைலங்களின் விற்பனையால் கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க் குறிப்பிட்டபடி வருவாய் கிட்டியுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1977–78 | .. | .. | .. | ரூ. | 12.59 இலட்சம் |
| 1978–79 | .. | .. | .. | ரூ. | 13.55 இலட்சம் |
| 1979–80 | .. | .. | .. | ரூ. | 14.81 இலட்சம் |

1980–81 ஆம் ஆண்டில் இப்பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. 15.50 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 6. ஆராய்ச்சி.

மூலிகை மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதில் சிறந்த முறைகளைக் கண்டறியவும் அதிக விளைச்சலையும், வருவாயையும் தரும் வணிகச் சிறப்புள்ள மருந்துச் செடிகள், வாசனைச் செடிவகைகளை வளர்க்கவும் இத்துறை ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. சின்கோனா மற்றும் இதர மருந்து நறுமண வகைத் தைலங்களின் தரம், பயிர்கள் பற்றி விரிவான முறையில் ஆய்வு நடத்திட தாவர இயல் அறிஞர் தலைமையில் ஓர் ஆராய்ச்சி பிரிவு 1976 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

1980–81 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடம் மருந்து மற்றும் மணம் கமழும் தைலங்களின் ஆராய்ச்சிப்பணியை ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் குனைனிலிருந்து குனிடின் ( Quindine ) எடுப்பது பற்றிய ஆராய்ச்சிப்பணியை லக்னோவிலுள்ள "சென்ட்ரல் டிரக்ஸ் ரிசர்ச் லேபரட்டரி" (Central Drugs Research Laboratorics) யிடம் ஒப்படைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

128-150—19

[1980 ஜூலை 10

7. திட்டப் பணிகள்,

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்
கள் செயல்பட்டு வருகின்றன (1978-79 முதல் 1982-83 வரை) :—

1. சின்கோனா முனைப்புச் சாகுபடி (Intensive Culti-
vation).

2. மருந்து மற்றும் நறுமணச் செடிகளை வாணிப முறை
யில் பயிர் செய்தல்.

3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றிய நுணுக்க
மான ஆய்வினை மேற்கொண்டு, சாகுபடியினை வளர்ச்சி செய்
தல்.

4. இத்துறையின் தொழிலாளர்கள், அதிகாரிகள் மற்றும்
பணியாளர் ஆகியோருக்கு குடியிருப்பு, மருந்துவம், கல்வி,
போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் அளித்தல்.

5. தொழிற்சாலையை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு
பகுதியாக, இத்துறையிலுள்ள இரு தொழிற்சாலைகளுக்கும்
தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல்.

6. நாயுடு அம்மா குழு அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை
களின்படி, நடுவட்டம் மருந்து மற்றும் மணம் தரும் தைலங்கள்
தொழிற்சாலையில் தேயிலைக் கழிவிலிருந்து "கஃபின்" (Caffine)
உற்பத்தி செய்யும் திட்டம் 13-10-79-ம் நாளிட்ட அரசு வனம்
மற்றும் மீன் துறையின் ஆணை எண் 1100-ன்படி ஒப்புதல் அளிக்
கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1—3—1980 முதல் இயங்கி
வருகிறது.

மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள்.

1978-83 ஆம் ஆண்டுகளுக்கு இத்துறைக்கு கீழ்க்காணும்
மத்திய அரசின் பொறுப்பேற்ற திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது:

1. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் டயஸ்
கோரியா பயிரிடவும், அதிலிருந்து டயஸ்ஜெனின் பிரித்தெடுப்
பதற்கும் உள்ள திட்டம் :

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்
ரூ. 80.25 இலட்சம் மதிப்புள்ள டயஸ்கோரியா பயிரிடுதலும்,
அதிலிருந்து ஆண்டொன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் உற்பத்தி



1980 ஜூலை 10]

செய்வதற்கான தொழிற்சாலை கட்டுவது 1978-79 ஆம்
ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 9-1-1979 அன்று இத்
தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு அத்தொழிற்
சாலைக்கு "தமிழ்நாடு ஸ்டெராய்ட்ஸ்" (Tamil Nadu
Steroids) என பெயரிடப்பட்டுள்ளது. தொழிற்
சாலைக்குத் தேவையான இயந்திரங்களும் கருவிகளும் தயாரித்து
அவற்றினை தொழிற்சாலையில் பொருத்தும் பணி ஆம்மு
விலுள்ள வட்டார ஆய்வுக்கூட நிறுவனத்திடம் ஒப்படைக்
கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைக் கட்டுதல், அலுவலகம் கட்டுதல், தொழி
லாளர் குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகள் பொதுப்பணித்
துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள்
நடைபெற்று வருகிறது.

1978-79 ஆம் ஆண்டில் 16 ஹெக்டேர் நிலப்பரப்பில் டயஸ்
கோரியா பயிர் வேளாண்மை செய்யப்பட்டது. 1979-80 ஆம்
ஆண்டில் 20 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி
செய்யப்பட்டுள்ளது. வரும் 1980-81 ஆம் ஆண்டில் 20
ஹெக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 400 தொழிலாளர்களுக்கு
நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கும்.

2. மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பழனி
மலை மேல்தள குன்றுகளில் ஜெரேனியம் பயிரிடுதல்.

மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பழனி
மலை மேல்தள குன்றுகளில் 160 ஹெக்டேர் நிலப்பரப்பில்
ஜெரேனியம் பயிரிடும் திட்டம் ரூ. 52.55 இலட்சங்கள் செலவில்
1978-79 (மார்ச் 79) ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1979-80
ஆம் ஆண்டில் 4.25 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி மேற்
கொள்ளப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டில் 36 ஹெக்டேர்
நிலப்பரப்பில் இப்பயிர் வேளாண்மை செய்யப்படும். இத்
திட்டத்தின் மூலம் சுமார் 200 தொழிலாளர்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும்.

மேலும் தமிழ்நாடு வனத் தோட்ட வாரியத்தினரால்
(TAFCORN) கொடுக்கப்படவிருக்கும் கொடைக்கானலுக்கு
அருகிலுள்ள பெருமாள் மலை என்னுமிடத்தில் 200 ஹெக்டேர்
நிலப்பரப்பில் ஜெரனேியம் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 10

3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனெல்லா பயிரிடும் திட்டம்.— நீலகிரி மலைப் பகுதியில் ரூ. 121·04 இலட்சம் செலவில் 1980–81 ஆம் ஆண்டில் ஜாவா சிட்ரோனெல்லா பயிர் செய்யும் திட்டமொன்று வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 200 நிரந்தர தொழிலாளர்களுக்கும், மற்றும் 100 தற்காலிக தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டிலேயே அமுல்படுத்தப்படும்.

8. நிதி ஆதார அமைப்பு.

1978–79 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி (31—3—1979) சின்கோனாத் துறையின் சொத்து, இருப்பு இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 5,00,67,981 ஆகும். இதன் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| நிலையான சொத்துக்கள்— | ரூபாய். |
| சின்கோனாத் தோட்டங்கள் .. .. | 1,32,70,841 |
| விறகுக்குப் பயன்படும் மர வகைகள், மருந்து மற்றும் வாசனைத் தைலப் பயிர்கள் .. .. .. .. | 43,99,093 |
| கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள் போன்ற இதர வகைச் சொத்துக்கள் .. .. | 1,17,76,594 |
| தற்காலிக இருப்புக்கள்— | |
| பண்டங்கள், நிறைவு பெற்ற பொருட்கள், மற்றும் உற்பத்தி வேலைக்கான கையிருப்பு பொருட்கள், சின்கோனா மரப்பட்டை, பல்வகைப் பாக்கி இனங்கள் .. .. .. .. | 2,06,21,453 |
| மொத்த மதிப்பு .. | 5,00,67,981 |



1980 ஜூலை 10]

9. இத்துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்.

சின்கோனாத் துறையின் அண்மைக்கால சாதனைகளுள் குறிப்பிடத்தக்கவை கீழே குறிக்கப்பட்டுள்ளன. அவை :—

1. சின்கோனாப் பட்டையிலிருந்து கொய்னாப் பொருட்களைத் தயாரிக்கும்போது தேங்கிப் போகும் சின்கோனா பெப்ரிபியூஜ் (Cinchona Febrifuge) என்ற துணைப்பொருளிலிருந்து குனைன் சல்பேட், மற்றும் குனைடின் சல்பேட் தயாரித்தல்.

2. சுற்றுப்புறங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் இருந்து கிடைக்கும் தேயிலைக் கழிவிலிருந்து கஃபீன் (Caffeine) தயாரித்தல்.

3. குடும்ப நலத் திட்டத்தில் பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகளில் அடங்கிய ஹார்மோன் (Hormone) போன்றவற்றைத் தயாரித்திட மூலப்பொருளான டயாஸ்ஜெனின் என்ற பொருளை இத்துறையில் பயிரிடப்படும் டயஸ் கோரியா கிழங்கிலிருந்து சோதனை அளவில் தயாரிப்பது.

4. கொசுக்களை விரட்டும் "சினோமாஸ்" (Cinomas) என்னும் களிம்பும், "சின்ஸ்ப்ரே" (Cinspray) என்ற தெளிப்பானையும் பாமர மக்களின் வாங்கும் சக்திக்கேற்ப குறைந்த விலையில் தயாரித்து விற்பது.

5. "சின்பிரஷ்" (Cinfresh) என்ற கிருமி பற்றுதல் தெளிப்பானும், "சினோரமா" (Cinorama) என்ற வாசனைத் திரவியத்தையும் தயாரித்து விற்பனை செய்தல் ஆகியனவாகும்.

6. இத்துறையில் புதிய நிலங்களில் சாகுபடி செய்யும் வேலை மதுரை மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10. வரவு-செலவுத் திட்டம்.

(அ) மானியக் கோரிக்கை எண் 25 (சின்கோனா)—

வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 186·48 இலட்சம் 1979–80-க்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், திருத்திய மதிப்பீட்டின்படி ரூபாய் 167·12 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

(1)980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—

1980–81 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 177·80 இலட்சம், 1980–81 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஏற்பட்ட இந்த அதிகப்படியான நிதி தேவை அவ்வாண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், மத்திய அரசு பொறுப்பேற்று இயங்கிவரும் திட்டப் பணிகளுக்காகவும் கோரப்பட்டது.

(ஆ) கோரிக்கை எண் 54—

தொழிலாளர்கள், துறை அலுவலர்கள், மற்றும் அரசு ஊழியர்களுக்கு மேற்கொண்டு அதிக அளவில் வசதிகளை செய்யவும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களை வாங்கவும், 1979–80 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 35·65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனைமலையிலுள்ள கொய்னாத் தொழிற்சாலையில் "உள் சுற்று இயக்க பிரிவு முறை"யில் (Closed Circuit extraction system) 1980–81 ஆம் ஆண்டு முதல் கொய்னாப் பொருட்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண்கள் 25, மற்றும் 54 ஆகிய தலைப்புக்களின்கீழ் 1979–80-க்குரிய வரவு-செலவுத் திட்ட திருத்திய மதிப்பீடு, மற்றும் 1980–81-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

11. தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டங்கள்.

1979–80-ல் தொழிலாளர்களுக்கு 90 வீடுகளும், மூன்று அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அதற்கான கட்டிட வேலைகள் நடைபெற்று வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில் இரண்டாம் பிரிவுத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு 110 வீடுகளும், 5 அலுவலர் குடியிருப்புகளும் கட்டுவதற்கு ரூபாய் 15·80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள குடியிருப்புகள் 1940 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு பழமையடைந்துவிட்டன. தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தரத்திற்கேற்றவையாக இவ்வீடுகள்



இல்லை. ஆகவே, இந்த பழைய வீடுகளுக்குப் பதிலாக, தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளை படிப்படியாக [illegible] திட்ட முறையில் கட்டுவது கருதப்பட்டுள்ளது. [illegible] பழையவற்றை [illegible] இப்புதிய குடியிருப்புகள் கட்டப்படுகிறது.

12. முடிவுரை

தொழிலாளர்களையே அதிக அளவில் உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தி இயங்கும் [illegible] துறை. ஆகவே, திட்டமிடுதல், தொழிலாளர்களுடைய நல்லுறவு நிலை, [illegible] தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் [illegible] மிக இணக்கமான உறவை தொடர்ந்து நிலைபெறச் செய்கிறது.

விலைவாசி புள்ளிகளின் அடிப்படையில் தொழிலாளர்களின் பஞ்சப்படி உயர்த்தப்பட்டு 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் ரூபாய் 6·77 [illegible] கொடுக்கப்பட்டு வருகிறது. ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியமும் இத்துறையில் வழங்கப்படுகிறது. இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டப்பணிகளால் திட்டம் செயல்படும் பகுதியிலுள்ள மக்களுக்கும், துறையில் பணியாற்றும் தொழிலாளர்களைச் சார்ந்து வாழும் அவர் தம் குடும்பத்தினருக்கும் அதிக அளவில் புதிய வேலை வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்துறையின் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்காக நிர்வாகக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மூன்று மாதத்திற்கொருமுறை நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்று வருகின்றது.

**320. தொழில்கள்—மானியக் கோரிக்கை எண் 25 (சின்கோனா).**

| விவரங்கள். (1) | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. 1979–80. (2) | திருத்திய மதிப்பீடு 1979–80. (3) | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1980–81. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| நெறிப்படுத்துதல் .. .. | 8·03 | 8·78 | 9·27 |
| மலைத் தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை). | 57·62 | 60·03 | 57·15 |
| தொழிற்சாலைகள்— | | | |
| (தடுவட்ட மருந்து, தாவர தைலத் தொழிற்சாலை, மற்றும் ஆனைமலை கொய்னாத் தொழிற்சாலை) .. .. .. | 12·83 | 12·86 | 13·20 |
| விற்பனை .. .. .. | 1·28 | 1·22 | 1·35 |
| திட்டப்பணிகள் (ஆய்வு மற்றும் திட்டம்) .. .. .. | 68·72 | 52·23 | 63·51 |
| வட்டி .. .. .. | 38·00 | 32·00 | 33·50 |
| மொத்தம் .. | 186·48 | 167·12 | 177·80 |

**526. முதலீட்டுச் செலவு.**

**மானியக்கோரிக்கை எண் 54 (சின்கோனா).**

| | | | |
|---|---|---|---|
| கட்டிடங்கள் .. .. .. | 57·55 | 22·00 | 32·65 |
| கருவிகளும், தளவாடங்களும் | 11·00 | 11·00 | 3·00 |
| | 68·55 | 33·00 | 35·65 |
| ஆக மொத்தம் .. | 255·03 | 200·12 | 213·45 |



## இணைப்பு III.

[144-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**கோரிக்கை எண். 47.**

**செய்தி-மக்கள் தொடர்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.**

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொது மக்கள் மற்றும் பத்திரிகை உலகுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் கொள்கைள், திட்டங்கள், செயல்கள், சாதனைகள், ஆகியவை, பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள், திரைப் படங்கள், பொருட்காட்சிகள், நாடகம்-கலை நிகழ்ச்சிகள் மற்றும் நூல் வெளியீடுகளாக இத்துறையின் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்களின் குறைகளை, தேவைகளை அரசுக்கும், அரசின் நிர்வாகத் துறைகளுக்கும் எடுத்து விளக்கும் பணியும் இத்துறையினால் மேற்கொள்ளப் படுகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் கீழுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும், ஓரளவு ஒருமுகப்படுத்தப் பெற்று இந்தத் துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப் படுகின்றன. இத்துடன் செய்தி-மக்கள் தொடர்புத்துறை பல விளம்பரங்களை தானே தயாரித்தும் வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கைகளை திட்டங்களைப் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

**விழாக்கள் :**

நாட்டுமக்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளையும் மக்களுக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களின் பெருமைகளையும் எடுத்து விளக்குவதற்காக விழாக்களையும், பெருந் தலைவர்களின் பிறந்த நாள் விழா, நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் இத் துறை நடத்துகிறது.

1978 ஆம் ஆண்டிலும், பின்னர் 1979–80 ஆம் ஆண்டிலும் திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசனார், காயிதேமில்லத், காமராஜ், வ. உ. சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கார்,

[1980 ஜூலை 10

முத்துராமலிங்கத் தேவர், ஜவகர்லால் நேரு, இராஜாஜி' நேதாஜி ஆகியோரின் விழாக்கள் கொண்டாடப்பட்டன' குடியரசு நாள், விடுதலை நாள், ஐக்கிய நாடுகள் சபை நாள்' ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா :

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்களின் தொடர்ச்சி யாக அவரது வாழ்க்கையையும் கொள்கைகளையும் விளக்கும் ஒலி-ஒளி அரங்க காட்சிகள் சென்னையிலும் திருச்சிராப்பள்ளி யிலும் நடத்தப்பட்டன. இந்த ஒலி-ஒளி அரங்கக் காட்சிகள் பல்லாயிரக் கணக்கான மக்களையும் பல்வேறு அறிஞர் பெரு மக்களையும் கவர்ந்து அவர்களின் பாராட்டுகளையும் பெற் றுள்ளது. வரும் மாதங்களில் இக்காட்சியினை, தஞ்சாவூர், மதுரை ஈரோடு ஆகிய இடங்களில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. பெரியாரின் பொன்மொழிகள் அடங்கிய '' பெரியாரின் புரட்சி மொழிகள் '' என்ற புத்தகம் மலிவுப் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் நிபுணர் குழு, '' பெரியார் வாழ்க்கை வரலாறு '' என்ற நூலையும் '' குழந்தைகளுக்கான பெரியாரின் வாழ்க்கைப்பட விளக்கம் '' என்ற நூலையும் தயாரித்து வருகிறது. '' பெரியாரின் வாழ்க்கை வரலாறு '' என்ற நூல் வெளியீட்டுப்பணி முடி வுற்றதும் பிற மொழிகளிலும் இப் புத்தகத்தை வெளியிடும் திட்டத்தை அரசு ஆலோசிக்கும். 1922 ஆம் ஆண்டில் '' வைக்கம் '' என்ற இடத்தில் பெரியார் அவர்கள் தீண்டா மைக்கு எதிராகப் போராடிய வரலாற்றின் நினைவாகக் கேரளத்தில் வைக்கம் என்ற இடத்தில் பெரியாரின் நினைவுச் சின்னம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையில் ரூ. 94 இலட்சம் செலவில் பெரிய அளவில் அரங்கம் ஒன்றையும், அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றையும் அமைத்திடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பெரியார் சிறைப்பட்டிருந்த சிறைகளில் நினைவுக் கற்பலகை களை நிறுவிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும் பெரியாரின் பொன்மொழிகளைக் கொண்ட தூண்கள் அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பொருட்காட்சிகள் :

நமது மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக, இத்துறை பங்கு பெற்று, அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும்



1980 ஜூலை 10]

சாதனைகளையும் விளக்கும் பணியினை ஆற்றி வருகிறது. இம்மாநிலத்தில் பொருட்காட்சிகள் நடத்துவது, மற்றும் அப்பொருட்காட்சிகளில் அரசுத் துறைகள் பங்கு கொள்வது பற்றிய அரசின் கொள்கைகளை இத்துறை கவனிக்கிறது. அரசுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில் தனி நபர்களோ அல்லது தனி நிறுவனங் களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லை யென்று அரசு முடிவெடுத்துள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது இடங்களில் உள்ளாட்சி நிறுவனங் களும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தக, கல்வி நிறுவனங் களும் பொருட்காட்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றன. அரசின் சார்பில் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பொருட் காட்சி சேலம் நகரில் மூன்றாவது முறையாக இவ்வாண்டு நடத்தப்படவிருக்கிறது. கோயம்புத்தூரில் 1979 ஆம் ஆண்டு தொடங்கி இரண்டாவது தடவையாக இவ்வாண்டு மார்ச்- மே மாதங்களிலும், மதுரையில் முதல் முறையாக ஏப்ரல் ஜூன் மாதங்களிலும் இத்துறை பொருட்காட்சிகளை நடத்தி யுள்ளது, திருச்சிராப்பள்ளியிலும் இவ்வாண்டு அரசு பொருட் காட்சி நடத்த திட்டமிட்டிருக்கிறது. அரசு நடத்தும் இப் பொருட்காட்சியின் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் அடைவதோடு, பாராட்டுக்களையும் அளித்து வருகின்றனர்.

செய்தி நிலையங்கள் :

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித் தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றியும் செய்திகளையும் விளக்கங்களையும் பொது மக்களுக்கு வழங்கு கின்றன. படிப்பகங்களையும் நடத்தி வருகின்றன.

நினைவுச் சின்னங்கள் :

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம் இத்துறையின்கீழ் உள்ளது. மேலும் இதுவரை, நினைவில்லங்களின் பராமரிப்பு பல்வேறு துறைகளின்கீழ் இருந்து வந்தது. தற்பொழுது பொதுப்பணித் துறையின் கீழ் இருந்த சென்னை அறிஞர் அண்ணா சதுக்கம், கிண்டி காமராஜர் நினைவாலயம், கிண்டி இராஜாஜி நினைவாலயம், கன்னியாகுமரி காந்தி மண்டபம், விருதுநகர் காமராஜர் நினைவு இல்லம், ஈரோடு பெரியார் அண்ணா நினைவகம், தொரப்பள்ளி இராஜாஜி நினைவில்லம், சென்னை காமராஜர் நினைவு இல்லம், கல்வித் துறையின் கீழ் இருந்த பாரதியார் நினைவு இல்லம் (எட்டய புரம்) ஆகியவை செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

[1980 ஜூலை 10

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றியுள்ள
பகுதியை, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகிய
பகுதியாக மாற்ற ரூ. 54·42 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிற்
கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது இத் திட்டத்
தின்கீழ் கடைகள், ஓய்விடங்கள் கட்டுவதுடன் கோட்டத்தைச்
சுற்றி அழகிய பூங்காக்களை அமைக்கவும் திட்டமிடப்பட்
டுள்ளது.

குமரி முனையின் கடற் பகுதியில் விவேகானந்தர் பாறையை
அடுத்துள்ள சிறுபாறையில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில்,
உலகினர் போற்றும் வகையில், திருவள்ளுவர் சிலை ஒன்றை
அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

காஞ்சீபுரத்தில் அண்ணா வாழ்ந்த இல்லத்தை அரசு விலைக்குட்
பெற்றிடுவதற்கான முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது நினைவக
மாகப் போற்றப்படும். இந்த இல்லத்தை வாங்க ரூ. 2 இலட்சம்
தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இல்லத்தை அரசு விரைவில்
பெறும். மகாகவி பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணியிலுள்ள
இல்லத்தை வாங்கவும் அரசு ஆலோசித்துள்ளது.

## கலைவாணர் அரங்கம், சென்னை, அண்ணா கலையரங்கம், வேலூர்.

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தையும், வேலூரி
லுள்ள அண்ணா கலையரங்கத்தையும் இத்துறை நிர்வகித்து
வருகிறது. வேலூர் அண்ணா கலையரங்கில் கலை நிகழ்ச்சி
களுக்கு அனுமதிப்பதோடு திரைப்படங்களும் காட்டப்படு
கின்றன.

குளிர்சாதன வசதியுள்ள கலைவாணர் அரங்கம், அரசாங்க
விழாக்கள், பிற விழாக்கள் கலை நிகழ்ச்சிகள் இவற்றுக்கு
ஒதுக்கப்படுகிறது. விழாக்கள் நடைபெறாத சமயங்களில்
நாளொன்றுக்கு ஒரு காட்சி வீதம் திரைப்படம் நடத்த சில விதி
களின் கீழ் அனுமதிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் பயனாக
சமீப ஆண்டுகளில் இந்த அரங்கின் வருமானம் பெருகியுள்ளது.
தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்து திட்டமிட்டபடி வாடகை
பெறப்படுகிறது. ஆனால் அரசுத் துறைகளுக்கு சலுகையில்
அனுமதிக்கப்படுகிறது.

இராஜாஜி மண்டபம், காந்தி இல்லம், சீரணி அரங்கம்
ஆகியவையும் இத்துறையின் நிர்வாகத்தில் உள்ளன.



1980 ஜூலை 10]

இத்துறையினரால்
தமிழரசு இதழ் (தமிழ்—ஆங்கிலம்), 1970 ஆம் ஆண்டு சூலையில்
வெளியிடப்படும் இதழாகும். முறை வெளியீடாகவும்,
இந்த இதழ் தமிழில் மாதம் இரு
ஆங்கிலத்தில் மாதம் ஒருமுறை வெளியீடாகவும் துவக்கப்பட்டது.
இந்த இதழ், அரசின் செய்திகளையும் கொள்கைகளையும்
பரப்ப முனைவதுடன் அரசின் ஒருங்கிணைந்த திட்டங்களையும்
பொது மக்களுக்கு அறிவிக்கிறது. மாதம் இரு முறை வரும்
தமிழ் இதழ், சராசரி 45,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.
மாதம் ஒரு முறை வரும் ஆங்கில இதழ் சுமார் 3,000 பிரதிகள்
வெளியாகின்றன. இத்துறையின் நிர்வாகத்திலுள்ள தமிழரசு
அச்சகத்தில் இவை அச்சிடப்படுகின்றன. இந்திய அரசின் வெளி
யீடான "திட்டம்", அறநிலையத்துறையின் "திருக்கோயில்"
தொழிலாளர் துறையின் "உழைப்பவர் உலகம்", தமிழ்நாடு
மின்சாரத் துறையின் "மின் குடும்பம்", கல்வித் துறையின்
"தமிழ்க் கல்வி" ஆகிய இதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.
1980 ஜனவரி முதல், சென்னை உயர்நீதி மன்றத்தின் "தீர்ப்புத்
திரட்டு" என்ற இதழும், "குற்ற வழக்குத் தீர்ப்புத் திரட்டு"
என்ற இதழும் இங்கு அச்சிடப்படுகின்றன. இவற்றுடன்,
அரசின் அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள், சிறுவெளியீடுகள்,
விண்ணப்பங்கள் முதலியனவும் இந்த அச்சகத்தில் அச்சா
கின்றன.

## திரைப்படங்களுக்கு உதவித் தொகை :

இம்மாநிலத்தில், திரைப்படத் தொழிலை எதிர்நோக்கியுள்ள
பல இடர்ப்பாடுகளில், கூடுதலான தயாரிப்புச் செலவு, படங்
களின் தரக் குறைவு இவை இரண்டும் அடங்கும். தேசிய அளவில்
மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை
உள்ளடக்கி தரமான திரைப்படங்கள் உருவாவதை ஊக்குவிப்ப
தற்காக, ஒவ்வொரு ஆண்டும், ஐந்து படங்களுக்கு, ஒவ்வொரு
இலட்ச ரூபாய் வீதம் அரசு உதவித் தொகை வழங்குகிறது.
இத்தகைய திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும்
குழு, அரசுக்கு ஆலோசனை நல்குகிறது.

## சிறந்த திரைப்படங்கள்—கலைஞர்களுக்குப் பரிசுகள்.

உயர்ந்த கலை உணர்வு, சிறந்த தொழில் நுணுக்கம் செறிந்த
பாராட்டுக்குரிய சிறப்பான படங்கள் தயாரிப்பதை ஊக்கு
விப்பதற்காக, ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம்
1978–79 ஆம் நிதி ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது.
இத் திட்டத்தின்கீழ் மிகச் சிறந்த திரைப்படங்கள், செய்திப்
படங்கள், குழந்தைகளுக்கான படங்கள், நடிக, நடிகையர்

தொழில் நுட்பக் கலைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு, ரொக்கப் பரிசும், விருதுகளும் வழங்கப்படுகின்றன. தேர்வுகள் இதற்காக அமைக்கப்படுகிற குழுவினால் நடத்தப்படுகின்றன.

நிதிநிலையற்ற திறன் வாய்ந்த, திரைப்படத் தயாரிப் பாளர்களுக்கு நிதி உதவி செய்திட திரைப்பட நிதி உதவிக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து, அரசு ஆலோசித்து வருகிறது. தயாரிப்பாளர்கள் தமிழில் மிகத் தரமான திரைப் படங்களைத் எடுக்க உதவுவதே இக்கழகத்தின் நோக்கம்.

அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும், பொது இடங் களிலும் தனியார் படப்பிடிப்பு நடத்த, அந்தந்த இடங்களை நிர்வகித்து வந்த பல்வேறு துறையினரை அணுகி, பல்வேறு இடங்களில் அனுமதி பெற்றுத்தான் படம் எடுக்கும் முறை இருந்து வந்தது. இம்முறையினால் திரைப்படத் தொழில் துறை யினர் பட்டுவந்த இன்னல்களை மனதிற்கொண்டு இம்முறை மாற்றப்பட வேண்டியது என அரசு தீர்மானித்தது. 1978 ஜூலைத் திங்களிலிருந்து இத்தகைய அனுமதி வழங்கும் முறையை மாற்றி ஒரே துறையின் மூலம் அனுமதி வழங்கலாம் என்ற முடிவின்படி, செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்கு நரிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் படப்பிடிக்கான அனுமதி வழங்கும் முறை திரைப் படத் தொழிலுக்கும், பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

## திரைப்படக் தொழில் நுட்பக் கல்லூரி.

1948 ஆம் ஆண்டில் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டு கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப் படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி கொடுத்து தேர்வு நடத்தி, வெற்றி பொற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோளாகும். அரசு அலுவலர்களையும் திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோ சனைக் குழு ஒன்று, இக்கல்லூரியின் மேம்பாட்டுக்கான ஆலோ சனைகளை நல்குகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து திரைப் படத் தொழில் நுட்ப நிலையத்தில் தொலைக் காட்சி சாதனங் களை நிறுவி பயிற்சி அளிக்க அவசியமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தற்போதுள்ள நவீன முறைகளை மாணவர்களுக்கு



புகட்டிட நவீன கருவிகள் நிறுவப்பட வேண்டியுள்ளன. அண்மை யில், இக்கல்லூரிக்கு, சில புதிய படப்பிடிப்புக் கருவி போன்ற சாதனங்கள் வாங்கப்பட்டன. நடப்பு ஆண்டில், படத் தொகுப்பு சாதனங்கள் இரண்டும், வண்ணத் தயாரிப்பு இயந் திரம் ஒன்றும், வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

படப்படிப்பு தளங்களும் திரைப்படத் தொழில் நுட்ப கல்லூரியிலுள்ள சாதனங்களும், விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப் படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவு கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பக் பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணி புரிய மாணவர்களுக்கு வாய்ப்பாகவும் அமைகிறது. படப் பிடிப்பு தளங்களை தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் முழுதும் பயன்படுத்தத்தக்க விதத்தில் படத் தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப் பெருக்கிட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இம்மாநிலத்தில் நடை பெறும் அரசின் ஆக்கப்பணிகளை, மக்கள் பங்கேற்கும்போது நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து படமாக்கி செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது. இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் பணிகளை, மக்களுக் குத் தேவையான செய்திகளை கருத்து விளக்கப் படங்களாக (டாகுமென்டரி) எடுத்து இத்திரைப்படப் பிரிவு வெளியிடு கிறது. இப்படங்களும் (35 மிலி மீட்டர் அளவில்) திரை யரங்குகளுக்கு மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளிடப் படுகின்றன. இப்படங்களின் (16 மிலி மீட்டர் அளவில்) பிரதிகள், கிராமப்புற மக்களுக்கு காட்டிட மாவட்டங் களில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன. சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள், தொழிலாளர் வாழும் குடியிருப்புப் பகுதிகள் ஆகிய வற்றில் காட்டுவதற்கு இப்படங்கள் மாநிலச் செய்தி நிலையத் திற்கும் அனுப்பப்படுகின்றன.

## தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.

1972-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம், பொறுப்பு வரையறுக்கப்பட்ட அரசு நிறுவனமாகும். தமிழ்நாட்டில் முழு நிறைவுபெறாத திரையரங்குகளைக் கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும்,

புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள்
திறந்த வெளி திரையரங்குகள் கட்டவும் திரைப்படக் கருவிகள்
வாங்கவும் நிதி உதவி செய்வது இக்கழகத்தின் நோக்கமாகும்.
இந்தக் கழகத்தின் செலுத்தபட்ட மூலதனம் ரூ. 35 இலட்சம்.
அரசு அளிக்கும் ரூ. 15 இலட்சம் நீண்ட காலக் கடனுடன்
ரூ. 50 இலட்சம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து மறுநிதி
ஒதுக்கம் செய்யும் வசதியும் உள்ளது.

இந்நாள் வரையில் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பளிப்புகள்
74 ஆகும். இவற்றில் 68 பேர் திரையரங்குகளைக் கட்டி
முடித்து திரைப்படக் ட்சிகள் நடத்துகின்றனர். ஒரு
திரையரங்கத்திற்கு அதிக சம் அளிக்கும் தொகை ரூ. 1.20
இலட்சம் ஆகும். இக்கழகம் இதுவரை ரூ. 84.83 இலட்சம்
கடன் தொகை அளிக்க ஒப்பளித்துள்ளது. இதில் ரூ. 83.60
இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் திரை
யரங்குகள் கட்டப்பட இக் கழகம் ஊக்குவிப்பதில் வெற்றி
கண்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1955
மற்றும் தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்துதல்)
விதிகள் 1957.

நிர்வாகம் :

தமிழ் திரைப்படத்துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம்,
தெலுங்கு, போன்ற மொழிப் படங்களின் கடுமையான
போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை நலிந்து
போன நிலையில் இருந்ததால் அதற்கு வலிவூட்டி வளர்க்க
இவ்வரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்
படுத்தியுள்ளது. இதன் காரணமாக தமிழ்த் திரைப்பட
உலகம் புத்துணர்ச்சியும் புது வேகமும் பெற்று வளர்ச்சி
அடைந்துள்ளது. இதனால் தமிழ்த் திரைப்படங்களுக்குப்
போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும்
நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரை
யிட்டு வரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு
12 வாரங்கள் தமிழ்ப் படங்களை திரையிட்டாக வேண்டு
மென்று விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

தற்போது, தமிழ்த் திரைப்படங்களின் வெளியீட்டு எண்
ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள்
இல்லாத நிலையைப் போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த
வெளித் திரையரங்குகளும், டூரிங் திரையரங்குகளும், செமி
பர்மனன்ட் திரையரங்குகளும் அமைக்க சட்டப்படி அனுமதி



வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்த்து, மாவட்ட ஆட்சி
தலைவர்கள் மற்றும் மாநகரக் காவல்துறை ஆணையர்
ஆகியோர் இதுபோன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
திரையரங்குகளுக்கு கட்டிட உறுதிச் சான்றிதழ் ஆகியவை
களை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும், சிரமங்
களையும் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதுடன், நடைமுறை
உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட
இலாக்காக்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளன. திரையரங்குகளின்
வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், 1957-ம் ஆண்டில்
தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு) விதிகள் நடைமுறைத்
தேவைக்கு தக்கவாறு திருத்தப்படுவதுடன் பொதுமக்களின்
நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட அரங்குகள் சுத்த
மாகவும், விதிகளில் கண்டவாறு வசதிகளைக் கொண்ட
தாகவும் இருக்க வேண்டுமென அடிக்கடி சோதனைகள் நடத்
தப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன. சென்னை போன்ற நகரங்
களில் சில பகுதிகளில் திரையரங்குகள் குவிவதைத் தடுக்கவும்,
பரவலாகப் பொதுமக்கள் தாங்கள் வாழும் பகுதிகளுக்கு
அருகிலேயே திரைப்படங்களைக் காணும் வசதிகளை உருவாக்க
வேண்டும் என்ற அடிப்படையில், விஸ்தரிப்புப் பகுதிகளில்
வசதிமிக்க சிறிய திரை அரங்குகள் அமைப்பதை அங்கீகரிக்கும்
திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

தமிழகத் திரைப்படத் தணிக்கை முறையில் சென்னையி
லுள்ள தணிக்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் திரைப்
படத்துறைப் பற்றி போதிய அறிவும் அனுபவமும் இல்லாத
வர்களாக அமையக்கூடாது என்பதைச் சுட்டிக் காட்டி
மாநில அரசைக் கலந்தாலோசித்து அக்குழுவை மாற்றி
யமைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு சென்ற ஆண்டு
எழுதப்பட்டு அதன் காரணமாக மத்திய அரசு தமிழ்நாடு
அரசைக் கலந்து கொள்ளும் முறை உருவாகியுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் வெறுக்கத்தக்க பண்பாடற்ற
ஆபாசக் காட்சிகள் இடம் பெற அனுமதிக்கக்கூடாது என்ற
வகையில் இவ்வரசின் கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்
கட்டுள்ளது.

சென்னை மற்றும் பிற நகரங்களில் ஆபாசத் திரைப்பட
சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடை செய்யவும், திரைப்பட
சுவரொட்டிகளைத் தணிக்கை செய்யவும் சட்டமியற்றும் கருத்,
அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

[1980 ஜூலை 10

## சுற்றுலாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

'சுற்றுலா' அகில உலகிலும் ஒரு தொழில் ஆக வளரும் துறையாகும். நாட்டின் மேம்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் 'சுற்றுலா' முக்கிய பங்கு வகிக்கிறது என்று உலகிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றும் கருதுகின்றன. சுற்றுலா பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நேர்முகமானதும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தருகிறது. சுற்றுலா வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடல்லாமல் நாட்டின் தொழில் வளர்ச்சிப் பகுதிகளை மேம்படுத்துவதுடன் ஒரே பகுதியில் குவியும் செல்வம் பல பகுதிகளுக்குப் பயன்பட வழிகோலுகிறது. மேலும் சுற்றுலா வளர்ச்சி கைவினைப் பொருட்கள் உற்பத்திக்கும், சிறு தொழில் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகிறது. சமூக கலாச்சார வளர்ச்சிக்கும் தொடர்புக்கும் பெரிதும் உதவியாயிருக்கிறது. சுருங்கக் கூறின் சுற்றுலா தொழில் வளர்ச்சி, நாட்டின் பொருளாதார சமூக, கலாச்சார வளர்ச்சி மற்றும் நாடுகளிடையே நம்பிக்கை நல்லுறவு ஆகியவற்றில் பயன்மிக்க திருப்பத்தை உருவாக்கி வருவதை உணரலாம்.

ஏராளமான சுற்றுலா மையங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், அழகைக் கொட்டும் அருவிகளும், அடவிகளும், பார்ப்போரைப் பரவசப் படுத்தும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் அழகிய நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் செழிக்கும் நம் தமிழகத்தை அலங்கரிக்கின்றன. நீண்ட சாலை வசதிகளும், நாளும் வளர்ந்து வரும் போக்குவரத்து வாய்ப்புகளும் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன. எனவே சுற்றுலாத் தொழில் எந்தவொரு முதலீடும் மிக நல்ல பலனை அளிக்கும் நிலை உருவாகி வருகிறது.

நமது மாநிலத்தில் 1971 ஆம் ஆண்டு மே திங்களில் சுற்றுலாத் துறை அமைக்கப்பட்டது. சுற்றுலா இயக்குநர் அலுவலகமும், சுற்றுலாச் செலயகத்துறையும் தலைமைச் செயலகத்தின் பகுதியாகப் பணி ஆற்றி வருகிறது. சுற்றுலா மாளிகைகள், சுற்றுலா



1980 ஜூலை 10]

சொகுசுப் பேருந்துகள் நிருவகிக்கும் பணி முதலிய வணிக முறை நடவடிக்கைகள் 1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப் பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மதுரை, உதகை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. 1979 ஆம் ஆண்டு ஆக்டோபர் திங்கள் 31-ம் நாளில் சிதம்பரத்தில் ஒரு சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகங்கள் பயணிகளுக்கு சுற்றுலாத் தகவல்களை அளித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதுடன் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப்பணி, வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு இயங்கி வருகின்றன.

மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமேஸ்வரம், கோயம்புத்தூர், இரயில் நிலையங்களிலும், கொடைக்கானலிலும் சுற்றுலாத்தகவல் நிலையங்கள் செயல்படுகின்றன. மீனம்பாக்கம் விமான நிலையத்திலும் ஒரு சுற்றுலாத் தகவல் நிலையம் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ஆம் நாள் அன்று திறக்கப்பட்டுள்ளது. சென்னை மத்திய இரயில் நிலையத்திலும், திருநெல்வேலி இரயில் நிலையத்திலும் சுற்றுலா தகவல் நிலையங்கள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யத் தக்க வகையில், புது தில்லியிலும் ஒரு சுற்றுலாத் தகவல் நிலையம் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வளர்ந்து வரும் சுற்றுலா திட்டங்களை சீரமைக்கவும், மேலும், வளர்க்கவும், இயக்குநர் அலுவலகத்திலும், மாவட்ட அலுவலகத்திலும் மேலும் பணியாளர்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1980--81 ஆம் ஆண்டில் சுமார் மூன்றுஇலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இனி வரும் ஆண்டுகளில் சுற்றுலாவிற்காக உள்நாட்டு வெளிநாட்டுப் பயணிகள் வந்திறங்கும் பகுதியாக தமிழகத்தைக் கவர்ச்சியுறச் செய்யும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். 1979 ஆம் ஆண்டில் 7,64,871 வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவுக்கு வந்ததில் தென்னகத்துக்கு வந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 4,82,000 ஆகும். இப்போதைய சுற்றுலா வளர்ச்சியின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு சராசரி 15 சதவீதமும், சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து, 1985ஆம் ஆண்டு முடிவில் சுமார் 11,16,000 வெளிநாட்டுப் பயணிகள் வருவார்கள் என்று மதிப்பிடப்படுகிறது.

[1980 ஜூலை 10

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும், அதிக சுற்று லாப் பயணிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவும் இருக்கும் வசதிகளை மேலும் விரிவுபடுத்தவும் ஆன அடிப்படை யில் திட்டமிடுதல் வேண்டும்.

சுற்றுலாத் துறை, தனது திட்டங்களை மேம்படுத்த, போக்கு வரத்து, சுகாதாரம், நெடுஞ்சாலை, இரயில்வே, உள்ளாட்சித் துறை முதலிய துறைகளின் திட்டங்களுடன், சுற்றுலாத் திட்டங் கள் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல் சிறந்த பலனை அளிக்கும் என்று கருதுகிறது.

சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட முக்கியமான சுற்றுலா மையங் களில் அடிப்படை வசதிகளை விரிவாக்க உத்தேசித்துள்ளது:—

மாமல்லபுரம் :

குடவரைக் கோவில்கள், பாறைச் சிற்பங்கள், நீண்ட பெருங் கடற்கரை, ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற சூழ் நிலை முதலிய நலன்களால் உலகத்தின் உன்னதச் சுற்றுலாத் தலமாக மாமல்லபுரம் திகழ்கின்றது.

மத்திய அரசின் பரிந்துரைக்கேற்ப மாமல்லபுர வளர்ச்சிக் கான செலவு மதிப்பீடுகளுடன் உரிய திட்டங்களைத் தயாரித்திட கட்டிடக்கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. அந்நிறு வனம் திட்ட அறிக்கை ஒன்று தயாரித்து வழங்கியது. திட்ட அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசை முதல் கட்டமாக ரூபாய் 25.00 இலட்சம் மாமல்லபுரத்தில் கீழ்கண்ட திட்டங்களை நிறைவேற்ற நிதி உதவி அளிக்குமாறு கோரப்பட் டுள்ளது.

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | | மொத்த மதிப்பு. (2) (ரூபாய் இலட்சத்தில்) | 1980—81. (3) |
|---|---|---|---|
| 1 புதிய சாலைகள் அமைத்தல் | .. | 66.50 | 5.00 |
| 2 பேருந்து நிலையம் அமைத்தல் | .. | 15.42 | 5.00 |
| 3 கடைத் தொகுதி அமைத்தல் | .. | 11.29 | 5.00 |
| 4 கடற்கரை கோயில் சீரமைத்தல். | பாதை | 55.50 | 5.00 |
| 5 பொழுதுபோக்கு அமைத்தல். | வசதிகள் | 25.00 | 5.00 |



1980 ஜூலை 10]

இது தவிர, இப்பகுதியின் இயற்கையான சூழ்நிலையையும் இயற்கை அழகையும் உள்ளவாறு பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தில், ரூபாய் 1,28,185 செலவில் 33.95 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. மாமல்லபுரத்திற்கு வருகின்ற குறைந்த வருவாய்ப்பிரிவு சுற்றுலாப் பயணி களுக்குப் பயன்படும் வகையில், அடிப்படை வசதிகளைக்கொண்ட ஓய்வுக் கூடம் (Rest shed) ஒன்று கட்ட 1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 1,81,814 வழங்கப்பட்டுள்ளது. இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. 1979–80 ஆம் ஆண்டில், 'மாமல்லபுரத்தில் "தானே சமைத்து உண்டு உலவி மகிழும் சுற்றுலாப் பயணங்களை" (Self-Catering holidays) ஊக்கு விக்கும் வகையில் ரூபாய் 3.50 இலட்சம் செலவில் முகாமிடங் களையும் (Camping site) உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப் படைக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரூபாய் 4·00 இலட்சம் செலவில் 1980-81 ஆம் ஆண்டில் "தானே சமைத்து உண்டு உலவி மகிழும்" மகிழ்விடங்களைச் சுற்றி புல்வெளி, பூங்காக்கள் அமைப்பதற்கும், திறந்தவெளி திரை அரங்கு ஒன்றினை அமைக் கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 8·00 இலட்சம் செலவில் கடற்கரை கோவில், ஐந்து ரதம், அர்ச்சுனன் தபசு முதலிய சிற்பங்களுக்கு இரவிலும் அழகூட்டும் சிறந்த விளக்கு வசதிகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் :

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான உள் நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், குறிப்பாக சமயப்பயணிகளை யும் கவரும் முக்கிய சுற்றுலாத் தலம் இராமேஸ்வரம் ஆகும். இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருவதற்கும் தமிழ்நாட்டி லிருந்து இலங்கை செல்வதற்கும் துறைமுகமாக இராமேசுவரம் விளங்குகிறது. இங்கு வரும் பயணிகளுக்குத் தக்க வசதி செய் யும் வகையில் சுமார் ரூபாய் 3.00 இலட்சம் செலவில் ஓய்வு அறைகளையும், கடற்கரையில் உடை மாற்றும் அறைகளையும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்க உள்ளன.

எழில் மிக்க சுற்றுலாப் பகுதிகளும், தொன்மை வாய்ந்த கோயிலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதிகளும், அழகிய கடற் கரை பகுதியும், கடலில் உள்ள தீவுத் திடல்களும் இராமேசு வரத்தை மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக்குவதற்கு உறுதுணை புரிகின்றன. எனவே, இராமேசுவரத்தை உலகின் சிறந்த சுற் றுலாத் தலங்களில் ஒன்றாக ஆக்கி அங்கு அதிக அளவில் வெளி

[1980 ஜூலை 10

நாட்டு பயணிகளையும் உள்நாட்டு பயணிகளையும் ஈர்க்கவல்ல முறையில் விரிவான திட்டம் ஒன்றினை அமைக்க அரசு முடிவு செய்து அதற்கான திட்டம் ஒன்றினை தீட்டித்தருவதற்கு டாக்டர் ஜே. கிருஷ்ணசாமி அவர்களை நியமித்தது. அவர் இராமேசு வரத்தினை சிறந்த முறையில் மேம்படுத்த ஒருங்கிணைப்புப் பெருந்திட்டம் ஒன்றினை சுமார் ரூ. 28 கோடி செலவில் விரிவான பல திட்டங்களுடன் அரசுக்கு வழங்கியுள்ளார். மேற் படி திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

கன்னியாகுமரி :

இந்தியத் துணைக் கண்டத்தில் தென்கோடி முனையாக கன்னியாகுமரி திகழ்கிறது. திருவனந்தபுரத்திலிருந்து இது சுமார் 80 கி.மீ. தொலைவில் உளளது. மூன்று கடல்கள் முத்தமிடும் குமரி முனையில்தான் ஒரே நேரத்தில் கதிரவன் மறைவதையும், முழு நிலவு எழுவதையும் காணும் அரிய வாய்ப்பு அமைந்துள்ளது. இந்தியாவின் அனைத்து மாநிலங் களிலிருந்தும் குமரியம்மன் ஆலைய வழிபாட்டிற்கு வந்து செல்லு கின்றனர். '' நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி '' என்று பாராட்டப்படும் எல்லையும் இதுதான்.

கடல் பாறையின் மேல் கலையழகு மிளிர அமைக்கப்பட் டுள்ள விவேகானந்தர் நினைவகமும் சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவிற்கு ஈர்த்து வருகின்றது. சுமார் பத்தாயிரம் அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகளும், ஐந்து இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் கன்னியாகுமரிக்கு ஆண்டுதோறும் வருகை தருகின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இங்கு வருகை தரும் குறைந்த வருவாய்ப் பிரிவு பயணி களுக்கு தங்குமிட வசதிகள் மிகக் குறைவாக உள்ளதால் துயிலக விடுதி ஒன்றினை ரூ. 5 இலட்சம் செலவில் 1980–81-ம் ஆண்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 81 இலட்சம் செலவில் புதியதாக ஒரு சுற்றுலா அலுவலகம் அமைக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியை ஒரு சிறந்த உலகச் சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டும் என்ற உத்தேசத்தில் 'அரசு' டாக்டர் ஜே. கிருஷ்ணசாமி அவர்களை பெருந்திட்ட அறிக்கை (Master plan) ஒன்று தீட்டித்தர கேட்டுக் கொண்டுள்ளது. அவர்களின் திட்டம் கிடைத்தபின் பல திட்டங்கள் நிறைவேற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது.



1980 ஜூலை 10]

மண்டபம்;

இந்தியாவில் தொன்மைமிக்க வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான இராமேசுவரத்தின் அருகில் உள்ளது மண்டபம். சுற்றுலாப் பயணிகளும், வழிபாட்டுப் பயணிகளுமாக இங்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே இருக்கிறது. இராமேசுவரத்தின் அருகில், '' உயிரினவியல் வல்லுநர்களின் ஆய்வுச் சுரங்கமெனச் '' சிறப்பிக்கப்படும் '' குருசடைத் தீவு '' உள்ளது. கடல் வாழ் உயிரினவியல் வல்லுநர்களும், உயிரினவியல் கல்வியில் ஆர்வம் உள்ள அனைத்து நாட்டு மாணவர்களும், ஆராய்ச்சியாளர் களும் மண்டபத்திலிருந்து இத்தீவிற்கு படகு மூலம் சென்று திரும்புகின்றனர். ஆகவே, சுற்றுலாப் பயணிகளின் தேவைக் கென மண்டபத்தில் ரூ. 2.30 இலட்சம் செலவில் குளியலறை கள், கழிவறைகள், இணைந்த ஓய்வுக் கூடம், சமையல் கூடங் கள், படகுத் துறை முதலிய வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன. ஓய்வுக் கூடத்திற்கு அருகில் மேலும் சில அடிப்படை வசதிகளைச் செய்ய 1980–81-ம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிச்சாவரம்;

தொன்மை வாய்ந்த, புகழ்மிக்க வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான சிதம்பரத்திற்குக் கிழக்கே 13 கிலோ மீட்டர் தொலை வில் பிச்சாவரம் உள்ளது. இயற்கையின் எழில் குலுங்கும் சோழமண்டலக் கடற்கரையில், சுமார் 3,000 ஏக்கர் பரப்பில் அடர்ந்து வளர்ந்த புதுவிதமான மரக்கூட்டங்களுக்கிடையே சிறு சிறு தீவுகளாய் அமைந்துள்ளது இப்பகுதி. படகு விடுவதற் கும், மீன் பிடிப்பதற்கும், நீர்ச்சறுக்காட்டத்திற்கும், கடல் அலையாடலுக்கும், பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கும், ஓய்வு பெறுவதற்கும் ஏற்ற ஒரு சிறந்த இடமாகவும் இது அமைந்துள்ளது. காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் ஏரியில் உள்ளது போல படகு வீடுகளையும் இங்கு அமைக்கலாம்.

உணவு வசதியுடன் கூடிய ஓய்வு விடுதியையும், குடில்களை யும், படகுத் துறையையும், பொழுதுபோக்கு வசதிகளையும் அமைக்க ரூ. 7.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணி கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

[1980 ஜூலை 10

## உதகமண்டலம்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகமண்டல ஏரிப் பகுதியின் அழகினை மேலும் மெருகூட்ட கீழ்க்கண்ட திட்டங்கள் அமுல்படுத்தப்பட இருக்கின்றன :—

(அ) ஏரிப் பகுதி அழகினை மெருகூட்டல்.

(ஆ) தொட்டபெட்டா சிகரத்தில் தொலைநோக்கி இல்லம் அமைத்தல்.

(இ) துயிலக விடுதி அமைத்தல்.

### உதகை ஏரிப்பகுதியினை அழகு படுத்துதல்.

கட்டிடக்கலை நிறுவனம் ஒன்றால் தயாரிக்கப்பட்ட பெருந்திட்டத்தின் அடிப்படையில் அரசு ரூ. 16.00 இலட்சம் செலவில் ஏரிப்பகுதியை மேம்படுத்தும் பணியினை மேற்கொண்டுள்ளது. இதுவரை இப்பணிக்கு ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

### தொட்டபெட்டா சிகரத்தில் தொலைநோக்கி இல்லம் அமைத்தல்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் தொட்டபெட்டா என்னும் இடத்தில் ரூ. 2.14 இலட்சம் செலவில் ஒரு தொலைநோக்கி இல்லம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொட்டபெட்டா தொலை நோக்கி வழியாக மைசூர் பீட பூமியையும், உயர்ந்து விளங்கும் நீலகிரி மலைச் சிகரத்தையும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் முக்குருத்தி சிகரத்தையும், மேல் பவானியின் கவினார்ந்த தோற்றத்தையும், குன்னூர், வெலிங்டன் நகர்களின் அழகிய காட்சிகளையும், எழில் மிகுந்த குந்தா அணையையும், காதரினா (Catherina falls) அருவியையும், கோயம்புத்தூர் சமவெளியையும் கண்டு களிக்கலாம். இத்தொலை நோக்கி இல்லம் ஜப்பானியக் கட்டிடப் பாணியில் நிறுவப்படும். இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளின் பரிசிலனை முடிவடைந்து வேலை துவங்கும் தருவாயில் உள்ளன.



1980 ஜூலை 10]

### துயிலக விடுதி அமைத்தல் :

குறைந்த வருவாய் பயணிகள் தங்குமிட வசதியை அதிகரிக்கும் பொருட்டு துயிலக விடுதி ஒன்று ரூ. 10.00 இலட்சம் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளன.

மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட புதிய பணிகளும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன :—

| திட்டத்தின் பெயர். | மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (அ) குழந்தைகள் பொழுதுபோக்கு மையம் அமைத்தல். | 2.50 |
| ஆ) புதிய சிறு புகைவண்டி வாங்குதல் .. .. | 1.50 |
| (இ) புதுத் தோட்டத்திலிருந்து, படகு குழாம் வரை தண்டவாளம் அமைத்தல். | 4.70 |
| (ஈ) கண்ணாடி மாளிகை, பூங்கா மற்றும் வசதிகள் அமைத்தல். | 2.46 |
| (உ) படகு குழாமில் கண்ணாடி மாளிகை அமைத்தல் (Mirror image). | 3.00 |
| (ஊ) மற்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அடிப்படை வசதிகளை அமைத்தல். | 5.00 |
| | 19.16 |

### ஏற்காடு:

ஏற்காடு ஏரியையும் சுற்றுப்புறத்தையும் அழகுற மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளை மேலும் ஈர்க்கும் வகையில் திட்ட மதிப்பீட்டுடன் கூடிய அறிக்கை ஒன்று தயாரிக்க கட்டிடக்கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் தோராயமாக, ரூ. 36.35 இலட்சம் செலவு மதிப்பீட்டில் படிப்படியாக அமுல் படுத்தத்தக்க வகையில் பல்வேறு திட்டங்களைத் தொகுத்து அரசுக்கு அளித்துள்ளது. ஏற்காடு ஏரிக்கு

[1980 ஜூலை 10

எழில் கூட்டும் பணிகளுக்கு இதுவரை ரூ. 6.72 இலட்சத்திற்கு
அரசு அனுமதி அளித்துள்ளது. இதில் ரூ. 3 இலட்சம்
மேலும் அடிப்படை வசதிகளை செய்யவும், துயிலக விடுதியினை
சீரமைக்கவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏற்காட்டிலுள்ள ''சீமாட்டி இருக்கை'' (Lady's Seat)
என்னும் இடத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு தொலை
நோக்கி இல்லம் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு இப்பணி
வேலை நடந்து வருகிறது. இத்தொலைநோக்கியின் வழியாக,
வண்ண விளக்கொளியில், மின்னி மிளிரும் சேலம் நகரின்
தோற்றத்தைக் கண்டு மகிழலாம்.

## கொடைக்கானல் :

கொடைக்கானல் ஏரியை மேம்படுத்தி,
சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ... அளிவில்
செலவு மதிப்பீட்டுடன் ... வகையில் அழகுபடுத்தத்
திட்ட அறிக்கை ஒன்று
தந்திட மற்றொரு கட்டிடக்கலை நிறுவனம் அமர்த்தப்பட்டது. தயாரித்துத்
அந்நிறுவனம், தோராயமாக, ரூ. 25,64,000 செலவு மதிப்பீட்
டில் பல்வேறு கட்டங்களில் செயலாக்கத் தக்க பல வகையான
திட்டங்களின் செலவு மதிப்பீட்டு விவர அறிக்கையைத்தந்துள்ளது.
ஏரியை அழகுபடுத்தும் பணியின் முதற்கட்டமாக,
1977–78 ஆம் ஆண்டில் சிறிய பணிகளுக்காக ரூ. 58,100 வழங்
கப்பட்டது. இரண்டாவது கட்டமாக, கொடைக்கானலில்
சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு சிற்றுண்டிச்சாலை கட்டுவதற்கும்
ரூ. 2.80 இலட்சம் ஒதுக்கப்பட்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகத்தின் சுற்றுலா மாளிகை பகுதியில் பணி தொடங்க
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொடைக்கானலில் '' கோக்கர்ஸ் வாக்''
(Coakers walk) என்னும் இடத்திலும் '' குறிஞ்சி
ஆண்டவர் கோயில் '' அருகிலும் இரண்டு தொலை நோக்கி
இல்லங்கள் ரூ. 1,60,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப் பயணிகள், இத்தொலை
நோக்கிகளின் மூலம் வடக்கில் பழனி ஆண்டவர் கோயிலின்
அழகுத் தோற்றத்தையும், தெற்கில், வைகை அணையின்
வனப்பான காட்சியையும் கண்டு மகிழலாம்.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதியை
அதிகரிக்கும் வகையில் துயிலக விடுதி ஒன்று (Dormitory)
அமைப்பதற்காக ரூ. 7.03 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்
பட்டுள்ளது. இப்பணியை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகம் விரைவில் துவங்க உள்ளது.



1980 ஜூலை 10]

## ஏலகிரி மலை :

ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும்
சிறப்புமிக்க இடம் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி
மலை. சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக 1978–79 ஆம்
ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் செலவில் தன்னிறைவு அமைப்புகள்
கொண்ட அறைகளுடன்கூடிய கூடம் ஒன்று கட்டப்பட்டு உள்ளது.
மேலும் இதற்கு வசதிகள் செய்ய 1980–81-ல் ரூ. 1.00 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

## விராலி மலை, ஆவுடையார் கோவில் :

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலையும், ஆவுடை
யார் கோவிலும் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களாகும். குறிப்
பாக, ஆவுடையார் கோவில் தமிழ் இலக்கிய போற்றுதலும்
அற்புதமான சிற்பக் கலையும் இணைந்த தலமாகும். இவ்
... இடங்களுக்கு வரும் பயணிகளுடைய வசதிக்காக விராலிமலை
யில் ஒய்விடமும், குடிநீர் வசதியும், ஆவுடையார் கோவிலில்
ஒரு சுற்றுலா மாளிகையும் அமைக்க கருதப்பட்டுள்ளன. இப்
பணிக்கென 1978–79 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையைத்
துறைக்கு ரூ. 1.50 இலட்சம் மான்யம் அளிக்கப்பட்டுள்ளது.
இந்து சமய அறநிலையத்துறை இம்மானியத்துடன் இந்த
இரு இடங்களுக்கான திட்டங்களையும் செயல்படுத்தும்.
விராலிமலையில் ஒய்வுக் கூடம் அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்
பட்டுள்ளது. பணி விரைவில் துவங்கும். ஆவுடையார் கோயிலில்
இடம் தேர்ந்தெடுத்தபின் வேலை ஆரம்பிக்கப்படும்.

## ஒகேனக்கல் :

இயற்கை எழில் மிக்க, சுற்றுலாக் கவர்ச்சி மிகுந்த இடங்
களுள் தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியும்
ஒன்றாகும். இந்த அருவி பிணி தீர்க்கும் தன்மை வாய்ந்தது
எனப் போற்றப் படுகிறது. இங்கு வரும் நடுத்தரப் சுற்றுலாப்
பயணிகளுக்கு ஏற்ற தங்குமிட வசதிகள் தற்போது இல்லை.
எனவே, நடுத்தர சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்யும்
பொருட்டு ஒகேனக்கல்லில் 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய்
3.00 இலட்சம் செலவில் தங்குமிடம் இணைந்த கூடம் ஒன்று
கட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது. இப்பணி தமிழ்நாடு
சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று
வருகிறது.

## குற்றாலம் :

விடுமுறைப் பயணிகளுக்கும், உடல் நலம் நாடிவரும் பயணி
களுக்கும் மகிழ்வூட்டும் ஒப்பிலாச் சுற்றுலாத் தலம் என்று புகழப்
படுவது குற்றலாம். ஆண்டுதோறும் பெருகிவரும் சுற்றுலாப்

[1980 ஜூலை 10

பயணிகளின் எண்ணிக்கையால் தங்குமிட நெருக்கடி இங்கு
வளர்ந்துகொண்டே வருகிறது. எனவே, குறைந்த வருவாய்ப்
பிரிவு சுற்றுலாப் பயணிகளுக்கும், சிக்கனச் சுற்றுலாப் பயணி
களுக்கும், பயன்படும் வகையில் ரூ. 7.97 இலட்சம் செலவில்
துயிலக விடுதி ( Dormitory ) ஒன்று கட்ட முடிவு செய்யப்
பட்டுள்ளது.

## பூம்புகாரும் கட்டபொம்மன் நினைவுக் கோட்டையும்.

பூம்புகாரையும், பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன்
நினைவுக் கோட்டையையும் சுற்றுலாத் துறை தனது பொறுப்பில்
ஏற்று நடத்தி வருகின்றது. மாநிலம் தழுவிய ஏராளமான
சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான முயற்சிகள் இங்கு
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1979–80 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் பூம்புகார்ச்
வளாகத்திற்குட்பட்ட (Poompuhar Complex) சாலைகளைச்
செப்பனிட்டு மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்குப்
பயன்படும் வகையில் மேல் நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்
கவும் திட்டமிடப்பட்டு, இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்
கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணி விரைவில் ஆரம்
பிக்கப்படும்.

## மாவட்ட உலாத்தலங்கள்:

மேலே கூறப்பட்டுள்ள சுற்றுலா மையங்களுடன் இம்
மாநிலத்தில் மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு வீதம்
சுற்றுலாத் தலங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக, தஞ்சை மாவட்டம் பேராவூரணிக்கு அருகில் உள்ள
கடற்கரையில் சரபேந்திர ராசன் பட்டினத்தில் அமைந்துள்ள
"மனோரா" நினைவுச் சின்னப் பகுதியை திருச்சி, தஞ்சை,
புதுக்கோட்டை மாவட்டங்களுக்கான, புகழ்மிக்க கடற்கரை
ஓய்வுத் தலமாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.
இது போன்ற திட்டங்கள் போக்குவரத்துக் கழகங்களின் உதவி
யுடன் மேம்படுத்தப்படும். அணைப்பகுதிகள் எழில் மிகுந்த
இயற்கைக் காட்சிகள் உள்ள பகுதிகள் அமைந்த பல இடங்களை
மேம்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளை மாவட்ட
உலாத்தலங்களாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்
மாவட்ட உலாத்தலங்களில் ஓய்வுக் கூடமும், உணவகமும்,
குடிநீர் வசதிகளும் பயணிகளுக்கு அளிக்க உத்தேசிக்கப்
பட்டுள்ளது.



1980 ஜூலை 10]

## இளைஞர் விடுதி (Youth hostel):

குறைந்த செலவில் இளைஞர்களுக்குத் தங்குமிட வசதிசெய்ய
1975 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் சென்னையில் ஒரு
இளைஞர் விடுதி, அதன் உள் நிர்வாகக் குழுவின் கருத்துப்படி
மத்திய அரசின் கருத்திற்கிசைய இலாப நட்டமற்ற அடிப்படை
யில் நடத்தப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்குப் பங்கு மூலதன உதவி

1971 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் தமிழ்நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழகத்திடம், வணிகரீதியான வளர்ச்சிப் பணிகள்
ஒப்படைக்கப்பட்டுள்ளன. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்
தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூபாய்
இரண்டு கோடியாகும். இதில், இதுவரை ரூபாய் 195·05
இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்
டிற்கு ரூபாய் 15 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
மேலும், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 1979–80 ஆம் ஆண்டில்
ரூபாய் 68·73 இலட்சம் அரசால் கடனாக வழங்கப்பட்டுள்ளது.
1980–81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் கடனாக அளிக்க
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சுற்றுலா விடுதிகள் :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் இடங்களில்
சுற்றுலா விடுதிகளை நடத்தி வருகிறது. இவைகளில் உள்ள
படுக்கைகளின்—மொத்த எண்ணிக்கை 985.

1. உதகமண்டலம்.
2. திருச்சிராப்பள்ளி.
3. மதுரை.
4. கன்னியாகுமரி.
5. திருச்செந்தூர்.
6. கொடைக்கானல்.
7. ஏற்காடு.
8. ஓகேனக்கல்.
9. இராமேஸ்வரம்.
10. சிதம்பரம்.
11. கன்னியாகுமரி—கேப் விடுதி.
12. மாமல்லபுரம்—கடற்கரை வளாகம்.
13. தஞ்சாவூர்—இராசா ஓய்வு விடுதி.

[1980 ஜூலை 10

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுலா விடுதிகளை கட்டி வருகிறது:—

1. கோயம்புத்தூர்.

2. மதுரை.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் இடங்களிலும் சுற்றுலா விடுதிகளை விரைவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது :—

1. குற்றாலம்.

2. முதுமலை.

சாலை ஓர விடுதிகள் :

இம்மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலைகளின் 100 கிலோ மீட்டருக்கு ஒரு சாலை ஓரத் தங்கும் விடுதி (Motel) ஏற்படுத்துவது இத்துறையின் குறிக்கோளாகும். இதன் முதற் படியாக வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில், "மரகதம் சாலை ஓரத் தங்கும் விடுதி" (Emerald) கட்டப்பட்டு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. தென்னாற்காடு மாவட்டத்தில் சென்னை-திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையில் உளுந்தூர்ப்பேட்டையில் பிறிதொரு சாலை ஓரத் தங்கும் விடுதி கட்டப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேலும் சில இடங்களில் சாலை ஓரத் தங்கும் விடுதிகள் அமைக்க உத்தேசித்துள்ளது.

போக்குவரத்துப் பிரிவு :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு (Transport wing) 2 சொகுசுபேருந்துகளுடன், (Luxury Coaches) 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சுமார் ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள ஒன்பது சொகுசு பேருந்துகளும், ஒரு குளிர் சாதன வசதியுடைய பேருந்தும் பயணிகளுக்கென இப்போது இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ் குறிப்பிட்ட ஒப்பந்த பயணங்களையும், சுற்றுலா பயணங்களையும் நடத்தி வருகின்றது.



1980 ஜூலை 10]

1. அன்றாடச் சுற்றுப் பயணம் :

(அ) சென்னை நகரின் முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்த்தல்.

(ஆ) காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களைச் சுற்றிப்பார்க்கும் பயணம்.

2. குளிர்சாதன பேருந்து மூலம் வார இறுதியில் திருப்பதி செல்லும் பயணம்.

3. ஏழு நாள் சுற்றுப் பயணம் :

(அ) தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களைக் காணும் சுற்றுலாப் பயணம்.

(ஆ) தமிழ்நாடு கர்நாடகம், ஆந்திரா ஆகிய தென் மாநிலங்களில் முக்கிய சுற்றுலாத் தலங்களை காணும் பயணம்.

மேற் குறிப்பிட்ட பயணங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் சீரமைக்கப்பட்டு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகளால் மிகவும் விரும்பி வரவேற்கப்படுகிறது. எனவே இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களிலும், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் டிக்கட் விற்பனை செய்யும் ஏஜெண்டுகளை நியமிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அந்நிய செலாவணியை அதிக அளவில் பெற முடியுமென்றும் கருதுகிறது.

மேலும் இப்பேருந்துகள் தனியார் சுற்றுலா பயணங்களுக்கும் பொதுமக்களின் தேவைகளுக்கும் துணைபுரியும் வகையில் வாடகைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1980–81 ஆம் ஆண்டில் மேலும் மூன்று சொகுசுப் பேருந்துகளும், ஒரு குளிர் சாதன வசதியுடைய பேருந்தும், இரண்டு சிறிய சொகுசு பேருந்தும் வாங்க உத்தேசித்துள்ளது.

விளம்பரம் :

சுற்றுலா பயணிகளைக் கவரவும், ஊக்குவிக்கவும் ஏற்ற வண்ணம் இம்மாநிலத்தின் சுற்றுலாச் சிறப்புகளை பொருட்காட்சிகள், திரைப்படங்கள், சுற்றுலா கையேடுகள் வாயிலாகப் பலரும் அறியும் வண்ணம் சுற்றுலாத் துறை செய்து வருகிறது.

[1980 ஜூலை 10

தமிழகச் சுற்றுலா மையங்களின் சிறப்புகளையும், சுற்றுலாப்
பயணிகளுக்கென வழங்கப்பட்டுள்ள வசதி வாய்ப்புகளையும்
விளக்கி நமது மாநில மக்கள், வெளி மாநிலத்தவர், வெளி
நாட்டவர் ஆகிய அனைவரும் உணர்ந்திடும் வகையில் சுற்றுலாச்
சார்புடைய வெளியீடுகளிலும், நாளேடுகளிலும், பிற ஏடுகளி
லும் தொடர்ந்து விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## பொருட்காட்சிகள் :

நம் மாநிலத்திலுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களின் தனிச்
சிறப்புகளை விளக்கிக்காட்டி சுற்றுலாப் பயணிகளைப் பெருமள
வில் ஈர்க்கின்ற வகையில் செய்தி (மக்கள் தொடர்புத்) துறையின்
சார்பிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலும்
பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இத்துறை சேலம்,
கோயம்புத்தூர், மதுரை முதலிய நகரங்களில் நடைபெற்ற
பொருட்காட்சிகளில் பங்கேற்று சிறந்த முறையில் காட்சியரங்கை
அமைத்திருந்தது. ஆண்டுதோறும் சென்னை நகரில் நடை
பெறும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகின்ற
சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் ஒலி-ஒளி காட்சியரங்கம்
அமைந்து மக்களின் கவனத்தையும் கருத்தையும் ஈர்ப்பதாக
அமைந்து மக்களின் பாராட்டையும் பெற்றுவருகிறது.

## விருந்தோம்பல் :

பயண எழுத்தாளர்கள், பயண முகவர்கள் ஆகியோரை வர
வேற்று விருந்தோம்புவது சுற்றுலா மேம்பாட்டிற்கு ஏற்றம் தரும்
பணியாதலின் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரு
கிறது. தமிழ்நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டுப் பயண முகவர்
கள், பயண எழுத்தாளர்கள், நம்முடைய மாநிலப் பயண
முகவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் தமிழகம் சுற்றிப்
பார்க்க சுற்றுலாத் துறை ஆவன செய்துவருகிறது. இத்தகைய
விருந்தோம்பல்களினால் தங்கள் நாட்டுச் செய்தித்தாள்கள்,
பிற இதழ்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றியும்
தமிழ்நாட்டுச் சுற்றுலா வளங்களின் தனிச் சிறப்புகள் பற்றியும்
விரிவாக எழுதிப் பலரும் அறிந்து நம் நாட்டுக்கு வர அவர்கள்
வழிவகை செய்கின்றனர்.

## திரைப்படங்கள் :

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, குற்றாலம்,
ஒகேனக்கல், மாமல்லபுரம் முதலிய சுற்றுலாச் சிறப்பிடங்களை
**உள்ளடக்கி,** ''தமிழ் நாட்டின் விடுமுறை ஓய்விடங்கள்'' **என்ற**



1980 ஜூலை 10]

வண்ணப் படமொன்றைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வாயி
லாக தயாரிக்க சுற்றுலாத்துறை தக்க நடவடிக்கைகள் மேற்
கொண்டுள்ளது. இத்திரைப்படம் இந்த ஆண்டு இறுதிக்குள்
அனேகமாக தயாரிக்கப்பட்டுவிடும்.

## பொங்கல் விழா :

ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் பொங்கல் விழா சுற்றுலா
விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டம்
தோறும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளை ஈர்ப்பதற்காக
கலாச்சார நிகழ்ச்சிகள் இவ்விழாவன்று நடத்தப்படுகின்றன.

## கோடை விழா :

உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஆகிய குறிஞ்சி
நகர்களில் கோடை விழாக்கள் இத்துறையால் கொண்டாடப்
படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை
யில் இவ்விழாவினை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்
டுள்ளது.

## மற்ற விழாக்கள் :

சுற்றுலாத்துறை குற்றாலத்தில் நடைபெறும் சாரல் விழா
விலும், ஆவுடையார் கோவில் திருவிழாவிலும் பங்கேற்கிறது.

உதகமண்டலத்தில் மாரி விழாவினை சுற்றுலாத்துறை நடத்தி
வருகிறது.

## தென்னகம் நோக்கி பயணம் :

அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான்,
மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து வருகைதந்த,
30க்கும் மேற்பட்ட பயண எழுத்தாளர்கள், புகைப்பட வல்லுநர்
கள் முதலியோரை இத்துறை வரவேற்று உபசரித்து அனுப்பியது.

தமிழகத்தின் பல்வேறு பண்பாட்டுச் சிறப்புகளை நேரடியாகக்
கண்டு செல்லும் இவ்விருந்தினர்கள் தங்கள் நாட்டுச் செய்தித்
தாள்கள், இதழ்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றி எழுதி
பலரும் அறிந்து நம்நாடு வர வழி செய்கின்றனர். இவ்வகையில்
செலவாவதைக் காட்டிலும் நமக்குக் கிட்டும் விளம்பரம் பெரிய
தாகும்.

## நிழற்படம் :



நிழற்படங்கள் விளம்பரத்துறைக்கு இன்றியமையாத ஒரு கருவியாகும். சுற்றுலாத்துறையின் நிழற்படப் பிரிவில், சுற்றுலாச் சிறப்பிடங்கள் பற்றிய நிழற்படங்கள், வண்ணப்படங்கள் ஆகியவற்றின் தொகுப்புகள் உள்ளன. தமிழ்நாட்டினைப் பற்றிய கட்டுரை, செய்தித் திரட்டுகளுடன் இணைந்து வெளியிட இந்த நிழற்படங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சுற்றுலாத் துறை வெளியிட்டுவரும் சுற்றுலாக் கையேடுகளிலும், இந்த நிழற்படங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## சுற்றுலாக் கையேடு :

ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாக் கையேடுகள், வண்ண அஞ்சல் அட்டைகள், சுவரொட்டிகள் முதலியன தயாரிக்கப்பட்டு இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களுக்கும், ஏர் இந்தியா அலுவலகங்களுக்கும், பயண முகவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

1979–80-ஆம் ஆண்டில் இத்துறை தமிழ்நாட்டைப்பற்றிய வண்ணச் சிறப்பு வெளியீடுகள், வண்ண மலிவு வெளியீடுகள் தயாரித்துள்ளது. இருபத்து ஐந்து வண்ண அஞ்சல் அட்டைகளையும் தயாரித்துள்ளது. தமிழ்நாட்டைப் பற்றிய பிற சிறப்பு வெளியீடுகளுடன் இவைகளையும் இணைத்து இந்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், வெளி மாநில சுற்றுலா இயக்குநர் அலுவலகங்கள், அயல் நாடுகளிலுள்ள ஏர் இந்தியா அலுவலகங்கள், மற்றும் பயண முகவர்கள் ஆகியோர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியூட்டுவதோடு நாட்டின் கருவூலத்திற்குப் பொருள் வருவாயினையும் சேர்க்கின்ற சுற்றுலாத் துறையில், மேலும் பல திட்டங்களை இணைத்து சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கருதுகிறது. எல்லாத் தரப்பினரும் குறிப்பாக எளிய நிலையினரும் ஓய்வை நன்கு நுகரவும், மன நிம்மதி பெறவும், உணர்வுகளால் உயர்வடையவும், தாயகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், கலைச் சிறப்புகளையும் அறிந்து மகிழவும் சுற்றுலாத்துறை அனைத்து வகையிலும் அயராது செயல்பட்டு வருகிறது.



# இணைப்பு IV.

[144-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## வனத்துறை மானியக் கோரிக்கை 1980–81.

## கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1.1. வனவள மேம்பாட்டுக் கொள்கையைச் செயல்படுத்தல் :

காடுகள் இயற்கையாகவும் மீண்டும் மீண்டும் பெருக்கிக் கொண்டே செல்லத்தக்க இயற்கை ஆதாரங்களையும் கொண்டவை. அது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் நல்வாழ்விலும் காடுகள் முக்கிய பங்கு வகிப்பவையுமாகும். மனித இனத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் பொருள்களான, கட்டிடத்திற்கான மரங்கள், விறகு, பசுந்தழை உரம், மரப் பிசின், உண்ணத்தக்க கனிகள், தோல் பதனிடுவதற்கான பொருட்கள், தைல வகைகள், கொட்டைப் பருப்புகள் மற்றும் விலை உயர்ந்த சந்தனம், தேக்கு போன்ற பல செல்வங்களையும் வனங்கள் வழங்குகின்றன. காகிதம், அட்டை, மர இழைப் பட்டு, அட்டைத்தாள், மருந்துகள், நறுமணப் பொருள்கள் ஆகியவற்றினை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும் பிறவற்றுக்கும் உரிய மூலப்பொருள்களையும் காடுகளே வழங்குகின்றன. நேரிடையான இப்பயன்களோடு, மழை பெறுவதற்கும், மண் வளம் மற்றும் ஈரப் பாதுகாப்பிற்கும், நிலத்தடி நீர் சேமிப்பிற்கும், தட்பவெப்ப நிலைகளில் சமனத்திற்கும், சுற்றுப்புறத் தூய்மையைக் காப்பதற்கும் இயற்கை சூழ்நிலை செம்மையாகவும் சீராகவும் இருப்பதற்கும், வளமான காடுகள் இன்றியமையாதவை ஆகும். கருத்தையும் கண்ணையும் கவரும் வகை வகையான வனவிலங்குகளின் தாயகமும் கானகங்களே. ஊர்வன, பறப்பன ஆகியவற்றின் உறைவிடமும் கானகங்களே. எனவே, காடுகளை பாதுகாத்தலும், அதன் பரப்பினை விரிவாக்குதலும், காட்டு வளத்தினை மேம்படுத்தும் நமது செயல் திட்டங்களில் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன.

1.2. வனத்துறையின் காடு வளர்ப்பு, மேம்பாட்டுப் பணிகள், கிராமப்புறப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வெட்டு மரங்களையும், விறகுகளையும் வழங்குவதுடன், வேலை வாய்ப்புத்துறைகளை பெருக்குவதையும் குறிக்கோள்களாகக் கொண்டு வன வள எல்லையினை விரிவாக்கும் செயல் திட்டங்களைக் கொண்டவை ஆகும்.

காட்டிலும் காட்டைச் சுற்றிலும் வாழும் பழங்குடி இனத்தினருக்கும் பிற மலைவாழ் மக்களுக்கு வேலைகளை தொடர்ந்து அளிப்பதையும் இப்பணிகள் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. வனப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்களை வழங்குவதும் மற்றொரு குறிக்கோளாகும்.

## 2. காட்டின் பரப்பு :

நம் மாநிலத்தில் வனத்துறையின் கீழுள்ள காட்டின் பரப்பு சென்ற ஆண்டில் 22,15,200 எக்டேராகும். தற்போதுள்ள பரப்பு 21,73,700 எக்டேராகும். 41,500 எக்டேர் குறைந்து காணப்படுவதற்குரிய முக்கிய காரணம் யாதெனில் வனக் கோட்டங்கள், வனச் சரகங்கள் ஆகியவற்றின் பகுதிகளைச் சேர்ந்த புள்ளிவிவரங்களை வட்ட வாரியான ( Talukwise ), சரகங்கள் வாரியான புள்ளி விவரங்களோடு இணக்கம் (Reconciliation) செய்ததேயாகும். இவ்வாண்டில் ஒதுக்கக் காடுகளிலிருந்து(Reserved Forest)நீக்கப்பட்ட பரப்பளவு (Dis reserved area) கோயம்புத்தூர் சரகத்தில் 2 எக்டேர் பரப்பளவாகும். 17,69,600 எக்டேர் கொண்ட மொத்த பரப்பளவுப் பகுதியில் 3,60,200 எக்டேர் ஒதுக்கப்பட்ட நிலங்களாகும் ( Reserved lands ). எஞ்சிய 43,900 எக்டேர் எதன்கீழும் வகைப்படுத்தப்படாத (Unclassified) காடுகளாகும். ஒதுக்கக் காடுகள் ஒதுக்கப்பட்ட நிலங்கள் என்பதன் கீழ்வரும் 21,29,800 எக்டேரில், 75,794.78 எக்டேர் பரப்பு தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், 1,500 எக்டேர் பரப்பு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. ஒரு நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப் பகுதியாக இருக்க வேண்டும் என்பது தேசியக்கொள்கையாகும். ஆனால், நமது மாநிலத்தில் 17 சதவிகிதம்தான் வனப் பகுதியாக அமைந்துள்ளது என்பதை அறியலாம். வனப்பகுதிகளுக்குஅப்பாற்பட்ட வசதியற்ற நிலங்களிலும் அரசாங்க தரிசு நிலங்களிலும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்களின் (Social Forestry Scheme) கீழ் காடுகள் பெருமளவில் வளர்க்கப்பட்டுள்ளன. காடுகளின் பரப்பை அதிகரிக்க ஓரளவுக்கு இவை உதவும். காடு சாராத நோக்கங்களுக்கு வனத்துறையைச் சேர்ந்த நிலங்களை வழங்கலாகாது என அரசு முடிவு செய்துள்ளது.

## 3. ஏலக்காய் குத்தகை :

ஏலக்காய் பயிரிடுவதற்காக காட்டு நிலங்கள் தனியார்களுக்கு நீண்ட காலமாக குத்தகைக்கு விடப்பட்டு வந்துள்ளன. வன நிலங்களை ஏலக்காய் பயிரிடுவதற்காக ஒரு சிலரிடம் மட்டுமே தொடர்ந்து குத்தகைக்கு விடப்பட்டு அவர்களிடம்





மட்டுமே வனநிலங்கள் சேர்ந்து குவிந்து கொண்டு வருவதைத் தடுப்பதற்காக, குத்தகைக்கு விடும் கொள்கையை அரசு தற்போது திருத்தியமைத்துள்ளது. இப்புதுக்கொள்கையில் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு: குத்தகைக்கால அளவு 20 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு முறை மட்டும் ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகை புதுப்பிக்கப்பட வேண்டும். மொத்த குத்தகைக் கால அளவு 20 ஆண்டுகளாகும். ஏலக்காய் பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு விடப்படும் வன நிலத்தின் பரப்பளவு ஒவ்வொருவருக்கும் 20 எக்டேர் நிலத்திற்குக் கூடுதலாகாது. கூட்டுக் குடும்பம் ஒன்றில் குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு மட்டுமே குத்தகை அளிக்கப்படும். தற்போதுள்ள குத்தகைகள் முடிவுற்ற பிறகு, அவை புதுப்பிக்கப்படமாட்டா. அத்தகைய இனங்கள் புதிய கொள்கைக்கிணங்க, புதிய குத்தகையாகக் கருதப்படும்.

## 4·1 விறகு பற்றாக்குறை:

அண்மைக்காலத்தில், குறிப்பாக வடகிழக்குப் பருவ மழையின்போதும், அதன் பின்னரும், விறகுப் பற்றாக்குறை இம்மாநிலத்தில் சில பகுதிகளில் நிலவியது. சமையலுக்காகப் பயன்படும் எரிவாயு, மண்ணெண்ணெய் இவற்றின் பற்றாக்குறையாலும், தொழிற்சாலைகள், உணவு விடுதிகள் ஆகியவற்றிற்கு மிகுந்த அளவு விறகு தேவைப்படுவதாலும் இத்தட்டுப்பாடு எழுந்தது. பசுமையான இயற்கைக் காடுகளில் உள்ள மரங்களை கண்டபடி வெட்டக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பதும் ஓரளவு விறகுப் பற்றாக்குறைக்கு காரணமாயிற்று.

4.2. இச்சூழ்நிலைச் சரிசெய்யும் நோக்கத்துடன், இது குறித்துச் செயல்பட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறிப்பிடும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நீலகிரி, மேல்பழனி ஆகிய இடங்களிலுள்ள மிலாறு மலைத் தோட்டங்களிலிருந்து விறகு மரங்களை ஒதுக்க முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு மேற்சொன்ன இடங்களிலிருந்து, கொண்டு வரப்படும் விறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் விலையில், கூட்டுறவுச் சங்கங்களால், பொது மக்களுக்கு நேரடியாக விற்பனை செய்யப்பட்டது. மேலும், மிலாறு மரத்தோப்புகள் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் விறகுப் பற்றாக்குறையை ஓரளவுக்கு நீக்கிட முடிந்துள்ளது.

**5.1 வரவும்—செலவும் :** [1980 ஜூலை 10

வனங்களிலிருந்து 1978–79-ம் ஆண்டில் 1,141 லட்சம் ரூபாயும் 1979–80 ஆம் ஆண்டில் 1,041 லட்சம் ரூபாயும் வருவாயாகக் கிடைத்தது. வருவாயில் கடந்த ஆண்டில் 100 லட்சம் ரூபாய் குறைந்ததற்கு பின்வரும் தலைப்புகளில் ஏற்பட்ட வருவாய்க் குறைவே காரணமாகும் :—

| | ரூபாய் லட்சத்தில். |
|---|---|
| சந்தனமரம் | 31 |
| ரப்பர் | 33 |
| வெட்டுமரம் (Timber) | 23 |
| விறகு—கட்டைக்கரி | 43 |
| பண்ணைக்காடு (Farm forestry) | 13 |
| தேக்கு | 12 |
| காடுபடு சிறு பொருள்கள் | 5 |
| மொத்தம் | 160 |

5.2. மேற்சொன்ன தலைப்புகளில் ஏற்பட்ட குறைவுத் தொகையான ரூ. 160 லட்சம் தைல மரம் என்ற தலைப்பில் கிட்டிய கூடுதல் வருமானமான ரூ. 50 லட்சம், மிலாறு மரங்கள் வகையில் கிட்டிய கூடுதல் வருவாயான ரூ. 8 லட்சம், மூங்கில் என்ற தலைப்பின்கீழ் கிட்டிய கூடுதல் வருவாயான ரூ. 2 லட்சம் ஆகியவற்றின் மூலம் ஈடு செய்யப்பட்டு, நிகர வருவாய்க் குறைவு ரூ. 100 லட்சமாகக் குறைந்துள்ளது.

5.3. சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசால் தடை விதிக்கப்பட்டதால் சந்தன மர ஏல விற்பனையின் மூலம் குறைந்த விலையும் அதன் மூலம் குறைந்த வருமானமுமே கிடைத்தன. எனவே 'சந்தன மரம்' என்ற தலைப்பில் வருவாய்க் குறைவு ஏற்பட்டது. 1979 அக்டோபரிலிருந்து 1980 சனவரி வரை மூன்று மாத காலம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால், ரப்பர் குறைவாக எடுக்கப்பட்டது. அதனால் 'ரப்பர்' இன வருவாய் குறைந்தது.



1980 ஜூலை 10]

5.4. இயற்கை வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நலனை முன்னிட்டு, இயல்பாக வளர்ந்துள்ள காடுகளை கண்டபடி அழிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக "வெட்டுமரம்", "விறகு", "கட்டைக்கரி" ஆகிய இனங்களில் வருவாய்க் குறைவு ஏற்பட்டது.

5.5. 1980–81 ஆம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்ட வருவாய் 1,112 லட்சமாகும்.

5.6. "வனங்கள்" என்னும் தலைப்பின்கீழ் 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 1,028.44 லட்சம் செலவிடப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 1,501.73 லட்சம் திட்டமிட்டுள்ள செலவாகும். வனங்களின் உற்பத்தித் திறனை உயர்த்தும் குறிக்கோளுடன் காடுகளை வளர்ப்பதற்காக செய்யப்படுகிற பெரும்பகுதிச் செலவு மூலதன முதலீட்டைச் சேர்ந்ததாகும். வெட்டுமரங்கள், விறகு, தொழிற்சாலைக்குத் தேவையான மரங்கள் ஏனைய இன்றியமையாக் காடுபடு பொருள்கள் ஆகியவற்றிற்கு வளர்ந்து கொண்டே வரும் தேவைகளை நிறைவு செய்வதற்காக மலைத் தோட்டங்கள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன.

**6.1 திட்டங்களைச் செயல்படுத்தல் :**

பல்வேறு வளர்ச்சிப் பணிக்கான திட்டங்களின்கீழ் 1979–80 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ. 516.13 லட்சம் ஆகும். இதில், 437.19 லட்சம், மாநிலத் திட்டங்களின்கீழ், தொழில் மற்றும் பொருளாதாரச் சிறப்பு வாய்ந்த தோட்டங்களை ஏற்படுத்தவும், வன-இயல் ஆய்வு, வன வேலைத் திட்டம், மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதின் மீதான செலவாகும். மத்திய அரசு உதவித் திட்டங்களான, மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதிகள் வளர்ச்சித் திட்டம், மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திட்டங்களின்மீது 1979–80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 78.94 லட்சமாகும். 1979–80-ல், 40,760 எக்டேர் பரப்பில் வனத்தோட்டங்கள் எழுப்பப்பட்டன. இத்தோட்டங்களில் வெட்டு மரங்கள், விறகு, தொழிற்சாலைக்குத் தேவையான மரங்கள், காடுபடு சிறு பொருள்களை வழங்கும் மரங்கள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டன.

6.2. மாநில வனத்திட்டங்களுக்காக 1980–81-ல் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 608.29 லட்சமாகும். மாநில மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 65.83 லட்சமாகும், மத்திய அரசின் திட்டங்களுக்காக 1980–81-ல் ரூ. 89.37

லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, 1980–81 ஆம் ஆண்டிற்குரிய மொத்தத் திட்டச் செலவு ரூ. 763.49 லட்சமாகும். நடப்பு ஆண்டில் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த தோட்டங்களின் பரப்பு 54,551 எக்டேராகும். '' காடு வளர்ப்பது '' என்பது, முதலீட்டிற்கும் அதன் மூலம் வருமானத்தைப் பெறுவதற்கும் இடையே, நீண்ட கால இடைவெளி கொண்ட, நீண்ட காலத்திட்டம் என்றாலும், முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பல திட்டங்கள் தற்போது பலன் தரத்தொடங்கி, இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றுகின்றன.

<u>7.1 காடுபடு பொருள்கள் சார்ந்த தொழில்களுக்கு மூலப் பொருள்கள் வழங்குதல்:</u>

தொழில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு மூலப் பொருள்களை காடுகள் வழங்குகின்றன. காகிதம், மர இழைப்பட்டு தயாரித்தல், மென்கூழ், தோல் பதனிடும் பொருள்கள் போன்ற பொருள்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு வனத்துறை பின்வரும் முக்கிய மூலப்பொருள்களை வழங்குகிறது :—

(1) கற்பூர மரங்கள் (Blue gum).

(2) தைல மரங்கள் (Eucalyptus Grandis).

(3) தைல மரங்கள் (Eucalyptus Hybrid).

(4) பட்டை உரித்த மிலாறு மரங்கள் மற்றும் மிலாறு பட்டைகள்.

(5) கருவேல மரங்கள் (Babul)

(6) மூங்கில்.

(7) ஈத்தா என்ற நாணல் (Eta Reeds)



7.2 கீழ்க்காணும் அட்டவணையில் இருந்து காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு, 1979–80 ஆம் ஆண்டில், வனத்துறையால் வழங்கப்பட்ட முக்கிய மூலப்பொருள்களின் விவரங்கள்:—

| தொடர் எண்ணும் தொழிற்சாலையின் பெயரும். (1) | பொருள். (2) | மொத்த அளவு. (3) (டன்களில்) | நிலப் பரப்பு. (4) (எக்டேரில்) |
|---|---|---|---|
| துறையால் வழங்கப்பட்டவை— | | | |
| 1. திருவாளர்கள் சேசசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ் லிமிடெட், | யூகலிப்டஸ் ஹைபிரிட் | 17,626 | 2,396.63 |
| ,, | மூங்கில் | 29,429 | .. |
| 2. திருவாளர்கள் சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட். | கற்பூர மரங்கள். | 51,783 | 814.81 |
| டிஷ | யூகலிப்டஸ் கிராண்டிஸ். | 8,976 | 414.48 |
| டிஷ | பட்டை உரித்த மிலாறு (வாட்டில்) மரங்கள். | 47,894 | 1,314.00 |
| 3. திருவாளர்கள் டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் லிமிடெட். | மிலாறு (வாட்டில்) பட்டை. | 15,170 | 1,314.00 |
| தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தால் வழங்கப்பட்டவை :— | | | |
| 4. திருவாளர்கள் சேசசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ் லிமிடெட். | தைல மரங்கள். | 21,239 | 1,118.90 |

[1980 ஜூலை 10

7.3. தமிழ்நாட்டில் விளையும் மரக்கூழ் மரங்கள் மற்றும் பிரம்பு தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் 23—8—1978-ல் அரசாங்கம் ஒரு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு இவற்றை அனுப்பத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 8.1. சந்தனமரத் தொழிற்சாலைகளை நிறுவுதல்.

சந்தன மரம் இயற்கையாகப் பெருமளவில், வட ஆற்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளிலும். குறைந்த அளவில் நீலகிரி, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் வளர்கின்றது. பட்டுப்போன சந்தன மரங்கள் கொண்ட தொகுதியை மூன்று கூப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு கூப்பும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டியெடுக்கப்படு கின்றன. வெட்டி எடுக்கப்பட்ட மரங்கள் கிட்டங்கிகளுக்குக் கொண்டு வரப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு ஏலத்தில் விடுவதற்காக வகைப்படுத்தப்படுகின்றன. சந்தன மரங்கள் ஆண்டிற்கு இரு முறை, வனத்துறையினரால், வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலும், கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலத்திலும், சேலம் மாவட்டத்திலும் அஸ்தம்பட்டியிலும் ஏலம் விடப்பட்டு வருகின்றன.

8.2. கீழ்க்கண்ட விவர அட்டவணையில் 1979 ஆம் ஆண்டு ஜூலை, டிசம்பர் ஆகிய இரு மாதங்களில் நடத்தப்பட்ட ஏல விவரத்தினைக் காணலாம் :—

ஜூலை 1979.

| விற்பனை நிலையங்கள் (Depots). | விற்பனைக் குக் கொண்டு வரப்பட்ட சந்தன மரங் களின் அளவு. (டன்களில்) | விற்பனை செய்யப் பட்ட சந்தன மரங்களின் அளவு. (டன்களில்) | கிடைக்கப் பெற்ற வருவாய். (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| திருப்பத்தூர .. | 400 | 339 | 13,230 |
| சத்தியமங்கலம் | 150 | 122 | 6,613 |
| சேலம் .. | 250 | 176 | 4,361 |
| மொத்தம் .. | 800 | 637 | 24,204 |



1980 ஜூலை 10]

டிசம்பர் 1979

| விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட சந்தன மரங் களின் அளவு. (டன்களில்) | விற்பனை செய்யப் பட்ட சந்தன மரங் களின் அளவு. (டன்களில்) | கிடைக்கப் பெற்ற வருவாய். (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 400 | 244 | 5,699 |
| 150 | 107 | 2,387 |
| 251 | 178 | 4,130 |
| 801 | 529 | 12,216 |

ஆண்டொன்றுக்கு 5.2 டன் சந்தனத் தைலம் எடுக்கும் திறன் கொண்ட சந்தனத் தைலத் தயாரிப்பு ஆலை ஒன்றை ரூ. 22.85 லட்சம் செலவில் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத் தூருக்கு அருகே அமைக்க முடிவு செய்யப்பட்டு துவக்க நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆலைக்குத் தேவைப்படும் சுமார் 104 டன் சந்தன மரங்கள் வனத்துறை யால் வழங்கப்படும்.

## 8.3 சந்தன மரப்பாதுகாப்பும் காட்டு வளமும்.

1. சந்தன மரம் மற்றும் பிற முக்கிய மரங்களுக்கு தற் போதுள்ள உயர்ந்த விலை மதிப்பு காரணமாக சமுதாய விரோதிகளாலும் தீயவர்களாலும் கள்ளத்தனமாகக் கடத்தும் செயல் அதிகரித்துள்ளது. எனவே, இத்தகைய கடத்தலைத் தடுக்கவும், வனவளத்தைப் பாதுகாத்து, வருவாயைப் பெருக்கவும் அரசாங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

(1) வனத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை ஆகிய மூன்று துறைகளுக்குமிடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் எளிதில் வனம் தொடர்பான குற்றங் களைக் கண்டுபிடித்து வன வளத்தைப் பாதுகாத்தல்.

(2) ரூ. 10,000-த்திலிருந்து ரூ. 50,000 வரை மதிப்புள்ள சந்தன மரம் அல்லது ஏனைய மரக்கடத்தல் குற்றங்களை அந்தந்த இடங்களில் உள்ள காவல் துறையினரிடம் ஒப்படைத்தல், ரூ. 50,000-க்கு மேற்பட்ட குற்றங்களை சென்னை குற்றப் புலனாய்வுப் பிரிவுத் துறையிடம் ஒப்படைத்தல் :

(3) வனத்துறை ஊழியர்களுக்கு காவல் துறையினரிடம் உள்ள கம்பியில்லாத் தந்திக் கருவியை நெருக்கடியான நேரங்களில் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(4) நமது மாநிலத்தின் எல்லையோரங்களில் சந்தன மரங்களையும் விலை மதிப்புள்ள ஏனைய காடுபடு பொருட்களையும் கடத்திச் செல்லும் சிக்கலை சமாளிக்க கோயம்புத்தூர், நீலகிரி, தருமபுரி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் எல்லையோரங்களில் கம்பியில்லாத் தந்தி நிலையங்களை நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) சேலம் வனக் கோட்டத்தில் இடையபட்டி, மதுரை வடக்குக் கோட்டத்தில் கங்குவார்பட்டி, வேலூர் கோட்டத்தில் குருவராஜபாளையம் ஆகிய இடங்களில் வனத்துறையின் வன தணிக்கைச் சாவடிகள் திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

8.4. 10—9—1979 ஆம் நாளன்று செயலுக்கு வந்த தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு வன (திருத்த)ச் சட்டம், தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனச் சட்டத்தில் பின்வருமாறு மாற்றங்களைச் செய்துள்ளது :

''அட்டவணையிடப்பட்ட மரங்கள்'' என்பதில், சந்தன மரமும் அடங்கும். சந்தன மரம் தொடர்பான குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்களாகவும், பிணையத்தில் விடுவதற்கு இயலாத குற்றங்களாகவும் ஆக்கப்பட்டுள்ளன. இக்குற்றங்களை இணக்க ஏற்பாட்டின் (compounding) மூலம் சரிசெய்து கொள்ள இயலாது. மேலும் இத்திருத்தச் சட்டத்தில் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையையும் ரூ. 10,000 அளவுக்கு அபராதமும் விதிப்பதற்குரிய விதிமுறைகளும் உள்ளன, அதாவது :

(அ) முதற்குற்றத்திற்கு விதிக்கப்படும் அத்தகைய சிறைத் தண்டனை ஓராண்டிற்குக் குறைவாகவும், அபராதம் ரூ. 3,000-க்குக் குறைவாகவும் அமையலாகாது.

(ஆ) இரண்டாம் குற்றம் அல்லது தொடர்ந்து செய்யப்படும் குற்றங்களுக்கு விதிக்கப்படும் சிறைத்தண்டனை இரண்டாண்டுகளுக்குக் குறைவாகவும், அபராதம் ரூ. 5,000-க்குக் குறைவாகவும் இருக்கக்கூடாது.



9.1. சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்.

சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இத்திட்டத்தின்கீழ் கிராமத் தரிசு நிலங்கள், ஊராட்சி நிலங்கள், காடுகளற்ற மலைகள், ஏரி எதிர்வாய்க் கரைகள் கால்வாய்களின் நெடுகவும், சாலை நெடுகவும், ஆற்றங் கரைகளிலும் காடு வளர்ப்பதும், நாற்றுகளை வழங்குவதன் மூலமும், தொழில் நுட்ப உதவியை வழங்குவதன் மூலம், தனியார் நிலங்களில் மரங்களை வளர்க்க ஊக்குவிப்பதும், அடங்கும். கிராமங்களில் மரங்களை வளர்க்கும் திட்டம் 1960-ம் ஆண்டில் தொடங்கப்பட்டு இதுவரையில் 1,30,107 எக்டேர் நிலப்பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. மரங்களை வளர்ப்பதற்கு எங்கெல்லாம் ஊராட்சி நிலங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அந்த மரங்களிலிருந்து கிட்டும் வருவாயில் 50 சதவீதம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வாறு வளர்க்கப்படும் மரங்களில் முக்கியமானவை கருவேல மரம், தைல மரம், பரம்பை, முந்திரி முதலியனவையாகும். இம்மரங்கள் விறகு, வெட்டுமரம் பசுந்தழை உரம், கால்நடைத் தீவனம் முதலியவற்றைப் பொறுத்தமட்டில் கிராம மக்களின் தேவையை நிறைவு செய்கின்றன. இவை மண் வளத்தையும், மண்ணின் ஈரத்தன்மையையும் பாதுகாத்து உடல் நலத்திற்கு வளங் கூட்டும் சுற்றுப்புற சூழ்நிலைகளைப் பேணி வரவும் உதவி புரிகின்றன.

9.2. தற்போதுள்ள காடுகளுக்கு வெளியேயும் உள்ள நிலப் பகுதிகளில் பெருமளவில் காடுகளை வளர்ப்பதற்குரிய திட்டம் ஒன்றை வனத்துறை வகுத்துள்ளது. இதன் உத்தேச செலவு ஏறக்குறைய 120 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நிதி உதவி பெறுவதற்கான செயற்குறிப்பு சுவீடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் பரிசீலனையில் இப்போதுள்ளது. தனியார் நிலங்களில் மரங்களை வளர்த்திட நாற்றுகளை உழவர்களுக்கும், ஏனையோருக்கும் வழங்கிட நாற்றுப் பண்ணைகளை ஏற்படுத்துவதோடு பத்தாண்டு கால அளவில் ஏறக்குறைய 5 லட்சம் எக்டேர் பரப்பில் மரங்களை நடுவதற்கும் இத்திட்டம் வகை செய்யும்.

9.3. இம்மாநில அரசின் பிரதிநிதிகளோடு கலந்து விவாதிக்க சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் மதிப்பீட்டுக் குழு ஒன்று இம்மாநிலத்திற்கு 1980 சனவரித் திங்களில் வந்தது. இக்குழுவின் உறுப்பினர்கள் திட்டப் பகுதிகள் சிலவற்றையும், வனத்துறையால் வளர்க்கப்பட்டுள்ள சமூகக் காடுகளையும் நேரில் பார்வையிட்டனர். சமூகக் காடு வளர்ப்புத் துறையில் இது

வரையில் ஆற்றியுள்ள பணி அவர்களைப் பெரிதும் கவர்ந்தது என்பதோடு வகுக்கப்பட்டுள்ள இத்திட்டம் நல்ல பயனைத் தரும் என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

9.4. சேலம், வேலூர், திருவண்ணாமலை, மதுரை, சிவ கங்கை, திருச்சி, விழுப்புரம் ஆகிய ஊர்களைத் தலைமையிடங் களாகக் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வன வளர்ச்சிக் கோட்டங்கள் ஏழு உள்ளன. இக்கோட்டங்கள் ஒவ்வொன்றும் அதிகப் பரப்பளவில் காடுகளை வளர்க்கும் வகை யில் இப்போதுள்ள கோட்டங்களுக்கு மேலும் பணியாளர் பலரை அமர்த்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன. சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்களைச் செயல் படுத்தல், காடுகளுக்கு வெளியே உள்ள தரிசு நிலங்களில், மரங்கள் வளர்த்தலை விரைவு படுத்தல், ஆகிய பணிகளைக் கவனிப்பதற்கென்றே சிதம்பரம், திருவில்லிபுத்தூர், கோவில் பட்டி ஆகிய ஊர்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு மேலும் மூன்று கோட்டங்கள் 1979-80-ல் ஏற்படுத்தப்பட்டன.

## 10. வறட்சி தணிப்புத் திட்டம்.

மைய அரசு பொறுப்பேற்றுள்ள இத்திட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங் களில் செயல்படுத்தப்படுகிறது. இத்துறையால் செயல்படுத்தப் படும் மிக முக்கியமான திட்டங்களில் காடு வளர்ப்பும், மேய்ச்சல் பகுதிகளை உருவாக்குதலும் அடங்கும். 1980-81-ம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 51.98 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 550 எக்டேர் பரப்பளவில் மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல் 80 கி.மீ. தொலைவிற்கு நிழல்தரும் மரங்களை வளர்த்தல் ஆகியவற்றோடு 2,547 எக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 11.1. கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்.

கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களில், நாற்றுப் பண்ணைகளை ஏற்படுத்த வனத்துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

11.2. வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில் நாற்றுப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்குரிய செலவு முழுவதும் கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்ட நிதிகளி லிருந்து செய்யப்படுகிறது. இந்த நாற்றுப் பண்ணையில் வளர்க்கப்படும் நாற்றுகளை வளர்ச்சி வட்டார அலுவலர்களின் வழியாக உழவர்களுக்கு வனத்துறை வழங்கும்.



## 2. மர வளர்ப்பு இயக்கம்.

மைய அரசு, மற்றும் இந்திய வனக் குழு இவற்றின் வேண்டு கோளுக்கிணங்க, 1976-77-ம் ஆண்டில் இம்மாநிலம் முழுவதிலும் [illegible] கொண்டாடப்பட்டது. மாநக ரம் நடு விழா பெருமளவில் [illegible] நிறுவனங்களின் நிலங்கள், தனியார் [illegible] பட்டி, நகராட்சி, கல்வி நிலையங்களின் நிலங்கள் [illegible] தொடங்கப் [illegible] லங்கள் முதலியவற்றில் மரம் நடுதல் [illegible] நாற்றுப் பண்ணை ஏற்படுத்தி [illegible] பட்டது. மரக்கொழுந்துகளை [illegible] வேளாண்மைத்துறை [illegible] வழங்கும் பணிகள் [illegible] 1979-80-ம் ஆண்டில், [illegible] மேற்கொள்ளப்பட்டன. [illegible] வழங்கவேண்டுமென்று இலக்கிடப் [illegible],81,25,000 நாற்றுகள் [illegible] பட்டது. ஆனால், 1980-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ம் நாள் வரை 1,91,38,635 நாற்றுகள் வழங்கப்பட்டன. 1980-81-ம் ஆண்டிற்கு 2.5 கோடி நாற்று வழங்குவது என்று இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

## 13.1. கூடலூர் ஜென்மம் நிலங்கள்.

1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரிக்கு மாற்றும்) சட்டம் 1974-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

13.2. சுமார் 80,000 ஏக்கர் நிலங்களை 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் ஜமீன் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரிக்கு மாற்றும்) சட்டத்தின் மூலம் அரசாங்கம் மேற்கொள்ளும். இதில் 42,000 ஏக்கர் பரப்பு நிலம், உயர்நீதி மன்றத்தின் தடை உத்தரவின்கீழ் இருக்கிறது. மீதியுள்ள 38,000 ஏக்கர் நிலங் களில் நில அளவை வேலை நடைபெற்று வருகின்றது. இந்த நிலங்களை மேற்கொள்ளும் பணியின் முன்னேற்றத்தை மேற் பார்வை செய்யவும், பல்வேறு துறைகளுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்யவும் ஒரு ஒருங்கிணைப்புக் குழுவினை அரசு அமர்த்தி யுள்ளது. இதுவரை 2,660 எக்டேர் பரப்பு நிலம் வனத்துறைக் கும், 1,500 எக்டேர் பரப்பு நிலம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 14.1. பழங்குடி மக்கள் மேம்பாடு.

இம்மாநிலத்தின் பழங்குடியினர் தொகை 3.63 இலட்சமாகும். இவர்களில் பெரும்பாலோர் காடுகளிலேயே வாழ்கின்றனர். அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு வனத்துறை பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவர்கள் வேளாண்மை புரிய குத்தகைக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. வனத்துறையின் தோட்டங்களின் இடையே பயிரிடும் 'டாங்யா' சாகுபடி முறையை

மேற்கொள்ளவும் அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த
முறையில் வேளாண்மை செய்யப்படும் பயிர் வகைகளோடு
வனத் தோட்டங்களும் வளர்க்கப்படுகின்றன. அவர்கள் காடு
களில் தங்கள் கால்நடைகளை மேய்த்துக் கொள்ளவும் அனுமதிக்
கப்படுகின்றனர். அவர்கள் பயிர் செய்யவும், தங்களது வீட்டுப்
பயன்களுக்குத் தேவையான பொருள்களைக் காடுகளிலிருந்து
இலவசமாக எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்படுகின்றனர்.
பல்வேறு காடு வளர்ப்புப் பணிகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு
வழங்கப்படுகிறது. சிலர் வனத்துறையில் பணியாளர்களாகவும்
அமர்த்தப்பட்டுள்ளனர்.

14.2. பழங்குடி மக்களின் குழந்தைகளுக்காக, கோவை, வட
ஆற்காடு மாவட்டங்களில் வனத்துறை பள்ளிக்கூடங்களை
நடத்துகின்றது. 12 துவக்கப் பள்ளிகளும், ஒரு உயர் துவக்கப்
பள்ளியும் ஒரு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. பள்ளிச் சிறுவர்
களுக்கு மதிய உணவும், உடைகளும், பாட நூல்களும், எழுது
பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சில பள்ளிகளில்
தங்கும் விடுதிகளும் உள்ளன. பழங்குடியினர் நன்மைக்காக,
19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
விறகு கூப்புகளும், சிறு காடுபடு பொருள்களும், சலுகை
விலையில் இந்த சங்கங்களுக்குக் குத்தகைக்கு கொடுக்கப்படு
கின்றன. அவர்களுக்கு மருத்துவ வசதி, வீட்டு வசதி, முதலிய
வற்றையும் இத்துறை வழங்குகிறது. பழங்குடியினர் வளர்ச்சிக்
திட்டத்திற்கென 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 8.38 இலட்சம்
செலவிடப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 23.01 இலட்சம்
ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

14.3. தென்னாற்காடு, சேலம் மாவட்டங்களில் உள்ள
கல்ராயன் குன்றுகளிலுள்ள பழங்குடி மக்களின் பொருளாதார
நிலையினை உயர்த்துவதற்காக (கடுக்காய், கருவேப்பிலை, புளி
போன்ற) சிறு காடுபடு பொருள்களைச் சேகரிக்கும் உரிமையை
இப்பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

**15. சேலம், தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள கல்ராயன் குன்றுகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்துதலும்.**

சேலம், தென்னாற்காடு மாவட்டங்களைச் சேர்ந்த கல்ராயன்
குன்றுகளில் உள்ள காடுகளைப் பாதுகாத்தல் மேம்படுத்துதல்
தொடர்பான பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து விவாதிக்க,
1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாள் அன்று, தலை
மைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள் தலை
யில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதன் அடிப்படையில், தலைமை
ரூ.1,13·50 இலட்சம் செலவாகக்கூடிய விரிவான செயற் குறிப்பு



ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. ஆத்தூர், கள்ளக்குறிச்சி ஆகிய
இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்ட இரு வனக் கோட்
டங்கள் அமைத்தல், பயனுள்ள மலைத் தோட்டங்களை வளர்த்
தல், பணியாளர் குடியிருப்புகள் அலுவலகக் கட்டிடங்கள், ஓய்வு
விடுதிகள் கட்டுதல், சுங்கச்சாவடிகள் அமைத்தல் ஆகியவை
இச்செயற் குறிப்புகளில் அடங்கும்.

**16.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்.**

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 1974 ஆம் ஆண்டு ஜூன்
திங்கள் 13 ஆம் நாளில் 2 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட
மூலதனத்துடன் அமைக்கப்பட்டது. நாளது வரை இக்கழகத்
தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 72·06 இலட்சம் ரூபாயாகும்.
இத்தொகை முழுவதும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.

16.2. இக்கழகத்திற்கு மாற்றப்பட்ட மொத்தப் பகுதியான
75,794·78 எக்டேர் பரப்பளவில், 36,569·32 எக்டேர் பரப்பு
துறையினால் தோட்டங்கள் வளர்க்கப்பட்ட பகுதியாகும்.
எஞ்சியுள்ள 39,225·46 எக்டேர் தோட்டங்கள் வளர்க்கப்படாத
பகுதியாகும். இக்கழகம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து 21,400
எக்டேர் பரப்பில் கலப்பினக் கற்பூர மரங்கள், முந்திரி, சவுக்கு
ஆகிய மரங்களையும் வளர்த்துள்ளது.

16.3. கொடைக்கானல் மலைப்பகுதிகளில் 54 எக்டேர் பரப்
பில் இக்கழகம் 'ஜிரேனியம்' (Geranium) பயிரிட்டுள்ளது.

**17.** தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் குன்னூரைத்
தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்
கழகம் ஒரு நிறுவனமாக 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்
தின்கீழ் தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 1975-76
ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள
தேயிலைத் தோட்டங்களைப் பொறுத்தவரை, வன நிலங்களில்
1,500 எக்டேர் பரப்பளவு நிலத்தில் ஏற்கெனவே குத்தகை உரிமை
யைத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் அனுபவித்து
வருகிறது. ஜென்மம் நிலங்களில் 1,500 எக்டேர் பரப்பளவு
நிலத்தை அதே வரையறை நிபந்தனைகளுக்குட்பட்டு தமிழக
அரசு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு குத்தகைக்கு
விட உத்தேசித்துள்ளது. இக் கழகம் 1978-79 ஆம் ஆண்டில்
புதிதாக 324·62 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிட்டது.

[1980 ஜூலை 10

இது வரை 1,786·67 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப்
பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு—

தேயிலை பயிரிடப்பட்ட நிலப்பரப்பளவு.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற்கட்டத்தில் | .. | .. | 1,490.15 | எக்டேர். |
| இரண்டாம் கட்டத்தில் | .. | .. | 296.52 | ,, |
| மொத்தம் | | .. | 1,786·67 | ,, |

இக்கழகம் அமைக்கப்பட்டதிலிருந்த நாயகம் திரும்பிய 1,790
பேருக்கு தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்
பட்டுள்ளது.

## 18,1. அரசு ரப்பர் தோட்டங்களும் தொழிற்சாலையும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசாங்க ரப்பர் தோட்டங்
கள் மற்றும் ரப்பர் தொழிற்சாலை தொடர்பான நடைமுறைப்
பணிகளை விரைவு செய்ய, தக்க அமைப்பொன்று காணும்
கருத்துடன், போதிய அதிகாரங்களுடைய 'ஆளுகை குழு'
ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு அவ்வப்போது கூடி
அரசாங்க ரப்பர் தோட்டங்களில் நடைபெறும் வேலைகளின்
முன்னேற்றம் பற்றி ஆராய்வதோடு ரப்பர் தோட்டங்களில்
செயலாக்கப்பட வேண்டிய திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்
கிறது.

18.2. 1979-80 ஆம் ஆண்டு வரை வளர்க்கப்பட்ட ரப்பர்
தோட்டங்களின் பரப்பு 1,775 எக்டேர் ஆகும். இதில், 1,538
எக்டேர் பரப்பிலிருந்து, தற்போது ரப்பர் பால் எடுக்கப்படு
கிறது. 1980-81-ல் ரூ. 30·21 இலட்சம் செலவில் ''கிரம்ப்''
ரப்பர் தொழிற்சாலை (Crumb Rubber Factory) ஒன்
றினை நிறுவிட அரசாங்கம் நிதி ஒதுக்கியுள்ளது. ரப்பர் ஷீட்
தொழிற்சாலை ஒன்றும் (Sheeting Factory) அமைக்க அரசு
ஒப்புதல் அளித்துள்ளது. இத் தொழிற்சாலையின் கட்டுமானப்
பணி நடைபெற்று வருகிறது. அரசு ரப்பர்த் தோட்டங்
களிலுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, குடிநீர் வழங்கல்,
மருத்துவ உதவி, குழந்தைகளுக்குக் கல்வி வசதி போன்ற வசதி
கள் செய்து தரப்பட்டுள்ளன.

18.3. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர்த்
தோட்டங்களில் இருக்கும் கோட்ட வன அலுவலர்களின் பணி
களை 1969 ஆம் ஆண்டிலிருந்து (அரசு ரப்பர் தோட்டத்தின்



1980 ஜூலை 10]

வனப் பாதுகாவலர்) மட்டார அதிகாரி ஒருவர் மேற்பார்வை
யிட்டு வந்தார். அரசு ரப்பர் தோட்டங்கள் நல்ல முறையில்
செயல்பட வேண்டுமானால் கோட்ட அலுவலகங்கள் திறமை
மிக்கவையாக இருக்க வேண்டும். 1969 ஆம் ஆண்டிற்கு முன்னர்
நான்கு கோட்டங்கள்தான் இருந்தன. அரசு ரப்பர் தோட்டம்
வனப் பாதுகாவலரின் மேற்பார்வையில், ரப்பர் தோட்டப் பிரிவு
கள் ஒன்பதும், ரப்பர் தொழிற்சாலைப் பிரிவு ஒன்றும் தற்போது
உள்ளன. 1,775 எக்டேர் பரப்பில் ரப்பர் மரம் நட்டு இவற்றில்
1,538 எக்டேர் பரப்பில் உள்ள மரங்களிலிருந்து ரப்பர் பால்
எடுப்பதன் மூலம் பெரிய நிறுவனமாக இது வளர்ந்துள்ளது.
முன்னர் வளர்க்கப்பட்ட ரப்பர் மரங்கள் முதிர்ச்சியடைந்துள்ள
தால் ஒவ்வோராண்டும் புதிய பகுதிகளில் ரப்பர் பால் எடுக்கப்
படுகிறது. பெருமளவு மூலதனமிட்டு அதிக வருவாய் கிடைப்ப
தாலும், தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிடவும்
நிர்வாகம், பராமரிப்பு, தொழிலாளர் நலன் ஆகியவற்றில் அதிக
நாட்டம் செலுத்தவும் அரசு, கன்னியாகுமரி ரப்பர் தோட்டப்
பிரிவை, ''கன்னியாகுமரி கிழக்கு ரப்பர் தோட்டப்பிரிவு''
என்றும் ''கன்னியாகுமரி மேற்கு ரப்பர் தோட்டப் பிரிவு''
என்றும் இரண்டாகப் பிரித்துள்ளது. இவற்றின் தலைமை
யிடங்கள் முறையே நாகர்கோயில், தக்கலை ஆகும். ஒவ்வொரு
பிரிவின் கீழும் 5 சிறு பிரிவுகள் உள்ளன. கூடுதலாக அமைக்
கப்பட்ட ரப்பர்த் தோட்டப் பிரிவின் துணைப் பணியாளர்களு
டன் வனப் பாதுகாவலர் பதவிக்கு அரசு 1-2-1980 முதற்
கொண்டு அனுமதி வழங்கியுள்ளது.

## 19.1. பணித் திட்ட செயலாக்கமும், 1980-81 ஆம் ஆண்டிற்கான திட்டப்பணியும்.

வனத்துறையால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் விரிவான
விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன—

### வன வேலைத் திட்டங்கள்.

வனவேலைத் திட்டமே (Working Plan) வன நிர்வாகத்தின்
அடிப்படை எனலாம். இத்திட்டம் வனவேலைக்காகத் திட்ட
மிடும் பணி அமைப்பினை வலுவாக்கவும், நவீன முறையில்
நடைமுறைப் பணித் திட்டங்களை வகுக்கத் தேவையான கருவி
களை வாங்கவும் வகை செய்கிறது.

19.2. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 0·18 இலட்சம் செலவில்
இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

19.3. 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த
ரூ. 0·30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 20.1. வன இயல் ஆய்வும், கல்வியும்.

காடு வளர்ப்புக் கலை (Silviculture) மரபியல் ஆய்வு
(Genetics) மண் இயலாய்வு (Soil Science) வன நோயியல்
ஆய்வு (Forest Pathology) ஆகிய துறைகளில் ஆய்வு மேற்
கொள்ளத் தக்க வகையில் ஆய்வுத் துறைக்கு வலிவு கூட்டுதலே
இத்திட்டத்தின் நோக்கமாகும்.

20.2. 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 6·18 இலட்சம் செலவில்
இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. வனமரபியல்
ஆய்வு (Forest Genetics) உருவளவு (Forest mensuration)
துறைகளில் ஆய்வுப்பணி விரிவுபடுத்தப்படும். 1980–81 ஆம்
ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்காக ரூ. 5.65 இலட்சம் ஒதுக்
கப்பட்டுள்ளது.

## 20.3. மாநில வன இயலறிஞரின் பதவியை வனப் பாதுகாவலர் பதவித் தரத்திற்கு உயர்த்துதல்.

தமிழ்நாட்டில் வன இயல் ஆராய்ச்சிப் பிரிவு மாநில வன
இயலறிஞரின் நேரடி மேற்பார்வையின்கீழ் உள்ளது. இவர் இந்
திய வனப் பணியில் துணை வனப்பாதுகாவலர் பதவித் தரத்தி
லுள்ள ஓர் அதிகாரியாவார். இம்மாநிலத்தின் பல்வேறு பகுதி
களில் 27 வன இயல் ஆய்வு நிலையங்கள் இயங்கி வருகின்றன.
இங்கு நேரடி ஆய்வு நடத்தப்படுகிறது.

20.4 வனங்களின் நிர்வாகம், வன வளர்ச்சி ஆகியவற்றில் வன
ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைக் கருதியும், ஆராய்ச்சிப்
பணியின் வேகத்தைக் கூட்டவும், ஆராய்ச்சியின் தரத்தை மேம்
படுத்திட வேண்டிய அவசியத்தைக் கருதியும், அரசு காடு
வளர்ப்பு வல்லுநர் பதவியின் தரத்தினை 26–9-1979 முதற்
கொண்டு வனப் பாதுகாவலர் (Conservator of Forests) பதவியின்
தரத்திற்கு உயர்த்தியுள்ளது.

## 21. வனப்பயிற்சி.

வைகை அணையில் அமைந்துள்ள தமிழ்நாடு வன வளர்ப்புப்
பயிற்சிப் பள்ளி 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்
நாடு வனத்துறையைச் சேர்ந்த வனப் பணியாளர் (Foresters)
வனக்காப்பாளருக்குப் (Forest Guards) பயிற்சி அளிப்பதே
பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும். சுமார் 25 ஆண்டுகளுக்கு
முன்னர், வைகை அணை கட்டப்பட்டபோது, பொதுப்பணிகள்
துறையினால் தற்காலிகமாகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் இப்
பள்ளி அமைந்துள்ளது. கட்டிடத்தின் நிலைமை திருப்திகர
மாக இல்லை. விடுதியில் உள்ள பயிற்சியாளர்களுக்கு வசதி



களும் மிகக் குறைந்த அளவிலே உள்ளன. ரூ. 20·00 இலட்சம்
செலவில் விடுதி, உணவுக்கூடம் ஆகியவற்றிற்கு புதிய கட்டிடங்
கள் கட்டுதல், பிற வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவற்றுக்
கான தக்க செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

## 22.1 வன வள ஆய்வு.

காடுகளிலுள்ள இயற்கை வள ஆதாரங்களை சிறந்த
வகையிலும் சேர்ச்சியாகவும் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்காக
வனத்தின் இயற்கை வளங்களைக் கணித்துத் தொகுத்து
மதிப்பிடுவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

22.2 இதற்கேற்ப, 1979–80-ல் ரூ. 0·41 இலட்சம் செலவில்
ஆய்வுப் பணிகள் தொடங்கப்பெற்றன. இரண்டு கோட்டங்கள்
இப்பணியை ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன. கோவை,
தர்மபுரி மாவட்டங்களில் இந்த ஆய்வுப் பணி நடந்து வருகிறது.

23. 1980–81-ல் நீலகிரி, சேலம், பெரியார், தென்னாற்காடு
மாவட்டங்களில் 0·30 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இத்
திட்டத்தைச் செயல்படுத்துவதற்குக் கருதப்பட்டுள்ளது. இப்
பணிகளோடு மாநிலத்தின் வனப்பகுதிகள் அனைத்திலும் இந்தப்
பணி நிறைவடைந்து விடும்.

## 24.1 முந்திரித் தோட்டங்கள்.

வாய்ப்பான இடங்களில் முந்திரி மரங்களை வளர்ப்பதும்,
தற்போதைய முந்திரித் தோட்டங்களுக்கு உரமிடுதல், மருந்து
தெளித்தல் முதலிய பண்படுத்தும் பணிகளை முனைப்பாக மேற்
கொள்வதின் மூலம் விளைச்சலைப் பெருக்குதல் முதலியவை
இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

24.2 1979–80-ல் ரூ. 5.30 இலட்சம் செலவில், மதுரை,
திருச்சிராப்பள்ளி வட்டங்களில் 251 எக்டேரில் முந்திரி வளர்க்கப்
பட்டது. பழைய தோட்டங்களில் 755 எக்டேர் பரப்பளவில் மண்
வளப்பாதுகாப்புப் பணி, பூச்சி மருந்து தெளித்தல், உரமிடுதல்
போன்ற பண்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதற்கு ரூ. 5.30 இலட்சம் செலவாகியது, 1980–81-ல் ரூ. 19.30
இலட்சம் செலவில் 250 எக்டேரில் முந்திரித் தோட்டங்கள்
வளர்க்கவும், 2,500 எக்டேர் பரப்புள்ள பழைய தோட்டங்களில்
பண்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்
ளது. தீவிர பண்படுத்தும் பணிகளின்கீழ் கூடுதல் பரப்பளவில்
முந்திரி வளர்க்கப்பட்டதே கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரண
மாகும்.

**25.1 ரப்பர்த் தோட்டங்கள்.** [1980 ஜூலை 10

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரப்பர் தோட்டங்களின் இலக்கு 800 எக்டேராகும். 1977-78 இறுதி வரையில் 522 எக்டேர் பரப்பில் ரப்பர் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் வாய்ப்பான பகுதிகள் அனைத்திலும் ரப்பர் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளதால் மேற்கொண்டு ரப்பர் மரங்கள் வளர்க்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

25.2 முந்தைய ஆண்டுகளில் ஏற்கனவே வளர்க்கப்பட்ட ரப்பர் தோட்டங்களைப் பராமரிக்கவும், ரப்பர் தோட்டப் பகுதிகளில் கட்டிடங்கள் சாலை அமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் 1979-80-ல் ரூ. 30.54 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

25.3 1980-81-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள செலவு ரூ. 8.87 இலட்சமாகும். ஏற்கனவே வளர்க்கப்பட்டுள்ள ரப்பர் தோட்டங்களைப் பராமரிக்கவும், பணியாளர்கள், தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவும், சாலைகள் அமைக்கவும் இது பயன்படும்.

25.4 கிட்டும் நிதி வசதிக்கேற்பவும், படிப்படியாகவும், அரசு ரப்பர் தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும். மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி கீழே கூறப்பட்டுள்ள வசதிகள் செய்து கொடுக்கப்படும்;--

1. மருத்துவ வசதிகள்.
2. கல்வி வசதிகள்.
3. தேசிய விடுமுறைகள்.
4. பெண் தொழிலாளர்களுக்குப் பேறுகால வசதிகள்.
5. வீட்டு வசதிகள்.
6. மனமகிழ்வு -- பொழுதுபோக்கு வசதிகள்.
7. குளிர்காலத்திற்கான உடைகள், குடைகள்.

25.5 இதுவரையில் தொழிலாளர்களுக்கு என 287 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 561 வீடுகள் பலவேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.



1980 ஜூலை 10]

1980-81-ல் அரசு ரப்பர் தோட்டங்களைச் சேர்ந்த மைலாறு கோட்டத்தில் 28 வீடுகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**26.1 கூழ் மரத்தோட்டங்கள்.**

மரங்களை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் தொழில்களின் தேவையை ஈடு செய்ய கற்பூரத்தைல மரவகைகள் மூங்கில் போன்ற வேகமாக வளரும் மரவகைகளை வளர்க்கும் பணியை விரிவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

26.2 1979-80-ல் ரூ. 27.81 இலட்சம் செலவில் 2,136 எக்டேர் பரப்பில் மலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1980-81-ல் 400 எக்டேர் பரப்பில் தீவிரமாகப் பண்படுத்தும் பணிகளை மேற்கொள்வதுடன், 2,460 எக்டேர் பரப்பில் இம்மரங்களை வளர்ப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளன. இப் பணிகளுக்காக ரூ. 30.81 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**26.3 தொழிற்சாலைகளுக்கு கூழ்மரங்கள் மிலாறு மரப்பட்டை ஆகியவை வழங்குவதை முனைப்புடன் மேற்பார்வையிடுவதற்கும் சரிபார்ப்பதற்கும் கூடுதல் பணியாளர்களைப் பணியில் அமர்த்துதல்.**

நமது மாநிலத்தில் காடுபடு பொருட்களைச் சார்ந்துள்ள தொழிற்சாலைகளுக்கு இத்துறை மிலாறுப்பட்டை, பட்டை உரித்த மிலாறு மரம், கற்பூர மரங்கள் (Bluegum) மெழுகு தரும் மர வகைகள் (Redgum) ஆகியவற்றை வழங்கி வருகின்றன. தற்போதுள்ள குறைந்த அளவுப் பணியாளர்களே மேற்பார்வைப் பணியையும், வனப்பயிர்களின் அறுவடையினையும் கண்காணித்து வருகின்றனர். காடுபடு பொருட்களைச் சார்ந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற மரங்கள், ஏனைய மூலப் பொருட்கள் இவற்றின் அளவு ஆண்டுதோறும் கூடிக்கொண்டே வருகிறது; இப்போதுள்ள குறைந்த பணியாளர்களைக் கொண்டு இப்பணியை முடிப்பது கடினமாகும். தொழிற்சாலைகள் மேற்சொன்ன பணிகளை முனைப்புடன் மேற்பார்வையிடுவதற்கும், சரிபார்ப்பதற்கும் இயலும் பொருட்டும், இத்துறை தொழிற்சாலைகளிடமிருந்து வரிபாக்கியை வசூலிக்கும் பணியைச் சரியாக செய்யவேண்டியதை உறுதி செய்யும் பொருட்டும், இக் காரியத்திற்காக நிர்வாக. அலுவலகப் பணிகள் இரண்டிலும் கூடுதலாக சில பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் பணியாளர்கள் குறித்த செலவுக்காக, தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் பொருட்களின் விலையில் 5 சதவீதத் தொகை

[1980 ஜூலை 10

1-4-1979 முதல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளிடமிருந்து நிர்வாகக் கட்டணங்களாக வசூலிக்கப்படுகின்றன.

26.4. நீலகிரியில், கற்பூர மரங்கள் (Bluegum), மெழுகு தரும் மரவகைகள் (Redgum) ஆகியவை பெருமளவில் பயிரிடப் பட்டுள்ளன. எனினும் இத்தொழிற்சாலைகளின் விரிவுப்பணி மேலும் விரைவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இத்தொழிற்சாலைகளில் தேவைக்கும் உற்பத்திக்கு மிடையில் பெரிய இடைவெளி இருந்தே வருகிறது. ஆகவே, தற்போதுள்ள பகுதிகளில் உயர்வகை மரங்களை நடுவதன் மூலமும், உரமிடுதல், மண், நீர் வளப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமும் உற்பத்தியை அதிகரிப்பது மிகவும் அவசியமாகும்.

26.5. 1979–80 ஆம் ஆண்டில் தீவிர சாகுபடி திட்டங்களின் கீழ் 200 எக்டேர் பரப்பில் மரங்கள் நடப்பட்டன; 1980–81 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்தின்கீழ் 400 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படும்.

27.1. சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்.

(1) கிராமக்காடு வளர்ப்பு; (2) வனவிரிவாக்கத் திட்டம்; (3) ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரையோரக் காடு வளர்ப்பு ஆகிய திட்டங்கள் சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வருகின்றன. காடு வளர்ப்புத் திட்டத்தினைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு நல்ல முன்னேற்றத்தினை அடைந் துள்ளது. இத்திட்டத்தின்கீழ், காடு வளர்க்கப்படும் நிலப் பரப்பு, அடைந்த வெற்றி, ஆகிய வகையில் நாட்டில் முன்னணி யில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

27.2 இதுவரையில் கலப்பின மரத்தோட்ட திட்டத்தின் (Mixed Plantation) கீழ் வளர்க்கப்பட்ட மரத்தோட்டங்கள் உட்பட சுமார் 1,30,107 எக்டேர் பரப்பில் சவுக்கு மரங்கள், கற்பூரத்தைல மரங்கள், கருவேல மரங்கள், புளிய மரங்கள் போன்ற பயனுள்ள மர வகைகள் நடப்பட்டுள்ளன.

1979-80 ஆம் ஆண்டில், கிராமக்காடு வளர்ப்புத் திட்டம், வனவிரிவாக்கத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ. 121.88 இலட்சம் செலவில் 16,853 எக்டேர் பரப்பில் மலைத் தோட்டங்கள் வளர்க்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றுடன் 1,119 கி. மீட்டர் நீளத்திற்கு நிழல் தரும் மரங்கள் நடப் பட்டுள்ளன.



1980 ஜூலை 10]

1980-81 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளை ரூ. 96·38 இலட்சம் செலவில் செயல்படுத்த கருதப் பட்டுள்ளது.

1. 16,650 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்த்தல்.

2. 420 கி. மீ. தூரத்திற்கு மேல் நிழல் தரும் சாலை ஓர மரங்களை வளர்த்தல் (Avenue Plantations).

3. 12 எக்டேர் பரப்பில் சாலையோர பூங்காக்களை அமைத்தல் (Road-Side Parks).

4. 800 எக்டேர் பரப்பில் ஆற்றங்கரை, கால்வாய்க்கரை ஏரிக்கரை ஆகிய இடங்களில் மரங்களை நடுதல்.

5. ஐந்து இலட்சம் மரக்கன்றுகள் வளர்த்து வழங்குதல்.

27.3. இத்திட்டம், கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதோடு, விறகு மற்றும் சிறு மரங்கள் ஆகியவற்றின் பற்றாக்குறையைப் போக்கிடவும் உதவும். இத்தகைய வளர்ப்புக் காடுகள், மண் வளம், ஈரம் முதலியவற்றைப் பேணிக் காப்பதுடன் உயிரின வாழ்க்கைக்கு ஆதாரமான இயற்கைச் சூழ் நிலைகளைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

தொழில்துறை, வாணிகத்துறைகளுக்கு வேண்டிய மரங்களை வளர்த்தல்—தேக்கு ஏனைய திண் மரங்கள்.

28.1. தேக்கு மரம் மற்றும் அது போன்ற கடின வகை மரங்களைத் தக்க இடங்களில் வளர்த்து மாநிலத்தின் மரவளத் தைப் பெருக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

28.2. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 4.02 இலட்சம் செலவில் 416 எக்டேர் பரப்பில் இம்மரத் தோட்டங்கள் அமைக்கப்பட் டன. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 5.06 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. 456 எக்டேர் பரப்பில் தேக்கு மற் றும் கடின வகை மரத் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

29.1 தீக்குச்சி மரங்கள்.

தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய குச்சிகளையும், பெட்டி களையும் தயாரிக்கத் தேவையான மர வகைகளை மதுரை, திரு நெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் பொருத்தமான இடங்களில் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

[1980 ஜூலை 10

29.2. 1980-81 ஆம் ஆண்டில் 110 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 0·01 இலட்சம் அடையாளத் தொகை (Token Provision) ஒதுக்கப்பட்டுள்ளது.

## 30.1. மிலாறு மரத் தோட்டங்கள்.

தோல் பதனிடும் தொழில், மற்றும் மரக் கூழ்த் தொழில் ஆகியவற்றிற்கு மிலாறு மரமும், மிலாறு பட்டையும் இன்றியமையாத மூலப்பொருள்களாகும்.

தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களைப் பெற நீலகிரியிலும், பழனி மலைத் தொடரின் மேல்மட்டக் காடுகளிலும் மிலாறு மரம் வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

30.2. 1978-79 ஆம் ஆண்டில், 3.81 இலட்சம் செலவில் 1,613 எக்டேரில் மிலாறு மரங்கள் வளர்க்கப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 1,105 எக்டேர் பரப்பில் மிலாறு மரங்கள் வளர்ப்பதற்கும் அத்துடன் 175 எக்டேர் பரப்பில் அடர்த்தியைக் குறைக்கவும் ரூ. 2·84 இலட்சம் செலவிடப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டில் 1,000 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்க ரூ. 8·33 இலட்சம் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

## 31.1. விறகு மரக் காடுகள்.

மக்களின் அன்றாட எரிபொருள் (விறகு) தேவையை ஈடுகட்ட விறகு மர வகைகளை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

31.2. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 40·42 இலட்சம் செலவில் சவுக்கு மர வகைகள், நீலகிரி தைல மர வகைகள், ஏனைய பல்வகை மரங்கள் மொத்தம் 4,645 எக்டேர் பரப்பில் வளர்க்கப்பட்டன. 1980-81 ஆம் ஆண்டில் 5,900 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்க ரூ. 69.66 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 32.1. சந்தன மரத் தோட்டங்கள்.

வனத்துறையிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு சந்தன மர விற்பனையிலிருந்து கிடைக்கிறது. சந்தன மர வளத்தை பெருக்கிட, வாய்ப்பான இடங்களில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது.



1980 ஜூலை 10]

32.2. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 1·93 இலட்சம் செலவில் 171 எக்டேர் பரப்பில் செயற்கை முறையில் சந்தன மர வளர்ப்பும், 45 எக்டேர் பரப்பில் இயற்கை சந்தனக்காடுகளில் பண்படுத்தும் பணியும் 50 எக்டேர் பரப்பில் புதர் வன முறையில் சந்தன மர வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

32.3. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 20·29 இலட்சம் செலவில் 245 எக்டேர் பரப்பில் சந்தன மர வகைகள் வளர்க்கவும், 50 எக்டேர் பரப்பில் பேணிப் பாதுகாக்கும் பணியும், 750 எக்டேர் பரப்பில் புதர்வன முறையில் சந்தன மர வளர்ப்பும் மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. கட்டிடப் பணிகளுக்கென ரூ. 3·94 இலட்சமும், சந்தன மர கிடங்குகள் (Depots) கட்டுவதற்காக ரூ. 13·55 இலட்சமும் இந்த நிதியொதுக்கீட்டில் அடங்கும்.

32.4. வட ஆற்காடு மாவட்டக் காடுகளிலிருந்து கொண்டு வரப்படும் தூய்மைப்படுத்தப்படாத சந்தன மரத்துண்டுகளைச் சேமித்து வைக்க திருப்பத்தூரில் தற்போதுள்ள சந்தன மர கிட்டங்கியிலுள்ள இடவசதி போதவில்லை. இந்நிலையில், தூய்மைப்படுத்தப்படாத சந்தனக் கட்டைகளை காடுகளிலிருந்து திருப்பத்தூர் கிடங்கிற்கு அனுப்புவதை குறைக்க நேர்ந்தது, கிடங்கில் இடப்பற்றாக்குறையே இதற்கு காரணமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, கிடங்கில் உள்ள இடவசதிக்கேற்ப காடுகளிலிருந்து சந்தனக் கட்டைகளை அனுப்ப வேண்டி வந்தது. வெட்டி எடுக்கப்பட்ட சந்தனக் கட்டையை வனத்திலேயே விட்டு வைத்தால் அவை களவு போகலாம்; நிறைகுறைவாகலாம். நீண்ட காலத்திற்கு திறந்த வெளியில் வைத்திருந்தால் சந்தனக் கட்டையும் கெட்டுப் போகும். இட நெருக்கடி காரணமாக, கிடங்குப் பணிகள் தடைப்படுகின்றன. திருப்பத்தூரில் கூடுதலாக கிடங்கைக் கட்டுதல், சுற்றுச் சுவரையும் காவல் பரண் (Watch Tower) கட்டுதல் முதலிய பணிகளுக்கான ரூ. 7·20 இலட்சம் செலவுக்கான செயற்குறிப்புக்கு அண்மையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## 33.1. கலப்பினத் தோட்டங்கள்.

கலப்பினத் தோட்டங்களை வளர்க்கும் திட்டம் 1978-79 வரையில் மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டமாக இருந்தது. இத்திட்டத்தின்கீழ் செலவை மத்திய அரசும், மாநில அரசும் 75 : 25 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொண்டன. 1-4-1979 ஆம் நாளிலிருந்து இத்திட்டம் மாநிலத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

33.2. 1979-80 இல், 6,163 எக்டேர் பரப்புள்ள பகுதியில்
மரங்கள் நடுவதற்கும், 150 கி. மீ. தொலைவு வரையிலும்
நிழல் தரும் மரங்களை நடுவதற்கும் ரூ. 43·03 இலட்சம் செலவில்
இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

33.3. 1980-81 இல், இத்திட்டத்தைச் செயல்படுத்து
வதற்கென ரூ. 71·03 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட
பணிகள் 1980-81 இல் மேற்கொள்ளப்படும்:—

(1) 9,600 எக்டேர் பரப்பளவில் மரங்களை நடுதல்;
(2) 250 கி. மீ. தொலைவிற்கு நிழல் தரும் மரங்களை வளர்த்தல்
(3) பொதுமக்களுக்கு 7·50 இலட்சம் நாற்றுகளை வழங்குதல்.
அதிகப் பரப்பளவு நிலங்களில் பணியை விரிவுபடுத்தியதாலும்
அதற்கேற்ப கூடுதலாக பணியாளர்களை நியமிப்பதென
உத்தேசிக்கப்பட்டதன் காரணமாகவும் இதற்காக இந்த நிதி
ஒதுக்கீடு உயர்ந்துள்ளது.

## 34. தமிழ்நாட்டின் கடற்கரையோரங்கள் நெடுகிலும் புயற்பாது காப்பு ஏற்பாடுகளைச் செய்தல்.

அடிக்கடி எழும் புயலின் சீற்றத்தால் ஏற்படும் கேடுகளை
மட்டுப்படுத்தும் வகையில் கடற்கரையோரமாக நெடுக காப்பு
ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கற்பட்டு, தென்
ஆற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய
மாவட்டங்களில் வருவாய்த்துறை நிலங்களிலும் வனத்துறை
நிலங்களிலும் வனநிலங்களில் கடற்கரையோரமாக நெடுக
மரங்களை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

1979-80-ல் ரூ. 11·37 இலட்சம் செலவில் 697 எக்டேர் பரப்
பளவில் மரங்கள் வளர்க்கப்பட்டன. 1980-81 இல் ரூ. 12·54
இலட்சம் செலவில் 920 எக்டேர் பரப்பளவில் மரங்களை வளர்ப்ப
தெனக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த
செங்கற்பட்டைத் தலைமையிடமாகக் கொண்ட தனியானதொரு
கோட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 35. இருப்புப் பாதை நெடுக மரங்களை நடுதல்.

இருப்புப் பாதையையொட்டி மரங்களை நடும் பணியை
மேற்கொள்வதற்கான புதிய திட்டத்தினை வனத்துறை மேற்
கொண்டுள்ளது. 1979-80 இல் முன் ஆயத்த ஆரம்பப் பணி
கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான செலவு ரூ. 0·24
இலட்சம் ஆகும். 1980-81-இல் 15·01 இலட்சம் செலவில்
3,000 எக்டேர் பரப்பளவில் மரங்களை வளர்ப்பதெனக் கருதப்
பட்டுள்ளது.



## 36. அழிந்த காடுகளை மீண்டும் வளர்த்தல்.

இது முதலில் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாக
(Centrally Sponsored Scheme) இருந்தது. இத்திட்டத்திற்கான
செலவை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்
தில் பகிர்ந்து கொண்டன. 1-4-1979 ஆம் நாளிலிருந்து இத்
திட்டம் மாநிலத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. 1979-80 இல்
ரூ. 26·00 இலட்சம் செலவில் 2,445 எக்டேர் பகுதியில் மரங்
களை வளர்க்க இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1980-81
இல் ரூ. 36·86 இலட்சம் செலவில் 3,100 எக்டேர் பகுதியில்
மரங்கள் வளர்க்கப்படும். பணியாளர்களுக்கான செலவு
ரூ. 5·72 இலட்சமும் இந்த நிதி ஒதுக்கீட்டில் அடங்கும். உள்ளூர்
மக்களின் விறகு மற்றும் பிற தேவைகளை நிறைவு செய்யும்
பொருட்டு வனத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அழிந்து
பட்ட காடுகளில் பொருளாதார முக்கியத்துவம் உள்ள தாவரம்
மற்றும் மர வகைகளை வளர்த்திட இத்திட்டம் வகை செய்கி
றது.

## 37. வெட்டு மரப்பணிகளும் வனப் பயன்பாடும்.

இத்திட்டம் 1979-80 இல் ரூ. 0·04 இலட்சம் செலவில்
செயல்படுத்தப்பட்டது. 1980-81-இல் இத்திட்டத்தைச்
செயல்படுத்த ரூ. 22·30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது. அடர்ந்த அடவிப் பகுதிகளினூடே பணியாற்றும்
பணியாளர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டுவது, வனக் கிடங்கு
கள், வனச் சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகிய
பணிகள் இத்திட்டத்தில் அடங்கும். அந்தியூர், சத்தியமங்கலம்,
தெங்கணிக்கோட்டை, கொடைக்கானல் ஆகிய இடங்களில்
"நிறுவைப் பாலங்கள்" (Weigh Bridges) அமைக்க ஒப்பளிக்கப்
பட்டுள்ளது. இந்த நிறுவைப் பாலங்களில் பணிபுரியும் அலுவலர்
தணிக்கை சாவடிகளுக்குரிய (Check-posts) வேலைகளையும்
கவனித்துக் கொள்வார்கள்.

## 38.1. காடுபடு சிறு பொருள்கள்.

புளி, குங்கிலியம், கற்பூரத் தைலம், கடுக்காய் போன்ற
சிறு பொருள்களிலிருந்து பெரும் வருவாயினைப் பெருக்கிட
பொருளாதார, வாணிபச் சிறப்புமிக்க காடுபடு பொருள்களை
நல்கும் மரங்களை மேலும் மேலும் வளர்ப்பதன் மூலம் காடுபடு

பெரும் வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய காடுபடு சிறு
பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின்
குறிக்கோளாகும்.

38.2. 1979–80-ல் ரூ.8.11 இலட்சம் செலவில், 1144 எக்டேர்
பரப்பளவில் மரங்களும், 10 கி. மீ. தொலைவில் நிழல் தரும்
மரங்களும் வளர்க்கப்பட்டன.

38.3. 1980-81-ல், கூடுதலாக 1,300 எக்டேர் பரப்பளவில்
இத்தகைய மரங்களை வளர்ப்பதற்கும், 700 எக்டேர்
பரப்பில் மும்முர வளர்ப்புப் பணியை மேற்கொள்வதற்கும்
ரூ. 14.99 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது.

## 39.1. சாலைப் போக்குவரத்துத் திட்டம்.

வெட்டப்பட்ட மரங்களை விரைந்து எடுத்துச் செல்லத்தக்க
வகையில் ஏற்கனவே உள்ள சாலைகளை மேம்படுத்துவதும்,
புதிய சாலைகளை அமைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
காடுகளில் மேற்கொள்ளப்படும் காடு வளர்ப்பு மற்றும் மேம்
பாட்டுத் திட்டங்களுக்கு நன்கு திட்டமிடப்பட்டு செவ்வனே
பராமரிக்கப்பட்ட சாலைகள் மிகவும் இன்றியமையாததாகும்.
இவை காடுகளை செம்மையாகப் பாதுகாக்கும் பணியை மேற்
கொள்ளவும் உதவியாக இருக்கும்.

39.2. 1979–80–ல், வடாற்காடு, கோயம்புத்தூர், நீலகிரி
ஆகிய மாவட்டங்களில் முந்திய ஆண்டில் முடிக்கப்படாத பணி
களைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதோடு புதிய சாலைகளை
அமைத்தல் வனப்பகுதிகளில் தற்போதுள்ள சாலைகளை மேம்
படுத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றிட ரூ. 11.77 லட்சம்
செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1980–81 ஆம்
ஆண்டில், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, திருநெல்வேலி
ஆகிய மாவட்ட வனப்பகுதிகளில் புதிய சாலைகளை
அமைக்கவும், பழைய சாலைகளை மேம்படுத்தவும் தேவையான
பணிகளை ரூ. 25.00 லட்சம் செலவில் மேற்கொள்வதெனக்
கருதப்பட்டுள்ளது.

## 40.1. கட்டிடங்கள் கட்டும் திட்டம்.

காட்டின் உட்பகுதிகளில் பணிபுரியும் வனத்துறைப் பணி
யாளர்களுக்குக் குடியிருப்புக்கள் கட்ட இத்திட்டம் வகை
செய்கிறது.

40.2. 1979–80 ஆம் ஆண்டில் வனத்துறை பணியாளர்
களுக்கு கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை
ஆகிய மாவட்டங்களில் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டுவதற்கு



ரூ. 4.19 லட்சம் செலவிடப்பட்டது. வட ஆற்காடு, சேலம்
திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர்
நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் வனத்துறைப் பணி
யாளர்களுக்கு 1980–81–ல் ரூ. 35 லட்சம் செலவில் புதிய குடி
யிருப்புக்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

40.3. இத்துறையின் அதிகாரிகள். பணியாளர்களுக்கான
வீட்டு வசதிப் பிரச்சினை கடந்த காலத்தில் கருதந்தவாறு எதிர்
நோக்கப்படவில்லை. பெரும்பாலான அதிகாரிகளும் பணியாளர்
களும் தங்களது சம்பளத்துக்கு ஒவ்வாத வகையில் அதிக அளவு
வாடகையில் தனிப்பட்ட வாடகை வீடுகளில் குடியிருக்கின்றனர்.
இப்பிரச்சினை மாவட்டத்திலும், தலைமையிடங்களிலும், வட்ட
தலைமையிடங்களிலும் மிகவும் கடுமையாக உள்ளது.

## 41·1 இயற்கைப் பாதுகாப்பு.

வனவிலங்குகளைப் பாதுகாப்பதிலும் மரங்களை வளர்ப்
பதிலும் வனவிலங்கு உய்விடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
இந்த உய்விடங்கள் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்வன
வாகும்.

41.2. 1979–80-ல், ரூ.17.20 லட்சம் செலவில் இயற்கை பாது
காப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. சாலை மேம்பாட்டுப்
பணிகள், கட்டிடங்கள் கட்டுதல். உய்விடங்களில் தீத்தடுப்புப்
பணிகளை மேற்கொள்ளுதல், முதலைப் பண்ணையையும்,
மிருகக்காட்சி சாலைகளையும் பராமரித்தல், காவற்பரண்கள்
கட்டுதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

41.3. 1980–81–ல் இத்திட்டத்தின் கீழ் ரூ. 24.07 லட்சம்
நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் சாலைகள்,
கட்டிடங்களுக்கும் வனவிலங்கு உய்விடங்களின் மேம்பாட்டுப்
பணிகளுக்குமான ரூ. 21.54 லட்சம் வண்டிகளுக்கான ரூ. 2
லட்சம், பணியாளர்களுக்கான ரூ. 0.53 லட்சம் ஆகியவை
அடங்கும்.

## 42·1 களக்காட்டில் சிங்கவால் குரங்கிற்காக புகலிடம் அமைத்தல்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு உய்விடத்தில்
உள்ள இந்த இனம் குறித்து அறிவியல் முறையில் விரிவான
சிங்கவால் குரங்குகளைப் பாதுகாப்பதும், அழிந்துவரும் நிலையி
ஆய்வு மேற்கொள்ளுவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்
களாகும்.

42.2. 1979–80–ல் இத்திட்டம் ரூ. 0.17 லட்சம் செலவில்
செயல்படுத்தப்பட்டது.

[1980 ஜூலை 10

42.3. 1980–81 ஆம் ஆண்டிற்கு அடையாள நிதி ஒதுக்கீடாக ரூ. 0.02 லட்சம் செய்யப்பட்டுள்ளது.

**43.1. கோடிக்கரை வனவிலங்கு புகலிடத்தை மேம்படுத்துதல்.**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரை புகலிடம் ஓரளவே எஞ்சியுள்ள வெளிமான் (Black buck) இனத்தை வளர்த்து வரும் பகுதியாகும். அவ்வினத்தைப் பாதுகாத்து, செவ்விய முறையில் வசதிகளைச் செய்தல், விரிவான அறிவியல் ஆய்வு ஆகியவை முக்கிய திட்டப்பணிகளாக மேற்கொள்ளப் படுகின்றன.

43.2. 1979–80 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ. 1.79 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980–81-ல் இத்திட்டம் ரூ. 0.20 லட்சம் செலவில் மேலும் செயல்படுத்தப்படும்.

**44.1. முதுமலை வனவிலங்குகள் புகலிட மேம்பாடு.**—1979–80ல் ரூ. 3.09 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தை முடிப்பதற்காக 1980–81 ஆம் ஆண்டில் அடையாள நிதி ஒதுக்கம் ரூ. 0.01 லட்சம் செய்யப்பட்டுள்ளது.

**44.2. முதலைகளை நீர்த்தேக்கத்தில் வளர்த்தல்.**

ஆற்றிலுள்ள முதலைகள் அழிந்துவிடும் நிலையில் உள்ளன. முதலையினத்தைக் காத்து பேணுவதற்காக முதலையின் முட்டைகள் சேகரிக்கப்பட்டு, அமராவதி, சாத்தனூர் ஒகேனக்கல் ஆகிய இடங்களிலுள்ள வனத்துறையின் குஞ்சு பொறிக்கும் நிலையங்களில் வைக்கப்பட்டு குஞ்சு பொறிக்கப் படுகின்றன. இவ்வாறு பிறக்கும் குட்டி முதலைகளை நமது மாநிலத்திலுள்ள சில நீர்த்தேக்கங்களில் விட்டு வளர்க்க கருதப் பட்டுள்ளது.

ஒவ்வோராண்டும் இருநூறு சிறிய முதலைகளை நீர்த்தேக் கங்களில் விடும் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, பாபநாசம், கோதையாறு ஆகிய நீர்த்தேக்கங்களில் முதலைக்குட்டிகள் விடப்பட்டு வருகின்றன. முதலைகளை நீர்த் தேக்கங்களில் கொண்டு விடுவதனால் மின் உற்பத்தி எந்த வகையிலாவது பாதிக்கப்படுமா என்பது குறித்தும் தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

அடுத்தபடியாக, கடந்த காலத்தில் அவைகள் வசித்து வந்ததாகத் தெரியும் இயற்கையான நீர்நிலைகளிலும் முதலைகள் விடப்படும்.



1980 ஜூலை 10]

4[illegible] ரூ. 15·00 இலட்சம் [illegible] செய்யப்பட்டுள்ளது.

**45.1. பழங்குடியினர் நலத் திட்டம்.**

வேலை வாய்ப்பு, கல்வி, வீட்டுவசதி, மருத்துவம் ஆகிய வசதிகளை செய்வதன்மூலம் காட்டில் வாழும் பழங்குடியின மக்களின் பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

45.2. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத் தின் கீழ் ரூ. 50·00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

45.3. 1979–80-ல் ரூ. 8·38 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 23·01 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கத்தில் கட்டிட சாலைப் பணிகளுக்கு ரூ. 10·36 இலட்சமும் பணியாளர்களுக்கு ரூ. 0·88 இலட்சமும் அடங்கும். இத்திட்டத்தில் பழங்குடியினர் பள்ளிகளையும், மாணவர் இல் லங்களையும் மேம்படுத்தல், பழங்குடியினர் பகுதிகளில் காடு வளர்த்தல் ஆகியவை அடங்கும்.

**46. வனங்கள் பற்றிய விளம்பரம் செய்தல்.**

நாட்டு நலனுக்கும் பணியில் காடுகளும் விலங்குகளும் ஆற் றும் பங்கு குறித்தும், அவற்றைக் காப்பதன் தேவை குறித் தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன் இத்திட்டம் செயல் படுகிறது.

47. 1979–80-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ 0·82 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980–81ல் இப்படங்கள், விளம்பரப் பலகை அமைத்தல், சிறு புத்தக வெளியீடுகள் முதலிய வற்றின் மூலம் விபரங்களை மக்களுக்கு பரப்பும் பணியை விரைவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இதற்கு கருதியுள்ள செலவு ரூ. 1·62 இலட்சமாகும்.

**48·1 முன்னாள் ஜமீன் காடுகளை மேற்கொள்ளுதல்.**

சுமார் 4,40,393 எக்டேர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகள், ஒதுக்கக் காடுகள் அல்லாத ஏனைய காடுகள் ஆகிய வற்றை வனத்துறை தன்னிடம் கொண்டுள்ளது.

சிறந்த முறையில் இக்காடுகளைப் பாதுகாக்க நில அளவை செய்து, எல்லை வரையறுத்துத் தமிழ்நாடு வனச்சட்டத்தின் கீழ் ஒதுக்குக்காடுகளாக இவற்றை அமைக்க வேண்டும்.

48.2. 1979–80 ஆம் ஆண்டில் ஆன செலவு ரூ. 0·95 இலட்சம் ஆகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 1980–81-ல் ரூ. 1·30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

49.1. வனப்பாதுகாப்பு.

தீ விபத்திலிருந்தும் ஏனைய இடையூறுகளிலிருந்தும் காடு களை சிறந்த முறையில் காப்பதற்கான வழிவகைகளை வகுப் பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

49.2. கோடைக்காலங்களில் வனங்களில் தீ பரவா வண்ணம் கண்காணிக்கவும், தீத்தடுப்புப் பணிகளைக் கவனிக்கவும் பணியாளர்களை அமர்த்திய வகையில் 1979–80-ல் ரூ. 2·08 இலட்சம் செலவிடப்பட்டது.

49.3. இத்திட்டத்தைச்செயற்படுத்துவதற்காக, 1980–81-ல் ரூ. 4·51 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

50.1. தொழிலாளருக்கும் பணியாளருக்கும் வசதிகள்.

இத்திட்டத்தின் மூலம் கம்பளிப் போர்வை வழங்குதல் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல், மருத்துவ வசதி அளித்தல் முதலிய வசதிகளைக் காடுகளில் உள்ள தொழிலாளர் களுக்கும் பணியாளர்களுக்கும் அளிக்கக் கருதப்படுகிறது.

50.2. 1979–80-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்து வதற்கான செலவு ரூ. 3·22 இலட்சம் ஆகும். 1980–81-ல் ரூ. 10·54 இலட்சத்தை ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. கட்டிடப் பணிக்கான ரூ. 6·62 இலட்சமும் இதனுள் அடங்கும்.

51.1 முந்திரி பதியப் பெருக்கம்.

வனத்துறையைச் சேர்ந்த மலைத தோட்டங்களில் குறைந்த விளைச்சல் தரும் முந்திரி மரங்களில் சிறந்த முந்திரி மரங்களின் கிளைகளை ஒட்டுதல், பதியம் வைத்தல் ஆகிய முறைகளைக் கைக் கொண்டு முந்திரியின் விளைச்சலைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

51·2. 1980–81-ல் ரூ. 0·50 இலட்சம் செலவில் இத்திட் டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.



52. மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டம்.

இது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாகும். மேற்கு மலைத் தொடரின் இயற்கை வளத்தைப் பயன்படுத்தி அப் பகுதியின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

1975–76-ல், இத்திட்டத்தின் கீழ் (அ) நீலகிரியில் தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல், கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்புத் தோட்டம் வளர்த்தல் போன்ற இரு திட்டப்பணிகளை வனத்துறை மேற்கொண்டது. ஏற்கனவே, உள்ள திட்டப்பணி களுடன், 1976–77-ல் (அ) மதுரை மாவட்டத்திலுள்ள பழனி மலையின்மேல் பகுதியில் மரக்கூழ் தயாரிப்பதற்கான மரங்களை வளர்த்தல் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட் டங்கள் வளர்த்தல் ஆகிய இரு பணிகளும் மேற்கொள்ளப்பட் டன. இத்திட்டங்களின் விவரம் வருமாறு:—

52.2. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்புத் தோட்டம் வளர்த்தல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 30·73 இலட்சம் செலவில் 100 எக்டேர் பரப்பில் கிராம்புத் தோட்டம் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

52.3. திட்டமிடப்பட்ட பகுதியில் ஏற்கனவே கிராம்பு மரங்கள் வளர்க்கப்பட்டன.

52.4. 1979–80-ல் ஏற்கனவே வளர்க்கப்பட்ட கிராம்புத் தோட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ரூ. 5·32 இலட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டுதல், சாலை கள் போடுதல் முதலிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1980–81-ல் ரூ. 6·05 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. பழைய கிராம்புத் தோட்டங் களைப் பராமரிப்பதுடன் 5 எக்டேர் பரப்பில் கிராம்பு பயிரிடு வதும் மண் வளப்பாதுகாப்புப் பணியும் இத்திட்டத்தில் அடங் கும்.

53.1. ரப்பர் தோட்டங்கள் வளர்த்தல்.

1979–80-ல், 400 எக்டேர் பரப்பில் ரப்பர் தோட்டங்கள் வளர்த்தல், பழைய ரப்பர் தோட்டங்களைப் பராமரித்தல்

தொழிற்சாலை, தொழிலாளர் குடியிருப்புகள் அலுவலகக்
கட்டிடங்கள், பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றைக்
கட்டுதல், இயந்திரங்கள் வாங்குதல், பணியாளர்களுக்கும்,
தொழிலாளர்களுக்கும் வசதிகள் செய்து கொடுத்தல் முதலிய
பணிகள் மேற்கொள்ளப்பட்டன; இதற்கு ஏற்கப்பட்ட செலவு
ரூ. 40·75 இலட்சமாகும்.

53.2. 1980-81-ல் ரூ. 31·10 இலட்சம் செலவில் இத்திட்
டத்தை தொடர்ந்து செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. கட்டி
டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 18·39 இலட்சமும் சாலை
களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 6·10 இலட்சமும் இதில் அடங்கும்.

**54.1. மரக்கூழ் தயாரிப்பதற்கான மரங்களை மதுரை மாவட்டத்தில் வளர்த்தல்.**

மதுரை மாவட்டம், பழனி மலையின் மேல் பகுதியில் ரூ.
24.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 1,500 எக்டேர் பரப்
பில், தொழிற்துறைக்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்
கும் தைல மர வகைகளையும், ஊசி இலை மரங்களையும் வளர்ப்
பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

54.2. 1979-80-ல் ரூ. 5·82 இலட்சம் செலவில் இத்திட்டம்
செயற்படுத்தப்பட்டது; 508 எக்டேர் பரப்பில் மரங்கள்
வளர்க்கப்பட்டன.

54.3. 1980-81-ல், ரூ. 9·92 இலட்சம் செலவில் இத்திட்
டத்தை செயலாக்கக் கருதப்பட்டுள்ளது. பழைய தோட்டங்
களைப் பராமரிப்பதுடன் 800 எக்டேர் பரப்பில் புதிதாகத்
தோட்டங்கள் வளர்ப்பதும் இச்செலவில் அடங்கும்.

**55.1. நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள் வளர்ப்பு.**

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் ரூ. 69·00 இலட்சம்
மதிப்பீட்டுச் செலவில் 300 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்
டங்கள் வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

55.2. 1979-80-ல், ரூ. 15·82 இலட்சம் செலவில் 24 எக்
டேர் பரப்பில் தேயிலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன;
கட்டிடங்கள் கட்டுதல், சாலை அமைத்தல் முதலிய பணிகள்
நிறைவேற்றப்பட்டுள்ளன.

55.3. 1980-81-ல், இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட
தொகை ரூ. 22·69 இலட்சமாகும். பழைய தோட்டங்களை



பராமரித்தல், பணியாளர், தொழிலாளர்களுக்குக் கட்டிடங்கள்
கட்டுதல், சாலைகள் அமைத்தல் முதலிய பணிகளுடன் மேலும்
75 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

**56.1. மண்வளப்பாதுகாப்பு.**

**வைகை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதி.**

வைகை நீர்த்தேக்கத்திலும், வைகை ஆற்றிலும் மண் அரிப்பு
ஏற்படுவதையும், வண்டல் படிவதையும் தடுக்கும் வகையில்
வேண்டி வைகை ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண்வளப்
பாதுகாப்பு பணிகளை செயல்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்க
மாகும்.

56.2. 1979-80-ல், 1,000 எக்டேர் பரப்பில் மரம் வளர்த்
தல் பழைய தோட்டங்களைப் பராமரித்தல், மண் அரிப்புத்
தடுப்பு அணைகள் கட்டுதல் போன்ற பணிகள் ரூ. 6·99 இலட்சம்
செலவில் நிறைவேற்றப்பட்டன.

56.3. 1980-81-ல், ரூ. 17·00 இலட்சம் செலவில் 2,400
எக்டேர் பரப்பளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதி
யுள்ளோம்.

**57.1. ஸ்டான்லி நீர்த்தேக்க நீர்ப்பிடிப்பு பகுதி.**

நீர்த்தேக்கத்தில் ஏற்படும் மண் அரிப்பையும், வண்டல் மண்
படிவதையும் தடுக்கும் பொருட்டு, 'மேட்டூர் ஸ்டான்லி' நீர்த்
தேக்கத்தின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மண் வளப்பாதுகாப்புப்
பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

57.2. 1979-80-ல், 1574 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்
தல், நில வளைவு கற்சுவர்கள், மண் அரிப்புத் தடுப்பு அணை
கள், பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகள்
ரூ. 18.41 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

57.3. 1980-81-ல் 4,800 எக்டேர் பரப்பில் 48·83 இலட்
சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்
ளது. 21-6-80 முதல் நீர்ப்பிடிப்பு பகுதி முழுவதையும் இத்
திட்டத்தின் கீழ் விரைந்து கொண்டு வர, தருமபுரி மாவட்டத்
தில் ஒரு புதிய கோட்டத்தை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்
ளது.

**58.1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.**

* மத்திய அரசின் ஆதரவு பெற்ற இத்திட்டம், நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து முழு நிதியுதவி பெறுவதற்கு இத்திட்டம் தகுதியுடையதாகும்.

58.2. 1979-80-ல் இத்திட்டம் ரூ. 11·23 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. பொதுமக்களுக்கு விற்பதற்காகப் பயன்தரும் மரவகைகளைச் சேர்ந்த இரண்டு இலட்சம் மரக் கன்றுகளை வளர்ப்பதுடன், 302 எக்டேர் பரப்பில் தைல மரங்கள், ஊசி இலை மரங்கள் நடப்பட்டன.

58.3. 1980-81-ல், ரூ. 19·60 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் (ரூ. 3·21 இலட்சம்) சாலைகள் அமைத்தல் (ரூ. 1 இலட்சம்) பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை விற்பனை செய்தல் போன்ற பணிகளுடன் 500 எக்டேர் பரப்பில் இத்திட்டப் பணி நடைபெறும்.

**59. வண்டலூரில் விலங்ககம் அமைத்தல்.**

சென்னை மத்திய இரயில் நிலையத்தை விரிவு படுத்துவதற்காக தற்போது விலங்குக் காட்சி சாலை அமைந்துள்ள இடத்தைச் கொடுக்கும்படி இந்திய ரயில்வேத் துறை வேண்டியதற்கிணங்க, சென்னை மாநகரத்திலிருந்து 30 கி. மீட்டர் தொலைவில் உள்ள வண்டலூரில் நவீன வசதிகளுடன் "விலங்ககம்" ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 300 இலட்சம் செலவாகும். திட்டத்தின் முதல் கட்டப் பணிக்காக ரூ. 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அமைக்கக் கருதியுள்ள இவ்விலங்ககத்தை வனத்துறை நிர்வகிக்கும் திட்டத்தின் முதல் கட்டப் பணியை நிறைவேற்றத் தேவைப்படும் பணியாளர்களுக்கு 1979-80-ல் அரசு அனுமதி வழங்கியது. இங்கு ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டும் பணியை பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நில நீர்ப்பிரிவு செய்து வருகிறது. விலங்குக் கூண்டுகள், சுற்றுச் சுவர், அதிகாரிகள் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், மேல் நிலைத் தொட்டிகள் அமைத்தல், குழாய்கள் பொருத்துதல் போன்ற பணிகள் நடப்பாண்டில் நடைபெறும்.

**60.1. வனத்துறை நிர்வாகத்தை செம்மைப்படுத்தல்.**

28-2-1979 ஆம் நாள் வரையில் இரண்டு வனத்துறைத் தலைவர் பதவிகளை தொழில் நுட்ப அதிகாரிகள் வகித்து வந்தனர். வனத்துறைத் தலைவர் (பொது பதவி) வகித்து வந்தவர்



28-2-1979 ஆம் நாளன்று ஓய்வு பெற்றார். இத்துறையின் நிர்வாகம் திறமையோடு இயங்கவும் பயனுற்ற தலைமை, கட்டுப்பாடு இவைகளைப் பெறவும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பெறும் உயர் சம்பள விகிதத்தில் வனத்துறைத் தலைவர் (பொது) பதவி ஒன்றினை 1-3-1979 முதல் ஏற்படுத்தி அப்பதவியில் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை அரசு நியமித்தது. வனத்துறைத் தலைவர் பதவி இந்திய வனப்பணியைச் சார்ந்ததாகும். இப்பணியில் உள்ள முதுநிலை அதிகாரி ஒருவர் வனத்துறைத் தலைவர் (வளர்ச்சி) பதவியைத் தொடர்ந்து வகித்து வருவார்.

60.2. வலம்வரும் ஏழு தனி ரோந்துப் படைகள் வன எல்லைப் பகுதி பாதுகாவலர்களின் பொறுப்பின்கீழ் தற்போது இயங்கி வருகின்றன. வனச் செல்வத்தைச் செம்மையாகப் பாதுகாக்க, இவ்வமைப்பே வலுவடையச் செய்து ஒழுங்குபடுத்தி வனப்பாதுகாப்புப்படை (Forest Protection squad) என்று இதனை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த முறையில் இப்படைப் பிரிவுகளின் பணிகளைச் செவ்விய முறையில் சேர்க்க வேண்டி சென்னையை தலைமையிடமாகக் கொண்ட முதுநிலை அதிகாரியின் நேரடி நிர்வாகக் கட்டுப் பாட்டின்கீழ் இப்படைப் பிரிவுகள் இருக்கும்.

60.3. அதிக வருவாய் தரவல்ல துறைகளில் வனத்துறையும் ஒன்றாகும். குறிப்பாக, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதனால் ஆண்டுதோறும் செலவு விவரங்கள் அதிகரித்து வருகின்றன. இத்துறையின் வரவு-செலவுகளை தீவிரமாக ஆராய வேண்டி வனத்துறைத் தலைவர் அலுவலகத்தில் உள்ள கணக்குப் பிரிவில் கணக்குத் தலைமை அதிகாரியும் அவருக்கு உதவியாகப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

60.4. கடத்திச் செல்லப்பட்ட சந்தனக்கட்டை, ஏனைய வனப் பொருள்களின் பெரும் பகுதியைச் கடத்தல்காரர்கள் இரயில் மூலமாகவும், சென்னை துறைமுகத்தின் வாயிலாகவும் ஏற்றுமதி செய்கின்றனர். மேலும் சென்னையில் வனப் பொருள்களை சட்ட விரோதமாக எடுத்துச் செல்வதைத் தடுக்க பயனுள்ள ஏற்பாடுகள் ஏதுமில்லை. எனவேதான் சென்னையில் வனப்பாதுகாப்புப் படை ஒன்றை நிறுவக் கருதப்பட்டது. ஆகவே தருமபுரியில் செயல்பட்டு வந்த வனப்பாதுகாப்பு படை சென்னைக்கு மாற்றப்பட்டது.

60.5. நான்கு வன எல்லைப் பிரிவுகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பிரிவும் வனப்பாதுகாவலரின் மேற்பார்வையின்கீழ் செயல்படுகிறது. இவற்றின் தலைமையிடங்கள், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலத்தில் உள்ளன. இவர்களின் பொறுப்பில் மொத்தம் 42 பிரிவுகள் இயங்குகின்றன. மதுரை வனப்பாதுகாவலரின் பொறுப்பில் 12 பிரிவுகள் உள்ளன.

[1980 ஜூலை 10

மதுரை வனப்பாதுகாவலரின் பொறுப்பின்கீழ் ஏராளமான வனக்
கோட்ட அதிகாரிகள் இருப்பதால், வனக்கோட்டப் பிரிவுகளை
வனப் பாதுகாவலர் பெயரளவுக்கே கட்டுப்படுத்த முடிகிறது.
1971–72 முதல் 1978–79 வரை வன எல்லைப் பிரிவுகளின்கீழ்
உள்ள வனப்பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும்
இவர்களை மேற்பார்வை செய்ய உயர் அதிகாரிகள் நால்வரே
தொடர்ந்து இருந்து வந்தனர். வனப்பாதுகாவலர்கள் வனக்
கோட்டங்களைத் தீவிரமாகக் கண்காணிக்கவும், ஒழுங்கற்ற
செயல்கள், முறைகேடுகள் நடப்பதையும் அதிகப்படியாகச் செலவு
செய்தல், அனுமதியின்றிச் செலவிடுதல் ஆகியவற்றைத் தடுக்கும்
பொருட்டும் வனப்பாதுகாவலர்கள் அடிக்கடி நேரடியாகச்
சென்று பார்வையிட்டு வனக்கோட்ட அதிகாரிகளின் பணியைத்
தொடர்ந்து கவனமாகக் கண்காணிக்க வேண்டுமென அரசு முடிவு
செய்தது. போதிய பணியாளர்களைக் கொண்ட, மேலும் இரு
வன எல்லைப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அவற்றின்
தலைமையிடங்கள் வேலூரிலும் திருநெல்வேலியிலும் அமைந்
துள்ளன.

60.6. வன எல்லைப் பிரிவு அலுவலகங்களின் ஆய்வு நடத்
தும் பொருட்டு ஒரு தனி ஆய்வுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.
இப்பிரிவு ஏனைய வனக்கோட்ட அலுவலகங்களுக்குத் திடுமெனச்
சென்று ஆய்வு நடத்தி நிர்வாகம் சீராக நடைபெற வழிகோலி
யது.

60.7. <u>வனவர்கள் நியமனத்தில் பின்பற்றவேண்டிய நடைமுறை.</u>

தமிழ்நாடு வனத்துறை சார்நிலை பணிகுறித்த தனி விதி
களின்படி வனவர்களை நியமிப்பதற்கு வனக்கோட்டம்
அதிகாரம் கொண்டுள்ளபடியால், வனக்கோட்டங்களில் உள்ள
மாவட்ட வன அதிகாரிகளே வனவர்களை நியமிக்கும் அதிகாரி
யாக இருந்தனர். தேவையான விவரங்கள் கிடைக்காததால்,
மாநிலத்திலுள்ள வனவர்களின் பணி மூப்பு நிலையை நிர்ண
யிப்பதில் இடர்பாடு இருந்து வந்ததால் காலதாமதமும் நேர்ந்
தது. வனச்சரகர்கள் பதவிக்குப் பதவி உயர்வு அளிப்பதற்
கான நபர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரிப்பதிலும் கால
தாமதம் ஏற்பட்டது. இது தவிர்க்கக் கூடியதாகும். வன
வர்கள் பதவிக்கு உரியவர்களை நியமிப்பதில் தற்போதுள்ள
நடைமுறையை எளிதாக்கவும் இப்பதவிக்கு ஒரே இடத்தில் உரிய
வர்களை நியமனம் செய்ய அரசு இந்நடைமுறையை திருத்தி
யமைத்தது. திருத்தி அமைக்கப்பட்ட நடைமுறையின்படி 3
அல்லது 4 வன அதிகாரிகள் கொண்ட வனவர்கள் தேர்வுக்குழு,
தகுதிவாய்ந்த துறைப் பணிவாளர்களிடையேயிருந்தும், வேலை
வாய்ப்பகத்திலிருந்து வருவோரிடமிருந்தும் தகுதியானவர்களை
வனவர்களாகத் தெரிந்தெடுக்கும்.



1980 ஜூலை 10]

60.8. <u>கோயமுத்தூர் வடக்கு வனக்கோட்டம்—சத்தியமங்கலம்
வனக்கோட்டம், கோபிசெட்டிபாளையம் வனக்கோட்டம்
என இருபிரிவாதல்.</u>

கோயமுத்தூர் வருவாய் மாவட்டம், கோயமுத்தூர் மாவட்
டம் என்றும் பெரியார் மாவட்டம் என்றும் இரு மாவட்டங்க
ளாயின.

60.9. கோயமுத்தூர் வடக்கு வனக்கோட்டத்தைக் கோபி
செட்டிபாளையம் வனக்கோட்டம், சத்தியமங்கலம் வனக்கோட்
டம் என இரண்டாகப் பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

60.10. <u>நேரடித் தணிக்கைக் குழுக்கள்.</u>

வனத்துறைத் தலைவர் அலுவலகத்தில் உள்ள கணக்கு
முதுநிலை அதிகாரி வட்ட அலுவலகங்களிலும் கோட்ட
அலுவலகங்களிலும் கணக்குகளை நேரடியாகத் தணிக்கை
செய்வதோடு மாநிலக் கணக்கு துறைத் தலைவர் தெரிவித்த
தணிக்கை மறுப்புரைகளுக்கும் பதிலளிக்கும் பணியையும்
கவனித்து வந்தார். மேலும் கணக்குகள் தொடர்பான கோப்பு
களை அனுப்புதல், கடிதம் எழுதும் பணிகளையும், கவனித்து
வந்தார், வனத்துறைக்குரிய வரவு-செலவுத் திட்டம் தயாரிப்ப
தற்கும் பொதுக் கணக்குகள் அறிக்கைக்குப் பதிலளிப்பதற்கும்
ஏனைய பணிகளுக்கும் பொறுப்பு வகித்தார். வனத்துறையின்
நிதி விவகாரங்களையும் கணக்குகளையும் வனத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளரும், கணக்கு முதுநிலை அதிகாரியும் கவனித்து
வந்தனர்.

குறிப்பாக மத்திய மாநில அரசுத் துறைகளின்கீழ் மேம்
பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த வேண்டியிருப்பதால் ஆண்டு
தோறும் செலவினம் அதிகரித்து வருகிறது. முறைகேடுகள்
நடைபெறுவதையும் நிதி கையாடல் செய்வதையும் தவிர்க்க
வேண்டி கணக்குகளைப் போதுமான அளவிற்கு மேற்பார்வை
யிடுவது இன்றியமையாததாகும். அரசு தலைமையிடத்தில்
கணக்குத் தலைமை அதிகாரி பதவியை உருவாக்கியதோடு அவ
ருக்கு உதவியாக பணியாளர்களை நியமிக்கவும் அனுமதியளித்
துள்ளது. இத்துறையில் பல்வேறு அலுவலகக் கணக்குகளை
ஆராய நேரடி தணிக்கைக் குழுக்கள் இரண்டு இருந்தன. ஒவ்
வொரு குழுவிலும், ஒரு கண்காணிப்பாளர், 3 உதவியாளர்கள்
இருந்தனர். அலுவலகக் கணக்குகளைத் தணிக்கை செய்வதில்
தேக்க நிலை இருந்தது. தலைமை அலுவலகத்தில் தணிக்கைக்
குழுக்கள் கடிதம் எழுதும் பணியைக் கவனித்ததோடு தணிக்கை
அறிக்கை குறித்து மேல் நடவடிக்கையும் எடுத்து வந்தனர்.

துறையில் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணி முடிவுறாமல் இருந்தது பற்றி ஆராய்ந்ததில் நாளது வரையிலான கணக்குகளை நேரடியாக தணிக்கை செய்து முடிக்க மேலும் மூன்று தணிக்கைக் குழுக்கள் சிறிது காலத்திற்கு இருப்பது தேவை எனத் தெரிய வந்தது. ஆகவே, தேக்கநிலையைப் போக்கி முடிவுறாமலுள்ள கணக்குகளைத் தணிக்கை செய்து முடிக்க மேலும் மூன்று தணிக்கை குழுக்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

## 61. முடிவுரை.

வனத்துறைச் செயற்பாடுகள் பெரும்பாலும் வேலைவாய்ப் பளிக்கும் நோக்கம் கொண்டவை. இத்துறையில் அதிகமாக முதலீடு செய்வதால் குறிப்பாக கிராமப்புறத்திலும், மலைப்பகுதி களிலும் வாழும் எளிய மக்களுக்கு அதிகவேலை வாய்ப்பினை அளிக்க முடியும். சமூகத்தில் நலிந்துள்ள பிரிவினருக்கு குறிப் பாகப் பழங்குடியினருக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங் குவதே நமது கொள்கையாகும். மேலும், நமது மாநிலத்தில் தொழில்கள் பெருக வேண்டுமானால் காடுபடு மூலப் பொருள் களின் உற்பத்தியைப் பெருக்குவதும் நமது முக்கிய குறிக்கோளாக அமைய வேண்டும். பொருளாதார வளம், சமுதாய நலம், உயிரினங்களின் வாழ்க்கைத் திறம், கிராம மறுமலர்ச்சி ஆகிய வற்றை கருத்திற்கொண்டு வனவளத்தை காப்பதிலும் மேம் படுத்துவதிலும் ஊன்றிய கவனத்துடன் இத்துறை செயலாற்றி வருகிறது. இயற்கையன்னை வாரிவழங்கும் ஈடில்லாத இந்த அரிய செல்வத்தை மேலும் மேலும் பெருக்கிட எல்லாப் பணி களும் இத்துறையால் மேற்கொள்ளப்படும். இப்பணிகளினால் இன்றைய தலைமுறையினர் மட்டுமன்றி வருங்காலத்தலை முறையினரும் வளமான பலன்களைப் பெற்று சிறப்படைய வேண்டும்.

3080

V211,31'N80

N81.3.2?1